வெளியீடு 20-9-1990 Issued 20-9-1990

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 2, 1990–தொகுதி 25–எண் 1

Monday, the 2nd April 1990–Volume 25–No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

143798

D

V 21, 31/8/96

N 96.9.8.1

# உள்ளடக்கம்.

2-4-1990.

| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | iii—v |
| Personnel of the Government of Tamil Nadu. .. | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். .. .. .. .. | |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) .. .. | xi—xxvi |
| 1. வினாக்கள் விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 1—29 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 29—71 |
| 2. பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்களைத் தற்காலிக நீக்கம் செய்துள்ளது தொடர்பான அறிவிப்பு. .. .. .. | 72 |
| 3. உரிமை மீறல் பிரச்சினைகள்— | |
| (அ) முதலமைச்சர் மீது—இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவத்தினர் பற்றியும் திரு. ராஜீவ் காந்தி பற்றியும் அவையில் தெரிவித்த கருத்துக்கள் குறித்து. .. .. | 72—91 |
| (ஆ) உறுப்பினர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் மீது—இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவம் குறித்து முதலமைச்சர் அவையில் பேசியதாக உறுப்பினர் பத்திரிகைக்கு தெரிவித்துள்ள கருத்து குறித்து. .. .. | 91—95 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (அ) அச்சிறுபாக்கம் ஆதிதிராவிடர் விடுதியில் மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளது குறித்து. | 95—99 |
| (ஆ) கோவை கிழக்குத் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் தொடராதது குறித்து. .. .. .. .. | 99—102 |

5. மானியக் கோரிக்கைகள், 1990–91— விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி).

கோரிக்கை எண் 17—கல்வி.

| | | பக்கங்கள். |
|---|---|---|
| மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் | .. | 102, 103—104, 116, 117, 118, 119, 120, 121, 123, 134, 135, 136, 142, 145, 146, 147, 152, 153, 154, 155, 157, 167, 173, 174, 175 |
| திரு. மு. சின்னக்குழந்தை | .. .. | 104—109 |
| திரு. சா. கணேசன் | .. .. | 109—115 |
| திரு. மா. சுந்தரதாஸ் | .. .. | 116—124 |
| *திரு. சோ. பால்ராஜ் | .. .. | 124—130 |
| திரு. கே. ஆர். சுந்தரம் | .. .. | 130—138 |
| திரு. என். கணபதி | .. .. | 138—145 |
| *திரு. கே. ஆர். இராஜேந்திரன் | .. .. | 146—148 |
| திரு. வெ. கோவிந்தன் | .. .. | 148—151 |
| திரு. எஸ். எஸ். ராமசுப்பு | .. .. | 151—159 |
| திரு. ஆர். மகேந்திரன் | .. .. | 159—165 |
| திரு. பா. அப்துல் சமத் | .. .. | 165—168 |
| *திரு. ச. அழகுவேலு | .. .. | 168—176 |

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 176—177

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர் : திரு. பி. சி. அலெக்சாண்டர்.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத்துறை.

2. கல்வி அமைச்சர் ... மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

| | |
|---|---|
| 4. வருவாய்த்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம். |
| 5. போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி. |
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அறநிலையத்துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 7. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை. |
| 8. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. வேளாண்மைத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |



| | |
|---|---|
| 10. பொதுப்பணித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட) திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் மின்சாரம். |
| . சமூக நலம்—ஊரகத் தொழிற்துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 12. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் ஏ. இராமகிருஷ்ணன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 13. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல். |
| 14. செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. என். நேரு : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை அரசு அச்சகம் மற்றும் பால்வளம். |

| | |
|---|---|
| 15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீன்வள வளர்ச்சிக் கழகம். |
| 16. கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசை மாற்று வாரியம். |
| முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர். | திரு. எல். கணேசன். |



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU—Thiru P. C. ALEXANDER.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. | **The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education | **The Hon. Dr. K. ANBAZHAGAN :** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. | **The Hon. Thiru S. J. SADIQ PASHA :** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue | **The Hon. Thiru NANJIL K. MANOHARAN:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport | **The Hon. Thiru M. KANNAPPAN :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing. |
| 6. Minister for Hindu Religious and Charitable Endowments. | **The Hon. Thiru K. P. KANDASAMY :** Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |

7. Minister for Rural Development and Local Administration. — The Hon. Thiru KO. SI. MANI : Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural indebtedness.

8. Minister for Food and Co-operation. — The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM : Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics.

9. Minister for Agriculture — The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM : Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production.

10. Minister for Public Works. — The Hon. Thiru DURAIMURUGAN : Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works Highways and Electricity.

11. Minister for Social Welfare and Rural Industries. — The Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADISAN : Social Welfare including Children and Women's Welfare, Beggars' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan.

12. Minister for Adi-Dravidar Welfare. — The Hon. Dr. E. RAMAKRISHNAN : Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

13. Minister for Public Health. — The Hon. Dr. K. PONMUDI alias DEIVASIGAMANI : Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control.



14. Minister for Information and Labour. — The Hon. Thiru K. N. NEHRU : Information and Publicity Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery, Printing, Government Press and Milk.

15. Minister for Animal Husbandry. — The Hon. Dr. K. CHANDRASEKARAN : Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation.

16. Minister for Handlooms and Urban Development. — The Hon. Thiru S. THANGAVELU : Handlooms, Textiles, Town Planning, Urban Development, Accommodation Control and Slum Clearance Board.

Parliamentary Secretary to Chief Minister. — Thiru L. GANESAN.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர் .

திரு. வீ. பெ. துரைசாமி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. அ. வெ. சுப்பிரமணியன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்.

திரு. இரா. மோகன்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

திரு. குமரி அனந்தன்.

திரு. உ. ரா. வரதராசன்.

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி).

| | |
|---|---|
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்., | இணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி. ஏ., பி. எல்., .. | துணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல்., .. | துணைச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ.ச., பி.ஏ., பி.எல்., .. | துணைச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | துணைச் செயலாளர். |
| கோவிந்தராஜன், திரு. ஆர்., .. | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல்., .. | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. சு., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி, பி.எல்., .. | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி., | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., .. | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. யா. கு., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| அரங்கநாதன், திரு. பி.ஏ., பி.எல்., .. | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| ஜெயதேவ், திரு., பி.சி. .. | தலைமை நிருபர். |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| "அ" | |
| 1 அங்கமுத்து, திரு. கே. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |
| 2 அசேன், திரு. ஜெ. .. | இராணிப்பேட்டை |
| 3 அண்ணாதுரை, திரு. கா. .. | பட்டுக்கோட்டை |
| 4 அண்ணாதுரை, டாக்டர் கே. .. | வரகூர் (செ.வ.) |
| 5 அண்ணாநம்பி, திரு. ஆர். .. | அவிநாசி (செ.வ.) |
| 6 அண்ணாமலை, திரு. எம். .. | அரூர் (செ.வ.) |
| 7 அதியமான், திரு. ஆ. .. | சேடப்பட்டி |
| 8 அப்துல்சமத், திரு. பா. .. | வாணியம்பாடி |
| 9 அப்துல் லத்தீப், திரு. எம். .. | சேப்பாக்கம் |
| 10 அர்ஜுனன், திரு. கே. .. | தாரமங்கலம் |
| 11 அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 12 அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13 அறிவழகன், திரு. ஆ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 14 அன்பழகன், டாக்டர், க. .. | அண்ணாநகர் |
| 15 அன்பழகன், திரு. வ. .. | செய்யாறு |
| 16 அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி-2 |
| "ஆ" | |
| 17 ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிபட்டி |
| 18 ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம் |
| 19 ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 20 ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. | சேலம்-2 |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | ''இ'' | |
| 21 இரகுமான்கான், திரு. அ. | .. | பூங்கா நகர் |
| 22 இராசமாணிக்கம், திரு. இரெ... | | குத்தாலம் |
| 23 இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | | மேலூர் |
| 24 இராசன், திரு. வி. பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25 இராசு, திரு. வி. கே. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 26 இராசு, திரு. வெ. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 27 இராசேந்திரன், திரு. அ. | .. | பேரூர் |
| 28 இராதா, திரு. எஸ். ஆர். | .. | மதுரை கிழக்கு |
| 29 இராதாகிருஷ்ணன், திரு. டி. | .. | சோழவந்தான் |
| 30 இராமகிருஷ்ணன், டாக்டர். எ. | | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31 இராமகிருஷ்ணன், திரு. நா. | .. | கம்பம் |
| 32 இராமச்சந்திரன், திரு. எம். | | திருவோணம் |
| 33 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ்.எஸ்.ஆர். | | விளாத்திகுளம் |
| 34 இராமச்சந்திரன், திரு. ந. | .. | செஞ்சி |
| 35 இராமசாமி, திரு. ஏ. எம். | .. | ஆத்தூர் |
| 36 இராமசாமி, திரு. கே. வி. | .. | கரூர் |
| 37 இராமசாமி, திரு. வி. | .. | திருச்செங்கோடு |
| 38 இராமசாமி, திரு. கே. ஆர். | .. | திருவாடானை |
| 39 இராமநாதன், திரு. மு. | .. | கோவை மேற்கு |
| 40 இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 41 இராஜேந்திரன், திரு. கே. ஆர். | | பர்கூர் |
| 42 இராஜேந்திரன், திரு. பி. வி. | .. | வேதாரண்யம் |
| 43 இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| | ''ஈ'' | |
| 44 ஈஸ்வரன், திரு. ஆர். | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| | ''உ'' | |
| 45 உகம்சந்த், திரு. எஸ். டி. | .. | மதுராந்தகம் |
| 46 உதயசூரியன், திரு. தா. | .. | சின்னசேலம் |
| 47 உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | | தஞ்சாவூர் |
| | ''ஏ'' | |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | .. | பள்ளிப்பட்டு |
| | ''க'' | |
| 49 கண்ணப்பன், திரு. மு. | .. | பல்லடம் |
| 50 கண்ணன், திரு. எஸ். பி. | .. | அணைக்கட்டு |
| 51 கணபதி, திரு. என். | .. | மயிலாப்பூர் |
| 52 கணேசமூர்த்தி, திரு. என். | .. | குறிஞ்சிப்பாடி |
| 53 கணேசமூர்த்தி திரு. ஏ. | .. | மொடக்குறிச்சி |
| 54 கணேசன், திரு. எல். | .. | ஒரத்தநாடு |
| 55 கணேசன், திரு. க. சொ. | .. | ஜெயங்கொண்டம் |
| 56 கணேசன், திரு. சா. | .. | தியாகராய நகர் |
| 57 கணேசன், திரு. வே. | .. | மங்களூர் (செ.வ.) |
| 58 கந்தசாமி, திரு. கே. | .. | கிணத்துக்கடவு |
| 59 கந்தசாமி, திரு. கே. பி. | .. | திருச்செந்தூர் |
| 60 கரீம், திரு. எம். கே. | .. | கூடலூர் |
| 61 கருணாநிதி, டாக்டர் மு. | .. | துறைமுகம் |
| 62 கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | .. | சாத்தூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| ''க''—தொடர்ச்சி. | |
| 63 கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபனாசம் |
| 64 கண்ணையன், திரு. க. ... | தொட்டியம் |
| 65 கஜபதி, திரு. டி.ஆர். .. | ஆற்காடு |
| 66 காஞ்சனா, டாக்டர் க. .. | கிருஷ்ணகிரி |
| 67 காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. எஸ். | முதுகுளத்தூர் |
| 68 காளியப்பன், திரு. பி. ... | ஒட்டன்சத்திரம் |
| 69 கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம் |
| 70 கிருஷ்ணன், திரு. சி. ... | ஓமலூர் |
| 71 குணசேகரன், திரு. எஸ். .. | தலைவாசல் (செ.வ.) |
| 72 குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம் |
| 73 குருநாதன், திரு. சு. .. | பாளையங்கோட்டை |
| 74 குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. .. | பவானி |
| 75 கோதண்டம், திரு. ஏ. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.) |
| 76 கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம் |
| 77 கோவிந்தசாமி, திரு. சி. .. | திருப்பூர் |
| 78 கோவிந்தசாமி, திரு. வி. சி. | காவேரிப்பட்டினம் |
| 79 கோவிந்தராஜன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம் |
| 80 கோவிந்தன், திரு. வெ. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| ''ச'' | |
| 81 சண்முகம், திரு. சி. ... | ஆலந்தூர் |
| 82 சந்திரசேகர், திரு. வி. பி. ... | பொள்ளாச்சி |
| 83 சந்திரசேகரன், டாக்டர் க. ... | ஆலங்குடி |
| 84 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 'ச'—தொடர்ச்சி. | |
| 85 சம்பத், திரு. ஏ. ஜி. .. | முகையூர் |
| 86 சற்குணம், திருமதி எஸ். பி. | இராதாகிருஷ்ணன் நகர் |
| 87 சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | உடுமலைப்பேட்டை |
| 88 சாந்தகுமாரி, டாக்டர் த. .. | தாராபுரம் (செ.வ.) |
| 89 சாமிநாதன், திரு. இரா. .. | திருமங்கலம் |
| 90 சிங்காரம், திரு. ஆர். .. | பேராவூரணி |
| 91 சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம் |
| 92 சிவலிங்கம், திரு. எஸ். ஆர். | பனைமரத்துப்பட்டி |
| 93 சின்னக்குழந்தை, திரு. மு. .. | பெரணமல்லூர் |
| 94 சிவலோகம், திரு. எஸ். .. | புவனகிரி |
| 95 சின்னசாமி, திரு. கே. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 96 சின்னசாமி, திரு. ரா. .. | தர்மபுரி |
| 97 சின்னசாமி, திரு. வி. கே. .. | பவானிசாகர் |
| 98 சிரங்கன், திரு. எம். .. | மேட்டூர் |
| 99 சீனிவாசன், திரு. பெ. .. | சிவகாசி |
| 100 சுந்தர், திரு. கே. .. | உத்திரமேரூர் |
| 101 சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு |
| 102 சுந்தரம், திரு. க. .. | பொன்னேரி (செ.வ.) |
| 103 சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம் |
| 104 சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர் |
| 105 சுந்தரராஜ், டாக்டர் எஸ். .. | பரமக்குடி (செ.வ.) |
| 106 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி |
| 107 சுப்பிரமணியம், திரு. தா. க... | சத்தியமங்கலம் |
| 108 சுப்பிரமணியன், திரு. அ.லெ... | திருநெல்வேலி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'ச'—தொடர்ச்சி. | |
| 109 சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை |
| 110 சுப்பு, திரு. ஏ. .. | ராசிபுரம் |
| 111 சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு |
| 112 சுப்பையா, திரு. ஆலவயல் .. | திருமயம் |
| 113 செங்குட்டுவன், திரு. ஏ. .. | மயிலாடுதுறை |
| 114 செங்கைசிவம், திரு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 115 செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிசெட்டிபாளையம் |
| 116 சேட்டு, திரு. எம். .. | செங்கம் (செ.வ.) |
| 117 சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர் |
| 118 சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர், (செ.வ.) |
| 'ட' | |
| 119 டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம் |
| 'த' | |
| 120 தங்கபாண்டியன், திரு. வே. .. | அருப்புக்கோட்டை |
| 121 தங்கம், திரு. அ. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 122 தங்கராஜன், திரு. எஸ். ஏ. .. | திண்டுக்கல் |
| 123 தங்கராஜு, திரு. ஏ. .. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 124 தங்கவேல், திரு. எம். .. | முசிறி |
| 125 தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.) |
| 126 தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார்கோவில் (செ.வ.) |
| 127 தம்புசாமி, திரு. வி. — | திருவாரூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'த'—தொடர்ச்சி | |
| 128 தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | இளையான்குடி |
| 129 தமிழ்மணி, திரு. வீ. .. | செங்கல்பட்டு |
| 130 தயாளன், திரு. ஏ. சி. .. | ஆரணி |
| 131 தனபாலன், திரு. கே. ஆர். ஜி. | சேலம்-1 |
| 132 தனராஜ், டாக்டர் வி. .. | வந்தவாசி (செ.வ.) |
| 133 திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 134 திருமூர்த்தி, டாக்டர் து. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 135 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 136 துரை சந்திரசேகரன், திரு. .. | திருவையாறு |
| 137 துரைசாமி, திரு. வீ. பெ. .. | நாமக்கல் (செ.வ.) |
| 138 துரைபாண்டியன், டாக்டர் பெ. | மானாமதுரை (செ.வ.) |
| 139 துரைமுருகன், திரு. .. | காட்பாடி |
| 140 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 141 தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர் |
| 142 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |
| 'ந' | |
| 143 நஞ்சப்பன், திரு. ந. .. | பென்னாகரம் |
| 144 நடராசன், திரு. ஆ. .. | பேரூர் |
| 145 நடராசன், திரு. பொ. ... | திருத்தணி |
| 146 நடேசன், திரு. எகால் மு. .. | ரிஷிவந்தியம் |
| 147 நடேசன், திரு. ஆர். .. | திருவட்டாறு |
| 148 நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி |
| 149 நாராயணன், திரு. ராம. .. | காரைக்குடி |
| 150 நூர்முகமது, திரு. செ. .. | பத்மநாபபுரம் |
| 151 நேரு, திரு. கே. என். .. | லால்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|

'ப'

| | | |
|---|---|---|
| 152 பஞ்சாட்சரம், திரு. ஆர். | .. | மேல்மலையனூர் |
| 153 பழனிச்சாமி, திரு. டி. கே. | | திருவொற்றியூர் |
| 154 பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 155 பழனிசுவாமி, திரு. க. | .. | எடப்பாடி |
| 156 பழனிவேல், திரு. என். | .. | பழனி (செ.வ.) |
| 157 பன்னீர்செல்வம், டாக்டர் மா. | | சீர்காழி (செ.வ.) |
| 158 பாண்டியன், திரு. பி. எச். | .. | சேரன்மாதேவி |
| 159 பாப்பா உமாநாத், திருமதி | | திருவெரம்பூர் |
| 160 பாப்பா சுந்தரம், திரு. அ. | ... | குளித்தலை |
| 161 பால்ராஜ், திரு. சோ. | .. | மதுரை-மத்திய |
| 162 பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | | திருநாவலூர் |
| 163 பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | | பொங்கலூர் |
| 164 பாலையா, திரு. ஆ. | .. | கொளச்சல் |
| 165 பிச்சாண்டி, திரு. கே. | .. | திருவண்ணாமலை |
| 166 பிச்சைமுத்து திரு. ரெ. | ... | பெரம்பலூர் (செ.வ.) |
| 167 பீட்டர் அல்போன்ஸ், திரு. சா. | | தென்காசி |
| 168 புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 169 பூவராகன், திரு. கோ. | .. | விருத்தாசலம் |
| 170 பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி |
| 171 பெரியசாமி, திரு. ஐ. | .. | ஆத்தூர் |
| 172 பெரியசாமி, திரு. வே. | — | அந்தியூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|

'ப'—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 173 பெரியண்ணன், திரு. அ. | ... | புதுக்கோட்டை |
| 174 பெருமாள், திரு. செ. | .. | ஏற்காடு (ஆ.கா.) |
| 175 பொன்முடி, திரு. க. | .. | தண்டராம்பட்டு |
| 176 பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. | | விழுப்புரம் |
| 177 பொன். முத்துராமலிங்கம், திரு. | | மதுரை மேற்கு |
| 178 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | | நிலக்கோட்டை (செ.வ.) |
| 179 பொன்னுசாமி, பேராசிரியர் க. | | மருங்காபுரி |
| 180 பொன்னுபிள்ளை, திரு. ஜி. | | தேனி |

'ம'

| | | |
|---|---|---|
| 181 மகேந்திரன், திரு. ஆர். | .. | நாட்ராம்பள்ளி |
| 182 மணி, திரு. ஆச்சியூர் எம். | .. | நாங்குநேரி |
| 183 மணி, திரு. கே. ஏ. | .. | கபிலர்மலை |
| 184 மணி, திரு. கோ. சி. | .. | கும்பகோணம் |
| 185 மணிமாறன், திரு. மா. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 186 மதிவாணன், திரு. இரா. | .. | இராயபுரம் |
| 187 மலர்மன்னன், திரு. அ. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 188 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | | திருவல்லிக்கேணி |
| 189 மனோகரன், திரு. பா. | .. | சிவகங்கை |
| 190 மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | | திண்டிவனம் |
| 191 மாசிலாமணி, திரு. தி. ரா. | .. | பூந்தமல்லி |
| 192 மாதப்பன், திரு. கோ. | .. | பாலக்கோடு |
| 193 மாரப்பன், திரு. பி. | — | காங்கேயம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

'ம'—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 194 மாரிமுத்து, திரு. அ. ... | வானூர் (செ.வ.) |
| 195 முகமது சித்திக், திரு. எம். .. | பூம்புகார் |
| 196 முத்துசாமி, திரு. ப. .. | வேடசந்தூர் |
| 197 முத்தையன், திரு. எம். .. | சங்கராபுரம் |
| 198 முத்தையா, திரு. எம். .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 199 முருகேசன், திரு. பொ. .. | காஞ்சிபுரம் |
| 200 முல்லைவேந்தன், திரு. வ. .. | மொரப்பூர் |
| 201 முனிரத்தினம், திரு. ஆ. மு. | சோளிங்கர் |
| 202 முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர் |
| 203 மூக்கன், திரு. ஆர். .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 204 மூக்கையா, திரு. எல். .. | பெரியகுளம் |
| 205 மோகன், திரு. இரா. ... | சிங்காநல்லூர் |
| 206 மோசஸ், டாக்டர் எம். .. | நாகர்கோவில் |

'ய'

| | |
|---|---|
| 207 யசோதா செல்லப்பா, திருமதி | வலங்கைமான் (செ.வ.) |

'ர'

| | |
|---|---|
| 208 ரமணி, திரு. கே. .. | கோவை (கிழக்கு) |
| 209 ரமணி நல்லதம்பி, திருமதி .. | ராதாபுரம் |
| 210 ரவி அருணன், திரு. .. | அம்பாசமுத்திரம் |
| 211 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஓசூர் |
| 212 ராமச்சந்திரன், திரு. கே. | மன்னார்குடி |
| 213 ராமச்சந்திரன், திரு. சி. ... | திருப்பரங்குன்றம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

'ர'—தொடர்ச்சி

| | |
|---|---|
| 214 ராமசாமி, திரு. மொஞ்சனூர், ப. | அரவக்குறிச்சி |
| 215 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம் |
| 216 ராஜு, திரு. எச். எம். ... | உதகமண்டலம் |
| 217 ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம் |

'ல'

| | |
|---|---|
| 218 லட்சுமி, திருமதி பி. .. | வால்பாறை (செ.வ.) |

'வ'

| | |
|---|---|
| 219 வரதராஜன், திரு. ஆர். .. | சங்கரி (செ.வ.) |
| 220 வரதராசன், திரு. உ. ரா. .. | வில்லிவாக்கம் |
| 221 வல்லரசு, திரு. பி. என். .. | உசிலம்பட்டி |
| 222 விஜயராகவன், திரு. பொன். | கிள்ளியூர் |
| 223 விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி |
| 224 வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம் |
| 225 வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம் |
| 226 வெங்கடாசலம், திரு. பெ. .. | வீரபாண்டி |
| 227 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | ஸ்ரீரங்கம் |
| 228 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. .. | தொண்டாமுத்தூர் |
| 229 வேணு, திரு. கி. .. | கும்மிடிப்பூண்டி |
| 230 வைத்தியலிங்கம், திரு. மீ. அ. .. | தாம்பரம் |

'ஸ'

| | |
|---|---|
| 231 ஸ்டாலின், திரு. மு. க. — | ஆயிரம் விளக்கு |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'ஜ' | |
| 232 ஜெயலலிதா, செல்வி ஜெ. | போடிநாயக்கனூர் |
| ''ஹ'' | |
| 233 ஹமீது இப்ராகிம், திரு. அ.மு. | கடலாடி |
| ''ஶ்ரீ'' | |
| 234 ஶ்ரீதர், திரு. ஆர். எஸ். .. | சைதாப்பேட்டை |
| 235 ஆஸ்கார் சி. நிக்வி, திரு. .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகிரிசாமி .. தலைமை வழக்கறிஞர்



(vii) தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு.

தமிழ்நாட்டில், ஓவிய, சிற்பக் கலைகளின் வளர்ச்சிக்காகவும், மைய லலித கலா அகாதமியுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்காகவும் 1975 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட கைவினைக் கலை மன்றமாகிய ஓவிய நுண்கலைக் குழு, நுண்கலைகளின் வளர்ச்சிக்காகப் பணியாற்றுகிறது.

2. ஓவிய, சிற்பக் கலைஞர்களின் படைப்புகள் இன்றைய கலைச் சூழல் ஆகியவற்றைப் பற்றி ஒரு விழிப்புணர்ச்சியை மக்களிடையே உண்டாக்கி, அதன் மூலம் கலையார்வத்தை ஏற்படுத்துவதற்காக, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கலைக் காட்சிகள், கலை வல்லுநர்களின் செயல்விளக்கப் பொழிவுகள் பள்ளி மாணவர்களிடையே ஓவியப் போட்டிகள் ஆகியவற்றை நடத்தி வருகிறது. கலையார்வலர்களுக்கும், ஓவியம் பயிலும் இளம் கலைஞர்களுக்கும் பெரிதும் பயனளிக்கக் கூடிய இது போன்ற நிகழ்ச்சிகளை 1990–91 ஆம் ஆண்டில், நீலகிரி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் நடத்தத் திட்டமிட்டுள்ளது. தமிழ்நாட்டில் உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்காகத் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து ஓவிய ஆசிரியர்கள் சிறப்புப் பயிற்சி யக்குழு செயற்படுத்துகிறது. 1990-91 ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டம் (ஈரோடு) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் (சிவகங்கை), செங்கை—அண்ணா மாவட்டம் ஆகிய இடங்களில் பயிற்சியளிக்கத் திட்டமிட்டுள்ளது. மாநிலங்களுக்கிடையே நுண்கலைக் காட்சிகளையும் நடத்துகிறது. ''நுண்கலை'' என்னும் அரையாண்டிதழையும் வெளியிடுகின்றது.

3. ஓவிய, சிற்பக் கலைஞர்களின் கலைப் படைப்புகளை ஆண்டுதோறும் காட்சியாக அமைத்து அக்காட்சியில் சிறந்து விளங்கும் படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி ஊக்குவிக்கிறது. இது போன்று ஆண்டு தோறும் சிறந்த ஓவிய, சிற்பப் படைப்பாளர்களில் இருவரைத் தேர்ந்தெடுத்து 'கலைச் செம்மல்' என்ற விருது வழங்கிப் பெருமைபபடுத்துகிறது. நுண்கலைகள் பயிலும் இளங்கலைஞர்களுக்கு ஓவிய, சிற்பக் கலைகளில் ஆய்வுப்பணி செய்வதற்காகவும், இராசத்தானிலுள்ள 'பனஸ்தர்லி' என்ற இடத்திற்குச் சென்று சிறப்புப் பயிற்சி பெறுவதற்காகவும், ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் கலைப் படைப்புகளை ஓவிய நுண்கலைக் குழு தனது தொகுப்புக்காக வாங்கி வருகிறது. பல்வேறு கலைப் பிரிவைச் சார்ந்த கலைஞர்களிடையே கருத்துக் கொள்கொடை நடைபெறும் வண்ணம் ஆண்டுதோறும் கலைஞர் தாவளம் (முகாம்) நடத்தி வருகிறது. மாவட்டங்களில் கலை மையங்களை அமைத்து நிதியுதவி அளித்து வருகிறது. ஓவிய, சிற்பப் படைப்பாளர்கள் தம் கலைப் படைப்புகளைக் காட்டும் தமியர் கண்காட்சியை நடத்தித் தங்கள் திறமையைப் புலப்படுத்த உதவும் வகையில் ஆண்டுதோறும் கலைஞர் பதின்மருக்கு ஒருவருக்கு ரூபாய் 1,000 என்ற அளவில் நிதியுதவி அளித்து வருகிறது.

4. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள இளங் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக, இவ்வாண்டு மாவட்டத் தலைநகர்களில் இளங் கலைஞர்கள் தாவளம் (முகாம்) நடத்தத் திட்டமிட்டுள்ளது.

(ix) சவகர் சிறுவர் இல்லம்—தமிழ்நாடு.

இந்நிறுவனம் 1979 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பாரதப் பிரதமர் சவகர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து மைய அரசு வழங்கிய தொகை ரூபாய் 15.73 இலட்சத்தைக் கொண்டு அரசினர் தோட்ட வளாகத்தில் இந்நிறுவனம் செயற்படுகிறது.

2. பள்ளிச் சிறுவர்களுக்கு ஏட்டுக் கல்வியோடு தத்தம் ஆக்கத் திறமைகளைத் தாமறிந்து வெளிப்படுத்தும் வகையிலும், தம் வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளும் வகையிலும் செயல் முறைத் திட்டங்களையும், பயிற்சிகளையும் இந்நிறுவனம் மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறது.

3. இவ்வாண்டு சூலை மாதத்தில் அசாம் மாநிலம் திப்ருகார் நகரில் நடைபெற்ற இந்திய ஓரங்க நாடகப் போட்டியில் இந் நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் எண்மர் பங்குகொண்டு பரிசுகளையும், கேடயங்களையும் வென்று வந்துள்ளனர்.

4. சிறுவர்களின் அறிவியல் மேம்பாட்டுக்கு ஆக்கமூட்டும் வகையில் சி.எம்.சி. நிறுவனத்தார் ஒரு படக்காட்டி (Projector) காணொலிப்பேழை (Video Cassete Recorder) நுண்ணலைக்கணிணி (Micro Computor) பெறும் வகையில் நிதியுதவி வழங்கினர்.

5. குழந்தைகளின் அறிவியல் அறிவை மேம்படுத்தும் நோக்கில் அறிவியலரங்கம் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் நிலையாகச் சிறந்த 5 மாநில அமைப்புகளுள் ஒன்றாகத் தமிழக சவகர் சிறுவர் இல்லம் ஏற்கப்பட்டு, புதுதில்லி சவகர் சிறுவர் இல்லம் ரூபாய் 20,000 மானியம் வழங்கிய பெருமைப படத்தக்கதாம்.

சிறுவரில்லங்களின் விரிவு :

6. சவகர் சிறுவரில்லத்தின் பயன்களைச் சிற்றூர்ப் புறக் குழந்தைகளும் பெறும் பொருட்டு, புதுக்கோட்டை மாவட்டம், பொன் புதுப்பட்டியிலும், எழும்பூர் மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியிலும் சிறுவரில்ல ஊரக மையங்கள் செயற்படுகின்றன. அசோக் நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஒரு ஊரக மையம் தொடங்கப்பட்டிருப்பது போல திருவாரூரில் சிறுவரில்ல ஊரக மையம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கைவினையில் திறமை வாய்ந்த நலிந்த பிரிவின் மாணவியர் இருவருக்கு இவ்வாண்டு முதல் மாதந்தோறும் ரூபாய் 100 வீதம் ஓராண்டிற்கு உதவித்தொகை வழங்க மானியம் கிட்டியுள்ளது. சிறுவர் கோளரங்கம் அமைக்க இவ்வாண்டு ஆசிரியர் இருவருக்கு வானவியல் பற்றிய பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. நியூயார்க்கு நகரைச் சேர்ந்த செல்வி ஜூலியானா ஹெக்ஸ் என்பவர் வெளியிடவிருக்கும் குழந்தை நூலுக்கு தமிழக சவகர்சிறுவரில்லக் குழந்தைகளின் 20 வண்ண ஓவியங்கள் இந்தியாவின் சார்பில் அனுப்பப்பட்டுள்ளன.



(x) பண்பாட்டுக் கலையுறவுப் பிரிவு.

மாநில அளவிலும், பிற மாநிலங்களுக்கிடையேயும் நமது பண்பாட்டையும், கலை மரபுகளையும் வளர்க்கவும் ஊக்குவிக்கவும் பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடத்தப்படுகின்றன. அயல்நாட்டுக் கலை விழாக்களும், மைய அரசின் கலை விழாக்குழுவின் ஒத்துழைப்போடு அவ்வப்போது நடத்தப்படுகின்றன. தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அருங்காட்சியகம், தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ் வளர்ச்சித்துறை, ஓவிய நுண்கலைக்குழு ஆகிய துறைகளுடன் இணைந்து அவ்வப்போது நடத்தப்படும் விழாக்களில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

2. தென் மாநிலங்களான கருநாடகம், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களையும், மைய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளான, புதுவை, அந்தமான்—நிக்கோபார் தீவுகள், இலட்சத்தீவு ஆகிய பகுதிகளையும் உறுப்பு மாநிலங்களாகக் கொண்ட தென்னகப் பண்பாட்டு மையத்தை மைய அரசு 1984 ஆம் ஆண்டு உருவாக்கியது. தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்டு அம்மையம் இயங்கி வருகிறது.

3. தமிழக அரசின் சார்பில் இம்மையத்திற்குப் பங்குத் தொகையாக ரூபாய் 1 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்திய நாடெங்கும் பல்வேறு மாநிலங்களில் நிகழும் கலைவிழாக்களுக்குத் தமிழகத்தின் கலைஞர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். நுண்கலைகளில் பயிற்சியளித்துக் கலை வளர்க்கும் நிறுவனங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது.

அரசு இசைப் பயிற்சி மையங்கள்.

சென்னையிலும், மதுரையிலும் அரசு இசைப் பயிற்சி மையங்கள் இசையையும், ஆடற்கலையையும் தொடர்ந்து பயிற்றுவித்து வருகின்றன. மேலும், கடம், கஞ்சிரா, நுகர்சங்கம், நட்டுவாங்கம் ஆகிய புதிய வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த வகுப்புகளில் சேர்ந்து பயிலும் மாணவ மாணவியர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

2. சென்னை இசைப் பயிற்சி மையத்தில் கருவியிசை பயிலும் மாணவர்கள் அரசின் உதவித் தொகை பெறுகின்றனர். முறையான வகுப்புகளில் 482 மாணாக்கரும் மாலை நேர வகுப்புகளில் 151 மாணாக்கரும் இசை பயின்று வருகின்றனர். புகழ்வாய்ந்த இசைப் பேராசிரியர்களை தனிநிலையில் அமர்த்துவது, இசை ஆராய்ச்சியாளர்களை நியமனம் செய்து ஆராய்ச்சி கருத்துரைகளைப் பெறுவது, மாலை நேர இசைப் பயிற்சி மையத்தில் நாட்டியம், மிருதங்கம் வகுப்புகளை

நடத்துவது, மின்னியல் இசைக்கருவிகள் வாங்குதல், மாணவர்களுக்காக இசைக் கருத்தரங்குகள், இசைப்போட்டிகள் உள்ளிட்ட விழாக்கள் நடத்துதல் ஆகியவை திட்டமிடப்பட்டுள்ள புதிய பணிகளாகும். மதுரை இசைப் பயிற்சி மையத்தில், குரலிசை, கருவியிசை, இசையியல், ஆடற்பயிற்சி, இசை ஆசிரியப் பயிற்சி ஆகிய துறைகள் அமைந்துள்ளன. தமிழிசையின் தனி மாட்சியையும் கருநாடக இசையில் பழந்தமிழ்ப் பண்கள் கலந்து நிலவும் அமைதியையும் இசையிலக்கண விளக்கங்களையும் மாணாக்கர்கள் அறிந்து கற்கும் வகையில், பாட வகையிலும், பயிற்று நிலையிலும் புத்தூட்டமும் ஆக்கமும் அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

இவ்வாறு ஆட்சி மொழிச் செயலாக்கம், கலை நலம், மரபு பண்பாட்டுக் கூறுகளை வளர்த்துக் காத்தல் முதலிய பணிகளை இத்துறைகள் முறையாக நடத்தி வருகின்றன.

### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செலவும் மாநில வரவு—செலவுத் திட்டமும்.

1990—91 ஆம் ஆண்டின் ''மானியக் கோரிக்கை 17—கல்வி'' இல் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ஒதுக்கியுள்ளது ரூ. 101.01 இலட்சமாகும். இதன் நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| (1) | 1990—91 வரவு-செலவு மதிப்பீடு. திட்டமல்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. 2205. கலைப்பணிகள்— 102. கலைப் பணிகள் மேம்பாட்டுத் திட்டம்— ஜேபி. மானியம் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம். | .. | 15.00 | 15.00 |
| 2. ஜே.ஏ. கலைப்பணிகளுக்கு— ஒட்டு மொத்த நிதி ஒதுக்கம். | .. | 3.00 | 3.00 |
| 3. ஜேஈ. மாநில கலாச்சார பரிவர்த்தனை திட்டம். | .. | 3.00 | 3.00 |
| 4. ஜேடி. நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம். | .. | 80.01 | 80.01 |
| மொத்தம் | .. | 101.01 | 101.01 |



### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 1990-91 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட உரை.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மத்திய சங்கீத நாடக அகாடெமியின் திட்டங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காக மாநில அரசால் பதிவு செய்யப்பட்ட அரசு கலை நிறுவனமாகும். இந்நிறுவனம் தமிழ் மரபைப் பேணி வளர்ப்பதற்காகவும், இயல், இசை, நாட்டியம், நாடகம், கிராமியக் கலைகளின் மரபு காப்பதற்காகவும் இயங்கி வருகிறது.

2. மத்திய மாநிலங்களிடையே கலாச்சாரப் பரிவர்த்தனையைச் செயல்படுத்துதல், வறுமையில் வாடும் புகழ்பெற்ற கலைஞர்கள் மானியம் பெறுவதற்காக விண்ணப்பங்களை மாநில அரசுக்குப் பரிந்துரை செய்தல், திறமைமிக்க இளம் கலைஞர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக கலை நிறுவனங்களின் மூலமாக மானியம் வழங்குதல், புகழ்பெற்ற கலைஞர்களுக்கு அவர்கள் கலைத் துறைக்குப் பணியாற்றிய சாதனைகளைப் பாராட்டி அரசு சார்பில் கலைமாமணி விருது வழங்குதல், புதிய நாடகங்கள், நாட்டிய-நாடகங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கவும் கலை சம்பந்தமான நூல்களை வெளியிட மானியம் அளித்தல், முதுகலை [illegible]களின் விழாக்களை நடத்தும் பொது நிறுவனங்களுக்கு [illegible]ானியம் அளித்தல், மறைந்துவரும் பழங்கலைகளை கண்டு[illegible]ளிக்கவும், ஆய்வு செய்யும் வருங்கால சந்ததியினருக்கு ஒளி-[illegible]லிப் பதிவு செய்து காப்பாற்றுதல், கவின்மிகு நுண்கலைகளைப் [illegible]ற்றிய ஆய்வுகளுக்கான ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய பல முக்கிய பணிகளை மன்றம் ஆற்றி வருகின்றது.

3. இதுவரை மன்றம் 688 புகழ் பெற்ற கலைமேதைகளுக்கு 'கலைமாமணி' விருது வழங்கியுள்ளது. அவ்விருது வழங்கும் விழாவில் இதுகாறும் 186 முதுபெரும் கலைமேதைகளின் திருவுருவப் படங்களை மன்றம் திறந்து வைத்துள்ளது. அதுமட்டுமின்றி அவ்விழாவில் 'கலைமாமணி' விருது பெற்ற 147 ஏழைக் கலைஞர்களுக்கு ரூ. 1,000 வீதம் பொற்கிழியும் பெற்றுள்ளார்கள். தற்போது 28 கலைஞர்களுக்கு இவ்வாண்டுக்கான கலைமாமணி விருது வழங்கப்பட உள்ளது. நலிந்த கலைமாமணி விருதுபெற்ற கலைஞர்கட்கு மேற்சொன்ன விழாவில் ரூ. 2,000 வீதம் பண முடிப்பு (பொற்கிழி) வழங்க உள்ளது.

4. மாநிலங்களிடையே கலாச்சாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ் 30 கலைஞர்கள் கொண்ட இரு கலைக் குழுக்களை மன்றம் ஏற்பாடு செய்து பீகார், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு கடந்த ஆண்டு அனுப்பியுள்ளது. மன்றம் கடந்தாண்டு குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலக் கலைக் குழுக்களை வரவேற்று சென்னையிலும் பிற மாவட்டத் தலைநகரங்களிலும் நிகழ்ச்சிகள் நடத்தினர். புதிய நாடகங்களைத் தயாரிக்க மன்றம் ஆண்டுதோறும் தொழில் முறை நாடகக் குழுக்களுக்கு மானியம் வழங்கி வருகின்றது.

5. பழம்பெரும் கலைமேதைகளான கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன், சங்கரதாஸ் சுவாமிகள், டி. எஸ். ராஜரத்தினம் பிள்ளை ஆகியோரின் பிறந்த தின விழாக்களை திருவையாறு, திருநெல்வேலி, பொள்ளாச்சி, கரூர் ஆகிய இடங்களில் மன்றம் நிகழ்த்தியுள்ளது. அவ்வமயம் 30 வறுமையில் வாடும் கலைஞர்கள் மற்றும் கலைக்குழுக்கள் ஆகியோருக்கு தலா ரூ. 1,000 வீதம் பணமுடிப்பு வழங்கியுள்ளது. 1990–91-ல் சென்னையில் 'நற்றமிழ் வித்தகர் நால்வர் விழா (சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்மந்தனார், என். எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன் ஆகிய சிறந்த கலை மேதைகள் நினைவாக) ஒன்றினை மன்றம் நடத்த உள்ளது.

6. வறுமையில் வாடும் வயோதிகக் கலைஞர்களுக்கு மானியம் வழங்கும் மாநில அரசின் திட்டத்தின் கீழ் இதுவரை 2,467 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர். அக்கலைஞர்களுக்கு மாதம் தோறும் ரூ. 250 நிதியுதவி அளித்து வருகிறது.

**கலைஞர்களைப் பற்றிய யார்—எவர் பதிப்பித்து வெளியிடுதல் :**

தமிழகத்தினைச் சார்ந்த புகழ்பெற்ற கலைஞர்களின் வாழ்க்கை குறிப்புகள் அடங்கிய 'யார்—எவர்' என்ற நூலை மன்றம் பதிப்பித்து வெளியிட உள்ளது. இதன் முதற்படியாக மன்றம் இசை, நாட்டியம் ஆகிய துறைகளிலுள்ள கலைஞர்களின் வாழ்க்கை குறிப்புகளை சேகரித்துள்ளது. அக்கலைஞர்களின் வாழ்க்கை குறிப்புகளை விரைவில் பதிப்பித்து வெளியிட உள்ளது. கலை மற்றும் கலாச்சாரத் துறையில் அரிய கலைஞர்கள் எழுதிய கலை நூல்களை வெளியிட மன்றம் நிதியுதவி செய்து வருகின்றது. இதுவரை மன்றம் சுமார் 85 நூல்களுக்கு நிதியுதவி அளித்து வெளியிட்டுள்ளது.

**ஊரகக் கலைப் பயிற்சி மையம் :**

ஊரகக் கலைகளான கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து ஆகியவற்றை வளர்த்திடும் வண்ணம், அக்கலைகளில் ஆர்வமுள்ள இளம் சிறார்களுக்கு மாவட்டம்தோறும் கிராமிய கலைப்பயிற்சி மையம் அமைத்து அதன்மூலம் பயிற்சி அளிக்க மன்றம் ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் வருங்கால சந்ததிகள் அறியும் வண்ணம் மற்றும் கலை ஆராய்ச்சியாளருக்குப் பயன்படும் வகையில் வீடியோ, கேமரா, டேப்ரிக்கார்டர் வாயிலாக கலை நிகழ்ச்சிகளை ஒளி ஒலி மூலமாக பதிவு செய்து அவற்றை பாதுகாக்க வேண்டியுள்ளது, இத்திட்டத்திற்காக 1990–91-ல் ரூபாய் 1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திரைப்படக் கல்லூரியால் கிடைக்கும் வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

தமிழக அரசின் உயர்ந்த கலைத் திட்டங்களைச் செயலாற்றியும், மக்களிடையே அவை மலர்ந்து மிளிரவும் மன்றம் சுவையான திட்டங்களை உருவாக்கி வருகின்றது.



## தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்.

1989–90 ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், மத்திய அரசின் மரபுவழிச் சாரா எரிசக்தித் துறையின் உதவியுடன் கீழ்க்காணும் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது:—

(1) மின் உற்பத்திக்கும் மற்றும் நீர் இறைப்பதற்கும் உதவிடும் காற்றாலைகள் நிறுவுதல்;

(2) உயிரியல் சார்ந்த எரிசக்தி-எரிசக்தி தாவரங்கள் வளர்த்தல் மற்றும் சாண எரிவாயு சாதனங்கள் நிறுவுதல்;

(3) வீடு மற்றும் தொழில் நிறுவனங்களின் உபயோகத்திற்காக சூரிய சக்தி சுடுநீர் சாதனங்கள் அமைத்தல்;

(4) ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டங்கள்;

(5) ஊர்ஜாகிராம்;

(6) உராய்வற்ற சக்தி மிகுந்த ஃபுட்வால்வுகள் வழங்குதல்.

**மின் உற்பத்திக்கான காற்றாலைகள் :**

காற்று சக்தி அமைப்பின் கீழ், சிதம்பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடிக்கு அருகே முல்லைக்காடு என்னும் இடத்தில் நிறுவப்பட்டு இயங்கிவரும் 1.1 மெ. வா ஒருங்கிணைந்த திறன் கொண்ட காற்றாலைத் தொகுப்பு 1990-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ம் நாள் வரை 49.66 லட்சம் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்துள்ளது. ஒவ்வொன்றும் 90 கி. வா. மின் உற்பத்தித் திறன் கொண்ட 15 காற்று சுழல்வான்கள் அடங்கிய இரண்டாவது காற்றாலைத் தொகுப்பு கயத்தாற்றில் 1988-ம் ஆண்டு மார்ச் மாதம் நிறுவப்பட்டது. இந்தக் காற்றுச் சுழல்வான்கள் 1990-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ம் நாள் வரை 45.64 லட்சம் யூனிட்டுகள மின்சாரம் உற்பத்தி செய்துள்ளன. ஒவ்வொன்றும் 200 கி.வா திறன் கொண்ட இரு வெஸ்டாஸ் (VESTAS) இயந்திரங்கள் 1990-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ம் நாள் வரை 4.91 லட்சம் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்துள்ளன. திருநெல்வேலி—கட்டபொம்மன மாவட்டத்தில் புளியங்குளம் என்ற இடத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுல்தான்பேட்டை என்ற இடத்திலும் நிறுவப்பட்டு இயங்கிவரும் இரண்டு முன்னோடிக் காற்றுச் சுழல்வான்கள் (90 கி.வா) 1990-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ம் நாள் வரை முறையே 1.45 லட்சம் யூனிட்டுகள், 1.70 லட்சம் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்துள்ளன. டானிடா மானியத் திட்டத்தின்கீழ் கயத்தாறு மற்றும் முப்பந்தல் ஆகிய இட இடங்களிலும் 10 மெ. வாட் திறன் கொண்ட காற்றாலைத் தொகுப்புகள் நிறுவும் பணி முடிவடைந்துள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை ரூ. 22 கோடியாகும். இதில் இயந்திரங்களுக்காகச் செலவிடக்கூடிய ரூ. 17.5 கோடி மட்டும் டானிடா நிதி உதவி திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. இதர செலவுத் தொகை ரூ. 4.5 கோடி தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி

நிறுவனமும், தமிழ்நாடு மின்சார வாரியமும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. இந்தக் காற்றாலைத் தொகுப்புகள் 1990-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இயக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

நீர் இறைக்கும் காற்றாலைகள்:

வருடம் முழுமைக்கும் தமிழக மாநிலம் முழுவதும் மிகுந்த காற்று வளம் பெற்றுள்ளதால், நீர் இறைக்கும் காற்றாலை களுக்கு அதிக தேவை ஏற்பட்டிருக்கிறது. 1988–89 ஆம் ஆண்டிற்கு 250 காற்றாலைகளுக்கு மத்திய அரசின் மரபுவழிச் சாரா எரிசக்தித் துறை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதுவரையில் நடப்பு 1989–90 ஆம் ஆண்டில் 74 காற்றாலைகள் நிறுவப் பட்டுள்ளன. மத்திய அரசின் மரபுவழிச்சாரா எரிசக்தித் துறை 1989-90-ம் ஆண்டிற்கு 100 (12 பியு 500) காற்றாலைகளுக்கும், 20 இழுவை வகை காற்றாலைகளுக்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது: ஒப்பளிப்பு உத்தரவுகள் சமீபத்தில் பெறப்பட்டபடியால் மேற் சொன்ன திட்டங்கள் அமல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற் கொ‌ளப்பட்டு வருகின்றன.

உயிரியல் சார்ந்த எரிசக்தி:

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் தேவர்குளம் மறறும் முத்தம்மாள்புரம் ஆகிய இரு கிராமங்களிலும் மொத்தம் 523 ஹெக்டேர் நிலப்பரப்பில் எரிசக்தி தாவரங்கள் பயிரிடும் திட்டத்தை 1988–89 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவு மதிப்பீடு ரூ. 52.3 லட்சம் ஆகும். இத்திட்டத்தில் ஏறத்தாழ 600 விவசாயிகள் பங்கேற்கிறார்கள். இதுவரையிலும் மொத்த நிலப்பரப்பில் 12.55 லட்சம் கன்றுகள் நடப்பட்டுவிட்டன.

சாண எரிவாயு சாதனங்கள்:

இதுவரை 49 திட்டக் கருத்துக்கள் (நிறுவன எரிவாயுக் கலன்கள் 46, சமூக எரிவாயுக் கலன்கள் 3) மரபு வழிச் சாரா எரிசக்தித் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவற்றில் ரூ. 33.46 லட்சத்திற்கு 38 திட்டக் கருத்துருக்கள் (நிறுவன எரிவாயுக் கலன்கள் 35, சமூக எரி வாயுக் கலன்கள் 3) ஒப்பளிக்கப் பட்டுள்ளன. 25 கலன்கள் ரூ. 22.06 லட்சம் செலவில் நிறுவப் பட்டு இயங்கி வருகின்றன.

சூரிய சக்தி விரிவாக்கத் திட்டம்:

இதுவரையிலும் ரூ. 2.90 கோடி செலவில் நாள் ஒன்றுக்கு 5, 15, 125 லிட்டர் நீரை சூடாக்கவல்ல 164 சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதில் ரூ. 2.57 கோடி செலவில் நாள் ஒன்றுக்கு 4,72,625 லிட்டர் நீரை சூடாக்கக்கூடிய 150 சூரிய சக்தி சுடுநீர் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன, 14 சுடுநீர் சாதனங்கள் நிறுவும் பணி நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. தமிழ்நாட்டில் ரூ. 64.44 லட்சம் செலவில் 716 வீடு களுக்கான சூரிய சக்தி சுடுநீர் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன.



ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம்:

உள்ளூரில் கிடைக்கும் எரிசக்தி வளங்களை முதன்மையாகப் பயன்படுத்தும், மரபுவழிச் சாரா எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் மரபுவழிச் சார்ந்த எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றின் பெரிதும் உகந்த கலவை மூலம் வீட்டிற்கும், உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் வேண்டிய எரிசக்தித்தேவைகளை எதிர்கொள்ள ஒருவட்டாரத்தை திட்டமிடும் அலகாகக் கொண்ட, நில வளர்ச்சி அணுகுமுறையின் அடிப்படையாக இத் திட்டம் உள்ளது. 1989–90 ஆம் ஆண்டில் இந்தச் செயல்முறை மூன்று வட்டாரங்களில், அதாவது காயிதே மில்லத் மாவட்டத்தில் பழனியிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாஜாவிலும், தர்மபுரி மாவட்டத்தில் ஹரூரிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. பழனி மற்றும் வாலாஜா வட்டாரங் களைப் பொறுத்தவரை, இவற்றிற்கான எரிசக்தி அறிக்கைகள் மத்திய அரசின் மரபுவழிச் சாரா எர்சக்தி துறைக்கு அனுப்பப் பட்டுள்ள, ஹரூர் வட்டாரத்தைப் பொறுத்தவரை எரிசக்தி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஊர்ஜா கிராம்:

மத்திய அரசின் மரபுவழிச் சாரா எரிசக்தித் துறை 37 ஊர்ஜாகிராம் திட்டத்திற்கு (மாதிரி எரிசக்தி கிராமம்) 37 கிராமங்களில் ரூ. 83.50 லட்சம் மதிப்பீட்டு செலவில் ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

உராய்வற்ற ஃபுட் வால்வுகள்:

1989–90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 325 உராய்வற்ற ஃபுட்வால்வுகளை ரூ. 4.55 லட்சம் செலவில் நிறுவியுள்ளது. ஒரு ஃபுட்வால்விற்காகத் தரப்படுகிற மானியம் ரூ. 500 ஆகும். மேலும் 150 ஃபுட்வால்வுகளை நிறுவும் பணி நடைமுறையில் உள்ளது.

1990-91 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கிற நடவடிக்கைகள்:

(1) 10 மெ.வா. காற்றாலைத் தொகுப்புகள் கயத்தாறிலும் முப்பந்தலிலும் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இயக்கப்பட உள்ளன.

(2) தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் மானிய அடிப்படையில் ரூ. 66 லட்சம் பெறுமானமுள்ள 50 சூரிய வெப்பத்தால் சுடுநீர் ஆக்கும் சாதனங்கள், தொழிற்சாலைகள், சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள், ஆலைகள் ஆகியவற்றில் நிறுவப்பட எண்ணப்பட்டுள்ளது.

(3) ரூ. 18.00 லட்சம் செலவில் 200 வீடுகளுக்கான சூரிய சக்தி சுடுநீர் சாதனங்கள் நிறுவப்பட எண்ணப்பட்டுள்ளது.

(4) தமிழ்நாடு முழுவதும் ரூ. 22.00 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 100 நீர் இறைக்கும் காற்றாலைகள் (12 பியு 500 வகை)

நிறுவ எண்ணப்பட்டுள்ளது. ரூ. 6.8 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 20 இழுவை வகை நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவ எண்ணப்பட்டுள்ளது; 12 பியு 500 நீர் இறைக்கும் காற்றாலைகள் பயனடைபவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

(5) 25 கனமீட்டரிலிருந்து 45 கனமீட்டர் வரையிலான கொள்ளளவு உள்ள 20 சாண எரிவாயு சாதனங்கள் ரூ. 20.00 லட்சம் செலவில் நிறுவப்பட இருக்கின்றன.

(6) 1990–91 ஆம் ஆண்டில் ரூ. 62.7 லட்சம் செலவில் கீழ்க்காணும் இடங்களில் 627 ஹெக்டேர் நிலப்பரப்பில் எரிசக்தி மரங்கள் பயிரிடுவதற்கான ஒப்பளிப்பு பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:—

| | |
|---|---|
| (அ) திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம் இரண்டாவது கட்டம் .. | 500 ஹெக்டேர் |
| (ஆ) நெய்வேலி லிக்னைட் கழகம், தென்னாற்காடு மாவட்டம் .. .. | 90 ஹெக்டேர் |
| (இ) கால்நடை பராமரிப்பு நிலையம், காட்டுப்பாக்கம், செங்கை-அண்ணா மாவட்டம். | 10 ஹெக்டேர் |
| (ஈ) இன்டர்நேஷனல் சைல்டு வெல்பேர் கிராமம், தொழுப்பேடு, செங்கை-அண்ணா மாவட்டம் .. .. .. | 10 ஹெக்டேர் |
| (உ) பாரத்வாஜ ஆஸ்ரமம், சேரன்மாதேவி திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் | 10 ஹெக்டேர் |
| (ஊ) புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த ராபினெட் ஹெர்பேரியன், திருச்சி .. | 7 ஹெக்டேர் |

(7) ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 5 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி செயல்முறைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் திருமங்கலத்திலும், தென்னாற்காடு மாவட்டத்தில் பரங்கிப்பேட்டையிலும், திருச்சி மாவட்டத்தில் ஆலத்தூரிலும் நடைபெற்ற ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி செயல்முறைத் திட்டங்கள் மீண்டும் அமலாக்கப்பட எண்ணப்பட்டுள்ளது.

(8) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் கோட்டை கருங்குளம் கிராமத்தில் ரூ 340.00 லட்சம் செலவில் 1.5 மெ.வா. திறன் கொண்ட காற்றாலை தொகுப்பு நிறுவப்பட எண்ணப்பட்டுள்ளது.

(9) ரூ. 46.00 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள நாலாட்டின்புதூருக்கும், திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள தாழையூத்துக்கும் இடையிலுள்ள தேசிய நெடுஞ்சாலையின் அருகே அமையப்பெற்றுள்ள மின்காற்றுத்தி சாதனங்களுக்கு இடையே 110 கி.வா. திறன் கொண்ட இரண்டு மின் இயந்திரங்கள் நிறுவப்பட எண்ணப்பட்டுள்ளது. D

V 21,31'N9o 143798
N91.251

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 19, சுக்ல— திருவள்ளுவர் ஆண்டு 2021
1990 ஏப்ரல் 2, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.''

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியாகும் கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**பாஸ்பேட் தன்மையற்ற டிடர்ஜென்ட் மூலப்பொருள் தயாரிக்கும் உரிமை.**

*2606 திரு கோ. பூவராகன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் அருகே பாஸ்பேட் தன்மையற்ற டிடர்ஜென்ட் மூலப்பொருள் தயாரிக்கும் உரிமை யாருக்கேனும் வழங்கப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) வழங்கப்பட்டிருக்கிறது.

(ஆ) ஹென்கெல், கேஜிஏ என்ற மேற்கு ஜெர்மனி நிறுவனத்துடன் இணைந்து திருவாளர்கள் ஸ்பிக் பைன் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் ஆண்டொன்றுக்கு 30,000 டன்கள் திறம்கொண்ட பாஸ்பேட் இல்லாத டிடர்ஜென்ட் தயாரிக்க

உரிமம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இத்திட்டம் செயல் படுத்தப்படும் எனத் தெரிகிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டு நிறுவனத்தின் உதவியோடு இந்த டிடர்ஜென்ட் மூலப்பொருள் தயாரிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே உள்நாட்டு முதலீடு என்று சொல்லப்படுகின்ற, அந்த வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நம்முடைய முதலீடு எவ்வளவு? வெளிநாட்டு முதலீடு எவ்வளவு? ஸ்பிக் நிறுவனத்தினர் ஏற்கெனவே பல இடங்களில் பல துறைகளில் தொழில்களைத் துவங்கி இருக்கிறார்கள். எனவே இது 'மோனாப்பொலி ட்ரேட்' என்பதன் கீழ் வருகிறதா! அல்லது அதற்கும் மீறி இதற்கு வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தொடக்கத்தில் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்குவதாக உத்தேசிக்கப்பட்டது. ஜாயின்ட் செக்டார்-இல் இதைத் தொடங்குவதற்கு ஒப்புதல் தந்து ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ் என்ற பெயரில் அனுமதி வழங்கப் பட்டது. பிறகு இந்த மதிப்பீடு 35 கோடி ரூபாயிலிருந்து இப்போது அதிகமாகி 56 கோடி ரூபாய் என்று ஆகிவிட்ட நிலையில் அவர்கள் தொடர்ந்து இந்த ஜாயின்ட் செக்டாரில் இயங்குவதற்கு இல்லை என்று தெரிவித்த காரணத்தால் இப்போது தமிழ்நாடு பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிட்டெட்டும் டிட்கோவும் இணைந்து ஜாயின்ட் செக்டார் மூலமாக இந்தத் தொழில் தொடங்கப்பட இருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்பிக் நிறுவனம் ஏற்கெனவே டிட்கோவிலிருந்தும், சிட்கோவில் இருந்தும் இன்னும் பல நிதி நிறுவனங்களிலிருந்தும் நிறையக் கடன் பெற்றிருக்கிறார்கள். அந்தக் கடன்கள் எல்லாம் நீண்ட நாட்களாக அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதாகத் தெரிய வருகிறது. அதுகுறித்து ஏதாவது முயற்சி எடுத்து, நடவடிக்கை எடுத்து வசூலிக்கப்படுகிறதா? இதுபோன்று நம்முடைய நிதி அதிகமாக வழங்கப்படுகிற தனியார் துறையில் இயங்குகின்ற தொழில் நிறுவனத்தில் அரசாங்கத்திலிருந்து ஏதாவது ஒரு டைரக்டர் போடுவதற்கு வழி வகை உண்டா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இதை உற்றுக் கவனித்து வருகிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்று நான் கருதுகிறேன். அரசின் சார்பாக—டைரக்டர் மாத்திரமல்ல—ஜாயின்ட் செக்டாரில் 26 சதவீதம் அரசுக்கு என்று இருக்கும்போது அரசின் சார்பில்



தான் அதனுடைய தலைவர் இருக்க வேண்டும் என்பது நம்முடைய அழுத்தமான கொள்கையாகும். ஆனால், கடந்த காலத்தில் ஒருவருக்குப் பதிலாக இருவர், அவர்களே இருந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனை இந்த அரசு எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலாது. தனியார், அதே நேரத்தில் கூட்டுத் துறை தொழிலைச் செய்ய முன் வந்தாலும் கூட அவர்களுடைய ஆதிபத்தியம் அதிலே நிலைக்க வேண்டும் என்பதற்கு அரசு என்றைக்கும் இடம் தராது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**காவல் துறை பணியாளர்கள் பணி நிமித்தமாக வெளியூர் செல்லும்போது கொடுக்கப்படும் தினப் படி.**

*3046 திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காவல் துறையைச் சார்ந்த பணியாளர்கள் பணி நிமித்த மாக வெளியூர் செல்லும்போது கொடுக்கப்படும் அலவென்ஸை (D.A.) உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

பணி நிமித்தமாக வெளியூர் செல்லும்போது கொடுக்கப் படும் அலவன்ஸ் (D.A.) 5-வது ஊதியக் குழுவின் பரிந்துரை களுக்கிணங்க அரசாணை எண். 666, நிதித் துறை, நாள் 27-6-1989-ல் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆணை காவல் துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் பொருந்தும்.

(9.05 மணி)

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காவல் துறையினருக்கு தற்போது வழங்கப் படும் அலவன்ஸ் இரண்டு மடங்கு என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்கள். இந்த இரண்டு மடங்கு என்பது சாதாரணமாக ஒரு நாளைக்கு 6 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அப்படி என்றால் இன்றைக்கு 12 ரூபாய் தான் கிடைக்கும். ஆகவே இது போதுமானதல்ல. இதனால் பல தவறுகள் நடப்பதற்கும் வழி ஏற்படுகிறது. ஆகவே இதைக் குறைந்த பட்சம் 25 ரூபாய் அளவுக்காவது உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிடுவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்புக்கு வருவதற்கு

முன்பு 8 ரூபாய், 10 ரூபாய், 15 ரூபாய், 22 ரூபாய் என்ற அளவில் தினப் படிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த அரசு பொறுப்புக்கு வந்து, கடந்த ஆண்டு 27-6-1989-ல் 3 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுகின்றவர்களுக்குத் தினப் படி 44 ரூபாய். 1,400 ரூபாய் முதல் ரூபாய் 3,000 வரை ஊதியம் பெறுகின்ற அலுவலர்களுக்குத் தினப்படி 30 ரூபாயும், 950 ரூபாய்க்கு மேல் 1400 ரூபாய் வரை பெறுகின்றவர்களுக்கு 20 ரூபாயும், 950 ரூபாய்க்குள் ஊதியம் பெறுகின்றவர்களுக்கு 16 ரூபாயும் என்று ஏற்கெனவே இருந்த படியைவிட இரண்டு மடங்கு அதிகமாக வழங்கி வருகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காவல் துறையினருக்கு வழங்கப்படுகின்ற அலவன்சை இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு உயர்த்தி இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி. அதுபோல அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உடுப்பு வருடத்திற்கு ஒன்று மட்டும்தான் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறதே. அதை இரண்டு மடங்காக உயர்த்திக் கொடுப்பதோடு சலவை அலவன்ஸ், ஷேவிங் அலவன்ஸ் மிகக் குறைந்த அளவு மாதத்திற்கு 20 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். அவற்றையும் உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா அவர்களுடைய தினப் படியைப் பற்றி மாத்திரம் குறிப்பிடுகின்றது. மற்றபடி, தேவைக்கேற்ற படி தனிக்கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வெளியூருக்குச் செல்லும்போது அவர்களுக்கு உயர்த்தப்பட்ட அலவன்ஸ் எப்போது கொடுக்கப்படுகிறது? மிகத் தாமதமாக கொடுப்பதாகவும், பல மாதங்களுக்குப்பிறகும்கூட கொடுப்பதாகவும் கூறப்படுகிறது. அது உண்மை என்றால், அதை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற குறைபாடுகளை விரைவில் களைவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியூர் செல்லும்போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த பேட்டா இரண்டு மடங்காக உயர்த்தியது இன்றைக்கு இருக்கின்ற விலைவாசியில் அவர்களுக்கு ஓரளவுக்கு நல்ல காரியமாகும்.



ஆனால் உள்ளூர் வட்டத்திற்குள்ளே தங்களுடைய குடும்பத்திற்கு வந்து சாப்பிடவோ மற்ற காரியங்களோ செய்யமுடியாமல் தொடர்ச்சியாக பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மிகக் குறைவான தொகை கொடுக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியானால் அதை உயர்த்துவதற்கு ஏதாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே அது உண்மையா, அல்லவா என்று தெரியாத நிலையிலேதான் கேள்வி எழுப்பி இருக்கிறார். நானும் அது உண்மையா, அல்லவா என்பதைப் பிறகு அறிந்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 5323 மற்றும் 7682 ஆகியவை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் தள்ளி வைக்கப்படுகின்றன.

நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்களுக்கு வரி.

*409 திரு. கே. ஏ. மணி:

மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (U.D.R.) அளவு செய்யப்பட்ட நிலங்களுக்கு எந்த அடிப்படையில் வரி விதிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இந்த வரி தள்ளுபடி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது வரியல்ல. நில அளவைக் கூலி, கற்கள் கிரயம், நிர்வாகச் செலவுகள் போன்ற எல்லா திட்டச் செலவுகளையும் சேர்த்து அதில் ஒரு பகுதி மட்டும் நில உரிமையாளர்களிடம் இருந்து கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இது மொத்தச் செலவில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு ஆகும். பொதுவாக இது நஞ்சை நிலத்துக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 58.70 என்ற நிலையிலும் புஞ்சை நிலத்துக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு சுமார் 29.60 என்ற நிலையிலும் இருக்கும். வட்டத்துக்கு வட்டம் கட்டண விகிதம் சற்றே மாறுபடலாம்.

(ஆ) இக்கட்டணம் வசூலிப்பதைத் தள்ளுபடி செய்ய இயலாது.

9.10 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்கீழ் எல்லா நிலங்களுக்கும்

நில அளவைப் பணியை மேற்கொண்டு வருகிறார்கள். நிலச் சுவான்தார்களுடைய நிலங்கள், கோயில் நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், ஹைவேஸ் நிலங்கள் இவற்றை எல்லாம் அளக்கும் போது நில உரிமையாளர்களுக்கு மட்டும் வரி விதிப்பு செய்கிறார்கள். அவர்களுக்கு வரி தள்ளுபடி செய்ய இயலாது என்று இங்கே தெரிவித்தார்கள். அத்துடன் நஞ்சை என்றால் ரூபாய் 58.70 என்றும், புஞ்சை என்றால் ரூபாய் 29.60 என்றும் கட்டண விகிதம் இருப்பதாகவும் இங்கே தெரிவித்தார்கள். ஒரு ஹெக்டேருக்கு அளக்கும்போது ஏற்படுகிற செலவு நஞ்சை என்றாலும் புஞ்சை என்றாலும் ஒரே அளவுதானே இருக்க முடியும். அப்படி இருக்கும்போது நஞ்சைக்கு ஒரு ரேட்டும், புஞ்சைக்கு ஒரு ரேட்டும் ஏன் வித்தியாசமாக வசூலிக்கப் படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பூமியில் நடப்படும் நில அளவை குறியீட்டுக் கற்கள் வாங்குதல், அவற்றை சேமித்து வைத்தல் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய இதர செலவினங்களுக்கான தொகை மற்றும் நில அளவைக் கூலி ஆகியவை மட்டும் ஒரு வட்டத்திற்கான விஸ்தீரணத்திற்கு ஏற்ப கணக்கிட்டு அத்துடன் உபரிக் கட்டணமாக, சர்சார்ஜாக, 300 விழுக்காடு சேர்த்து பட்டாதாரர்களிடம் ஒரேஒரு முறைதான் வசூல் செய்யப் படுகிறது. மேலும் நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள், நிர்வாகச் செலவு தவிர, நில அளவைக் கட்டணம் கணக்கிடச் சேர்த்துக் கொண்டால், ஒரு எக்டேர் நஞ்சைக்கு ரூ. 261.60-ம், அளவு கூலி சுமாராக ரூ. 65.40-ம், உபரிக் கட்டணம் ரூ. 196.20-ம், 1:3 என்ற விகிதாச்சாரத்திலும், புஞ்சைக்கு ஒரு எக்டேருக்கு ரூ. 174.40-ம், அளவு கூலி ரூ. 43.6C-ம், உபரிக் கட்டணம் ரூ. 130.80-ம், 1:3 என்ற விகிதாசாரத்திலும், வசூல் செய்ய வேண்டும். ஆனால், அனைத்து பணியாளர்களின் நிர்வாகச் செலவுகள் போன்றவற்றை அரசே ஏற்றுக்கொண்டு, அளவுக் கூலி மற்றும் கல் கிரயத்துடன் உபரிக் கட்டணம் மட்டும் சேர்த்து பட்டாதாரர்களிடம் நில அளவைக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. இக்கட்டணம் நஞ்சையாக இருந்தால் ஒரு எக்டேருக்கு சுமார் ரூ. 58.20, அளவு கூலி ரூ. 14.55, உபரிக் கட்டணம் ரூ. 43.65, ஆக 1:3 என்ற விகிதாசாரத்திலும், புஞ்சையாக இருந்தால் சுமார் ரூ. 38.80, அளவு கூலி ரூ. 9.20, உபரிக்கட்டணம் ரூ. 29.60 என்ற விகிதாசாரத்திலும் வசூல் செய்யக் கணக்கிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. எம். சிரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அளவை செய்யப்பட்டிருக்கும்படியான பல்வேறு கிராமங்களில் நில அளவைக்குப் பின் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து வேறு நபர்களுக்கு பட்டா மாற்றப்பட்டிருக்கிறதாக அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா? அப்படியானால் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் புகார் ஏதும் வரவில்லை. வந்தால் அரசு பரிசீலிக்கும்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டணம் முன் கூட்டியே வசூலிக்கப்படுகிறதா? அல்லது இந்தக் கட்டணத்தில் நிலுவை இருக்கிறதா? அப்படி நிலுவை அல்லது பாக்கி இருப்பின், அதை வசூல் செய்ய எடுக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவை இருப்பதாக எனக்கு நினைவு இல்லை. இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் தெரிவிப்பாரேயானால் அதுகுறித்து யோசிக்கப் படும்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் நன்செய், புன்செய் நிலங்களுக்கு ஒரே அளவு கட்டணமா அல்லது வேறுபாடு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பதிலில், ஏற்கெனவே வேறுபாடு உண்டு என்று தெரிவித்திருக்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூ.டி.ஆர். திட்டத்தின்கீழ் நில அளவை செய்யப் பட்டதில், சில சமயங்களில் அது சரியாக செய்யப்படவில்லை. அதனால் வரிகள் கொடுப்பதற்குச் சங்கடப்படுகிறார்கள். மேலும் நிலங்கள் சரியாக அளக்கப்படவில்லை. கல் சரியாக நாட்டப்படவில்லை. வரைபடங்களிலிருந்து மட்டும் மாற்றம் செய்திருக்கிறார்கள். நேரடியாக நிலங்களுக்குச் சென்று பார்த்து அதைச் செய்யவில்லை. இதனால் சில ஊர்களில் இருக்கிற நில உடைமையாளர்கள் இன்றையதினம் பணத்தைத் திருப்பித் தருவதிலே சங்கடப்படும் நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

Hon. Thiru NANJIL K. MANOHARAN: Sir, let the Member talk personally.

### பட்டா வழங்கல்.

*3717 திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் உள்ள சங்கராபாளையம் ஊராட்சியைச் சேர்ந்த குருநாதபுரத்தில் குடிசை போட்டிருப்பவர்களுக்கு பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

9.15 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ). பெரியார் மாவட்டம், பவானி வட்டம், சங்கராபாளையம் கிராமத்தில் ஒப்படை கோரப்படும் புல எண். 105 என்பது மந்தைப் புறம்போக்காகும். மந்தை மற்றும் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் ஒப்படை வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்புலனை ஒட்டியுள்ள குருநாதசுவாமி கோவில் திருவிழா காலத்தில் மாட்டுச் சந்தைகள் கூடுவதால் மாடுகள் நிற்பதற்கு வேறு இடமில்லை. மேற்கண்ட நிலம் பொது நலனுக்குத் தேவைப்படுவதால் நில ஒப்படை செய்ய ஆட்சேபணையும் உள்ளது. இதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இச்சூழ்நிலையில் மேற்கண்ட புல எண். 105இல் ஆக்கிரமணம் செய்து குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. தி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் காட்டிலாகாவுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டு காலமாக குடியமர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு, அந்த இடம் மத்திய சர்க்காருக்குச் சொந்தமாக இருப்பதால், அதை மாநில அரசு பெற்று, நீண்ட நாள் கோரிக்கையான பட்டா வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 1906 மற்றும் 5921 ஆகியவை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் தள்ளிவைக்கப் படுகின்றன.



### கூட்டுறவுக் கடன் வசூலை நிறுத்தி வைத்தல்.

*1531 திரு. ஏ. ஜி. சம்பத்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம் முகையூர் தொகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாகக் கடுமையான வறட்சி நிலவுவதால் கூட்டுறவுக்கடன் வசூலை ஓராண்டுகாலம் நிறுத்தி வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம் முகையூர் தொகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளில் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அரசால் அறிவிப்பு செய்யப்படாத நிலையிலும், வருவாய்த் துறையினால் அப்பகுதியில் விளைச்சல் 37 பைசா அதற்குக் குறைவு என அன்னாவாரி சான்று வழங்கப்படாத நிலையிலும், நிலவரி வஜா செய்யப்படாத நிலையிலும் கூட்டுறவு கடன் வசூலை ஓராண்டு காலம் நிறுத்தி வைக்கும் நிலை எழவில்லை.

### நிரந்தரப் பயணத் திட்டம்.

*3330பி திரு. ந. சௌந்திரபாண்டியன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உலக வங்கி நிபுணர்களின் ஆலோசனைப்படி நடைபெறும் பயிற்சி பார்வையிடல் திட்டத்தில் விவசாய விரிவாக்க அலுவலர்களின் நிரந்தரப் பயணத் திட்டம் தொடர்ந்து கடைபிடிக்கப் படுமா அல்லது ஊராட்சி ஒன்றிய மேற்பார்வைக்கு கொண்டுவரப் படுவதால் அந்த முறையில் மாற்றம் ஏதேனும் செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

உலக வங்கி நிபுணர்களின் ஆலோசனைப்படி நடைபெறும் பயிற்சி பார்வையிடல் திட்டத்தில் வேளாண்மை விரிவாக்க அலுவலர்களின் நிரந்தரப் பயணத் திட்டம் தொடர்ந்து கடைபிடிக்கப்படுகிறது. அவர்கள் ஊராட்சி ஒன்றிய மேற்பார்வைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதால், இந்த முறையில் மாற்றம் ஏதும் இல்லை.

காவிரிக் கரைகளில் ஆக்கிரமிப்பு.

*2348 திரு. ஏ. செங்குட்டுவன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மயிலாடுதுறையின் ஒன்றிய எல்லையில் காவிரியின் இரு கரைகளும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்புகளை நீக்கிக் கரைகளைப் பலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்ற தற்போது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகளை அகற்றிய பிறகு, ஆக்கிரமிப்பு உள்ள இடங்களில் கரைகள் பாதிக்கப்பட்டிருந்தால் அவைகளைச் சீர் செய்ய தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை நகர எல்லையில் காவிரி ஆறு பலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அது குறுகிய ஆறாக இருக்கிறது. மழை பெய்தால்கூட தண்ணீர் ஓட முடியாத அளவுக்குத் தூர்ந்து கிடக்கிறது. ஆகவே, உடனடியாக முன்னுரிமை அடிப்படையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி அந்த இடத்தைத் தண்ணீர் வடியக் கூடிய நல்ல இடமாக ஆக்கித் தருவதோடு, அந்த ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களில் மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க, பாதுகாப்புச் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9-20 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மயிலாடுதுறை நகரத்தின் மத்தியில் ஓடுகிற பழங்காவேரி பகுதியிலுள்ள கடைகள் அகற்றப்பட்டு இருக்கின்றன. சில இடங்களில் கடைகள் அகற்றப்பட்ட பிறகும் மீண்டும் அவை வந்துவிடுகின்றன. ஆக்கிரமிப்பு என்பது பொதுவாக, பொதுப் பணித் துறையைப் பற்றி இருக்கிற ஆஸ்துமா வியாதி. அதை முழுமையாக அகற்றவும் முடியவில்லை; அகற்றாமலும் இருக்க முடியவில்லை. இருந்தாலும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வண்ணம் அத்தகைய ஏற்பாடுகளை அரசு செய்யும்.



திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏரி, குட்டை போன்ற நீர்வரத்துப் பகுதிகள் இன்றைக்கு முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அதன்பேரில் அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பது பற்றியும், இனி ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு எடுக்கும் நடவடிக்கையைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக ஏரிக்கு வரத்துக் கால்வாய், பாசனக் கால்வாய் உண்டு. ஏரியினுடைய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் எங்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருந்தாலும் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற இலாகாவிற்கு உத்திரவிடப்பட்டு இருக்கிறது. ஆனால் இதில் இருக்கிற சங்கடம், எல்லோரும் நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். அவர்கள் ஒரு 'ஸ்டே' வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். பிறகு அதை நாம் வெக்கேட் செய்வதற்கு சில நேரங்களில் ஆண்டுக் கணக்காகக் கூட ஆகிவிடுகிறது. அதனால்தான் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பொதுவாக அந்தந்தப் பாசனப் பகுதிகளில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களே முன்வந்து, இது 10 பேருக்குப் பயன்படுகிற இடம்; இதை நீங்கள் ஆக்கிரமிக்கக் கூடாது என்று அவர்களாகவே முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படித்தான் வட ஆற்காடு மாவட்டத்தில், தக்கோலத்தில் மக்களே அத்தகைய முயற்சியில் இறங்கினார்கள் என்பதை பல பத்திரிகைகளிலும், வானொலி மூலமாகவும் கேட்டு இருக்கிறோம். இருந்தாலும், அரசு அதன் பங்கைச் செய்வதற்கு முற்பட்டு இருக்கிறது. எனவே, விரைந்து அத்தகைய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. பூ. இராமநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆக்கிரமிப்புப்பற்றிச் சொல்லும்போது இது ஒரு தீராத வியாதியாக இருக்கிறது என்று சொன்னார்கள். 10, 12 ஆண்டு காலமாக ஆற்று ஓரப் பகுதிகளிலேயோ, ஏரி குளங்களிலேயோ வீடு கட்டுவதற்கும், குடிசை போடுவதற்கும், பொதுப் பணித்துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்குத் தெரியாமல் எப்படி அப்படி ஒரு வாய்ப்பு ஏற்பட்டது என்பதையும், இது போன்ற வாய்ப்புகளுக்குக் காரணமாக இருக்கக்கூடிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஏதேனும் குறிப்பு வைத்து இருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறைக்குத் தெரியாமல் எப்படி ஆக்கிரமிப்பாளர்கள் குடிசை போடுகிறார்கள் என்ற விவரம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதனுக்கே நன்றாகத் தெரியும். வாதான்குளத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றினால்தான் செல்வசிந்தாமணி குளத்தில்

[1990 ஏப்ரல் 2

வீடு கட்ட முடியும் என்பதற்காக, அவரே வாதான்குளத்தில் இருக்கிற ஆக்கிரமிப்பாளர்களை அகற்றியதற்குப் பிறகு, மறு நாள் காலையிலே பார்த்தால் நூற்றுக்கணக்கான குடிசைகள் உற்பத்தி ஆகிவிட்டதே? அப்படித்தான் ஆக்கிரமிப்பு வருகிறது.

திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரி, குளங்களிலே ஆக்கிரமிப்புகளை அகற்றுகிற நேரத்தில் அந்த ஆக்கிரமிப்புகளைச் செய்து இருக்கக்கூடியவர்கள் தடை உத்தரவு பெற்றுவிடுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்; அப்படித் தடை உத்திரவை பெறமுடியாத வகையில் நீதிமன்றங்களிலே துறையின் மூலமாக 'கேவியேட் பெட்டிஷன், போடுவதன் மூலம் தடை உத்திரவுப் பெற முடியாமல் செய்வதோடு அந்த இடைப்பட்ட காலத்திலே உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு துறை முன்வருமா என அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கிற ஏரி, குளங்கள், ஆறுகள் எல்லாவற்றிற்கும் 'கேவியேட் பெட்டிஷன்' போடுவது என்பது இயலாத காரியம். இருந்தாலும், எங்கெங்கு தடை உத்திரவு வாங்குகிறார்களோ அவற்றை நீக்குவதற்கு அரசு விரைந்து செயல்படுகிறது. பொது வாக பொதுப்பணித் துறைக்கு ஆக்கிரமிப்புதளை அகற்றுங்கள் என்று கேட்க முடியுமே தவிர, பிராசிக்கியூஷன் செய்கிற அதிகாரம் பொதுப் பணித்துறைக்கு இல்லை. ஆகையினால் பொது பணித்துறைக்கும், காட்டு இலாகாவினருக்கு இருக்கிற அத்தகைய அதிகாரம் கொடுத்தால், இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் வேகமாகச் செய்ய முடியும்.

திரு. வ. முல்லைவேந்தன்: தலைவர் அவர்களே, காவேரிக் கரை போன்ற இடங்களிலும், பொதுவாகப் போக்குவரத்து உள்ள இடங்களிலும் மனிதர்கள் ஆக்கிரமிப்புச் செய்தால் அகற்றி விடுகிறோம்; ஆனால் பிள்ளைகுட்டி இல்லாத முருகன், விநாயகர் போன்றவர்கள் எல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, அவர் களும் அந்தப் பாசனத்திற்குக் குறுக்கே நின்றால், அவர்களும் அகற்றப்படுவார்கள்.

மின் துண்டிப்புக் கட்டணம்

*3214 பேராசிரியர் க. பொன்னுசாமி:

மாண்புமிகு. பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விளாக்களுக்கு விடையளிப்பாரா:



1990 ஏப்ரல் 2]

(அ) விவசாய மின் மோட்டார் தொடர்பான மின் துண்டிப்புக் கட்டணம் அண்மையில் உயர்த்தப் பட்டதைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு குறைக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரி செய்தல்

*3251 திரு. ஆ. பாலையா; மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவரவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் மின் அழுத்தக் குறைவை சீர் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(9.25 மணி)

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களிலும் மின்னழுத்தம் மிகக் குறைவாகவே இருக்கிறது. மின் விளக்கு களெல்லாம் வெளிச்சம் தருவதற்குப் பதிலாக அலங்காரப் பொருட்களாகவே காட்சி அளிக்கின்றன. குறிப்பாக என்னு டைய தொகுதியிலே கப்பியறை, மேல்பாறை, ஈத்தவிளை போன்ற பகுதிகளில்கூட நீண்டகாலமாக இந்த நிலை இருக்கிறது. அங்கெல்லாம் டிரான்ஸ்பார்மார்களை மாற்றுவதற்குப் பொருட்கள் இல்லை, எனவே மாற்றுவதில் காலதாமதப்படுகிறது என்று மின் துறை அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே, அதற்குத் தேவையான பொருட்களை உடனடியாக வழங்கி அங்கு மின்னழுத்தத்தை அதிகப்படுத்தி, அங்கே அலங்காரப் பொருட் களாக இருக்கின்ற விளக்குகளை எரிய வைப்பதற்கு, வெளிச்சம் தருவதற்கு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்னழுத்தம் குறைவாக இருப்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. எனவேதான் அதை நிவர்த்தி செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று

சொல்லேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இரண்டு வகை களிலே மின்சாரம் கிடைக்கிறது. ஒன்று, கோதையாறு மின் திட்டத்திலேயிருந்து 1, மற்றும் 2-லேயிருந்து கிடைக்கிறது. இரண்டாவது, தூத்துக்குடியிலேயிருந்து ஆறுமுகனேரி, சாத்தாங் குளம், பனங்குடி வழியாக உங்களுக்கு மின்சாரம் வந்து சேருகிறது. கோதையாறிலேயிருந்து மின்சாரம் வருகிற நேரத்தில் இந்த மின்னழுத்தம் ஏற்படுவது இல்லை. ஏனென்றால் அருகிலே இருக்கிறது. ஆனால் தூத்துக்குடிலேயிருந்து ஆறுமுக நேரி, சாத்தாங்குளம், பனங்குடி வழியாக வருகிற பொழுது சில நேரங்களில் மின்னழுத்தம் ஏற்படுகிறது—லோ வோல்டேஜ் வருகிறது. என்ன காரணம் என்றால், 230 கே.வி.லேயிருந்து 130 கே,வி. வழியாக லைன்களிலே அது வருகிறது. எனவே, அவற்றை உடனடியாக, நிவர்த்தி செய்ய இரண்டாவது 110 கே.வி. லைன் தூத்துகுடியிலேயிருந்து குறைந்தது சாத்தான்குளம் வரையிலே அமைக்க வேண்டுமென்பதற்காக முயற்சியெடுத்து, முதல் கட்டமாகத் தூத்துக்குடியிலேயிருந்து அறுமுகநேரி வரையிலே அந்த லைன் போடப்பட்டிருக்கிறது. ஆறுமுகநேரி யிலேயிருந்து சாத்தாங்குளம் வரை போடுவதற்கு நிதிநிலை காரணமாகச் சற்று தொய்வு வந்திருக்கிறது. இது முதல் கட்டம் இது மூதல் படி, எடுத்திருக்கிற நடவடிக்கை. இரண்டாவதாக, ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில், தக்கலை குழித்துறை, பேச்சிப்பாறை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் தான்-ஐந்து இடங்களிலே சப் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. எனவே, இந்த லோ வோல்டேஜைப் போக்குவதற்காக மேலும் முப்பநந்தல், சேரன்மங்கலம், அழகியபாண்டியபுரம், வல்லன் குமாரன்விளை, முஞ்சிறை, வீரனூர் ஆகிய இடங்களில் ஆறு சப் ஸ்டேஷன்கள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண் டிருக்கிறது. அதில் ஏற்கனவே முப்பநந்தலிலே 110 கே.வி. சப்ஸ்டேஷன் அமைக்கப்பட்டு 7.3.1990 முதல் அது செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. இஃதன்னியில், மேலும் இத்தகைய நிலைமைகள் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்வதற்காக அறிக்கை ஒன்று பெறப்பட்டு அது மத்திய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நமக்கு ஒப்புதல் கிடைத்தால் 839 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு திட்டங்களை அமைக்க அரசு முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறது. இதற்கிடையில் கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய எஸ்.இ. அவர்கள் ரூ20.65 லட்சம் செலவில் Additional Distribution Transformers and new L.T. Line அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இவற்றையெல்லாம் நீண்ட காலத் திட்டம், குறுகிய காலத் திட்டம், உடனடித் திட்டம்-மூன்று திட்டங்களை எடுத்துக் கொண்டு. கன்னியாகுமரி மாவட்டத்தில் லோ வோல்டேஜ் இல்லாமல் பார்த்துக் கொள்ள அரசு . நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.



திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மின்னழுத்தக் குறைவு என்பது கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்லாமல், எங்கள் மாவட்டமான வடார்க்காடு —அம்பேத்கார் மாவட்டத்திலும், குறிப்பாக காட்பாடி வட்டாரத்திலே மின்னழுத்தக் குறைவின் காரணமாகக் குடி தண்ணீர் சில நேரங்களில் கிடைக்காமல் இருக்கிறது. அவற்றைப் போக்குவதற்கு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(9.30 மணி)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய குறைகள் வந்தால், அரசு அதுபற்றி நிச்சயம் பரிசீலிக்கும்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் அழுத்தக் குறைவு காரணமாக, டிரான்ஸ்பார்மர் பழுதுபட்டிருப்பது என்பது, பல மாவட்டங்களிலேயும், பல இடங்களிலேயும் இருக்கின்றது, புதிய டிரான்ஸ்பார்மர்களைப் பொருத்துவது, பொருத்தப்பட்ட டிரான்ஸ்பார்மர்களை பழுது பார்ப்பது, பராமரிப்பது ஆகிய இனங்களுக்காக, மின் வாரியம் போதுமான நிதியை ஒதுக்காத காரணத்தினாலேதான், இக்குறை பாடுகள் நடக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்காக, போதுமான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இவற்றைப் போக்குவதற்கு நிதி ஒதுக்கி இருக்கிறோம். ஆனாலும். மின் வாரியம் மிகப்பெரிய இழப்பில் இருப்பதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள் அந்த இழப்பைச் சிறிதேனும் சரிக்கட்ட வேண்டும் என்பதற் காகத்தான், சமீபத்திலே மின்கட்டனத் தொகைகள் எல்லாம் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இவற்றை நிரந்தர மாகச் சரிபார்த்து, புதுப்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான், பல்வேறு திட்டங்களை வாரியம் வகுத்துக் கொண்டிருக்கிறது.

செம்பனார்கோவில்-தரங்கம்பாடி பாதையை அகலப்படுத்துதல்.

*3769 திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

மயிலாடுதுறையிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் நெடுஞ் சாலையின் பகுதியான செம்பனார் கோவிலில் இருந்து தரங்கம் பாடி வரையிலும் செல்லும் குறுகிய பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியினுடைய பணி ஆய்வில் இருக்கிறது.

திரு. ஜெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையிலிருந்து நாகப்பட்டினத்திற்கும் அதே போல் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூருக்கும் செல்கின்ற நெடுஞ்சாலைகள் நரிமணத்திலிருந்து அதிகமான எடையுள்ள வண்டிகளில் எண்ணெய் எடுத்துக் கொண்டு சென்னைக்கு வருவதன் காரணமாக, அதிகமாகப் பழுது ஏற்பட்டிருக்கின்றன. அந்த சாலைகளைப் பழுதுபார்க்க அதிகமாக நிதி ஒதுக்கித் தருவீர்களா என நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே சாலைகள் பழுதுபட்டிருக்கின்றன என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகையினாலேதான், 60 கோடி ரூபாய் ஒப்புதலில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, அதில் 50 விழுக்காடுகளை எண்ணெய் மற்றும் இயற்கை வாயு நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்டு, மீதியை அரசு அதற்கு ஈடுகொடுத்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற பழுதடைந்த சாலைகளைச் செப்பனிடலாம் என்ற யோசனையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த முயற்சியிலேயும் அரசு இறங்கி இருக்கிறது.

திருக் கல்யாண மண்டபம் கட்டுதல்.

*1906 திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு நகரில் அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கல்யாண மண்டபம் கட்டும் பணிகளை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, செய்யாறு நகரில், அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் கல்யாண மண்டபம் கட்டும் பணிகளை நிறைவேற்ற அறநிலையத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறுநகரில், அருள்மிகுவேதபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு கல்யாண மண்டபம் கட்டுகின்ற பணியை, தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்த காலத்திலே ஆரம்பித்தார்கள். அது முடியுந்தறுவாயில் கட்டிடம் திறப்



பதற்கு நாளும் குறிக்கப்பட்டு, அதற்கிடையிலே கழக அரசு கலைக்கப்பட்ட காரணத்தால், அது தடைபட்டுப் போயிற்று. அதற்குப் பிறகு, மீண்டும் ஆட்சி வந்ததற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி மண்டபத்தைப் பார்வையிட்டார்கள். இப்போது கட்டுகின்ற பணியினை உடனடியாக ஆரம்பிப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு காலத்திலே அது கட்டி முடிக்கப்படும் என்று தெரிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது, முன்னாள் சட்டப் பேரவையினுடைய தலைவர் புலவர் கோவிந்தன் அவர்களுடைய முயற்சியிலே, அந்தப் பணிகள் தொடங்கப்பட்டன. பாதி வேலைகள் முடிந்து விட்டன. அரசு கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு 12 ஆண்டுக் காலம் கட்டி முடிக்கப்படாத அந்தத் திருமண மண்டபம், அந்த நிலையிலேயே இருந்து கொண்டிருந்தது. இன்றைக்கு அது மேலும் கட்டி முடிக்கப்படுவதற்கு ரூ. 6 இலட்சம் செலவு ஆகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. வேலை ஒரு மாத காலத்திலே தொடங்கப்பட இருக்கிறது. 6 மாத காலத்திற்குள்ளே அந்த வேலை முடிக்கப்படுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோவிலுக்கு நிரந்தரமாக வருமானம் வருகின்ற வகையிலே, அந்த மண்டபத்தோடு இணைந்த கடைகளைக் கட்டுகின்ற திட்டத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, அந்தத் திட்டத்தில் இதுவும் சேர்ந்து இருக்கிறதா அல்லது சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9.35 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கடைகளையும் சேர்த்து கட்ட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. ஆனால் இப்போதுள்ள திட்டத்தில் அது 'சேர்க்கப்படவில்லை. மிகப்பெரிய கோவிலாக அது இருந்தாலும், அங்கே இரண்டு கால பூஜைக்கு கூட வருவாய் சரியாக இல்லாத நிலை இருக்கிறது, முதல் கட்டமாக இப்போது திருமண மண்டபத்தின் மூலமாக வருவாய் வரட்டும். இரண்டாவது கட்டமாக கடைகளைப் பற்றிச் சிந்திப்போம்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் சுற்றுலா மையம்.

* 5921 திரு. க. சொ. கணேசன் :
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1990 ஏப்ரல் 2

கங்கை கொண்ட சோழபுரத்தில் சுற்றுலா மையம் அமைக்
கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி, கந்தசாமி : தலைவர் அவர்களே,
ஆம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கங்கை
கொண்ட சோழபுரம் ம்ாவட்ட சுற்றுலாத் தலமாக தேர்ந்
தெடுக்கப்பட்டுள்ளது.

திரு. க. சொ. கணேசன் : தலைவர் அவர்களே, கங்கை
கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட
ஒரு மிகப்பெரிய கோவில் கோபுரம் இருக்கிறது. அந்தக்
கோபுரத்தைப் பார்ப்பதற்காக இந்தியாவின் பல்வேறு மாநிலங்
களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் நிறைய பேர்கள்
வருகிறார்கள். அவர்கள் வந்து பார்வையிடுகிற போது, தங்கு
வதற்கு ஏதுவாக இப்போது போதுமான இடவசதி இல்லை.
ஆகவே, அரசு அங்கே சுற்றுலா மையம் அமைக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து
எங்களுடைய கவனத்தில் இருக்கிறது. அங்கே சுற்றுலாப்
பயணிகளுக்கு வசதியாக ஒரு விடுதி கட்ட வேண்டுமென்றால்,
அதற்கான நிலம் வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்
பினர் அவர்கள் அங்கேயுள்ள அதிகாரிகளோடு கலந்து பேசி
தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து தருவார்களானால், உடனடி
யாக அந்த விடுதி கட்டி முடிக்கப்படும்.

திரு. க. சொ. கணேசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் இடம் பார்த்துக் கொடுத்தால் சீக்கிரம் கட்டி
முடிப்பதாகச் சொன்னார்கள், எவ்வளவு சீக்கிரமாக வேண்டு
மானாலும் இடம் பார்த்துக் கொடுக்க நான் தயாராக இருக்
கிறேன். எனவே, அதைச் சீக்கிரம் அரசு முடிக்குமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,
நிச்சயமாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

கடையம் ஒன்றியத்தில் புதிதாக சத்துணவு மையம் துவக்குதல்.

*5021 திரு. கே. ரவி அருணன் :
மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடை
யம் ஒன்றியத்தில் துப்பாக்குடி, முதலியார்பட்டி, கட்டேரி
பட்டி, பரம்பு ஆகிய இடங்களில் புதிதாக சத்துணவு மையம்
துவக்கப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்...



1990 ஏப்ரல் 2]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, (அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஒன்றியத்தில் துப்பாக்குடி, முதலியார்பட்டி, கட்டேரிப்பட்டி, பரம்பு ஆகிய இடங்களில் ஏற்கனவே சத்துணவுக் கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) எனவே, புதிதாக சத்துணவு மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திருவள்ளூர் தொகுதியில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.

*3699—திரு. எஸ். ஆர். முனிரத்தினம் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவள்ளூர் தொகுதியில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையங்க்ள் தொடங்கும் செயற்குறிப்பு அரடசிம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை சுகாதார நிலையங்கள் தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதியில் புலியூர் மற்றும் பெருமாள்பட்டு ஆகிய இரண்டு கிராமங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. அன்பில் பொய்யாமொழி : தலைவர் அவர்களே, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரையில் எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன, அவை எந்த அடிப்படையில் துவங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குப் பலமுறை இதே மன்றத்தில் நான் பதில் அளித்து இருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன், ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்தில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையம் எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் அந்த ஊரில் இருக்கிற மக்கள் ஐந்து ஏக்கர் நிலமும், 10,000 ரூபாய் பணமும் தருவார்களானால், அதைப் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு, அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கொடுக்கிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த ஆண்டில் 30,000 மக்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் 174 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது

சிமெண்டாலான மேல்நிலைத் தொட்டிகள் கட்டுதல்.

* 3798 திரு. எல். மூக்கையா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப் பகுதியில் சிமெண்டாலான மேல்நிலைத் தொட்டிகளை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கிராமப்பகுதிகளில் இரும்பு மேல்நிலைத் தொட்டிகளுக்குப் பதிலாக அவ்விடங்களில் சிமெண்ட் மேல்நிலைத் தொட்டிகள் கட்டித் தரும் திட்டம் கிராமக் குடிநீர்த் திட்டத்திற்கான முன்னுரிமை விதிகளின்படி எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

திரு. எல். மூக்கையா : தலைவர் அவர்களே, பல கிராமங்களில் இரும்பு, தகரத்தால் ஆன மேல்நிலைத் தொட்டிகள் தான் இருக்கின்றன. டெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் என்னுடைய ஊராட்சியான எட்டபுலி ஊராட்சியில் கூட இரண்டு கிராமங்களில் இரும்பு, தகரத்தால் ஆன மேல்நிலைத் தொட்டிகள் தான் இருக்கின்றன. அவை துருப்பிடித்து இத்துப் போய் பழுதடைந்து விட்டதால் அதிலே தண்ணீர் தேக்க முடியாத நிலை இருக்கிறது இப்படிப்பட்ட நிலையை மாற்றியமைக்க விரைந்து சிமெண்டால் ஆன மேல்நிலைத் தொட்டிகளைகட்டித்தரும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு பஞ்சாயத்துக்களிலே அந்த இரும்புத் தொட்டிகள் கட்டப்பட்டன. அவ்வாறு தமிழகத்தில் 475 தொட்டிகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அவற்றில் 373 தொட்டிகள் இரும்புத் தொட்டிகளிலேயிருந்து சிமெண்ட் தொட்டிகளாக மாற்றியமைக்கப்பட்டு விட்டன. மேலும் 54 தொட்டிகள் முடிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அதிலே 54 தொட்டிகளை மாற்றியமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கொண்டு எடுக்க வேண்டியவை 48 இருக்கின்றன. அவற்றை விரைவில் எடுத்து சிமெண்ட் தொட்டிகளாக அமைத்துக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-40 மணி

திரு. பெ. அ. இருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியமே. இரும்புத் தொட்டிகளாலான தொட்டிகளைப் பல இடங்களில் கட்டி,



அவை பழுதடைந்து இருக்கின்றன. அப்படிப் பழுதுபட்ட தொட்டிகளைப் புதுப்பிக்கின்ற வகையில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக முன்னுரிமை கொடுத்து, அவற்றை எல்லாம் சிமெண்ட் தொட்டிகளாக மாற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் இப்போது இரும்பு தொட்டிகளை அமைப்பது என்பது எங்குமே இல்லை. அப்படி ஏதேனும் அமைத்திருந்தால், அதை மாற்றியமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. கே. பிச்சாண்டி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல கிராமங்களில் கட்டப்பட்டு இருக்கிற சிமெண்ட் தொட்டிகள் எல்லாம் 2, 3 ஆண்டுகளில் பழுதடைந்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங்களில், புதிய மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்படுமா? இன்றைக்குப் புதிதாக வந்துள்ள சின்டெக்ஸ் தொட்டிகள் அங்கே வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கட்டப்பட்ட தொட்டிகளா அல்லது முதலிலே கட்டப்பட்ட தொட்டிகளா என்பதை முதலிலே அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். இப்போது கட்டப்படுகின்ற தொட்டிகள் நிச்சயமாக நல்ல முறையில் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட உடனே பழுதான மேல்நிலைத் தொட்டிகள் பல உள்ளன. குடிநீர் அங்கு கிடைக்குமா என்பதைக் கூட பரிசீலிக்காமல் கட்டப்பட்ட தொட்டிகளும் உள்ளன. மக்களுக்குப் பலன் கிடைக்குமா என்பதைக் கூட கருதாமல், தங்களுக்குப் பலன் கிடைத்தால் போதும் என்ற நோக்கத்தோடு செயலாற்றியவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி குறிப்பிட்ட இடங்களிலேயிருந்து புகார் வருமானால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளினுடைய பராமரிப்பு முழுமையாக இல்லாத காரணத்தால், சம்பந்தப்பட்டுள்ள ஒன்றிய நிறுவனங்களில் போதிய நிதி வசதி இல்லை என்ற குறைபாட்டினால் மராமத்து வேலைகள் தடைபடுகின்றன.

எனவே போதிய நிதி உதவியை மாநில அரசு தந்து, அந்த
மேல்நிலைத் தொட்டிகளைப் புதுப்பிக்க முன்வருமா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டிகள் கட்டப்பட்டு,
அவை பணியாற்ற ஆரம்பிக்கிற வரையில் தான் குடிநீர் வடி
கால் வாரியம் பொறுப்பேற்றுக் கொள்கிறது. அதற்குப் பிறகு
அவை உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.
அவை தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு செய்ய
வேண்டும். ஆகவே உள்ளாட்சி நிறுவனங்களுடைய அமைச்சர்
அவர்களிடத்தில் தனி வினாவாகக் கேட்டால் அவர்கள் பதில்
அளிப்பார்கள்.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குடிநீர் வழங்குவதற்கான பணியாளர்கள் இல்லாத
காரணத்தால், குடிநீர் விநியோகத்தைச் சரியாக செய்ய இயல
வில்லை. எனவே அத்தகைய இடங்களில் பணியாளர்களை
நியமிக்கும்பொறுப்பை அரசு ஏற்குமா என்று கேட்க விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
தலைவர் அவர்களே, அத்தகைய பிரச்சினை ஏதும் இப்போது
எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் குழாய் அமைத்து,
தொட்டி கட்டி, இணைப்பு கொடுத்தவுடனே, அங்கேயிருக்கின்ற
தண்ணீரினுடைய அளவு தெரியாத காரணத்தால், ஒரு
குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னாலே குழாயிலே தண்ணீரி
னுடைய அளவு கீழே இறங்கிப் போகிறது. தண்ணீர் வராத
காரணத்தால் மோட்டார்கள் எல்லாம், வோட் தாங்காத
அளவிற்கு ஓடுவதன் காரணமாக எரிந்து போகின்றன.
ஸ்டார்டர்கள் கெட்டுவிடுகின்றன. அவற்றை எல்லாம் தாங்கு
வதற்கு சிறிய ஊராட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரம் இல்லாத
காரணத்தால் அங்கே குடிநீர் வடிகால் வாரியம் மிகவும்
திணறுகிறது. எனவே குடிநீர் வடிகால் வாரியம், போதிய
தண்ணீர் இல்லாவிட்டாலும் கூட, இந்த மோட்டார்கள்,
ஸ்டார்ட்டர்கள் இரண்டுமே சரியாக இயங்குவதற்கு தகுந்தாற்
போல், அரசு ஆய்வு செய்து, அவற்றை மாற்றுவதற்கு முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
தலைவர் அவர்களே, இதுபோன்ற கிராமங்களில் மோட்டார்
கள் பழுது அடைந்தால், பஞ்சாயத்து யூனியனிலேயுள்ள
ஜெனரல் பண்டிலே இருந்து அவற்றை சீர் செய்வதற்கான
ஏற்பாடுகள், விதிமுறைகள் இப்போது இருக்கின்றன. ஆகவே
பஞ்சாயத்து, ஊராட்சி நிறுவனங்களுக்கே அவற்றை மேற்
பார்வையிட வேண்டிய பொறுப்பு இருக்கிற காரணத்தால்,



அதுகுறித்து இரண்டு துறைகளோடும் பேசியிருக்கிறோம்.
அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான கருத்துக்களை
அரசு பரிசீலித்து வருகிறது.

9.45 மணி

திரு. தி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தற்போது நிலவிவரும் குடிநீர்ப் பற்றாக்குறையைத்
தீர்க்கின்ற வகையில் சிமெண்ட் தொட்டிகள் கட்டப்படும்
என்று சொல்கிறார்கள். அவற்றைக் கட்டிமுடிப்பதற்கு நீண்ட
காலமாகிறது. ஆகவே அவசர நிமித்தம் குறித்து 'சின்டெக்ஸ்
டாங்குகளை' அங்கே அமைத்துத் தரும் உத்தேசம் அரசுக்கு
உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலேகூட
கடந்த ஆண்டுகளிலே இந்த 'சின்டெக்ஸ் டாங்குகள்' பொருத்தப்
பட்டு, பல இடங்களில் இருக்கின்றன. ஆனால் 'சின்டெக்ஸ்
டாங்குகள்' நீண்ட காலம் உதவுவதாக இல்லை. அதனால்தான்
'சின்டெக்ஸ் டாங்குகள்' பொருத்துவதற்குப் பதிலாக நீண்ட
காலமாக இருக்கக்கூடிய நிரந்தரமாக இருக்கக்கூடிய சிமெண்ட்
தொட்டிகளையே கட்டலாம் என்று அரசு முடிவெடுத்து
அவற்றைச் செய்துவருகிறது.

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சரவர்கள் கிராமங்களில் சிமெண்ட்டால்
ஆன குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்படுவதாகச்
சொல்கிறார்கள். அது நல்ல அம்சம்தான். ஆனால் மின்சாரக்
கோளாறினாலும், அந்த மோட்டார்கள் பழுதடைவதன் காரண
மாகவும் மாதக் கணக்கில் மக்கள் குடிநீருக்காகப் பெரும்
அவதிப்படுகிறார்கள். ஆகவே இதைக் கருத்திற்கொண்டு
ஆங்காங்கே ஆழ் குழாய்க் கிணறுகளை சமீபத்திலேயே போடு
வதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆழ் துளைக்கிணறுகள்
அந்தந்த கிராமங்களில் நீர் ஆதாரம் இருக்குமானால் அங்கேயே
போடப்படுகின்றன. நீர் ஆதாரம் இல்லாத இடங்களில்தான்
வேறு இடங்களிலேயிருந்து குடிநீர் கொண்டுவருகின்ற அவசியம்
ஏற்படுகிறது. அதைப் பொறுத்து திட்டங்கள் தீட்டப்படு
கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காங்கேயம் அரசு மருத்துவமனையில் படுக்கை எண்ணிக்கையை
அதிகப்படுத்துதல்.

*6312 திரு. பி. மாரப்பன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா:

காங்கேயம் அரசு மருத்துவமனையின் படுக்கை எண்ணிக் கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிமிகு தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்குப் படுக்கைகள் இல்லாமல் தரையிலேயே படுக்கவைக்கின்ற கொடுமை நடைபெறுகின்றன. இது அரசுக்குத் தெரியுமா? இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற மக்கட் ஃதாகையின் காரணமாக மருத்துவமனைகளிலே இட நெருக்கடி அவ்வப்போது ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அரசி னுடைய நிதிநிலைப் பெருக்கத்திற்கு ஏற்ப ஆண்டுக்கு ஆண்டு முக்கியமான மருத்துவமனைகளிலே படுக்கையினுடைய என் ணிக்கை உயர்த்தப்பட்டு வருகின்றது. அந்த அடிப்படையில் குறிப்பிட்ட மருத்துவமனைகளில் இட நெருக்கடி இருந்து, அங்கே மேலும் மருத்துவமனை வேண்டுமென்று விண்ணப்பங்கள் வரும்பொழுது அவற்றை அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப பரிசீலித்து அதிகரிக்கின்ற நிலைமையை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. தயாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய மருத்துவமனைகளில் படுக்கை யினுடைய எண்ணிக்கையை எதன் அடிப்படையில் உயர்த்தி யிருக்கிறார்கள்? மக்கள் வைக்கின்ற கோரிக்கையின் அடிப் படையிலா? அல்லது வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையில் அடிப்படையிலா என்பதை அறிய விரும்புவதோடு, என்னுடைய தொகுதியான ஆரணியிலே சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட அந்த மருத்துவமனையிலே....(மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகளில் அந்த மருத்துவமனைக்கு வருகின்ற வெளி நோயாளிகள், உள் நோயாளிகள் ஆகியோரின் எண்ணிக்கையை எல்லாம் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு, அந்த மக்களுடைய கோரிக்கை களையும் பரிசீலனையில் எடுத்துக்கொண்டுதான் இதுபோன்ற படுக்கையினுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுக்கைகளைக் கவனிப்பதற்கு செவிலியர்கள்





இருக்கிறார்கள். ஆனால் ஒரு செவிலியர் 5 வியாதியஸ்தர் களைத்தான் கவனிக்க முடியும் என்ற நிலை இருக்க: சென்னையிலே இருக்கக்கூடிய பொது மருத்துவமனையில் சுமார் 2,000 படுக்கைகள் இருக்கும்பொழுது நானூற்றுச் சொச்சம் செவிலியர்கள் தான் இருக்கிறார்கள். அந்த வியாதியஸ்தர்களை கவனிக்கக் கூடிய அளவிற்குச் செவிலியர்கள் அதிகப்படுத்தக் கூடிய திட்டம் அரசிடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்களும் இதுகுறித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில் அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை தலைமை மருத்துவமனை யிலே சுண்ணாம்பு அடிக்கப்படாமல், கதவுகள் எல்லாம் பெயிண்ட் அடிக்கப்படாமல் இப்படி பல சங்கடங்கள் இருக்கின் றன....(மணியடிக்கப்பெற்றது)

இரயுமன் துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்.

*3363 திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இரயுமன் துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிய சுவை உடைய பல்வேறு வகையான மீன்கள் கிடைக்கின்றன. தமிழகத்தில் எங்கும் கிடைக்காத அளவிற்கு அற்புதமான சுவை உடைய மீன்கள் அங்கே கிடைத்து வருகின்ற காரணத்தால் என்னுடைய வேண்டுகோள், தமிழக முதல்வர் அவர்களும் ஏனைய அமைச்சர்களும் அங்கே வருகை தருகின்றபோது அத்தகைய மீன்களுடைய சுவைகளை அவர்கள் நேரடியாக அனுபவிப்பார் களேயானால், மேலும் மீன்களைப் பிடிக்கின்ற வகையில் இரயுமன் துறையில் மேலும் ஒரு மீன்பிடித் துறைமுகத்தை அமைப்

பதற்கு அவர்களே முன் நின்று ஆணை பிறப்பிப்பார்கள் என்று கருதுகின்றேன். ஆகவே அத்தகைய முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுத்து, எங்கள் பகுதியில் மேலும் ஒரு மீன்பிடி துறைமுகத்தை அமைக்க முயல்வாரா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விருந்திற்கு ஏற்பாடு செய்யும்போது நிச்சயமாக வருகிறோம்.

வலம்புரிச் சங்கு.

*4927 திரு. துரை சந்திரசேகரன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் 1987-88, 1988-89, ஆம் ஆண்டுகளில் வலம்புரிச் சங்கு கண்டுபிடிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், வலம்புரி சங்கு எடுப்பதற்குத் தனியாக ஊக்கத்தொகை வழங்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

9.50 மணி.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கடற்கரையில் பல பகுதிகளில் காணப் படும் வலம்புரிச் சங்கினை நவீன முறையில் எடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்குகள் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் இயற்கையாகக் கிடைக்கும் அரிய சங்குகள் ஆகும். இது பருவ சங்கு குளிப்பின்போது சங்குத் தொழிலாளர்களால் கண்டு எடுக்கப்படுவதாகும். எனவே இதில் நவீன முறைகள் எதுவும் மேற்கொள்ள இயலவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்கின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு? அது எடுப்பதற்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை எவ்வளவு? அது அதிகரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவக்களே, வலம்புரிச் சங்கு கண்டு எடுக்கப்படுவதன் மூலமாக சங்குத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகை நீங்கலாக அரசுக்கு இதுவரை கிடைத்த நிகர லாபம் ரூ. 20,537.25 காசு ஆகும். அதே நேரத்தில் வலம்புரிச் சங்குகள் கண்டுஎடுத்து வருகிற தொழிலாளர்களுக்கு அரசு ஆணை எண் 817, நாள் 18-7-1984, வனம் மற்றும் மீன் வளத் துறை யின் வாயிலாக ஊக்கத் தொகை வழங்க வகை செய்யப் பட்டுள்ளது. அதாவது சாதாரணமாக எடுத்து வருகிற சங்குகளின் கொள்முதல் விலையினைப் போல ஆயிரம் மடங்கு தொகை வழங்கப்படவும் அதனுடைய வள்ளத்திற்குச் சன்மானத் தொகை ரூ. 100-ம் மற்றும் உடன் வருகிற சங்கு குளித் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 விதம் வழங்கவும், மேலும் அந்த வலம்புரிச் சங்கினை விற்பனை செய்து அந்தத் தொகையின் மூலமாக-அதாவது விற்பனை செய்து வருகிற தொகையின் மூன்றில் ஒரு பாகத்தினை, முன்பு வழங்கிய தொகை போக மீதி இருப்பின் அதனை வழங்கவும் வழி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையன்: தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்குக்கும், இடம்புரிச் சங்குக்கும் உள்ள வித்தியாசத்தை தலைவர் இந்தச் சபையிலே விளக்குவாரா என்று அறிய விரும்பு கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் மு, கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்தத் துறை அமைச்சருக்கு அது தெரியாதாம், நான் சொல் கிறேன். வலம்புரிச் சங்கு, இடம்புரிச் சங்கு என்றால் இயற்கை யாக எல்லாச் சங்குகளிலும் அதனுடைய பின்பகுதி இடப்புற மாக இருக்கும், ஆனால் இந்த வலம்புரிச் சங்குகளுக்கு மாத்திரம் வலப்புறமாக அதனுடைய சுற்றுக்கள் அமைந்து இருக்கும். இதுதான் வலம்புரிச் சங்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த இடம் நம்முடைய திரு. முத்தையன் அவர்களுக்குப் புரியும் என்று நான் எண்ணு கிறேன். எனவே தான் அது இடம்புரி. (சிரிப்பு)

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் அரசாங்கத்திலே எவ்வளவு சங்குகள் எடுக்கப்படுகின்றன, ஆயிரத்திற்கு ஒரு சங்கு வலம் புரிச் சங்காகக் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக எல்லா இடங்களிலும் அது கிடைப்பதில்லை. இராமேஸ்வரம் பகுதியிலே தூத்துக்குடி பகுதியிலே அது கிடைக் கிறது. இப்போதும் கூட மீன் பிடிக்கச் செல்லுகிற மீனவர்கள் சிலர் அதை எடுத்து வருகிறார்கள் என்று தெரிய வருகிறது. கன்னியாகுமரி பகுதியிலே பார்த்தால் வலம்புரிச் சங்குகளை

விற்பனைக்கு விற்கிற நிலை இருக்கிறது. இதனால் கிடைக்க
வில்லை என்று சொல்லுகிற நிலையை மாற்றவும், ஆண்டு
தோறும் அந்த சங்கு குளிக்கும் தொழில் நடக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்கு என்பது எப்போதாவது
ஒரு முறைதான் சங்குத் தொழிலாளர்கள் எடுத்து வருகிறார்கள்.
ஆனால் அறவே கிடைக்கவில்லை என்று நான் கூறவில்லை.
அதாவது 1987-88, 1988-89 ஆம் ஆண்டில் வலம்புரிச் சங்கு
கண்டுபிடிக்கப்பட்டதா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை
சந்திரசேகரன் அவர்கள் எழுப்பிய வினாவிற்குத்தான் இல்லை
என்று பதில் அளித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். அது தவிர கன்னியாகுமரி, இராமேஸ்வரம் பகுதியில்
மட்டும்தான் அது கிடைக்கிறது என்றல்ல. எல்லா பகுதிகளிலும்
கிடைக்கின்றன. சங்குத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற அந்த
தொழிலாளர்கள் அந்தச் சங்கினை எடுத்து வந்து அரசாங்கத்

9-55 மணி.

திற்குக் கொடுக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு ஊக்கத்
தொகை வழங்கப்படுகின்றது. சங்குத் தொழில் இப்போது
தூத்துக்குடி பகுதியில் நடைபெற்று வருகின்றது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்தச் சங்கு எடுப்பதன்மூலம் 20,000
ரூபாய்க்கு மேற்பட்டு வருமானம் கிடைத்தது என்று சொன்
னார்கள். அந்தச் சங்குகள் எந்தெந்தப் பகுதிகளில் எடுக்கப்
பட்ட சங்குகள், அந்தச் சங்குத் தொழில் எந்தெந்தப் பகுதி
களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான்
தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதுவரையில் தூத்துக்குடி, இராமநாத
புரம், தஞ்சாவூர் போன்ற பகுதிகளிலே அந்தச் சங்கு குளிக்
கின்ற தொழில் நடைபெற்று வருகின்றது. அரசிற்குக் கிடைத்த
வருமானம் ரூபாய் 20,537.25 காசு. அது அந்தப் பகுதிகளில்
கிடைத்த வலம்புரிச் சங்குகளின் மூலமாகத்தான் கிடைத்திருக்
கின்றது. தற்சமயம், தூத்துக்குடி, இராமநாதபுரம் பகுதி
யிலேதான் அந்தத் தொழில் நடைபெறுகின்றது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே,
வலம்புரிச் சங்குகள் அபூர்வமாகத்தான் கிடைக்கக்கூடியன
என்று சொல்கிறார்கள். அப்படி அந்த வலம்புரிச் சங்கு கிடைக்



கின்றபோது, அரசிற்குத் தெரிவிக்காமல் அதை எடுத்தவர்கள்
கள்ள மார்க்கெட்டிலே தனியாருக்கு இலட்சக்கணக்கான
ரூபாய்க்கு விற்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா,
அப்படிப்பட்டவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க
இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இவ்வாறு வலம்புரிச் சங்கை எடுத்து
வருபவர்கள், தனியாக வெளி மார்க்கெட்டிலே விற்கின்றார்கள்
என்று ஏதாவது குறிப்பிட்டு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்
பார்களானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்--
விடைகள் முடிவுற்றன.

1— (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

மேம்பாலம் அமைத்தல்.

வினா எண் 924—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா:

தாம்பரம் தொகுதி ஒட்டியம்பாக்கம் கிராமத்திற்கு
செல்லும் வழியில் உள்ள ஓடையில் கட்டப்பட்டுள்ள தரைப்
பாலம் மழைக் காலங்களில் பயன்படுத்த முடியாததாக உள்ள
தால் அங்கு ஒரு மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா

அண்மையில் மேம்பாலம் அமைக்கும் கருத்துரு இல்லை.

விடை—
2—

வேடசந்தூர் --மார்க்கம்பட்டி நகரப் பேருந்து

வினா எண் 1155—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா:

வேடசந்தூர்—மார்க்கம்பட்டி (வழி) புலியமாந்துக்
கோட்டை, தேவிநாயக்கன்பட்டி, குரும்பபட்டி, செல்லிவலைசு
வழித்தடத்தில் புதியதாக நகரப் பேருந்து விடப்படுமா?

விடை—

வேடசந்தூர்—மார்க்கம்பட்டி வழி, புளியமரத்துக் கோட்டை, தேவிநாயக்கன்பட்டி, குரும்பபட்டி, செல்லிவலைக வழித்தட தூரம் 33.0 கி.மீ. ஆகும். மோட்டார் வாகன விதிப்படி நகரப் பேருந்துகளின் வழித்தடத்தின் தூரம் 30.0 கி.மீ.; அதற்குமேல் இயக்கக்கூடாது என்பதால் இவ்வழி தடத்தில் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தால் நகரப் பேருந்து இயக்க இயலாது.

3—

ஆர். ஆர். திட்டத்தில் சாலை அமைத்தல்.

வினா எண். 1217—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியம் கருங்குழி— விராணகுன்னம் (வழி) தோட்டநாவல். இருசாம நல்லூர், கே.கே. புதூர் சாலை, ஆர்.ஆர். திட்டத்தில் போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இச்சாலை எப்பொழுது அமைக்கப்படும்

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

4—

விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்.

வினா எண். 1872—திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி 14-வது, 15-வது வார்டுகளில் குடிநீர் பிரச்சினையைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சிக்கு ஏற்கனவே குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு 1974 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பெருகி வரும் மக்கட்தொகையை கணக்கில் கொண்டு தற்சமயம் விடுபட்ட தெருக்களுக்கென குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக உத்தேச மதிப்பீடு ஒன்று வடிவமைக்கப்பட உள்ளது. அதில் 14 மற்றும் 15-வது வார்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன.



5—

காலரா மஸ்தூர் பணியாளர்களை நிரந்தரமாக்குதல்.

வினா எண். 1926—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஊராட்சி ஒன்றியங்களில் தற்காலிகப் பணியில் உள்ள காலரா மஸ்தூர் பணியாளர்களை நிரந்தரமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஊராட்சி ஒன்றியங்களில் காலரா மஸ்தூர்கள் தற்காலிக அடிப்படையில், மாவட்ட சுகாதார அலுவலரின் குறிப்புரைக்கேற்ப, இரண்டு மாதங்களுக்கு மேல் நியமனம் நீடித்தல் கூடாது என்ற அடிப்படையில் தேவையான சமயத்தில் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். காலரா மஸ்தூர்கள் யாரும் தொடர்ந்தாற்போல பணியில் இருக்க வாய்ப்பு இல்லாத நிலையில், மேற்படி காலரா மஸ்தூர்களின் பணியினை நிரந்தரப்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

6—

நூலகங்களின் வளர்ச்சிக்கு ஊக்க மானியம் அளித்தல்.

வினா எண். 2513—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

The details of incentives granted for development of libraries in this State.

விடை—

தற்போது நூலகங்களின் வளர்ச்சிக்கு ஊக்க மானியம் அளிப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதுமில்லை.

7—

சாலை அமைத்தல்.

வினா எண். 2891—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் கத்திரிசேரி, விழுதமங்கலம், வளர்பிறை,

முருக்கஞ்சேரி வழியாக வீராணகுன்னம் வரை சாலை அமைக்க திட்டம் வகுக்கப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

8—

மணற்காடு இராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண். 3469—திரு. சு. குருநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்—பாளையங் கோட்டை தாலுக்கா மணற்காடு கிராமத்தில் கட்டி முடிக்கப் பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டியை திறக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

விடை—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங் கோட்டை தாலுக்கா, மணற்காடு கிராமத்திற்கு 1987-88 நிதி ஆண்டில் குறைந்தபட்ச தேவை திட்டத்தின் கீழ் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் இணைந்த விசைபம்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு, மேற்கொண்டு பராமரிக்கும் பொருட்டு 12-1-1989ல் சம்பந்தப்பட்ட பாளையங் கோட்டை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இத்திட்டம் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தால் தற் போது பராமரிக்கப்பட்டு வருகிறது.

9—

சங்கனூர் பள்ளத்தின் மேல் பாலம் கட்டுதல்.

வினா எண். 3793—திரு யு. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட சங்கனூர் பள்ளத்தின் மேல் பாலம் கட்டும்திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?





விடை—

(அ) ஆம்.

(ஆ) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது.

10—

கல்வராயன் மலையை சுற்றுலா மையமாக்கல்.

வினா எண். 4239—திரு. எம். முத்தையன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்வராயன் மலையை சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்வராயன் மலை தென் ஆற்காடு மாவட்ட சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்பட்டு அதன் மேம்பாட்டுப் பணிக்காக ரூ. 6.00 இலட்சம் செலவில் ஒரு உணவகத்துடன் கூடிய இளைஞர் விடுதி கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

11—

பேரளம் பேரூராட்சியில் கூரை வீடுகளுக்கு கூடுதலாக விதிக்கப்பட்ட வரி.

வினா எண். 4279—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், பேரளம் பேரூராட்சியில் கூரை வீட்டிற்கு கூடுதலாக வரி விதிக்கப்பட்டதாக அரசிற்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் பேரளம் முதல் நிலை பேரூராட்சியில் 1987–88–ஆம் ஆண்டில் வீட்டுவரி சீராய் வின்போது கூரை வீடுகளுக்கு வீட்டுவரி அதிகமாக விதிக்கப் பட்டுள்ளதாக முறையீடு பெறப்பட்டது. வீட்டுவரி சீராய்வின் போது கூரை வீடுகளுக்கு அதிகமாக விதிக்கப்பட்ட வரிகளை சம்பந்தப்பட்டவர்கள் முறையீடு செய்ததைத் தொடர்ந்து குறைத்து விதிக்கப்பட்டது.

12—

காலகம் உயர்நிலைப் பள்ளி

வினா எண். 4585—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், காலகம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர், கட்டட வசதி, தளவாட சாமான்கள், ஆய்வுக்கூடம் போன்ற வசதிகள் செய்துதர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இப்பள்ளிக்கு ஆய்வுக்கூட மற்றும் வகுப்பறைக் கட்டட வசதி செய்து தருவது குறித்து தற்போது அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. தளவாட சாமான்கள் பள்ளி வளர்ச்சிக்குழு மூலமாகத்தான் துறையின் அனுமதி பெற்று வாங்கவேண்டும். இப்பள்ளி ஏற்கனவே துவக்கப்பட்டு இயங்கி வருவதால் கூடுதல் பணியிடங்கள் வழங்குவதற்இல்லை. உபரி யாக ஆசிரியர் பணியிடங்கள் இருப்பின் இப்பள்ளியின் தேவை கருத்தில் கொள்ளப்படும்.

13—

பேராவூரணி பெண்கள் மேல்நிலைப் பள்ளி

வினா எண். 4586—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, பேராவூரணி பெண்கள் மேல் நிலைப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர் நியமனம் தளவாட சாமான்கள், கட்டட வசதி செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இப்பள்ளிக்கு கட்டட வசதி செய்து தருவது குறித்து த்ற்போது அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் ில்லை.
தளவாட சாமான்கள் பள்ளி வளர்ச்சிக்குழு மூலமாகத்தான்
துறையின் அனுமதி பெற்று வாங்கவேண்டும். இப்பள்ளி
ஏற்கனவே துவக்கப்பட்டு ியங்கி வருவதால் கூடுதல் பணி
யிடங்கள் வழங்குவதற்கில்லை. உபரியாக ஆசிரியர் பணியிடங்
கள் இருப்பின் இப்பள்ளியின் தேவை கருத்தில் கொள்ளப்படும்.

14—

பேராவூரணி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி.

வினா எண். 4587—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:





பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஆண்கள் மேல்நிலைப்
பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர், கட்டட வசதி, தளவாட சாமான்கள்
போன்ற வசதிகள் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இப்பள்ளிக்குக் கட்டட வசதி செய்து தருவது குறித்து
தற்போது அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.
தளவாட சாமான்கள் பள்ளி வளர்ச்சிக் குழு மூலமாகத்தான்
துறையின் அனுமதி பெற்று வாங்கவேண்டும். இப்பள்ளி
ஏற்கனவே துவக்கப்பட்டு இயங்கி வருவதால் கூடுதல் பணி
யிடங்கள் வழங்குவதற்கில்லை. உபரியாக ஆசிரியர் பணி
யிடங்கள் இருப்பின் ிப்பள்ளியின் தேவை கருத்திற் கொள்ளப்
படும்.

15—

ஏனாதிக்கரம்பை உயர்நிலைப் பள்ளி

வினா எண். 4589—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு
கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, ஏனாதிக்கரம்பை உயர்நிலைப்
பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர், கட்டட வசதி, தளவாட சாமான்
கள், ஆய்வுக்கூடம் போன்ற வசதிகள் செய்துதர அரசிடம்
திட்டம் உள்ளதா?

விடை—

இப்பள்ளிக்கு கட்டட வசதி செய்து தருவது குறித்து தற்
போது அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. தள
வாட சாமான்கள் பள்ளி வளர்ச்சிக்குழு மூலமாகத்தான் இலா
காவின் அனுமதிப் பெற்று வாங்க வேண்டும். இப்பள்ளி ஏற்
கனவே துவக்கப்பட்டு இயங்கி வருவதால், கூடுதல் பணியிடங்
கள் வழங்குவதற்கில்லை. உபரியாக ஆசிரியர் பணி இடங்கள்
இருப்பின் இப்பள்ளியின் தேவை கருத்தில் கொள்ளப்படும்.

16—

நாடியம் உயர்நிலைப் பள்ளி

வினா எண். 4601—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

பேராவூரணி தொகுதி, நாடியம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர் நியமனம், கட்டட வசதி, தளவாட சாமான்கள், ஆய்வுக்கூடம் போன்ற வசதிகள் செய்துதர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இப்பள்ளிக்குக் கட்டட வசதி மற்றும் ஆய்வுக்கூடம் செய்து
தருவது குறித்து தற்போது அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீல
னையில் இல்லை. தளவாட சாமான்கள் பள்ளி வளர்ச்சிக் குழு
மூலமாகத்தான் துறையின் அனுமதி பெற்று வாங்க வேண்டும்.
இப்பள்ளி ஏற்கனவே துவக்கப்பட்டு இயங்கி வருவதால் கூடுதல்
பணியிடங்கள் வழங்குவதற்கில்லை. உபரியாக ஆசிரியர் பணி
யிடங்கள் இருப்பின் இப்பள்ளியின் தேவை கருத்தில் கொள்ளப்
படும்.

17—

ருத்திர சிந்தாமணி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண். 4630—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள்
நலவாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம்
ருத்திர சிந்தாமணியிலுள்ள மேல்நிலை நீர்க்தேக்கத்தொட்டி
யில் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க பி.வி.சி. பைப்
அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை. 1976–77-ல் கட்டப்பட்ட 5000 லிட்டர் கொள்
திறன் கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டியிலிருந்து
கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் சேதுபாவாசத்திரம் ஒன்றியத்
தில் கரையோரத்தில் உள்ள 35 குடியிருப்புகளுக்கு குடிநீர்
வழங்கும் திட்டம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இக்குடி
யிருப்பு முழுமையாக குடிநீர் வசதி பெற்றதாக வகைப்படுத்தப்
பட்டுள்ளதாலும், தற்போதைய திட்டம் போதுமானதாக இருப்
பதாலும், மேற்கொண்டு பி.வி.சி. குழாய் அமைக்கும் திட்டம்
ஏதும் பரிசீலனையில் இல்லை.

18—

பெத்தனாட்சி வயலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி
கட்டுதல்

வினா எண். 4638—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, ஊமத்தநாடு ஊராட்சி, பெத்த
னாட்சி வயலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசி
டம் திட்டம் உள்ளதா?



விடை—

தற்போது இல்லை. வாரிய விதிமுறைகளின்படி மக்கட்
தொகை 750 உள்ள குடியிருப்புகளுக்கு மட்டும்தான் மேல்நிலை
நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர இயலும். பெத்தனாட்சி
வயல் கிராமத்தின் மக்கட்தொகை 350 மட்டுமே. 1983-ம் ஆண்டு
வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒரு ஆழ்துளைக் குழாய்க்
கிணறு அமைத்து குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு
ஆழ்துளைக் கிணறு முன்னுரிமை வரிசைப்படி குடிநீரே இல்லாத
குடியிருப்புகளை முடித்த பின்பு தான் அமைத்துத் தர இயலும்.

19—

பெரிய தெற்குக் காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத்
தொட்டி கட்டுதல்.

வினா எண். 4642—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், பெரிய தெற்குக் காட்டில் மேல்
நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

ஆம். நடப்பு ஆண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள
மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 1.5 கி.மீ. நீளத்திற்கு
பகிர்மானக் குழாயும், 6 பொது குடிநீர்க் குழாயுடன் கூடிய ஒரு
மின் இறைப்பு திட்டம் ரூ. 2.17 இலட்சம் மதிப்பீட்டில் ஆயுள்
காப்பீட்டுக் கழக கடன் உதவியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு
பணிகள் நடைபெற்று வருகின்றன. 1990 ஆம் ஆண்டு மார்ச்
மாதம் பணிகள் முடிவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

20—

பொக்கன்விடுதி வடக்கில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி
கட்டுதல்.

வினா எண். 4643—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், பொக்கன்விடுதி வடக்கில் மேல்
நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

தற்போது இல்லை. 1980, 1983, மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மூன்று ஆழ் குழாய் கிணறு அமைத்து இந்தியா மார்க் 2 கைப்பம்பு பொருத்தி குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய ஒரு மின் விசைத் திட்டம் முன்னுரிமைப்படி அமைத்துத்தர பரிசீலிக்கப்படும்.

21—

மதன்பட்டவூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 4644—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், மதன்பட்டவூரில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை. இக்கிராமம் முழுவதுமாக குடிநீர் வசதி பெற்றது. ஜூலை 1982-ல் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர்த்திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் 1.698 கி.மீ. நீளத்திற்கு பகிர்மான குழாயும் 9 பொது குடிநீர் குழாயுடன் கூடிய ஒரு மின் விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1989ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒரு கைவிசைப்பம்பு [illegible] திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. வாரிய விதிமுறைகளின்படி தற்போது உள்ள திட்டங்கள் போதுமானது ஆகும்.

22—

செங்கொல்லை பாரதியார் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 4655—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி நகரம் செங்கொல்லை பாரதியார் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

ஆம். பேராவூரணி நகரத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒரு குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டு ரூ. 86.86 இலட்சத்திற்கு வாரியத்தால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திட்டப் பணிகள் மார்ச் 1991-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

23—

மகிழங்கோட்டை மேலக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 4684—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை மேலக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. மேலக்காடு மகிழங்கோட்டை குடியிருப்பின் ஒரு பகுதிதான். தனிக்குடியிருப்பு அல்ல. மகிழங்கோட்டை குடியிருப்பிற்கு 1974-75-ஆம் ஆண்டில் குறைந்த தேவைத் திட்டத்தின் கீழ், 20,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியும், 10 பொது குடிநீர் குழாய்களுடன் கூடிய ஒரு மின் விசைத் திட்டமும் செயலாக்கப்பட்டு, பகுதி குடிநீர் வசதிபெற்ற குடியிருப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இக்குடியிருப்பிற்குத் தேவையான அபிவிருத்திப் பணிகள் குடிநீர் வசதி இல்லாத குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளித்த பின்னர் தான் மேற்கொள்ள இயலும்.

24—

கைவனவயலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 4685—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கைவனவயலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1990 ஏப்ரல் 2

விடை—

இல்லை. கைவனவயல் கிராமத்தில் 1978–79-ல் குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 1.0 கி.மீ. நீளத்திற்கு பகிர்மான குழாயும், 6 பொது குடிநீர்க் குழாய்களுடன் கூடிய ஒரு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. இக்கிராமத்திற்கு அபிவிருத்திப் பணிகள் இதுவரை குடிநீரே இல்லாத குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளித்த பின்னர்தான் எடுத்துக்கொள்ள முடியும்.

25—

சூசையன் குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 4697—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஊராட்சி, சூசையன் குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இல்லை. சூசையன் குடியிருப்பு மகிழங்கோட்டை குடியிருப்பின் ஒரு பகுதிதான். தனிக்குடியிருப்பு இல்லை. மகிழங்கோட்டை குடியிருப்பிற்கு 1974–75 ஆம் ஆண்டில் குறைந்த தேவைத் திட்டத்தின் கீழ். 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 10 பொது குடிநீர் குழாய்களுடன் கூடிய ஒரு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு பகுதி குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இக்குடியிருப்புக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டத்தினை, குடிநீர் வசதி இல்லாத குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளித்த பின்னர்தான் மேற்கொள்ள இயலும்.

26—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 4763 —திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:



1990 ஏப்ரல் 2]

பேராவூரணி தொகுதி, சோலைக் காட்டில் (வடக்கு) மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ஆம். நடப்பு ஆண்டில் ரூ. 2.40 இலட்சம் செலவில் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர் திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 1.5கி.மீ. நீளத்திற்கு பகிர்மான குழாயும், 7 பொது குடிநீர் குழாயுடன் கூடிய ஒரு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திட்டப் பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவுறும்.

27—

போர்வெல் போடுதல்.

வினா எண். 4794—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம் நவகொல்லைக்காடு வடக்கிற்கும் ஆதிதிராவிடர் தெருவிற்கும் போர்வெல் போட அரசுநடவடிக்கை எடுக்குமா?

விடை—

இல்லை. நவக்கொல்லைக்காடு குடியிருப்பு, நவக்கொல்லைக் காடு வடக்கு மற்றும் ஆதிதிராவிடர் தெரு என இரு பகுதிகளை உள்ளடக்கியது. இக்குடியிருப்பிற்கு ஏற்கெனவே ஜுலை 1982-ல் ஒரு மின்விசைத் திட்டமும்,1983-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தில், ஒரு கையிறைப்பான் திட்டமும் செயலாக்கப்பட்டு தற்போது பேராவூரணி ஒன்றியத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. தேவையான விஸ்தரிப்புப் பணிகளை குடிநீர் சிறிதும் இல்லாக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளித்த பின்னர்தான் மேற்கொள்ள இயலும்.

28—

வினா எண். 4796 —திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ரெண்டாம்புளிக்காடு ஊராட்சி, வேலாகுடிக்கு போர்வெல் போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1990 ஏப்ரல் 2

விடை—

தற்பொழுது எடுப்பதற்கில்லை. இக்கிராமத்தில் குடிநீர் பிரச்சினை இல்லை. இதுபகுதிமட்டும் குடிநீர்வசதி பெற்ற கிராமம் 1980-ம் ஆண்டில் சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 35 கிராமங்களுக்கு குடிநீர் திட்டத்தின் நீர் உந்து குழாயிலிருந்து 4 பொது குடிநீர் குழாய்கள் அமைத்து குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இக்கிராமத்திற்கு முழுவதுமாக குடிநீர் வசதி பெற மேலும் ஓர் ஆழ்துளைக் கிணறு மட்டுமே அமைத்துத்தர இயலும். ஆனால் இது குடிநீரே இல்லாத குடியிருப்புகளை முடித்த பின்புதான் இயலும்.

29—

வினா எண். 4815— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் கொல்லைக்காட்டில் போர்வெல் போட்டு குடிதண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை. ஜூலை 1982-ல் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர் திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 1.2 கி.மீ. நீளத்திற்கு பகிர்மானக் குழாயும் 7 பொது குடிநீர் குழாய்களுடன் கூடிய ஒரு மின்விசைத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு பகுதி குடிநீர் வசதி பெற்றதாக வகைப்படுத்தப்பட்டு உள்ளது. தேவையான அபிவிருத்திப் பணிகள் குடிநீரே இல்லாத குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளித்த பின்னர்தான் மேற்கொள்ள இயலும்.

30—

சுடுகாட்டிற்கு பாதை வசதி.

வினா எண். 4844—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், வலசைக்காடு மக்கள் சுடுகாட்டிற்கு செல்ல பாதை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



1990 ஏப்ரல் 2]

விடை—

1989 ஏப்ரல் 1 முதல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்த நிதியில் இந்திரா நினைவுக் குடியிருப்பு மற்றும் பணியாளர் ஊதியம் போக எஞ்சியதில் 80% ஊராட்சி பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்து அப்பகுதி மக்களுக்கு பயன்படும் அத்தியாவசிய பணிகளை அவர்களே திட்டமிட்டு மேற்கொள்ளலாம். எனவே, பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், வலசைக்காடு மக்களுக்கு சுடு காட்டுப்பாதை அமைப்பது பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

31—

பனைத் தொழிலாளர்கள்.

வினா எண். 5003—திரு.கே. ரவி அருணன்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுவிலக்கு அமுல் காரணமாக வேலை வாய்ப்பினை இழந்துள்ள பனைத் தொழிலாளர்களுக்கு புனர் வாழ்விற்காக அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

32—

திருமழிசை பேரூராட்சிக்குக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 5140—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கை—அண்ணா மாவட்டம், திருமழிசை பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை விரைவில் முடித்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

திருமழிசை குடிநீர்த் திட்டத்திற்காக நான்கு 250 மிமீ. விட்டமுள்ள ஆழ்த்துளை கிணறுகள் ரூ. 1.52 இலட்ச மதிப்பீட்டில்போடப்பட்டு நீர் ஆதாரப் பணிகள்முடிக்கப்பட்ட

மேலும் இடைக்கால மற்றும் பிற்கால தேவைக்கு வேண்டிய நீர் ஆதாரங்களை ஏற்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நீர் ஆதாரப்பணிகள் முடிக்கப்பட்ட பிறகு திட்ட மதிப்பீடு வாரியம் மூலம் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற அனுப்பி வைக்கப்படும். அரசின் நிர்வாக ஒப்புதலுக்குப் பின்னர் திட்டம் செயலாக்கப்படும்.

33—

முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம்.

வினா எண். 5277—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

34—

பாசன வாய்க்கால் தலைப்பு.

வினா எண். 5347—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மருத்தூர் கிராம விவசாயிகள் பாசனம் பெறும் வாய்க்கால் தலைப்பு 7 கி.மீ. அப்பால் உள்ளதால் தண்ணீர் சரிவர கிடைக்காமல் விவசாயம் பாதிக்கப்படுவதாயும் தலைப்பை வீரசோழன் ஆற்றின் கிராமத்துக்கருகில் மாற்றிக்கொடுக்க வேண்டி கோரிக்கை மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.
(ஆ) எழவில்லை.

35—

நட்டாற்றிலிருந்து பாசன தலைப்பு.

வினா எண். 5349—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மாளிகை நத்தம், ராமாபுரம், செருக்குடி, துளார் கிராம விவசாயிகள் பாசனம் பெறும் வகையில் நட்டாற்றிலிருந்து பாசன தலைப்பு மாற்றித்தர வேண்டி கோரிக்கை மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மனு வரப்பெறவில்லை.
(ஆ) எழவில்லை.

36—

கொத்தங்குடி வாய்க்காலிலிருந்து புதிய பாசனத் தலைப்பு.

வினா எண். 5354—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், பாலையூர் ஊராட்சி, இடைக்கியம் கிராம விவசாயிகள் பாசன வசதிபெற கொத்தங்குடி வாய்க்காலிலிருந்து புதிய பாசன தலைப்பு வேண்டி அரசுக்குக் கோரிக்கை மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை
(ஆ) எழவில்லை.

37—

கால்வாய் வெட்டும் திட்டம்.

வினா எண். 5371—திரு. எஸ். டேனியல் ராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா ஆறுமுகமங்களம் 3-ம் நம்பர் மடையிலிருந்து அகரம் குளத்திற்கு தனிக்கால்வாய் வெட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா ஆறுமுகமங்கலம் 3-ம் நம்பர் மடையிலிருந்து அகரம் குளத்திற்கு தனிக்கால்வாய் வெட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1990 ஏப்ரல் 2

38—

நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண். 5378—திரு. எஸ்.டேனியல் ராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், கீழ்பவானி கிராமத்திலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

1989–90-ம் ஆண்டில் கருத்துரு பெறப்பட்டு, இக்கருத்துரு உயர்மட்டக்குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. உயர்மட்டக் குழு பரிந்துரை செய்யவில்லை. 1990–91-ல் இக்கருத்துரு மீண்டும் பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்கு வைத்து அதன் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

39—

பாலையூர் கிராமத்தில் உச்சவரம்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலம்.

வினா எண். 5398—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மயிலாடுதுறை வட்டம், பாலையூர் கிராமத்தில் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலம் எவ்வளவு?

(ஆ) எத்தனை நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது?

(இ) அரசு அவர்களுக்கு மானியமாக வழங்கிய தொகை எவ்வளவு?

விடை—

| | |
|---|---|
| (அ) மயிலாடுதுறை வட்டம், பாலையூர் கிராமத்தில் உச்சவரம்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலத்தின் மொத்தப் பரப்பு. .. | 165.70 ஏக்கர். |
| (ஆ) உபரி நிலம் பெற்றவர்களின் எண்ணிக்கை. .. | 232 நபர்கள். |
| (இ) மானியமாக வழங்கப்பட்ட தொகை. .. | உதவித்தொகை ஏக்கருக்கு ரூ.1,000 விதம், மொத்தம் அளிக்கப்பட்ட தொகை ரூ.1,35,360. பயனடைந்தவர்கள் 201 நபர்கள். |



1990 ஏப்ரல் 2]

40—

திருமண மண்டபம் கட்டுதல்:

வினா எண். 5490—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திணத்துக்கடவு தொகுதியிலுள்ள நெகமம் கிராமத்தில் கன்னிகா பரமேஸ்வரி கோயில் நிலத்தில் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக திருப்பணிக்குழு அமைக்கப்பட்டதா?

விடை—

(அ) திணத்துக்கடவு தொகுதியிலுள்ள நெகமம் கிராமத்தில் கன்னிகா பரமேஸ்வரி கோயில் நிலத்தில் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

41—

மாவட்ட முன்சிப் மற்றும் மாஜிஸ்டிரேட்டுகள் நியமனம்.

வினா எண். 5511—திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கீழமை நீதிமன்றங்களுக்கு (Subordinate Courts) மாவட்ட முன்சிப்கள், முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோரை தேர்வு செய்கின்றபொழுது மூன்று ஆண்டுகளுக்கு மேல் வழக்கறிஞர்களாகத் தொழில் நடத்திய வழக்கறிஞர்களை நியமனம் செய்ய இந்த அரசு உத்தரவிடுமா?

விடை—

தற்போதுள்ள தமிழ்நாடு நீதித்துறை பணியாளர் விதி 4 (1)-ன்படி, தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு 20 பதவிகளில், 11 பதவிகளுக்கு மூன்றாண்டுகளுக்குமேல் வழக்கறிஞர்களாக தொழில் நடத்தியவர்களும், மீதமுள்ள 9 பதவிகளுக்கு குறிப்பிட்ட சில அரசுப் பணியாளர்கள் பணிமாற்றம் மூலமும், தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலமாக நேரடித் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட முன்சிப் மற்றும் மாஜிஸ்டிரேட்டுகளாக நியமிக்கப்படுகிறார்கள். ஆகவே, இவ்விதியை திருத்தும் நோக்கம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1990 ஏப்ரல் 2

42—

திருநெல்வேலி நகரில் புதிதாக மாற்று வழிப்பாதை அமைத்தல்.

வினா எண். 5514—திரு. ஆ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி நகரில் புதிதாக மாற்று வழிப்பாதை ஒன்று (Bye-pass) அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் அளித்த பின்னர் வேலை துவங்கப்படும்.

43—

மாதவரம் பால்பண்ணை.

வினா எண். 5592—திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாதவரம் பால்பண்ணையில் அரசுக்குச் சொந்தமான காலியாக உள்ள குடோன்களை வாடகைக்கு விட்டு வருமானத்தைப் பெறும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை. மாதவரம் பால்பண்ணையை கால்நடைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டிற்கு மாற்றும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதால், அப்பண்ணையில் காலியாகவுள்ள குடோன்களை வாடகைக்கு விட்டு வருமானத்தைப் பெறும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

44—

பரமக்குடி—குளவிப்பட்டி நகரப் பேருந்து.

வினா எண். 5630—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:



1990 ஏப்ரல் 2]

பரமக்குடியிலிருந்து குளவிப்பட்டி கிராமத்திற்கு நகரப் பேருந்து விடப்படுமா?

விடை—

குளவிப்பட்டி கிராமம் பரமக்குடி–முதுகுளத்தூர் பிரதானச் சாலையிலிருந்து 6.2 கி.மீ. தூரத்தில் உள்ளது. பிரதானச்சாலையிலிருந்து அண்டக்குடி வரை உள்ள 3.6 கி.மீ. தூரம் மெட்டல் சாலையாகவும், மீதமுள்ள குளவிப்பட்டி வரை உள்ள பகுதியான 2.6 கி.மீ. தூரம் மண்சாலையாகவும் இருபுறமும் அரித்தோடி மோட்டார் போக்குவரத்துக்கு தகுதியற்ற நிலையில் உள்ளதால், குளவிப்பட்டி கிராமத்திற்கு நகரப்பேருந்து இயக்க இயலவில்லை.

45—

சத்திரக்குடியில் காவல் நிலையம் கட்டுதல்.

வினா எண். 5803—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஒன்றியம், சத்திரக்குடியில் காவல்நிலையம் கட்டப்படுமா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஒன்றியம் சத்திரக்குடியில் காவல் நிலையம் / காவலர் குடியிருப்புகள் கட்ட புறம்போக்கு நிலம் உரிமை மாற்றல் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக காவல்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். இது குறித்து செயற்குறிப்பு அரசுக்கு கிடைக்கப்பெற்றவுடன் அப்பொழுதுள்ள நிதி நிலைமைக்கு ஏற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

46—

பார்த்திபனூரில் காவல் நிலையம் கட்டுதல்.

வினா எண். 5804—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம் பார்த்திபனூரில் காவல் நிலையமும் காவலர் குடியிருப்பும் கட்டப்படுமா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம் பார்த்திபனூரில் காவல் நிலையமும் காவலர் குடியிருப்பும் கட்டுவதற்குத் தகுதியான நிலம் தேர்வு செய்து, கையகப்படுத்தப்பட்டபின் உரிய கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று காவல்துறை இயக்குநர் கூறியுள்ளார். செயற்குறிப்பு அரசுக்கு கிடைக்கப்பெற்றதும் அப்பொழுதுள்ள நிதிநிலைமைக்கு ஏற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

பரமக்குடி தாலுகா மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்குதல்

வினா எண். 5805—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்கா மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்கப்படுமா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்குவது குறித்து தற்சமயம் திட்டம் ஏதும் இல்லை.

48—

பட்டுக்கோட்டை நம்பிவயல் நகரப்பேருந்து.

வினா எண். 5948—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம். பட்டுக்கோட்டையிலிருந்து நம்பிவயல் வரை அலிவலம், அதம்பை வழியாக நகரப் பேருந்துவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து நம்பிவயல் வரை அலிவலம், அதம்பை வழியாக நகரப்பேருந்து விட செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

49—

அமரப்பூண்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா எண். 5998—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி வட்டம், அமரபூண்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்தத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

(அ) மற்றும் (ஆ) 1989–90-ஆம் ஆண்டில் 164 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க அரசாணை (நிலை) எண். 947 சுகாதாரம் நாள் 1-6-89-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. முதல் கட்டமாக 74 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்குமாறு அரசு கடிதம் எண்.104636/எல்1/89–1, நாள் 15-11-89ல் தெரிவி செய்து ஆணையிடப்பட்டது. இதில் காயிதே மில்லத் மாவட்டம் பழனி வட்டத்தைச் சேர்ந்த அமரபூண்டி கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

50—

குடும்பக் கட்டுப்பாடு முறைகளில் ஆண்கள் விகிதாச்சாரம்.

வினா எண். 6199—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் குடும்பக் கட்டுப்பாடு முறைகளில் ஆண்கள் எத்தனை சதவிகிதம் முன்வருகிறார்கள்?

விடை—

கடந்த ஐந்து ஆண்டுகளில், குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக்கொண்டவர்களின் புள்ளி விவரத்தின்படி, குடும்பநலத் திட்டத்தின் நிரந்தர் முறையான வாசக்டமி அறுவை சிகிச்சை என்ற முறையில், சராசரியாக 11.9 சதவீத ஆண்களும், நிரோத் என்ற தற்காலிக முறையில் சராசரியாக 36.6 சதவீத ஆண்களும் ஏற்க முன்வந்துள்ளார்கள்.

51—

அவினாசித் தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கென இலவசமாகக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்.

வினா எண். 167—திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அவினாசித் தொகுதியில் ஊராட்சி ஒன்றியங்களில் ஆதிதிராவிடர்களுக்கென இலவசமாகக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

இலவசமாகக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இயலாது.

52—

வாணியாற்றின் குறுக்கே நடைபாலம் கட்டுதல்.

வினா எண், 403— திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரூர் வட்டம், அரூர் நகர பேருந்து நிலையத்திற்கும் அரிசன காலனிக்கும் மத்தியில் ஓடும் வாணியாற்றின் குறுக்கே நடைபாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): நடைபாலம் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை. இருப்பினும், பொதுப்பணித் துறையினரால் ரூ. 31,50 லட்சம் மதிப்பீட்டில் வாணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் பாலத்தை அரிசன காலனி மக்கள் போக்குவரத்திற்கு பயன் படுத்திக் கொள்ளலாம்.

53—

மலைவாழ் மக்கள் பகுதிக்கு அமுதம் விற்பனை நிலையம்.

வினா எண். 406—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரூர் வட்டம், தீர்த்தமலை பிர்க்கா, கத்திரிப்பட்டி பகுதி மலைவாழ் மக்கள் பகுதிக்கு தனியாக அமுதம் விற்பனை நிலையம் ஏற்படுத்திக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

உறுப்பினரின் மேற்கண்ட கேள்வி எழுப்பப்பட்ட பிறகு கத்திரிப்பட்டியில் ஒரு பகுதி நேர நியாய விலைக்கடை திறப்பது குறித்து ஆராயப்பட்டு தற்பொழுது சாத்தியமில்லை என முடிவெடுக்கப்பட்டது.

இரண்டு நியாய விலைக் கடைகளுக்கு இடையே 3 கி.மீ. தூரம் இருக்கும் பட்சத்தில் புதிதாக பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்றினை திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சென்னை நகரில் உணவுப் பொருள் வழங்கல் துணை ஆணையாளர் களுக்கும் அரசு அனுமதி அளித்துள்ளது.





54—

நன்னிலம் மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டுத் திடல் அமைத்தல்.

வினா எண் 776—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நன்னிலம் மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

இப்பள்ளிக்கு விளையாட்டுத் திடல் ஒன்று ஏற்கெனவே உள்ளது. நிதிநிலைமையைப் பொறுத்து அத்திடல் செப்பனிட்டுப் பயன்படுத்தப்படும்.

55—

பழுதடைந்துள்ள குடிநீர் கைப்பம்புகளை சீர் செய்தல்.

வினா எண் 954— திரு. வெ. இராசு: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) குளத்தூர் தொகுதியில் விராலிமலை, அன்னவாசல், குன்றாண்டார்கோவில் ஒன்றியங்களில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க பழுதடைந்த கைப்பம்புகளை சீர் செய்யவும், புதிய பம்ப் அமைக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் செயல்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): குளத்தூர் தொகுதியில் உள்ள விராலி மலை, அன்னவாசல் மற்றும் குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியங்களில் பழுது ஏற்படும் கையிறைப்பான்கள் மேற்படி ஊராட்சி ஒன்றிய பொருத்துநர் மற்றும் தினக்கூலி பொருத்து நர்கள் மூலம் உடனுக்குடன் சீர் செய்யப்பட்டு பழுது நீக்கப்படு கின்றது. 1989 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணம் திட்டத்தில் இம்மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா 16 ஆழ்குழாய் கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இப்பகுதியில் குடிநீர், தட்டுப்பாடு இன்றி கிடைத்து வருகிறது.

56—

மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

வினா எண் 980—திரு. ஆலவயல் சுப்பையா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருமயம் தொகுதி, பொன்னமராவதியில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நிரந்தரப் பணிமனை துவங்குவதற்கு போதிய நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுவரை பெற்ற 1.25 ஏக்கர் நிலத்தில் தற்காலிக மாக உப பணிமனை ஒன்று உருவாக்கப்பட்டு துவங்குவதற்கு தயார் நிலையில் உள்ளது.

57—

பொன்னமராவதியில் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்குதல்.

வினா எண் 982—திரு. ஆலவயல் சுப்பையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொன்னமராவதியில் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

பொன்னமராவதி பேரூராட்சிக்கு தற்போது மூன்று மேல் நிலைத்தொட்டிகள், மூன்று தானே இயங்கும் மோட்டார் மற்றும் 30 ஆழ்குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. பொன் னமராவதி குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீடு ரூபாய் 1.25 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 25,100 செலவில் நீர்ஆதார உற்பத்திக்கான மதிப்பீடு தயாரிக்கப் பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணறு சுத்திகரிக்கப்பட்டுள்ளது. பொன்னமராவதிப் பேரூராட்சியில் 1989 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியில் இம் ஆறு ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவை தொடர்பான வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.





58—

கடப்பேரி சத்திரம் நகராட்சியிடம் ஒப்படைத்தல்.

வினா எண். 1295—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுராந்தகம் நகராட்சியாக மாற்றப்பட்ட பின்னும் ஊராட்சி ஒன்றியத்தால் கடப்பேரி சத்திரம் நகராட்சியிடம் ஒப்படைக்கவில்லை என்பது உண்மையா?

விடை—

மதுராந்தகம் நகர் 1-4-74 முதல் நகராட்சியாக மாற்றப் பட்டது. கடப்பேரி சத்திரக் கட்டிடம் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தினால் 31—5—77 வரை நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை. அரசு ஆணையின்படி மேற்படி கட்டிடம் 1-6-77 அன்று நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

59—

வனத்துறை காவலர் பதவி பணியின் பெயரை மாற்றி அமைத்தல்.

வினா எண். 1949—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) வனத்துறை காவலர் பதவி பணியின் பெயரை மாற்றி அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் புதிய அமைப்பு செயல்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

60—

கோவை மாவட்டத்தில் சிறு தொழில்களுக்கு மின் இணைப்பு.

வினா எண் 2338—திரு. கே. ரமணி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத்தில் மின் இணைப்புக் கேட்டு விண்ணப்பித்துள்ள சிறுதொழில்களுக்கு இணைப்புக் கொடுக்காமல் பாக்கி உள்ளவை 1988 முடிய எவ்வளவு?

(ஆ) அவைகளுக்கு துரிதமாக இணைப்புக் கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டத்தில் 31—12—88 முடிய சிறு தொழில்களுக்கான மின் இணைப்புக் கோரி 2,885 மனுக்கள் நிலுவையில் இருந்தன. இவற்றில் 1—1—89 முதல் 31—3—89 முடிய 936 மனுதாரர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. இம் மாவட்டத்திற்கு 1989—90 ஆண்டுக்கான சிறுதொழில் மின் இணைப்புக்கான இலக்கு 3,525. இதில் 1-4-89 முதல் 31—7—89 வரை 429 இணைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 31-3-90-க்குள் 31—12—88 வரையில் நிலுவையில் உள்ள எல்லா விண்ணப்பங் களுக்கும் மின் இணைப்பு கொடுக்க தமிழ்நாடு மின்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

61—

## பாலம் அமைத்தல்.

வினா எண் 2855—திரு. எஸ். டி. உக்ம்சந்த்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) செங்கை—அண்ணா மாவட்டம் பாலாறு கல்லாறு குறுக்கே இரும்புலிசேரியிலிருந்து சேலூர் கிராமத்திற்கு மற்றும் பாலம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் நிறைவேற்றப் படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

62—

## ஓனம்பாக்கம் ஆதிதிராவிடர் காலனியிலிருந்து இராமத்திற்குச் செல்ல சாலை வசதியும் கல்வெர்ட்டும் கட்டுதல்.

வினா எண் 2932—திரு. எஸ். டி. உக்ம்சந்த்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம் ஓனம்பாக்கம் ஆதிதிராவிடர் காலனியிலிருந்து இராமத்திற்குச் செல்ல சாலை வசதியும், கல்வெர்ட்டும் இல்லை என்பது உண்மையா?





(ஆ) ஆம் எனில், இச் சாலையும், கல்வெர்ட்டும் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வரும் ஆண்டில் இவ் வேலையை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், மைய அரசு வெளியிடும் வழிமுறை களுக்குட்பட்டு எடுத்துக்கொள்ள, மாவட்ட ஆட்சியருக்கு தக்க அறிவுரை வழங்கப்படும்.

63—

## காஞ்சிபுரம்—பிச்சிவாக்கம் பேருந்து வசதி.

வினா எண் 3163—திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

காஞ்சிபுரம்—பிச்சிவாக்கம் (வழி) எடையார்பாக்கம் வழித்தடத்தில் புதிய பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

காஞ்சிபுரம்—பிச்சிவாக்கம் (வழி) எடையார்பாக்கம் வழித்தடத்தில் தற்போது புதிய பேருந்து வசதி செய்து தரப் பட்டுள்ளது.

64—

## பரமக்குடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கட்டட வசதி.

வினா எண் 3673—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

65—

## மேட்டூர்—ஆத்தூர் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 3786—திரு. கே. அர்ஜுனன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

[1990 ஏப்ரல் 2

மேட்டூர்—ஆத்தூர் குடிநீர்த் திட்டப் பணிகள் எப்போது முடிவடையும்?

விடை—

1992 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடையும்.

66—

திருநெல்வேலி கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டில் மோசடி.

வினா எண் 4031—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) திருநெல்வேலி கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டில் பெரிய அளவில் மோசடி நடந்துள்ளது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்

(ஆ) சம்பந்தப்பட்ட விற்பனையாளர்கள் மற்றும் அலுவலர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

67—

மேலூரில் கோட்ட மின் பொறியாளர் அலுவலகம்.

வினா எண் 4178—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் கோட்ட மின் பொறியாளர் அலுவலகம் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மேலூரில் செயற்பொறியாளர் கோட்டம் திறப்பதற்கான செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1990 ஏப்ரல் 2]

68—

செங்கல்பட்டு நகராட்சியின் தரம் உயர்த்துதல்.

வினா எண் 4369—திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை நகராட்சியை பி. கிரேடு நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முதல் செயல்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): செங்கல்பட்டு நகராட்சியின் தரம் உயர்த்தும் பிரேரணை எதுவும் நிலுவையில் இல்லை.

69—

சுரங்கப்பாதை ஏற்படுத்துதல்.

வினா எண் 4543—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை கடற்கரை சாலையில், எழிலகம், பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபம் இவற்றிற்கு இடையில் இருக்கு மேற்காக சுரங்கப்பாதை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

70—

பேராவூரணி—திருச்சி பேருந்து.

வினா எண் 4562—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி—திருச்சிக்கு புதுக்கோட்டை வழியாக பேருந்துவிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

பேராவூரணி—திருச்சிக்கு புதுக்கோட்டை வழியாக பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

71—

பேராவூரணி— திருச்செந்தூர் பேருந்து.

வினா எண் 4565—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி—திருச்செந்தூருக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் 1990—ஆம் வருடம் ஜுன் மாதத்திற்குள் திருச்செந்தூரில் பணிமனை கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப் பணிமனை தொடங்கியவுடன் பேராவூரணியிலிருந்து திருச்செந்தூருக்கு பேருந்து இயக்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

72—

பேராவூரணி—ராமேஸ்வரம் பேருந்து.

வினா எண் 4567—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி—ராமேஸ்வரத்திற்கு ஒரு பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை. ராமேஸ்வரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் ஒரு பணிமனை கட்டப்பட்டு வருகின்றது. இப் பணி 1990 ஆம் வருடத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. பணிமனை இயங்கியவுடன் பேராவூரணியிலிருந்து ராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

73—

பேராவூரணி—பழனி பேருந்து.

வினா எண் 4569—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி—பழனிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

பழனியில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் ஒரு பணிமனை கட்டப்பட உள்ளது. இப்பணி 1990 வருடத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பணிமனை இயங்கியவுடன் பேராவூரணியிலிருந்து பழனிக்கு திருவள்ளுவர் போக்குவரத்து கழக பேருந்துகள் இயக்கப்படும்.

74—

பின்னவாசல் பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண். 4732—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, பின்னவாசல் பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

பின்னவாசல் பெரிய ஏரி, கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ஒன்று. இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

75—

பண்ணைவயல் பெரிய ஏரியின் பாசன வாய்க்கால் வழிகளை மராமத்து செய்தல்.

வினா எண் 4735—திரு. ஆர். சிங்காரம்—மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி பண்ணைவயல் பெரிய ஏரியின் பாசன வாய்க்கால் வழிகளை மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் பண்ணைவயல் பெரிய ஏரியும் ஒன்று. இந்த ஏரி மற்றும் பாசன வாய்க்காலுக்குத் தேவையான மராமத்து வேலைகள், ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இயன்ற அளவு செய்யப்பட்டு வருகின்றன.

76—

வீரியன்கோட்டை பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4740—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

[1990 ஏப்ரல் 3

பேராவூரணி தொகுதி, வீரியன்கோட்டை பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கல்லணைக் கால்வாய் எல்லைக்குள் உள்ள ஏரிகளில் வீரியன் கோட்டை பெரிய ஏரியும் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

77—

ஊமத்தநாடு பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண். 4743—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

பேராவூரணி தொகுதி, ஊமத்தநாடு பெரிய ஏரியை பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

ஊமத்தநாடு பெரிய ஏரி கல்லணைக் கால்வாய் எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

78—

குருவிக்கரம்பை பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4745—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரி களில் குருவிக்கரம்பை பெரிய ஏரியும் ஒன்று. இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள், ஆண்டுப் பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து, இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

79—

ஏரிப்புறக்கரை பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4748—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :



1990 ஏப்ரல் 2]

பேராவூரணி தொகுதி. ஏரிப்புறக்கரை பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கல்லலணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ஏரிப்புறக்கரை - பெரிய ஏரியும் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து நிதிநிலைக்கேற்ப செய்யப்பட்டு வருகிறது.

80—

வேலாகுடிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண். 4756—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

பேராவூரணி தொகுதி, ரெண்டாம்புளிக்காடு ஊராட்சி வேலாகுடிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை. வேலாகுடி கிராமத்தின் மக்கட்தொகை 450. வாரிய விதிமுறைகளின்படி மக்கட்தொகை 750 உள்ள குடியிருப்பு களுக்குத் தான் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துத் தர இயலும். வேறொரு கூட்டுக் திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இக்கிராமத்தில் தற்போது குடிநீர்ப் பிரச்சனை இல்லை.

81—

ஆயக்குடி, பழனி அடிவாரம் ஆகிய இடங்களில்
காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்

வினா எண். 6041—திரு. என். பழனிவேல்; மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டம், ஆயக்குடி, பழனி அடிவாரம் ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டவும், தொலைபேசி வசதி செய்து தரவும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், பழனி வட்டம் ஆயக்குடியில் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் ஏதும் நிலுவையில் இல்லை.

[1990 ஏப்ரல் 2

ஆயக்குடி காவல் நிலையத்திற்கு தொலைபேசி பொருத்துவது சம்பந்தமான செயற்குறிப்பு தற்போது காத்திருப்போர் பட்டியலிலுள்ளது. தகுதி வரும்போது இணைப்பு கிடைக்கும்.

பழனி அடிவார காவல் நிலையத்திற்கு ஏற்கனவே தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது.

82—

சென்னிமலை— பெருந்துறை பேருந்து வசதி

வினா எண். 6301—திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, சென்னிமலை-பெருந்துறை (வழி) கூரப்பாளையம், ஒலப்பாளையம், வெள்ளியம்பாளையம், வேலாயுதம்பாளையம், பொலவலூர், ஈங்கூர் மார்க்கமாக பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

சென்னிமலை-பெருந்துறை (வழி) கூரைபாலையம், ஒலப்பாளையம், வெள்ளியம்பாளையம், வேலாயுதம்பாளையம், ஈங்கூர் வழித்தடத்தில் பேருந்துவை இயக்க ஆய்வு செய்ததில் ஈங்கூருக்கு இடையில் சுமார் 1.00 கி.மீ. வழித்தட பாதை பழுதாகி பேருந்து இயக்க இயலாத நிலையுள்ளது. இந்த வழித்தடத்தில் 250 மக்கட்தொகைக் கொண்ட பொலவலூர் கிராமம் தவிர கூரைப்பாளையம், ஒலப்பாளையம், வெள்ளியம்பாளையம், வேலாயுதம்பாளையம் ஆகிய கிராமங்கள் நகர வழித்தடம் எண்.சி. 4 பேருந்து மூலம் தினசரி 2 தனி நடைகள் பேருந்து வசதி பெற்று வருகின்றது.

83—

சென்னிமலை—விஜயமங்கலம் நகரப் பேருந்து

வினா எண். 6303—திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, சென்னிமலை-விஜயமங்கலம் (வழி) ஈங்கூர், கவுண்டனூர், நல்லிவலசு, வெட்டுக்காட்டு வலசு, செங்குளம், கூத்தம்பாளையம், எழுதிங்கள்பட்டி பாலியக் காட்டூர், குட்டப்பாளையம், கொமரப்பாளையம், காசிப் புள்ளாம்பாளையம், பள்ளக்காட்டூர், கன்னி மேட்டூர், சேடங்காட்டூர், கம்பளியாம்பட்டி, வரப்பாளையம் வழியாக நகரப்பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?.



1990 ஏப்ரல் 2]

விடை—

இவ்வழித்தடத்தில் நகரப்பேருந்து 27-8-89 முதல் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

84—

சென்னிமலை விஜயமங்கலம் நகரப் பேருந்து

வினா எண். 6322—திரு. பி. மாரப்பன்: போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, சென்னிமலை—விஜயமங்கலம் வரை சென்று வந்த பேருந்து கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுவிட்டதை திரும்பவும் அதே வழித்தடத்தில் விடப்படுமா?

விடை—

நகர வழித்தடம் எண். சி. 4 பேருந்து, சென்னிமலை—விஜயமங்கலம் (வழி) கரப்பாளையம் வழித்தடத்தில், கூரபாளையம் பிரிவு முதல் மாடுகட்டிபாளையம் வரை பாதை பழுதான காரணத்தால் இயக்கப்படவில்லை. அப்பகுதியில் பாதை பழுது செப்பனிட்டவுடன் 23-6-89-ந் தேதி முதல் அதே வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

85—

பரமக்குடி தாலுகா பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்

வினா எண். 6432—டாக்டர். எஸ் சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

86—

பரமக்குடியில் தாலுகா காவல் நிலையம் கட்டுதல்.

வினா எண். 6435—டாக்டர். எஸ். சுந்தரராஜ்:—மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தாலுகா போலீஸ் ஸ்டேசன் எந்த ஆண்டு கட்டப்படும்.

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தாலுகா காவல் நிலையம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு அந்நிலத்தைக் கையகப்படுத்த காவல்துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இது குறித்து கருத்துரு அரசுக்குக் கிடைத்தவுடன் நிதி நிலைமைக்கு ஏற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

87—

கருங்காலக்குடி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவர்.

வினா எண். 6532—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, கருங்காலக்குடி ஆரம்ப சுகதாரார நிலையத்திற்கு ஒரு பெண் மருத்துவரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெண் மருத்துவர் ஒருவர் நியமிக்கப் பட்டு 2-6-89 முதல் பணியாற்றி வருகிறார்.

88—

மேலூர்--மதுரை சாலை

வினா எண். 6541—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூர்—மதுரை சாலையை 'அமரர் கக்கன்ஜி நெடுஞ்சாலை' என பெயர் சூட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இது சம்பந்தமான பிரேரணை எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

89—

மேலூரில் அரசு அலுவலகங்கள் இயங்க பலமாடிக் கட்டிடம்.

வினா எண். 6543—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :





(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூரில் தற்போது வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் அரசு அலுவலகங்கள் ஒன்று சேர்ந்து இயங்க பலமாடிக் கட்டிடம் ஒன்று கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) போதிய நிதி வசதியின்மையால் மேலூரில் அரசு அலுவலகங்கள் இயங்க பலமாடிக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

90—

மதுரையில் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகங்களுக்கான கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 6545—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், மதுரையில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகங்களை ஒன்று சேர்த்து, தனித்தனியே இயங்காமல் ஏழு மாடிக் கட்டிடம் ஒன்று கட்டிக் கொடுத்து தனித்தனிப் பிரிவுகளாக இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரையில் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகங்களுக்கான கட்டிடம் கட்ட மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரால் தல்லாகுளம் கிராமத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2,00 ஏக்கர் நிலத்தை சரியாக அளந்து இட ஒதுக்கீடு அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பின் கட்டிடங்கள் கட்ட நிதி இசைவாணை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

91—

பட்டுக்கோட்டை--திருவோணம் புதிய நகரப் பேருந்து

வினா எண். 65[illegible]—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை—திருவோணம் வழி; அதம்பை–அனந்தகோபாலபுரம்—கா. உஞ்சியவிடுதி வழியாக புதிய நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை–திருவோணம் வழி; அதம்பை–அனந்தகோபாலபுரம்—கா. உஞ்சியவிடுதி வழியாக புதிய நகரப் பேருந்து விட தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

92—

மொளசியில் காவல் நிலையக் கட்டிடம் கட்டுதல்

வினா எண். 6677—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மொளசியில் காவல் நிலையக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மொளசியில் காவல் நிலையக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

93—

காட்டூர், இரத்தினபுரி ஆகிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் துவக்குதல்

வினா எண். 6679—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாநகரம் காட்டூர், இரத்தினபுரி ஆகிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் காந்திபுரத்தில் காட்டூர் காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இரத்தினபுரியில் புதிதாக காவல் நிலையம் துவக்குவது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.





94—

மதுராந்தகம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

வினா எண். 6689—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டத்தில் பெரிய ஊராட்சி ஒன்றியங்களான மதுராந்தகம், உத்திரமேரூர் ஆகியவைகளை மூன்று ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரித்து அமைக்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக, அரசினால் நிருவாக மாற்றம் எதுவும் செய்ய தடை ஆணை 30-6-91 வரை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை ஆணை விலக்கிக்கொள்ளப்பட்ட பிறகே இதுபோன்ற கருத்துருக்கள் மீது நடவடிக்கை எடுக்க இயலும்.

95—

நேபாள தறிகள்

வினா எண். 6709—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சிறுதொழில் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலம் எத்தனை நேபாள தறிகள் இயங்குகின்றன?

(ஆ) அவைகள் மூலம் ஆண்டொன்றுக்கு உற்பத்தியாகும் துணிகளின் அளவு எவ்வளவு?

விடை—

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 45 நேபாள தறி அலகுகள் இயங்குகின்றன.

(ஆ) மேற்படி நேபாள தறி அலகுகளின் மூலம் 1987–88 ஆம் ஆண்டு 4.73 இலட்சம் மீட்டர் துணி உற்பத்தியும், 1988–89 ஆம் ஆண்டு 5.30 இலட்சம் மீட்டர் துணி உற்பத்தியும் செய்யப்பட்டுள்ளது.

96—

வேடசந்தூர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்

வினா எண். 6898—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

[1990 ஏப்ரல் 2

வேடசந்தூர் மகளிர் உயர்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட விரைவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா ?

விடை—

அரசின் நிதி நிலைமைக்கேற்ப 1990–91-ல் இப்பள்ளிக்கு நிதி ஒதுக்கீடு செய்வது பற்றி கருத்தில் கொள்ளப்படும்.

97—

தாமரைக்கரை—தாமுக்கரை பஸ் விடுதல்

வினா எண். 7162—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில், பர்கூர் ஊராட்சியைச் சேர்ந்த தாமரைக்கரை முதல் தாமுக்கரை வரை மீண்டும் பஸ்விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் ஓடிக்கொண்டிருந்த பஸ் நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

விடை—

(அ) 31-10-89 முதல் பேருந்து இயக்கப்படுகிறது.

(ஆ) தடத்தில் ஏற்பட்டிருந்த தவிர்க்க முடியாத தடைகளால் (Obstructions) தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

98—

அந்தியூர் நகர அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி.

வினா எண். 7176—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் நகரில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளிக்குப் போதிய கட்டிட வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 1989–90–ல் பணி ஆரம்பிக்கப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1990-ஏப்ரல் 2]

99—

பகவந்தனை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

வினா எண். 7211—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள பகவந்தனை அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயல்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள பகவந்தனை அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

100—

சாத்தூரில் கூட்டுறவு பயிற்சி நிலையம்

வினா எண். 7251—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காமராஜர் மாவட்டம், சாத்தூரில் இயங்கி வந்த கூட்டுறவு பயிற்சி நிறுவனம் சில காலமாக இயங்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) இப்பயிற்சி நிறுவனம் மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) காமராஜர் மாவட்டம் சாத்தூரில் உள்ள கூட்டுறவு பயிற்சி நிலையம் தொடர்ந்து இயங்கி வருகிறது.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

[குறிப்பு :—உறுப்பினர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் திருத்தம் பெற்றது என்பதைக் குறிக்கும்]

[1990 ஏப்ரல் 2

2. பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்களைத் தற்காலிக நீக்கம் செய்துள்ளது தொடர்பான அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ் உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமையன்று பேரவைத் தலைவருடைய ஆணையின்பேரில் வெளியேற்றப்பட்டார்கள். அன்றைக்குப் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி அந்த ஒருநாள் மட்டும்தான் அவர்கள் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக்கூடாது என்பது விதியாகும். எனவே, வளாகத்தில் இருக்கின்ற அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ் உறுப்பினர்கள் அவைக்கு வந்து, இப்போது அவர்களுடைய உரிமை மீறல் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்பட இருப்பதனால், அது தொடர்பாக அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

3. உரிமை மீறல் பிரச்சினைகள்

(அ) முதலமைச்சர் மீது—இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவத்தினர் பற்றியும் திரு. ராஜிவ்காந்தி பற்றியும் அவையில் தெரிவித்த கருத்துக்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. குமரி அனந்தன், திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பேரவையில் மாண்புமிகு ராஜிவ் காந்தி அவர்களைப் பற்றியும், இந்திய இராணுவத்தைப் பற்றியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தவறான தகவல்களைத் தந்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு, அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதனைச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். முதலில், திரு. குமரி அனந்தன் அவர்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்திய இராணுவம் என்றும், ராஜிவினுடைய இராணுவம் என்றும் ராஜிவினுடைய படை இலங்கையில் என் ஜாதிக்காரனாகிய தமிழர்களைக் கொன்றுக் குவித்தது என்றும், ராஜிவ் காந்தியைக் கண்டித்தே நான் அமைதிப் படையை வரவேற்கச் செல்லவில்லை என்றும் முதல்வர் அவர்கள் இந்தே அறிவித்தார்கள். ராஜிவ் காந்தி அவர்கள் இந்த அவையிலே இல்லை என்றாலும், அவர்களுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் எங்கள் கட்சித் தலைவரினுடைய மரியாதையைக் காப்பாற்றுவதன்மூலமே கட்சியினுடைய மரியாதையைக் காப்பாற்ற இயலும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையில் அவருக்கு இருக்கின்ற பாதுகாப்பைப் பயன்படுத்திக் கொண்டு,



1990 ஏப்ரல் 2] [திரு. குமரி அனந்தன்]

10.00 மணி

பாதுகாத்து தன்னைத் தானே—தனக்காகவே வாதாடி தன்னுடைய நிலையை விளக்குவதற்கு இந்த அவையிலே உறுப்பினராக இல்லாத மாண்புமிகு முன்னாள் பிரதமர் அவர்களை இங்கே எடுத்துச் சொன்ன காரணத்தினாலே நாங்கள் இந்தத் தீர்மானத்தை உங்களிடம் கொடுத்திருக்கிறோம். ராஜீவ் காந்தியைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அன்னை இந்திராகாந்தி இலங்கைத் தமிழர்களுக்காக எந்தெந்த அளவுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்று திட்டமிட்டாரோ, அதனைத் தொடர்ந்து செய்வேன் என்று, இப்போது இருக்கின்ற சிலர் சின்னப் பிள்ளையாக இருக்கின்ற நேரத்திலேயே "சிங்கம் எனச் சீறி எழுந்து செந்தமிழ் நாட்டு மக்களுக்காக பாடுபட்ட அமிர்தலிங்கம் போன்றவர்களிடம் வாக்குறுதி அளித்தார். அன்னை போய் விட்டார், எனவே அதற்குப் பிறகு இருக்கின்ற நான் இளைஞனாக இருக்கின்ற காரணத்தாலே என்னை நம்பிப் பயன் இல்லை என்று எண்ணாதீர்கள். நான் அந்த வழியிலேயே தொடர்ந்து சென்று இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எல்லா பாதுகாப்பும் கொடுப்பேன்" என்று உறுதி அளித்தார்.

1983-ல் இலங்கையில் நடைபெற்றது தமிழனுடைய கறி மாமிசம் இங்கே கிடைக்கும் என்று கடைவீதிகளில் எல்லாம் அறிவிப்புப் பலகைகள் தொங்கின. இங்கே இருந்து சுற்றுலா போன தமிழன் சென்னையைச் சேர்ந்த ஒருவர் சிங்கள வீரர்களால் கொல்லப்பட்டார்; சிங்கள இராணுவத்தால் கல்வி பயின்று கொண்டு இருக்கின்ற பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். அங்கே இருக்கின்ற, இந்துக் கோவில்களில் இருக்கின்ற சிலைகளுடைய தலைகள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு அங்கே புத்தர் சிலைகள் வைக்கப்பட்டன. புத்தர் விகாரங்களாக மாற்றப்பட்டன. பள்ளி வாசலில் தொழுகை நடத்துகின்ற இஸ்லாமிய பெருமக்கள் தொழுது கொண்டு இருக்கின்ற இடத்திலேயே கொலையுண்டார்கள். பிரார்த்தனை செய்கின்ற பாதிரியார் அங்கே கொலை செய்யப்பட்டார். நீண்ட நெடுங்காலமாக கண் என போற்றிக் காத்து வந்த கல்வித் தமிழ் ஏடுகள் என்று சொல்லுகின்ற நூலகங்கள் எரிந்து ஒழிந்து சாம்பல் ஆக்கப்பட்டன. நமது தமிழ் மக்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லாது இருந்ததோடு அவர்களுக்கு உணவு கொடுக்காமல், அவர்கள் நோய்வாயில் இருந்தபோது மருந்து கொடுக்காமல் கொடுமைகளைச் சிங்கள அரசு செய்தது.

அது மட்டும் அல்லாமல், இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்படுகிற தமிழனாக இருந்தாலும், சிங்கள வீரர்களால் சுட்டுக் கொல்லப்படுகிற அல்லது வெட்டிக் கொல்லப்படுகிற தமிழனாக இருந்தாலும் போஸ்ட்டு மார்ட்டம் கூடச் செய்யாமல் புதைத்து விடலாம் என்று சொல்லுகின்ற கொடுமையான சட்டங்கள் நிலவிக்கொண்டு வந்து கொண்டு இருந்த நேரம்.

அந்த நேரத்தில் அவர்களுக்கு உணவு போகக் கூடாது என்று தடுத்து வைத்து இருந்த நேரத்தில் அவர்களுக்கு உணவு அளிப்பதற்குக் கூட முன் வந்தது ராஜிவ் காந்திதான். பல படகுகளிலே அவர் நமது நாட்டினுடைய அசோகச் சக்கர கொடி அல்ல போர்க் கொடியை அல்ல; உலக சமாதானத்தை நாடிக் கொண்டு இருக்கின்ற இரக்கத்தின் சின்னமாக இருந்து கொண்டிருக்கின்ற செஞ்சிலுவைச் சங்கத்தினுடைய கொடியைப் போட்டுக் கொண்டு படகுகளில் உணவுப் பொட்டலங்கள், பழங்கள், ரொட்டிகள், மருந்துகளை எடுத்துக்கொண்டு திறந்த படகுகளில் போன நேரத்திலே அங்கே இலங்கையில் இருந்து ஆண்டு கொண்டு இருந்தவர்கள் அதனைத் தடுத்து நிறுத்துங்கள் என்று சொன்னார்கள் தடுத்து நிறுத்தப்பட்டு படகுகள் எல்லாம் தத்தளித்தன. பாரத தேசத்திலே இருக்கின்ற மக்கள் ஆகிய நம்முடைய நெஞ்சங்கள் எல்லாம் பதறிப் போய் துடித்தன; பாரத பெருந்தேசம் என்று சொல்லுகின்ற இமயமலையிலிருந்து குமரி வரை அகன்று, விரிந்து கிடக்கின்ற 80 கோடி மக்களைக் கொண்ட இந்தப் பெரிய பாரத தேசத்தினுடைய படகுகள் தடுத்து நிறுத்தப்பட்ட வகையில் அப்போது சென்னையில் இருந்த பலர் பார், பார் இவ்வளவு நாளும் தமிழனுடைய மானம்தான் போயிற்று என்று நினைத்தோம் இப்போது பாரதப் பிரதமருடைய மானமும் போயிற்று என்று சொன்னவர்களும் உண்டு. ஆனால் என்ன நடந்தது? சில மணி நேரத்திலே நம்முடைய மானம் காப்பதற்கு என்று அங்கே விமானம் போனது. உணவுப் பொட்டலங்களைப் போட்டது. உணவு பொட்டலங்களைப் போட்டதற்குப் பிறகு அந்தச் செய்தியைச் சொல்லியது நாங்கள் ரொட்டித் துண்டுகளை மட்டும் போடுவதற்குத் தகுதியானவர்கள் மட்டும் அல்லது தேவைப்பட்டால் எங்கள் தமிழனைக் கொலை செய்பவர்களை வெட்டித் துண்டு போடுவதற்கும் இந்தியா தயாராக இருக்கிறது என்று சொல்லுகின்ற செய்தியை அங்கே சொல்லாமல் சொல்லி விட்டு வந்தார்; அதனால் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியது. அந்த ஒப்பந்தம் 'இந்தியசிலோன் அக்கார்டு' என்று இந்தியாவை முன் நிறுத்தி இரண்டாவதிலேயே இலங்கையைச் சொல்லுகின்ற அளவுக்கு அந்த ஒப்பந்தம் வந்தது. நீண்ட நெடுங்காலமாக எத்தனையோ ஒப்பந்தங்களைச் செய்த பிறகும் கூட அந்த ஒப்பந்தங்களை எல்லாம் இலங்கை அரசாங்கம் மீறி, மீறி போகப்போக இந்தத் தடவை இந்திய அரசாங்கமே அந்த ஒப்பந்தத்தைப் போட்டதற்குக் காரணம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்த உரை ... (குறுக்கீடு)

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, எத்தனையோ தடவை பல ஒப்பந்தங்கள் போட்டு அவை எல்லாம் மீறப்பட்ட நேரத்தில் இந்தத் தடவை இன்னொரு பக்கத்திலே ஒப்பந்தத்திலே இருப்பது இந்திய இராணுவம்,



இந்திய இராணுவத்தை வைத்துக்கொண்டு இருக்கிற இந்திய அரசு என்கின்ற காரணத்தால் நாம் எல்லாம் மகிழ்ந்தோம். எப்படியாவது இந்த இலங்கையில் இருக்கின்றவர்கள், அந்தச் சிங்கள வீரர்களிடமிருந்து நமது செந்தமிழ்ச் சிங்கங்கள் எத்தனையோ ஆண்டுக்காலம் நினைத்துக்கொண்டு இருக்கிறவர்கள், கனவு எல்லாம் நனவாகும் என்று நினைத்துக் கொண்டு இருந்தோம். அதன்படிதான் ஒவ்வொரு தடவையும் ராஜீவ் காந்தி அவர்கள் விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட பெருமக்களுக்கெல்லாம் நன்மை செய்து கொண்டிருந்தார்கள். அமிர்தலிங்கத்தை இங்கே கொண்டு வந்தோம். விடுதலைப் புலிகளாக இருந்து கொண்டிருந்தவர்களுக்குச் செல்வம் கொடுத்தோம். தங்குவதற்கு இடம் கொடுத்தோம்.

10-05 மணி

அதே நேரத்தில் இங்கே சிலர் தங்கிக்கொண்டிருந்த போது அங்கே களத்திலேயிருந்து போராடிக்கொண்டிருந்த, டெலோவைச் சேர்ந்த சிறி சபாரத்தினம் போன்றவர்களெல்லாம் இன்னொரு போராளிக் குழு என்று சொல்லப்படுகின்ற விடுதலைப் புலிகளாலே கொல்லப்பட்டார்கள். அப்போது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழனாக, துடிக்கின்ற நெஞ்சத்தோடு எழுந்து நின்று சொன்னார்கள் அந்தச் சபாரத்தினம் அவர்கள் இறந்தபோது எனக்கு தாங்க முடியாத வருத்தம் இருக்கிறது; நான் ஏன் இருக்கிறேன் என்று சொல்கின்ற அளவிற்கு எனக்கு நெஞ்சிலே வருத்தம் இருக்கிறது; சில நாட்களுக்கு முன்புதான் அந்தத் தம்பி வந்து என்னோடு படம் எடுத்தகொண்டான் என்று அவர்கள் வேதனைப்பட்டது எல்லோருடைய நெஞ்சையும் தொட்டது. நமக்குள்ளே சண்டையா என்று எண்ணிக்கொண்டு இருந்தோம்.

அதே நேரத்திலே, இலங்கை அரசாங்கம் போராளிக் குழுக்களை துரத்தி, துரத்தி, துரத்தி, அடிக்கிறது. அவர்களைக் கலகக்காரர்கள் என்று சொல்கிற நேரத்தில், கலகக்காரர்கள் அல்ல, உரிமைக்காகப் போராடுகிறவர்கள் என்ற அந்தஸ்தைக் கொடுத்து, திம்புவிலே சரியாசனம் கொடுத்து, அரியாசனத்திலே இருக்கின்றவர்கள் சரியாசனம் கொடுத்து, பேச வைத்தவர் ராஜிவ் காந்தி அவர்கள், சார்க் மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் தனி விமானத்தை அனுப்பி அருமைக்குரிய சகோதரர், இதயத் துடிப்பெல்லாம் அந்த நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கிற தமிழர்களுக்காக பாடுபடுகிறார் என்கின்ற எண்ணத்திலே அவரைத் தனி விமானத்திலே கொண்டு வந்து பேச வைத்ததும் ராஜீவ்காந்தி அவர்கள்தான். இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு ஆயுதங்களை கீழே போட்டு, ஜனநாயக வழியிலே திரும்ப வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், அதையும் ஒப்புக்கொண்டு, மக்களைக் கூட்டி, பெரிய பொதுக் கூட்டத்திலே பேசி முடித்துவிட்டு, அதற்குப் பிறகு ஆயுதங்களை போட மாட்டோம் என்று சொன்ன காரணத்

தினாலே சண்டை வந்தது, சண்டை வந்த நேரத்திலே கூட
என்ன செய்தோம் நாம்? வடகிழக்கு மாகாணத்தை
ஒன்றுப்படுத்தி, புலிகளே பெரும்பான்மையாக இருந்து ஆளலாம்
என்று சொல்லி, நீங்களே சொல்கின்றவரை முதலமைச்சராக
ஆக்கலாம் என்று சொல்லி, தமிழுக்கு ஆளுகிற உரிமை, ஆட்சி
மொழி அந்தஸ்து, கடல் கடந்தும் ஒரு தமிழன் ஆளுகிறான்
முதலமைச்சராக என்று சொல்கின்ற பெருமையினையும்
ராஜிவ் காந்தி அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார். இந்திய
அரசாங்கத்தினுடைய பிரதமராக, அதை ஏற்றுக் கொடுத்தார்.
ஆனால் முதலிலே சிவஞானம் எனபவரை முதல்வர் என்று
சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு அவரை மாற்றி பத்மநாபனைப்
போடு என்று சொல்லி, திருப்பி திருப்பி அதை தட்டிக் கழித்த
காரணத்தினாலே சண்டை நடந்தது. நான் கேட்கிறேன், அவர்
களுக்குப் போர் நிறுத்தம் கொடுக்கவில்லையா? ராஜிவ் காந்தி
அவர்கள் இந்த நாட்டினுடைய பிரதமராக இருந்த நேரத்
திலே போர் நிறுத்தம் கொடுக்கவில்லையா? போர் நிறுத்தம்
கொடுத்தார். போர் நிறுத்தம் கொடுத்து, கிடைக்கிற இடை
வெளியிலே எல்லாம் ஆயுதங்களைக் கொண்டு வந்து சேர்த்தார்
கள். தங்களை மீண்டும் மீண்டும் நிலைப்படுத்திக்கொள்வதற்
காகவும், பலப்படுத்திக் கொள்வதற்காகவும் அவர்கள் முயற்சி
களைச் செய்தார்கள். எனவே, நாம் நேசக்கரம் நீட்டுகின்ற
நேரத்தில் நாச சிந்தனையல்லவா அவர்களுக்கு வருகிறது என்ற
எண்ணத்தை இந்திய இராணுவத்திற்கு ஊட்டினார்கள். இந்திய
அரசியல் தலைவர்களுக்கு ஊட்டினார்கள், என்ன ஆயிற்று?
தேர்தலுக்கு வாருங்கள் என்று சொன்னோம். தேர்தல் நடை
பெறவேண்டுமென்று சொன்னோம். ஐ.பி.கே.எஃப். என்று
சொல்லுகின்ற அமைதி காக்கின்ற படை அங்கே இருந்து அவர்
களுக்கு உதவவேண்டுமென்று சொன்னார்கள். இங்கிருந்து நமது
தேர்தல் அதிகாரிகள் பார்வையாளர்களாகப் போனார்கள். நமது
தேர்தல் அதிகாரிகள் பார்வையாளர்களாக போகின்ற அளவுக்கு
தேர்தல் நடைபெற்றது. வரதராஜ பெருமாள் முதலமைச்சராக
ஆகிறார் என்று சொன்னால், அந்தத் தேர்தலில் அவர் பங்கு
கொள்கிறார், முதலமைச்சராக ஆகிறார். பிரேமதாசா அங்கே
அதிபராக ஆகிறார். இரண்டு தேர்தல் நடப்பதற்கும்தான்
ஐ.பி.கே எஃப். உதவி செய்தது. ஆனால் நமது மாண்புமிகு
முதல்வர் அவர்கள் பிரேமதாசா பதவி விலக வேண்டுமென்று
சொல்லவில்லை. அந்த அரசாங்கம் கலைக்கப்படவேண்டும்
என்று சொல்லவில்லை. அதேபோல தேர்தலிலே கலந்து
கொண்ட இன்னொரு தமிழனாகிய வரதராஜபெருமாளினுடைய
அந்த அரசாங்கத்தைக் கலைக்கவேண்டுமென்று சொன்னார்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர்
அவர்களே, உரிமைப் பிரச்சினை என்ற பெயரால் ஒரு பிரசங்
கமே நடைபெறுகிறது. நான் அதை மறுக்கவில்லை. ஆனால்



எதற்காக இந்த உரிமைப்பிரச்சினை கொண்டுவரப்பட்டது என்று
கோடிட்டுக் காட்டவேண்டும். நான் அதை ஒழுங்குப் பிரச்சினை
எழுப்பித் தடுக்கவும் இல்லை; தடுக்க முயன்ற அமைச்சரைக்
கூடத் தடுத்து விட்டேன். ஆனால் தொடர்ந்து தவறான தகவல்
களைச் சொல்லிக் கொண்டு போகக்கூடாது, விடுதலைப் புலி
களுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். குழுவினருக்குமிடையில் நான்
பேச்சு வார்த்தை நடத்தினேன் இவர்கள் சொன்னதை
அவர்களிடத்திலே சொன்னேன் அவர்கள் சொன்னதை இவர்
களிடத்திலே சொன்னேன்; அவ்வளவுதான். அவர்கள், ஒரு
தேர்தல் புதிதாக நடைபெற வேண்டும், அதற்கு
வரதராஜபெருமாள் விட்டுக் கொடுக்க வேண்டும். அவர் தானாக
முன் வந்து கவுன்சிலை, வடகிழக்கு மாநில கவுன்சிலைக் கலைத்து
விட்டு, புதிய தேர்தலுக்கு வழிவகுக்க வேண்டும் என்று எல்.டி.டி.
யினர் சொன்னார்கள். அதையே நான் இவர்களிடத்திலே
எடுத்துச் சொன்னேன். அவர்கள் சொன்னதை இவர்களிடத்
திலே சொன்னேனேயல்லாமல் கலைக்கவேண்டுமென்று நான்
வரதராஜ பெருமாளுக்கு உத்திரவிடவில்லை. அப்படிப்பட்ட
யோசனையும் சொல்லவில்லை. இருக்கின்ற நிலவரங்களை இரு
சாராரிடத்திலும் நான் பகிர்ந்து கொண்டேனேயல்லாமல்,
நானாக எந்த முடிவையும் எடுத்துச் சொல்லவில்லை. எந்த
முடிவையும் யார் மீதும் திணிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன் அவர்
களுக்குத் தெரியும். இந்த உரிமைப் பிரச்சினை தொடர்பான
மையத்தை நோக்கி நகரவேண்டும்.

10.10 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே.
முதல்வர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்.
அந்த விளக்கத்திற்குப் பிறகு நான் சில செய்திகளைச் சொல்ல
ஆரம்பிக்கிறேன். இங்கே பல்வேறு சிரமத்திற்கு மத்தியிலே
அமைதிப் படை, ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்த
நேரத்தில் அனுப்பப்பட்டிருந்தாலும் கூட, அது ராஜீவ் காந்தியின்
இராணுவம் அல்ல, இந்த தேசத்தின் இராணுவம். இந்த
தேசத்தின் இராணுவத்தை அனுப்பச் சொன்னது நாம்தான்.
இன்னும் சொல்லப்போனால், மரியாதைக்குரிய திரு. ஆர்.வெங்கட்
ராமன் அவர்கள் ஜனாதிபதியாகப் போட்டியிடுகிற நேரத்தில்,
மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைவராக இருக்கின்ற கட்சி,
அவர்களுக்கு வாக்கு அளிக்கமாட்டோம் என்று சொன்னதற்கு
ஒரு காரணம் கூட, இராணுவத்தை நீங்கள் அனுப்பமாட்டோம்
என்று சொன்னதுதான் காரணம் என்பதாகச் சொல்லப்பட்டது.
எனவே இந்த விவாதத்தில் அவர்களும் இராணுவத்தை அனுப்ப
வேண்டுமென்று சொன்னார்கள், நாங்களும் இராணுவத்தை
அனுப்பவேண்டுமென்று சொன்னோம். பலரும் இராணுவத்தை
அனுப்பவேண்டுமென்றுதான் சொன்னோம்.

அங்கே போய் அந்த இராணுவம் என்ன செய்தது என்பதை என்னுடைய அருமை நண்பர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் சொன்னதைப் போல, ரத்தம் சிந்தியவர்களுக்கு ரத்தம் கொடுத்தது, வைத்திய உதவ செய்தது, எல்லாம் செய்தது. ஆனாலும் அந்த சூழ்நிலையிலே அந்த இராணுவ வீரர்களை மறைந்து நின்று கொன்றார்கள். போரிலே மறைந்து நின்று கொன்று, அவர்களுடைய கழுத்திலே டயர்களை மாட்டி எரித் தார்கள். அந்தக் கொடுமைகளை எல்லாம் செய்ததற்குப் பின்னாலும், அந்த இராணுவம் அங்கே இருந்துகொண்டு போரிட்டது. போரிட்டது மட்டுமல்ல, திரும்ப வருகிறது. திரும்ப வருகிற நேரத்திலே, தளபதி கல்கத் அவர்கள், நான் கடைசி மனிதனாகத்தான் வருவேன் என்று சொல்லி, திரும்பி வருகிறார்.

நாமெல்லாம் எதிர்பார்ப்பது என்னவென்றால், நடந்து முடிந்த தேர்தலில் நம்மைப் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்தது போலத்தானே அவர்களையும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், அவரைத்தானே நாம் நமது பிரதிநிதி என்று சொல்கிறோம், ஏனென்றால் இதே முதல்வர்தான், நீண்ட நெடுங்காலமாக இருந்த ஒரு பழக்கத்தைக்கூட சுதந்திர தினத்தன்று எப்படி கோட்டையில் கவர்னர் கொடியேற்றுவது, தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் அல்லவா, அதாவது முதல்வர் அல்லவா கொடியேற்ற வேண்டும், என்ற உரிமையைப் பெற்று பெருமையைத் தநதவர் என்ற காரணத்தால், அந்த முதல்வர் அவர்கள் அந்த வரவேற்புக்குச் செல்லவில்லை.

இந்திய இராணுவம் என்பது இந்த தேசத்தைப் பாதுகாக்கக் கூடிய இராணுவம். நாளைக்கு இந்த நாட்டிலே இருக்கிற 1000 கிலோ மீட்டர் கடற்கரையைப் பெற்றிருந்த இந்தியாவில், அன்னியப் படையெடுப்பு நடந்தால்—அப்படி வரவேண்டாம்— வந்தால் தங்கள் உயிரைக் கொடுத்துப் பாதுகாக்கக்கூடிய இராணுவம். அந்த இராணுவம் நமது மானத்தைக் காக்கிற இராணுவம். அதனை அவர்கள் வரவேற்க வேண்டுமென்று என்னைப் போன்றவர்கள் மட்டுமல்ல, இந்த தேசத்தில் இருப்பவர்கள் அத்தனை பேரும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அவர்கள் போகாதது மட்டுமல்ல, அந்த இராணுவத்தை எதிர்த்துப் போரிட்ட புலிகளுக்கு வீர வணக்கம் என்று சொன் னார்கள். அது மட்டுமல்ல, அந்த இராணுவம் என்ன என்ன தவறுகளைச் செய்தது என்று சில பத்திரிகைகளிலே வந்த சில படங்களை எடுத்துக்கொண்டு திரு. நெடுமாறன் என்பவர், டெல்லியிலே தமிழ்நாடு இல்லத்திலேயே போய்த் தங்கிக் கொண்டு, சீக்கியத் தீவிரவாதிகளின் தலைவரைப் போய்ப் பார்த்து, அவர்களிடம் அந்தப் படங்களைப் போட்டுக் காட்டி, அவர் அப்படியா என்று கேட்க, இவர் அவருக்கு மாலை போட, அவர் இவருக்கு வாள் கொடுக்க, பிறகு என்ன சொல்கிறார்கள்



என்றால், நானும் பிரபாகரனும் சேர்ந்து இந்தியத் திருநாட்டிலே பல்லாயிரம் பேர் ரத்தம் சிந்தி விடுதலை பெற்ற இந்தப் பூமியிலே இப்போதிருக்கிற அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி எழுத வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். யார் ஒரு காலத்தில் இந்திய வம்சாவளியினரைப் பார்த்துக் கிண்டலும் கேலியும் பண்ணினார்களோ, யார் இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போராடினார்களோ, அவர்களுடைய பிரதிநிதியும், நாமுமாகச் சேர்ந்து இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தியெழுத வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், பிரிவினைவாதம் அல்லவா அங்கே வருகிறது. இவர்களுக்கு அல்லவா நமது முதல்வர் வீர வணக்கம் சொல்லிவிட்டார். அதே நேரத்தில், இந்த நாட்டின் மானத்தைக் காப்போம் என்று....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த நீண்ட சொற்பொழி விற்குப் பதிலாக நான் மீண்டும் நீண்ட சொற்பொழிவு ஆற்ற விரும்பாத காரணத்தால் இடையிலே ஏற்படுகின்ற தவறுகள் அல்லது தவறான தகவல்களைத் திருத்த வேண்டியவனாக இருக்கின்றேன். நேற்றைய தினம் வெளிவந்த அந்த அறிக்கைக்கு உடனடியாக விடுதலைப் புலிகளிடமிருந்து மறுப்பு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. அந்த நகைமுகன் என்பவர் அப்படி ஒரு அறிக்கை விடுத்தது, இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு, ஒருமைப்பாட்டிற்குக் கேடு விளைவிக்கக் கூடியது என்று நான் இந்த அவையிலேயே அறிவித்து இருக்கிறேன். காவல்துறையினர் கடுமையான நடவடிக்கையை எடுப்பார்கள் என்று கூறியிருக் கிறேன். அநேகமாக இன்று, நாளைக்குள் அந்த நடவடிக்கை என்ன என்பது நாட்டுக்குத் தெரிந்துவிடும். எனவே இது குறித்து நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இந்த அரசு அதற்கு ஒத்துழைக்கிறது என்று எண்ண வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : நான் சொல்வது நகைமுகனை அல்ல. திரு. நெடுமாறன் அவர்களை. ஏனென்றால் நகைமுகனைப் பற்றி நீங்கள் சொன்னதற்குப் பிறகு வந்த செய்தி இது. நகைமுகனோ கஜமுகனோ நான் நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னதற்குப் பிறகுகூட, இந்த செய்தி வந்திருப்பதன் காரணத்தாலே....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கஜமுகன் என்டதில் நெடுமாறனும் சேரலாம் அல்லவா ? (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன் ; நமது முதல்வர் அவர்களுடைய அந்த சொல் சாதுர்யத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால் நெடுமாறன் அவர்கள் தமிழ்ச் சொல்லைத் தவிர வேறு ஏதும் தனது பெயரில் வரக்கூடாது என்பதற்காக, நெடுமாறன் என்று வைத்துக் கொண்டவர். கஜமுகன் என்பதை ஒத்துக்கொள்வாரா என்று தெரியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நகைமுகனோ, கஜமுகனோ
யாராக இருந்தாலும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான்
சொன்னதற்குக் காரணம், இத்தகைய கூற்றுக்களைச் செய்கிறவர்
கள், சொல்பவர்கள், செயல்படுகின்றவர்கள், யாராக இருந்
தாலும் என்ற பொருளில்தான் வரும். நகைமுகன் சொல்லி
யிருக்கின்ற அளவுக்கு நெடுமாறன் அவராக ஓர் அறிக்கை விட்ட
தாகப் பத்திரிகையில் வரவில்லை. பத்திரிகையிலேதான்
செய்திகள் வந்திருக்கின்றன. அவர் ஏக்கியத் தலைவரைச்
சந்தித்தார் என்ற செய்திகள் வந்திருக்கின்றன. அந்தச் செய்தி
களைப் பற்றி திரு. நெடுமாறன் இன்னும் மறுப்புத் தெரிவிக்க
வில்லை. ஆனால் திரு. நெடுமாறன் பெயரால் எந்த அறிக்கை
யும் வரவில்லை. திரு. நகைமுகன் பெயரால் அறிக்கை வெளி
வந்தது. அதனால் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்
பட்டிருக்கிறது.

10.15 மணி

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்
களுக்கு நன்றாகத் தெரியும்......

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மான்
இதைப்பற்றி அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். இன்னும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்ந்து, அருள்கூர்ந்து,
அதிலேயே விவாதத்தை வளர்க்கவேண்டாம் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே,
தமிழனுக்கு வாழ்வு கொடுத்து, தமிழர்கள் கேட்டுக்கொண்ட
தற்கு இணங்க, தமிழனைக் காப்பாற்றுவதற்கு இராணுவம்
அங்கே அனுப்பப்பட்டது. அந்த இராணுவம் இந்திய தேசிய
இராணுவம். இராஜஸ்தானத்திலிருந்து கன்னியாகுமரி வரையில்
இருக்கின்ற அத்தனை பிரதிநிதிகளையும் கொண்ட இராணுவம்.
அந்த இராணுவத்தில் பிளவு ஏற்படுகிற வகையில் இன்று
சீக்கியர்களை ஏன் சேர்த்தார்கள் என்று சொன்னவர் மீதுதான்
நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.
தமிழர்கள் எங்கே இருந்தாலும் அவர்களுக்கு வாழ்வளிக்க
வேண்டும் என்று நினைத்த ஒரு மாபெரும் தலைவரை, அவரு
டைய நல்ல சிந்தனையை, அவருடைய இதயத்தைப் புண்
படுத்துகிற வகையில் திரு. ராஜீவ்காந்தி அவர்களால்தான் அங்கே
செல்லாமல் இருந்தேன் என்று சொல்வது தமிழர்களுக்காக
தானே அடி வாங்கி, தன்னுடைய உயிருக்கும் குந்தகம் வருமோ
என்கிற நிலைமையில்கூட சிங்கள வெறியனால் தானே தன்னு
டைய தோளில் அடி வாங்கியும், தமிழுக்கும், தமிழர்களுக்கு



வாழ்வு தேடுவதற்கும், இந்தியத் திருநாட்டிற்கு என்றும் நன்மை
தேடுவதற்கும், இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கும்,
அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கும் என்றும் நல்லது
செய்ய நினைத்த மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய
பெரும் தலைவர் திரு. ராஜீவ்காந்தி மீது இங்கே சொல்லப்
பட்ட குற்றச்சாட்டு காரணத்தால் நான் என்னுடைய உரிமை
மீறல் என்று சொல்கிற தீர்மானத்தை இங்கே கொடுத்திருக்
கிறேன். அதற்கு விளக்கம் தரவேண்டும் என்பது மட்டுமல்ல
அதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்று முன்தினம் விவாதிக்க வேண்டிய இந்தப்
பிரசினையை சில சூழ்நிலையின் காரணத்தால் விவாதிக்க
முடியாது போய், எங்களை எல்லாம் சபை நடவடிக்கைகளில்
கலந்து கொள்ள முடியாத அளவுக்கு சபையை விட்டுவெளியேற்றி
விட்டீர்கள். ஆனால் அப்படி வெளியேற்றிய நேரத்தில் எத்தனை
நாளைக்கு அந்த உத்தரவு என்று எங்களுக்குத் தெரியாத
காரணத்தால்தான் காலையிலே நாங்கள் கேள்வி நேரத்தில் பங்கு
பெறுவதா வேண்டாமா என்ற சந்தேகத்தோடு இருந்தோம்.
ஆனால் இந்த நேரத்தில் உங்களுடைய உத்தரவைத் தெளிவு
படுத்தி ஒரு நாளைக்குத்தான் வெளியேற்றினேன் என்று தெரி
வித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆனால் எனக்கு இருக்கின்ற வருத்தம் என்ன என்பதைச் சொல்
கிறேன். அன்றைக்கு இந்தப் பிரச்சினை சூடாகவும், வேகமாக
வும் போககூடாது என்பதற்காக இந்தப் பிரச்சினையில் சில
கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, இந்தப் பிரச்சினையை
முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற அடிப்படையில்தான்
நான் தலையிட ஆரம்பித்தேன். ஆனால் என்ன காரணத்தாலோ
என்னையே இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்படுத்தி வெளி
யேற்றுகிற நேரத்தில், முதல் ஆளாக என்னை வெளியேற்ற
உத்தரவு போட்டு, அப்படி உத்தரவு பிறப்பித்த உடனே உங்களு
டைய பணியாளர்களாக இருக்கின்ற காவலர்கள் என்னைப்
பிடித்து வெளியிலே இழுக்கிற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.
இப்படி காவலர்கள் பிடித்து இழுத்து வெளியே அனுப்புகிற
நிலைமை வந்தது என்றால், ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு
இந்த நிலைமை வரலாமா என்றால் அது கேள்விக்குரியதாக
இன்றைக்கு இருக்கிறது. ஆனால் என்னைப் பொறுத்த
வரையில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததற்குப் பின்னால் நான்
இதிலே சம்பந்தப்பட்டுவிட்டேன் என்பதில் எனக்கு ஒரு வருத்தம்
இருந்தாலும் ஒரு சபாநாயகர் போடுகிற உத்தரவு என்ற வகை
யில் அந்த உத்தரவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது
என்னுடைய கடமை என்ற காரணத்தால் அந்த உத்தரவை
நான் ஏற்றுக்கொண்டேன். ஆனால் அந்த உத்தரவை நான்

[illegible]

எதிர்ப்பதாக இருந்தால் நான் எந்த வகையில் வழிமுறைகளைப் பின்பற்றவேண்டுமென்றால், ஜனநாயகத்திலே பல்வேறு சட்ட மன்றங்களிலே எப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதும் அந்த நடைமுறைகளைப் பின்பற்றவேண்டுமென்ற நிலை எனக்கு வருமேயானால் அதை பின்பற்றுவதா, இல்லையா என்பது பற்றியும் நான் யோசித்துக்கொண்டிருந்தேன். ஆனால் இன்றைக்கு நீங்கள் உரிமைப் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்பட்டு எங்களைப் பேசுவதற்கு அனுமதி கொடுப்பது என்பது. ஒரு சபையினுடைய நடவடிக்கை தொடர்ந்து நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பதற்கும், நாட்டு மக்களுடைய பிரச்சினையை எடுத்துச்சொல்கிற வாய்ப்பை அனைவருக்கும் வழங்குகிற அடிப்படையிலும், இன்றைக்கு எங்களுடைய கட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி அந்தந்தத் தொகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளை இப்படிப்பட்ட நேரங்களிலே எடுத்துச் சொல்கிற வாய்ப்பும் பெறுகிற நேரத்தில் அந்த வாய்ப்பு எங்கே தவறிவிடுமோ என்ற அச்சத்தோடே இருந்தேன்.

10.20 மணி

ஏனென்றால் இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுடைய பிரச்சினை நீண்டநெடுங்காலமாக தீர்க்கமுடியாத அளவுக்கு இருக்கின்ற இந்த பிரச்சினையிலே நமக்குள் பெரிய சண்டை வந்து நம்முடைய சண்டையே தீர்க்கமுடியாமல் போய்விடுமோ என்ற பயம் எனக்கு இருந்தது. ஆனால் இந்த இலங்கைத் தமிழர் பிரச்சினை ஏற்பட்ட காலத்திலேயிருந்து இன்றைய வரையில், அங்கே எப்படி இலங்கைத் தமிழர்கள் ஒன்றாக இல்லையோ அதுபோல தமிழ்நாட்டு தமிழர்களும் ஒற்றுமையாக இல்லாத நிலைமை இருப்பது வேதனைக்குரிய ஒன்று. வருத்தப்பட வேண்டிய ஒன்று. அதிலேதான் கடந்த காலத்திலே இந்தப் பிரச்சனை எழுந்து நம்முடைய மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அத்தனை தமிழர்களும் இதிலே ஒன்றாக இருக்க வேண்டுமென்ற கருத்தை அடிக்கடி வற்புறுத்தினார்கள். அப்படி பிரிவினை வருகின்றநேரத்தில், இன்றைக்கு முதல்வராக இருக்கின்ற மாண்புமிகு கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சி தலைவராக இருந்த காலத்தில், சில நேரங்களில் போராட்டம் என்று அறிவித்து, வேலைநிறுத்தம் என்று அறிவித்த நேரத்திலேகூட, கருத்து வேறுபாடுகளைக்கூட மறந்துவிட்டு தமிழர்களுடைய பிரச்சனையிலே பிளவு வந்துவிடக்கூடாது என்பதனாலேயே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு இருந்த கருத்துவேறுபாட்டையும் மறந்து, கலைஞர் வேலைநிறுத்தம் செய்தால் என்ன, நாம் செய்தால் என்ன, அனைவரும் வேலைநிறுத்தத்திலே கலந்து கொளவோம் என்று அரசாங்கத்தையே வேலை நிறுத்தத்திலே கலந்து கொள்ளச் சொல்லி, ரெயிலை நிறுத்த வேண்டும் என்ற போது ரயில் அல்ல, ஆகாய விமானத்தையே நிறுத்துவோம் என்று ஆகாய விமானத்தை நிறுத்தி, உலகத்திற்கு





தமிழர்கள் ஒன்றாக இருக்கின்றார்கள் என்பதை எடுத்து காட்ட வேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு அந்த நடவடிக்கையை எடுத்தார்கள். ஆனால், அன்றைக்குக்கூட அந்தப் பிரச்சனையிலே ஒன்றாக இருந்திருக்க வேண்டுமானால். ஒரே ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டு, 'தனி ஈழம்' ஒத்துக்கொண்டால்தான் நாம் வருவோம் என்று எழுப்பப் பட்ட நேரத்தில் கூட புரட்சித் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாக சொன்னார்கள். 'தனி ஈழம்' என்று நாம் கேட்க வேண்டாம். அங்கே இருக்கின்ற இலங்கையிலே இருக்கின்ற தமிழன் அவர்களுடைய முடிவை எடுத்துக் கொள்ளட்டும். பாதிக்கப்படுகின்ற தமிழனுக்காக நாம் வாதாடுகிறோம். போராடுகிறோம், அவனுக்கு உதவி செய்கிறோம் என்ற நிலையிலேயே இருப்போம். 'தனி ஈழம்' வேண்டுமென்ற கேள்வியை அவன் கேட்கட்டும். நாம் அதைப் பற்றிச் சொல்ல வேண்டாம் என்று அன்றைக்கே சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்கு தனி ஈழம் என்று ஒத்துக்கொண்டால்தான் சர்வக் கட்சிக் கூட்டத்திற்கு வருவோம் என்று சொன்னதை நாம் மறக்கவில்லை. அதே போல, அன்றைக்கு ஆட்சிக் கட்சியாக இருந்த நேரத்தில், குட்டிமணி ஜகன் அவர்கள் இங்கேயிருந்து ஒப்படைக்கவேண்டிய நேரத்தில் ஒப்படைத்து விட்டார் என்ற மிகப்பெரிய பழிக்கு ஆளாகின்ற நிலையிலே, எவ்வளவோ கொந்தளிப்புகள் ஏற்பட்ட நேரத்திலே. எப்படியாவது இலங்கை தமிழனைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அன்றைக்கு அந்தப் பிரச்சினையை அடக்க வேண்டுமென்பதில் புரட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையாக எடுத்துச் சொல்லுவேன். ஆனால், இன்றைக்கு வந்திருக்கின்ற பிரச்சினை நம்முடைய ராணுவம் வெளியிலே வருகிறது, வெளியிலே வருகின்ற ராணுவத்தை வரவேற்கவேண்டிய நிலை வருகிறது. இந்த நிலையிலே தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் செல்லவேண்டுமென்று ஒரு மரபு, ஒரு சம்பிரதாயம் என்று சொன்னார்கள். ஆனால், நம்முடைய ஆட்சி சார்பிலே கவர்னர் அவர்கள் சென்றிருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் சென்று, அந்த ராணுவத்தை வரவேற்றிருக்கிறார்கள். அது போலவே மத்தியிலே இருக்கின்ற ஆட்சியிலே இருக்கின்ற அமைச்சர் வரவேற்றிருக்கிறார். பிரதம அமைச்சரே வரவேற்றிருக்கிறார். ராணுவ நடவடிக்கை என்பது பிரதம அமைச்சர் உள்ளிட்ட அத்தனை பேர்களுடைய அரசு நடவடிக்கையாகக் கருதப்பட்டதே தவிர, தனிப்பட்ட ஒரு ராணுவம் யாரோ ஒரு 4 பேர்கள் செய்கின்றார்கள் என்ற நிலை அல்ல.

நான் உதாரணத்திற்குச் சொல்வதாக இருந்தால்கூட இங்கே இருக்கிற போலீசைக்கூட யாரையாவது ஒரு கலவரத்தில் ஈடுபட்டவர்களை அடக்கச் சொல்கிறேன் என்றால், உதாரணத்திற்

போடி கலவரம் என்று வைத்தால், இந்த போலீசை அடக்க சொல்கிறோம் என்றால், போலீஸ்காரர்கள் 4 தவறுகள் அங்கே செய்யத்தான் செய்கின்றார்கள். 4 தவறுகள் செய்கின்றார்கள் என்பதனாலேயே எந்த போலீஸ்காரரையும் நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்பதில்லை. அடுத்த ஆண்டு அண்ணா பதக்கம் தரமாட்டேன் என்று சொல்கிற நிலை வரமுடியாது. ஏனென்றால், எந்த ஆட்சியாக இருந்தாலும், அதற்கு பின்னாலே வருகின்ற ஆட்சியாக இருந்தாலும், ஒரு ஆட்சிக்கு பின்னாலே வருகின்ற ஆட்சி என்று சொன்னாலும், அந்த ஆட்சியிலே என்ன நடை பெற்றாலும், அதை ஏற்றுக்கொள்கிற நிலை இருக்கிறதே தவிர, அதை எதிர்த்து மறுத்துப் பேசுகிற நிலை வராது. ஆனால். மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். 5 ஆயிரம் தமிழர்களை கொன்ற ராணுவம். நான் வரவேற்கமாட்டேன் என்று சொல்வது எப்படி இந்தியாவினுடைய இறையாண்மையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற முடிவு. நாம் வரும்போது சட்டமன்ற தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்யும்போதே நம்முடைய முதல கையெழுத்து, நம்மிடத்தில வாங்கி, ஆரம்பிக்கின்ற நிலைமையை இந்திய இறையாண்மைக்கு நான் எதிராக இருக்கமாட்டேன் என்றுதான் வாங்குகின்றார்கள். இந்த நிலை எதற்காக வந்தது என்றால், நாம் தமிழ்நாட்டிலே பிரிவினை கேட்கிறோம் என்று தெரிந்ததற்குப் பின்னாலே தான், இவர்கள் தேர்தலிலே நிற்கக்கூடாது என்று முடிவெடுத்து, இப்படிபட்ட பிரிவினை வாதிகள் தேர்தலுக்கே வரக்கூடாது என்று முடிவிலேதான் இந்தச் சட்டமே வந்தது. அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டுதான் நாம் கையெழுத்துப் போட்டு, நாம் இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்டு, இறையாண்மையைக் காப்போம் என்று உறுதி எடுக்கிறோம், அதற்குப் பின்னாலே தான் அமைச்சராக ஆகின்ற காலத்திலே, முதலமைச்சர் ஆகின்ற நேரத்திலே, இரகசிய காப்புப் பிரமாணம், இன்னும் வேறு காப்பு பிரமாணங்கள் எல்லாம் எடுக்கிறோம். இத்தலைக்கும் பின்னால், ஒரு ராணுவ நடவடிக்கையை முதலமைச்சர் அவர்கள் விமர்சிக்கிறார் என்ற நிலையின் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு ஒரு விளக்கம் சொல்லலாம். எந்த காரணத்தினாலே இப்படி ஒரு நிலை வநதிருக்கிறது என்று சொல்வார்களானால், நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

10.25 மணி

இந்தத் தமிழர் பிரச்சனையில் பாகுபாடு இருக்கக்கூடாது, வேறுபாடு இருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய நிலையே தவிர, இதிலே மீண்டும் குழப்பம் வந்து, ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு, இங்கேயே சண்டை, மறுபடியும் அங்கே



அந்தச் சண்டை வர வேண்டும் என்பதை நாங்கள் நிச்சயமாக விரும்பவில்லை. அதனாலேயேதான் நான் வற்புறுத்தி கூறுகிறேன், அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் கூறிய அந்த வார்த்தைக்கு விளக்கம் சொல்லி, தன்னிலை விளக்கம் என்ற அளவிற்கு வருகிற நிலையில், அது ஒரு மாறுப்பட்ட நிலையில், அவர் இந்திய இறையாண்மைக்கு அது எதிரானது அல்ல என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இப்படி சொன்னதும், அன்றைக்கு உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் ஜெயுங் கொண்டத்தில் இருக்கிற நிலக்கரியை தோண்ட வேண்டுமென்று சொன்னதை, ராதா சொல்வதுதான் பிரிவினை என்கிறார். நான் திராவிடர் கழகத்திலே இருந்த காலத்திலே பிரிவினை கேட்டவன்தான். பேரறிஞர் அண்ணா அதை ஒத்தி வைத்த நேரத்தில் அதை ஒத்தி வைத்துவிட்டு, மாநில சுயாட்சி என்று சொன்ன நேரத்திலும் எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் சம நிலையிலே இணைவோம், கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம் என்று சொன்ன நேரத்தில் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டுதான் இன்றைக்கும் இருக்கிறோமே தவிர, பிரிவினை என்ற ஒரு தீர்மானம் வந்தால் பிரிவினை என்ற நிலைக்கு நான் வந்துவிட தயாராக இருக்கிறேன். ஆனால், அது வேறு விஷயம். ஆனால் நாம் எடுத்துக்கொண்டிருக்கிற முடிவிலே நாம் மாறக்கூடாது என்பதிலே நான் உறுதியாக இருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் அன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய துணையோடு வெளி மாநிலங்களிலேயிருந்து அல்லது வெளி நாட்டிலேயிருந்து, அல்லது உலக வங்கியிலேயிருந்து கடன் வாங்கியாவது செய்ய வேண்டும் என்று சொன்னதையே எடுத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்.

இன்னொன்றையும் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஏன் இங்கே ரகளை நடக்கிறது என்றால் இந்து பத்திரிகையில் எழுதிவிட்டார்கள், ரகளை செய்யுங்கள் என்று. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விளக்கத்திற்காக சொல்கிறேன். அந்தப் பத்திரிகை எழுதி, எங்களை ரகளை செய்ய வேண்டுமென்று சொல்ல வேண்டுமென்ற அவசியம் கிடையாது. நாங்கள் அந்த நிலைக்கு நிச்சயமாக ஆட்பட மாட்டோம். அந்தப் பத்திரிகையில் அன்றைக்கு அவர்கள் எழுதியது என்னவென்றால் எங்களுடைய பொதுச் செயலாளர் அவர்கள் லாரி மோதி தாக்கப்பட்ட நேரத்தில் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந் தோம். முதல்நாள் நான் பேச ஆரம்பித்த நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நாளைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் வருகிறது. அதிலே நீங்கள் பேசலாம்

என்றார்கள். நானும் சரி, நாளைக்கு பேச விடுவார்கள் என்று நம்பி உட்கார்ந்தேன். ஆனால், திரு. உக்கம்சந்த் அவர்கள் விளக்கத்தைச் சொன்னார்கள். அவர்கள் விளக்கம் சொன்னதும், நான் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது என்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை முழுமையாகச் சொல்லி, எல்லா விளக்கத்தையும் சொல்லி எங்களுடைய விளக்கம் முழுமையாக மறைக்கப்படுகிற நிலைமை வந்தது. அந்த நிலை வந்த நேரத்தில், அந்தப் பத்திரிகையில் அதைப்பற்றி எழுதியிருந்தார்கள் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இதிலே ஏமாந்துவிட்டார்கள் என்று எழுதியிருந்தார்கள். அதை நான் சுட்டிக்காட்டிக் கூறினேனே தவிர, ஏதோ குழப்பம் செய்ய வேண்டும், ரகளை செய்ய வேண்டும், அதன் மூலம் இந்த சபையினுடைய நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய நிலையில் நாங்கள் இல்லை என்பதை மட்டும் தெளிவுபடுத்தி, மக்களுடைய அன்றாட பிரச்சனைகளை இங்கே எடுத்துச்சொல்லி, அன்றாடம் நடைபெறுகிற காரியங்களை இங்கே எடுத்துச்சொல்ல வேண்டும் என்பதிலே மட்டும் நாங்கள் மிகுந்த அக்கறைக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்தி, இந்த அளவிற்கு இந்த உரிமை மீறல் பிரச்சனைக்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றிகூறி உரிமை மீறல் இதிலே இருக்கிறது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் தரவேண்டும், மீண்டும் மீண்டும் அதையே வற்புறுத்துவீர்களேயானால் நிச்சயமாக அதை உரிமைக் குழுவுக்கு அனுப்பி விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று இது என்பதை இங்கே தெரிவித்து அமைகிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1957 ஆம் ஆண்டு முதல் இந்த அவையில் நான் இருந்திருக்கிறேன். இந்த நீண்ட நெடிய காலத்தில் எத்தனையோ உரிமைப் பிரச்சினைகள் இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரால் கொண்டு வரப்பட்டு, யார்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டதோ அவர்கள் அதற்கான தன்னிலை விளக்கத்தை அளித்து, அது குறித்துத் தீர்ப்பை பேரவைத் தலைவர்கள் வழங்கியிருக்கிறார்கள். உரிமைப் பிரச்சினை என்றால், எந்த நிலையில், எந்தச் சொற்களைக் கொண்டு, அல்லது எந்தச் செயலைக் கொண்டு ஓர் உறுப்பினர் இந்த அவைக்கு என்று உள்ள உரிமைகளை மீறினார் என்பதற்காகக் கொண்டு வரப்படுகின்ற ஒன்று. ஆனால், இன்றையதினம் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், நான் எதிலே உரிமை மீறினேன் என்று திட்டவட்டமாகக் கோடிட்டுக் காட்டாமல், சில விவாதங்களை இங்கே எழுப்பி, அதற்கான விளக்கத்தைத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இலங்கைப் பிரச்சினையில், அதிலும் குறிப்பாக தமிழ் ஈழப் பிரச்சினையில்



கடந்த காலத்திலே இந்திய அரசினுடைய அணுகுமுறை சரியானதா, இல்லை தவறானதா என்பதைப் பற்றி இரு வேறு கருத்துக்களைச் சொல்ல நமக்கு உரிமை உண்டு. இன்று ஆளும் கட்சியாக இருக்கின்ற தி.மு.க.வுக்கு என்று அதுகுறித்து ஒரு கருத்து உண்டு. எங்களோடு தோழமைக் கட்சிகளாக இருக்கின்றவர்களுக்கு அது குறித்து, அதிலும் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களுக்கு நாங்கள் கொண்டிருக்கின்ற கருத்துக்கு சற்று மாறான கருத்து உண்டு.

10.30 மணி

ஓரளவுக்கு நெருங்கி வருகின்ற கருத்து எங்களுக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உண்டு. இன்று அந்த நிலை இப்போது அ.தி.மு.க.வினரால் எடுக்கப்படாவிட்டாலும் கூட, இந்தப் பிரச்சினையிலே ஓரளவு கருத்து உடன்பாடு உண்டு. ஆனால் இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள கருத்துக்கும், அவர்கள் கொண்டுள்ள கருத்துக்கும் நேர்மாறான நிலை உண்டு. எனவே, உரிமைப் பிரச்சினை என்ற பெயரால் இரு கருத்துக்களையும் எடுத்துக் கூறத்தான் நாம் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்கிறோமா என்றால் அதுதான் நடந்திருக்கிறது. ஆனால் இனி வருங்காலத்திலாவது உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்படும் போது குறிப்பிட்ட எந்த ஒரு காரியத்திற்காக அல்லது எந்த ஒரு சொற்றொடருக்காக உரிமைப் பிரச்சினை என்பதை விளக்கி, அதற்கான விளக்கங்களை வழங்குவது சால்புடையதாக இருக்குமென்று பணிவன்போடு நான் பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எழுதிக் கொடுத்திருக்கிற உரிமை மீறல் பிரச்சினையிலே அதற்கான விவாதத்தை எழுதிக் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த அவையில் இலங்கைத் தமிழர்களில் 5,000 பேரை அழித்தார்கள், அதனால் அந்த இராணுவத்தை வரவேற்கவில்லை என்று சொன்னதன் மூலமாக, ஒரு முதலமைச்சர் என்ற பொறுப்பிலே இருந்து கொண்டு, இந்திய இராணுவத்தை எதிர்ப்பது என்றால், இந்த அவையினுடைய உரிமை மீறல் அல்ல, இந்த அவையிலே இருந்து பேசுகிற அந்தப் பிரச்சினை இந்திய அரசாங்கத்தை, இந்திய இறையாண்மையை எதிர்த்துப் பேசுகிற கருத்தாகும், அதனாலே இந்த அவையினுடைய உரிமை மீறல்.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நன்றி, நான் சொன்ன பிறகாவது, தாங்கள் இதனை ஞாபகப்படுத்திக் கொண்டு சொன்னதற்காக எதிர்க்கட்சி தலைவரைப் பாராட்டுகிறேன். ஏனென்றால் முதலிலே உரிமைப்பிரச்சினையிலே அவர் பேசும்போது அது குறித்து எதுவும் சொல்லவில்லை, எந்தச் சொற்றொடரால் நான் உரிமையை மீறியிருக்கிறேன் என்று சொல்லவில்லை. எதிர்

கட்சித் தலைவர் அவர்களுக்கு, முதலமைச்சராகிய நானே உதவி. அவர்கள் எந்தக் கருத்திற்காக இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள் என்பதை விளக்குவதற்கு நான் அவருக்குத் தந்த வாய்ப்பை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்திய இராணுவத்தைப் பற்றி நான் அவதூறாக, தரக் குறைவாக எதுவும் பேசவில்லை. நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் 28 ஆம் தேதி அவருடைய வரவு-செலவுத் திட்டம் குறித்த பொதுக் கருத்துரையில் பேசும்போது, குறுக்கிட்டுப் பேசும்போது நான் என்ன பேசினேன் என்பதை அவைக் குறிப்புகளைப் படித்துப் பார்த்தால் தெரியும், அதற்குப் பிறகு மற்றொரு நாள், இது குறித்து நீண்ட விவாதம் வந்தபோதும், என்ன பேசினேன் என்பதைப் படித்துப் பார்த்தால் நன்றாகத் தெரியும். மதிப்பிற்குரிய நண்பர் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவராக இருக்கிற திரு. மூப்பனார் அவர்கள், ''ராஜீவ் காந்தியின் இராணுவம்'' என்று நான் சொன்னதாக அவர்கள் ஒரு கற்பனை செய்து கொண்டு, ''அப்படியானால் கருணாநிதியின் போலீஸ்'' என்று சொல்லலாமா என்று கேட்டதாகப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. அன்று பேசியதிலும் சரி, அதற்கு அடுத்த நாள் நான் பேசியதிலும் சரி, எந்த இடத்திலாவது ''ராஜீவ் காந்தியின் இராணுவம்'' என்று சொல்லி இருக்கிறேனா என்பதை இந்தச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளைப் படித்துப் பார்த்து, தெரிந்து கொண்டு, அதன்மீது என்னைக் குறை சொல்லலாம்.

காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசும் போதுகூட, ''ராஜீவின் இராணுவம்'' என்று நான் குறிப்பிட்டதாக இரண்டொரு இடங்களில் சொன்னார்கள். நான் ''ராஜீவின் இராணுவம்'' என்று சொல்லவில்லை. இந்திய இராணுவம் என்றுதான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்திய இராணுவம் என்றால் அது போற்றப்பட வேண்டியது, புகழப்பட வேண்டியது, பாராட்டப் படவேண்டியது, மதிக்கத் தகுந்தது. மரியாதைக்கு உகந்தது. அதே நேரத்திலே அது தவறு செய்தாலும் அதை ஆதரிக்க வேண்டுமென்று இல்லை. எல்லா நாடுகளிலும் இருப்பது இராணுவம் தான். அமெரிக்காவில் இருந்தாலும் இராணுவம்தான். சோவியத் ரஷ்யாவில் இருந்தாலும் இராணுவம்தான். ஆனால் அதே அமெரிக்க இராணுவம் வியட்நாம் போராட்டத்திலே அவர்கள் நடந்து கொண்ட நிலையைப் பார்த்து, இராணுவம் என்பதற்காக அதை யாரும் கண்டிக்காமல் விட்டுவிடவில்லை. இராணுவமாயிற்றே, அது எந்த நாட்டு இராணுவமானாலும் அது அந்த நாட்டுக்குத் தெய்வம் என்று யாரும் கண்டிக்காமல் இருந்துவிடவில்லை. என்னுடைய அருமை நண்பர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோதே, அவருடைய கட்சியிலே, மிகத் தீவிரமான முக்கிய பிரமுகரான நண்பர் திரு. காளிமுத்து அவர்கள்

[illegible]



இந்திய இராணுவத்தைப் பற்றி என்னென்ன பேசி இருக்கிறார். என்பதை எல்லாம் நினைவு கூர்வது நல்லது. எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்த காலகட்டத்தில், நண்பர் காளிமுத்து பேசியதை நினைவூட்ட விரும்புகிறேன். 22-10-1987 மாலை முரசில் வந்திருக்கிறது. அவைத் தலைவருடைய அனுமதியோடு (கடிதம் மூலமாக அனுமதி பெற்று) இதைப் படித்துக் காட்டுகிறேன்,

10.35 மணி

''உலகத்தில் நாலாவது பெரிய இராணுவம் இந்தியாவினுடையது. இதில் 8½ இலட்சம் வீரர்கள் உள்ளார்கள். இந்திய இராணுவத்தையே ஒரு வார காலமாகத் திணறடித்திருக்கிறார்கள் என்றால் விடுதலைப் புலிகள் எவ்வளவு பெரிய தீரத்துக்குச் சொந்தக்காரர்கள் என்று புரிந்து கொள்ளலாம். இந்தியப் படை இலங்கையில் விடுதலைப் புலிகளை அழிக்கவா சென்றது? இதுவா சமாதானத்துக்கு அடையாளம்? உலகத்திலேயே நாலாவது இடத்திலே இருப்பது இந்திய இராணுவம். அது 2 ஆயிரம் பேர்களுக்கு எதிராகப் போர் தொடுப்பதா? அந்த 2 அயிரம் பேர்கள் ஒரு வார காலமாக இந்திய இராணுவத்தையே திணற வைத்துக் கொண்டு இருக்கிறார்கள், நம் இனத்தைச் சேர்ந்த தமிழனை, நமது வரிப் பணத்தில் கொழுத்த இந்திய இராணுவம் சுட்டுக் கொல்கிறது; தமிழ்ச் சகோதரிகளைக் கற்பழிக்கிறது. இதைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது,'' பேசியவர் காளிமுத்து; பேசிய நேரம் தமிழக முதலமைச்சர் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த கால கட்டம்; அப்பொழுதுதான் பேசி இருக்கிறார். இதைவிட இன்னும் கடுமையான வாசகங்கள் எல்லாம் இந்திய இராணுவத்தைப் பற்றி காளிமுத்து அவர்களால் பேசப்பட்டது,

அண்மையிலே கூட ஒரிசாவினுடைய முதலமைச்சர் பிஜூ பட்நாயக் சொன்ன கருத்து இந்துஸ்தான் டைம்ஸ், நியுடெல்லி ஃபிரைடே மார்ச் 23, 1990--அதிலே வந்து இருக்கிறது. அவர் சொல்கிறார்.

The refugees' problem, Mr. Patnaik said, was an off-shoot of Rajiv Government's decision to send Indian Peace Keeping Force (I.P.K.F.) which later on turned into a killing force to Srilanka. என்று ஒரிசாவினுடைய முதலமைச்சர் பிஜூ பட்நாய்க் அவர்கள் அண்மையிலே இப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்லி இருக்கின்றார்கள்;

நான் இந்திய இராணுவத்தைப் பற்றி சொன்ன கருத்து எல்லாம், அவர்களை எந்த வகையிலும் தரக்குறைவாகவோ, இழிவுபடுத்தவோ இந்த அரசு விரும்பாது என்ற வகையிலே சொல்லப்பட்ட கருத்துக்கள் தான். அவைகளை எல்லாம் நான்

மீண்டும் இங்கே படிக்க விரும்பவில்லை. அவைக் குறிப்பிலே எடுத்து, படித்துப் பார்த்தால், இந்திய இராணுவத்தைப் பற்றி நான் தரக்குறைவாக எதுவும் சொல்லவில்லை என்பது தெரியும். இன்னும் சொல்லப் போனால் அது நல்ல இராணுவம். ஆனாலும் ராஜிவ் காந்தி அரசினால் அது இவ்வாறு செயல் படுத்த விடப்பட்டதைத் தான் நான் கண்டிக்கிறேன் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டு இருக்கின்றேன், எனவே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியினுடைய அல்லது நடவடிக்கையைப் பற்றி, அதன் விளைவு பற்றி அவரவர்களுடைய கருத்துக்கள் வேறுபடலாம், அதற்கு உரிமை உண்டு. ஆனால் அது உரிமைப் பிரச்சினையாக ஆகவே முடியாது.

வியட்நாமிற்கு அனுப்பப்பட்ட அமெரிக்கப் படை அங்கே போரிட்டுக்கொண்டு இருந்த பொழுது அதை எதிர்த்து, அது உடனடியாகத் திரும்ப அழைக்கப்பட வேண்டும் என்று அந்தப் படையைக் கடுமையாக விமர்சித்து அமெரிக்க நாட்டினுடைய செனட்டர்கள் கேட்டது பக்கம் பக்கமாகப் பத்திரிகைகளிலே வெளிவந்து இருக்கிறது. எனவே இது கொள்கை வழிபட்ட ஒன்று. அவரவர்களுடைய கருத்துக்கு ஏற்ப கருத்துச் சொல்லப் பட்டதே அல்லாமல் இந்த அவையினுடைய உரிமையை மீறுவதற்காகச் சொல்லப்பட்ட கருத்து அல்ல.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் கூறியது போல ராஜிவ் காந்தி இலங்கைப் பிரச்சினையிலே எந்த முயற்சியும் எடுக்காமல் விட்டுவிட்டார் என்று சொல்ல வில்லை. இன்னும் சொல்லப் போனால் அவரை விட மிக அதிகமான அக்கறையோடு இந்திராகாந்தி அவர்கள் பெரு முயற்சியில் ஈடுபட்டார். அப்படி அவர்கள் எடுத்த அந்தப் பெரு முயற்சிகள் எல்லாம் போதாது என்கின்ற உணர்வு இன்றைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்றைக்கு இருந்தது. அதனுடைய விளைவுகளைப் பற்றி எல்லாம், அதன் காரணமாக அவருக்கு ஏற்பட்ட அந்த உணர்வு களைப் பற்றி எல்லாம் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. எனவே இந்திராகாந்தி அவர்கள் எடுத்த அந்த முயற்சிகளே கூட போதாது என்கின்ற உணர்வு நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் போன்றவர்களுக்கு ஒரு காலத்திலே இருந்தது என்பதை எண்ணும்பொழுது, அவருடைய அருமைத் திருமகன் ராஜிவ்காந்தி அவர்களுடைய அணுகுமுறையிலே எங்களுக்கு ஏற்பட்ட சில கருத்து மாறுபாடுகளைச் சொல்வது தவறு அல்ல. எனவே இது உரிமைப் பிரச்சினைக்கு எந்த வகையிலும் உள்ளாகக்கூடிய ஒன்று அல்ல என்ற விளக்கத்தை அளித்து, பேரவைத் தலைவர் அவர்களே, பிறகு உங்களுடைய தீர்ப்புக்கு, உங்களுடைய முடிவுக்கு இதனை விடுகிறேன். (குறுக்கீடு)



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இதன் மீது எந்த வகையான விவாதமும் இருக்கக் கூடாது. மற்றொரு வாய்ப்பிலே கண்டிப்பாக நீங்கள் சொல்லலாம். இது குறித்து ஆய்ந்து எனது தீர்ப்பினைப் பின்னர் அளிக்கிறேன்.

(ஆ) உறுப்பினர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் மீது இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவம் குறித்து முதலமைச்சர் அவையில் பேசியதாக உறுப்பினர் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ள கருத்து குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் அவர்கள், மாண்புமிகு திரு. ஜி. கருப்பையா மூப்பனார் சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்கள், திருச்சியில் செய்தித்தாளுக்கு அளித்த பேட்டியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறாத சொற்களைத் திரித்துக் கூறி உள்ளார் என்றும், இது பொது மக்கள் மத்தியில் மாண்புமிகு முதல்வர் மீது களங்கம் கற்பிக்கும் செயலாகும் என்றும் குறிப்பிட்டு ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிக்கையைக் கொடுத்து உள்ளார். இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதனை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

10.40 மணி

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 219-இன்படி கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினைக்கு இந்த அறிவிப்பினை நான் சமர்ப் பிக்கின்றேன். மாண்புமிகு சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியி னுடைய தலைவர் திரு ஜி. கே. மூப்பனார் அவர்கள் திருச்சியிலே செய்தித்தாளுக்கு பேட்டியளித்தபொழுது, இந்திய அமைதிப் படையை இராஜீவ்காந்தி படை என்று மாண்புமிகு கருணாநிதி கூறியதை வன்மையாகக் கண்டித்தார் என்று செய்தி வந்துள்ளது. இதை....

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மூப்பனார் அவர்கள் இந்த அவையிலே உறுப்பினர். அவையிலே உறுப்பினராக இருக்கிற ஒருவர் மீது அவை உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வருவதாக இருந்தால் அவர்களுக்கு முறைப்படி நோட்டீஸ் அனுப்பியிருக்க வேண்டும். நோட்டீஸ் அனுப்பியிருக்கிறீர்களா? பதிலேதும் வந்திருக்கிறதா? நோட்டீஸ் அனுப்பியதற்குப் பின்னால் தான் அவையிலே அந்த அவை உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புவதற்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அதற்கான விளக்கம். அவர் எழுப்பிய ஒழுங்குச் சிக்கலை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனாலும் இன்று நமது மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள் கொடுத்த ஓர் உரிமை மீறல் தொடர்பாகவும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த ஓர் உரிமை மீறல் தொடர்பாகவும் எழுந்த வினாக்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் விளக்கமளித்து இருக்கிறார்கள். இந்தச் செய்தியையும் அதனோடு தொடர்புடையது என்ற முறையில் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதுபற்றிய என்னுடைய தீர்ப்பை அறிந்து கொண்ட பிறகு அருள்கூர்ந்து நீங்கள் மீண்டும் கூறலாம்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே உறுப்பினர் எழுப்புகின்ற அந்தப் பிரச்சினை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அதற்குப் பின்னர் உரிய விளக்கத்தைச் சபாநாயகர், யாரைப் பற்றி எழுப்பப்படுகிறதோ அதுபற்றி அவரிடமிருந்து பெற்றுத் தான், அதற்குப் பின்னர் தான் உரிமைக் குழுவுக்கு அனுப்புவது என்ற முறை உண்டு. ஆகவே, சம்பந்தப்பட்ட உறுப்பினரைக் கேட்காமலேயே, அவருடைய விளக்கம் தெரியாமலேயே அது உரிமைக் குழுவுக்குச் செல்லாது. ஆனால், உரிமை மீறல் இருக்கிறது. பிரைமா பேசி இருக்கிறது என்று அது இந்த அவையினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினராலே கொண்டு வரப்படுகிறது. அது தவறு அல்ல.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நாங்கள் முதல்வர் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சனை கொடுத்தால், முதல்வரவர்களுக்கு அந்தத் தகவல் போய், அவர்கள் அந்தத் தகவலை வைத்துக் கொண்டு, இங்கே தகவல் கொடுப்பதற்கென்றே நாங்கள் அதிகமான பிரதிகளைக் கொடுக்கின்றோம் நகல்களைக் கொடுக்கின்றோம். ஆனால் நேற்று சொன்னதாகச் சொல்லப்படுகின்ற ஒரு செய்திக்கு ஏந்த உறுப்பினர் இங்கே வராதபோது—எங்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் இங்கே வராதபோது அதை எப்படி அவர்களுக்குக் கொடுத்தீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நீங்கள் அவைக்கே வராமல் இருந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்? அவைக்கு வருவது இல்லை என்கின்ற ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கும்பொழுது நாங்கள் என்ன செய்ய முடியும்? எத்தனையோ பத்திரிகைகள் மீது இங்கே உரிமை பிரச்சினைகள் தரப்படுகின்றன. பத்திரிகைகளுக்கு எழுதிக் கேட்டுத்தான் பிறகு அவைத் தலைவர் எடுத்துக் கொள்வது இல்லை. உரிமை மீறலைப் பேசச் சொல்லிவிட்டு பிறகு அவைத் தலைவர் அந்தப் பத்திரிகைகளுக்கு எழுதிக் கேட்டு பிறகு அறிவிக்கிறார்கள். அதைப் போலத்தான் இதுவும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மீது வேறு எந்த விளக்கங்களும் தேவையில்லை.

திரு எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி உரிமை மீறல் பிரச்சினை வருகின்ற நேரத்திலே, பல்வேறு காலகட்டங்களில் உரிமை மீறல் பிரச்சினையை எழுதிக் கொடுத்ததும் நீங்கள் தெரிந்துக் கொண்டதற்குப் பின்னாலேகூட அவையிலே எழுப்புகின்ற வழக்கம் உண்டு. நான் அப்படிக் கொடுத்திருக்கின்ற உரிமை மீறல் பிரச்சினை—டி.வி. நிலையத்தைப் பற்றி நான் எழுதிக் கொடுத்ததை அவர்களுடைய கருத்தைக் கேட்டு பின்னால் அவையில் எழுப்பலாம் என்றீர்கள். அதே நடைமுறையைக் கூட இதற்கும் அனுமதிக்கலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டாமா, உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், டி.வி நிலையம் பற்றிக் கொடுத்தபொழுதுகூட அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு இந்த அவையில் எழுப்புவதற்கு அனுமதி கொடுத்து, இது எவ்வாறு உரிமை மீறல் பிரச்சினையாகும் என்று சுருக்கமாக விளக்கம் அளிப்பதற்கும் வாய்ப்புக் கொடுத்த பிறகு, நான் சொன்ன தீர்ப்பு "இதுகுறித்து டி.வி. நிலையத்திற்கு எழுதிக் கேட்டு விளக்கம் பெற்றுத் தீர்ப்பளிக்கிறேன்" என்பதுதானே தவிர வேறல்ல. அதைச் சரியாக மறுபடியும் நீங்கள் பார்க்க வேண்டும்.

திரு. எஸ்.ஆர். இராதா : அது முன்னால் கொடுத்தது. இரண்டாவதாக நான் — டி.வி. — மறுபடியும் ஒன்று கொடுத்தேன். அதற்கு நீங்கள் அவர்களிடத்திலே விளக்கம் கேட்டு அவையில் எழுப்பலாம். இப்பொழுது வேண்டாமென்றீர்கள். நானும் ஒத்துக் கொண்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையில் நடக்கிற பிரச்சினையை நாம் அவைக்கு கொண்டு வரக் கூடாது. அவையில் நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் என்ன தீர்ப்பளித்தேன் என்பதுதான்.

**Thiru A. Rahmankhan** : Sir, on a point of order........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகை மேலே கொடுப்பதற்கும், டி.வி. மேலே கொடுப்பதற்கும் ஒரு உறுப்பினர் மேலே கொடுப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதற்காகத் தனிப் புரவிசோ கொடுக்கப்பட்டிருக்கிறது.

"Provided further that if it is against another Member of the House including a Minister, a copy of such notice shall be given to him through the Legislative Assembly Secretariat."

10.45 மணி

எனவே, டி.விக் கோ, பேப்பருக்கோ வேறு, மெம்பருக்கு வேறு there is a difference. நீங்கள் அதை equate பண்ண முடியாது. டி.வி.க்கு அப்படிச் சொல்லலாம். பேப்பருக்கு அப்படிச் சொல்லலாம். ஆனால்,—this is against a Member of the House. அதற்குத் தனியாக புரவிசோ கொடுத்திருக்கிறார்கள். They should send a notice first. அந்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்களா என்பதை மட்டும் நீங்கள் சொல்லுங்கள்.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கொறடா அவர்கள் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை கொடுத்திருக்கிறார்கள். முதலில் நீங்கள் இந்த அவையில் prima facie-யாக அது உரிமை மீறல் தானா, அல்லவா என்பதை முடிவு கட்டி, உரிமை மீறல் இல்லையென்று சொல்கிறபோது, இங்கேயே நீங்கள் அதை தள்ளுபடி செய்து விடலாம். உரிமை மீறல் தான் என்று ஏற்றுக் கொண்டதற்கு பிறகுதான் பிரச்சினையே வருகிறது. அதற்கு முன்பாக எதுவும்-நோட்டீஸ் அனுப்புவதோ' வாதத்திற்கு பதில் கேட்பதோ வராது. இப்போது நீங்கள் எந்தவிதத்தில் அது உரிமை மீறல் என்று விளக்கம் கேட்கிறீர்கள். Prima facie, first stage— அதில் நோட்டீஸ் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்)

திரு. எம். அப்துல் லத்திப்: தலைவர் அவர்களே, மாண்புமிகு பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் விதி 220-ஐ சுட்டிக்காட்டி விளக்கம் தந்தார்கள். அதில் முதல் புரவிசோவை தான் அவர்கள் படித்து இருக்கிறார்கள்.

"Provided further that if it is against another Member of the House including a Minister, a copy of such notice shall be given to him through the Legislative Assembly Secretariat."

"Provided further that in respect of a matter of privilege arising during the Sitting of the House, the Speaker may waive such notice and deal with the matter as he deems fit."
ஆகவே, உங்களுடைய உசிதத்திற்கு விடப்பட்டிருக்கிறது. அவ்வளவு தான். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பெரியதாக ஆக்க வேண்டியதில்லை. அவருக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டுத்தான் இங்கே எடுக்க வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியில் வாதமாக இருக்கிற காரணத்தால், தாங்கள் அதையே ஏற்றுக்கொண்டு இன்று மாண்புமிகு கதிரவன் அவர்கள் தருகிற அந்த உரிமைப் பிரச்சினைக்கான நோட்டீஸ், அறிவிப்பை திரு. மூப்பனார் அவர்களுக்கு அனுப்பச் செய்து, அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டு, நாளையோ, நாளை மறுநாளோ இங்கே வந்து, விளக்கம் அளிக்கிற வாய்ப்பையும் அவருக்கு வழங்கி, பிறகு இதை எடுத்துக் கொள்வது நல்லது தான் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்னுடைய அளவில் அப்படித்தான் சொல்வதாக இருந்தேன். ஆனாலும் உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினை தொடர்பாக "Prima facie" இருக்கிறது என்று கருதி, உசிதம் என்றும், பொருத்தம் என்றும் கருதுகிறபோது இதை எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவிலே வந்தது. நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள், மாண்புமிகு முதல்வர் விளக்கத்தை ஏற்று இந்த உரிமை மீறல் பிரச்சினை முறைப்படி பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்,

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) அச்சிறுபாக்கம் ஆதிதிராவிடர் விடுதியில் மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. எஸ்.டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கை அண்ணா மாவட்டம் அச்சிறுபாக்கம் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில், 11-3-1990 அன்று விடுதிக் காப்பாளரால் மாணவர் தாக்கப்பட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை,

செங்கை— அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சிறுப்பாக்கம் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் 10-3-1990 அன்று இரவு, விடுதி உட்புறச் சுவர்கள் மற்றும் கிணறு வெளிச் சுவரில் விடுதி காப்பாளரைப் பற்றி 'அவதூறாக எழுதப்பட்டு இருந்ததால், 11-3-1990 அதிகாலை 5 மணிக்கு விடுதிக் காப்பாளர்

எல்லா மாணவர்களையும் அழைத்து விசாரணை செய்ததில் எல்லா மாணவர்களும் நாங்கள் எழுதவில்லை என்று சொல்லிக் கொண்டிக்கும்போது, கே.பரசுராமன் என்ற பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர் முன்வந்து எதற்கு இந்த விசாரணை யாரை என்ன செய்ய முடியும் என்று மரியாதைக் குறைவாக விடுதிக் காப்பாளரை மாணவர்கள் முன்னிலையில் பேசியிருக் கிறார். விடுதிக் காப்பாளர் அந்த மாணவர் கையைப் பிடித்துக் இடது தோள் பட்டையைப் பிடித்து தள்ளி நீ போய்ப் படி என்று சொல்லியிருக்கிறார்.

2. அன்று மாலை சுமார் 2 மணியளவில், அச்சிறுப்பாக்கம் பேரூராட்சித்தலைவர் திரு.சம்சுதீன், மதுராந்தகம் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு.தமீம் அன்சாகி மற்றும் காவல் நிலையத் துணை ஆய்வாளர், அந்த மாணவருடன் விடுதிக்கு வந்து விடுதிக் காப்பாளரை விசாரித்திருக்கிறார்கள். தான் அந்த மாணவரை அடிக்கவில்லை என்று விடுதிக் காப்பாளர் சொல்லியிருக்கிறார். காவல் நிலையத்தில் நாம் கொடுத்துள்ள புகார் மனுவின் பேரில் நடவடிக்கை தேவையில்லை என்றும் அவர்களது ஆலோசனையை ஏற்றுக் கொள்கிறோம் என்றும், மாணவரும் விடுதிக் காப்பாளரும் எழுதிக் கொடுத்திருக்கின்றனர். அந்த மாணவரும் 11-3-1990 இரவு 12-3-1990 மற்றும் 13-3-1990ந் தேதி முழுவதும் விடுதியில் தங்கிப் படித்து 12வது வகுப்பு தேர்வு எழுதியிருக்கிறார். 14-3-1990 முதல் விடுதியில் இல்லாமல் சென்று விட்டார். மாணவர் விடுதியிலிருந்து வெளியில் சென்று விட்டார் என்று விடுதிக்காப்பாளர் மதுராந்தகம் தனி வட்டாட்சியருக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார், அதன் பின்னர் அந்த மாணவருடைய தகப்பனார் 17-3-1990 அன்று விடுதிக்கு வந்து தன் பையனின் புத்தகங்களைக் கேட்டு வாங்கிச் சென்றிருக்கிறார்.

3. 15-3-1990 அன்று மாலை 5 மணியளவில் மதுராந்தகம் கம்யூனிஸ்டு உறுப்பினர், திரு.தமீம் அன்சாகி, காந்திநகர் திரு.ஆறுமுகம் மற்றும் சிலர், விடுதிக்கு வரும் வழியில் நின்று கொண்டு வெற்றுத்தாளில் கையெழுத்து போடும்படி விடுதி மாணவர்களை வற்புறுத்தி வாங்கியும், சில மாணவர்கள் கையெழுத்து போட்டதாகவும். வேறு சில மாணவர்கள் எதற்கு வெற்றுக் காகிதத்தில் கையெழுத்து வாங்குகிறீர்கள் என்று கேட்டதற்கு அந்த ப்ளஸ் 2 மாணவர் மற்றும் காந்தி நகரைச் சேர்ந்த திரு. ஆறுமுககணபதி, திரு. அன்பழகன் மற்றும் சிலர் கம்பு கழி ஆகியவைகளைக் கொண்டு மாணவர்களைத் தாக்கியும் மற்றும் விடுதியின் சன்னல் கதவுகளை உடைத்தும் சமையல்காரர், விடுதி வாயிலை அடைக்க வந்த சமயம் அவர் மண்டையில் கல் பட்டு, மண்டை உடைந்தது. அடிப்பட்ட சமையல்காரரையும் மற்ற 2 மாணவர்களையும அரசு மதுராந்தகம் மருத்துவமனையில் சென்று சிகிச்சை செய்து வந்திருக்கின்றனர், காவல் நிலையத்தில் புகாரும் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர், விடுதியில் எந்தவித சம்பவமும் இன்றி அமைதியாக இருக்கிறது.



4. காவல் நிலையம் சென்று விசாரித்ததில், சமரசம் செய்து புகார் மனு முடித்து வைக்கப்பட்டதாகவும், 15-3-1990 அன்று மீண்டும் அரசியல் பின்னணியில் அந்த மனு எடுத்துக் கொள்ளப் பட்டு. தற்போது காப்பாளர் திரு.பி.எம்.லட்சுமிகாந்தன் பேரில் குற்றப்பத்திரிகை குற்ற எண் 66/90 இ.பி.கோ. செக்ஷன் 341, 323, 427 ஐ.பி.சி.யில் பதிவு செய்திருப்பதாகவும், அது சம்பந் தமான ஆவணங்கள் தற்சமயம் உதவி ஆய்வாளரிடம் இருப்ப தாகவும் தெரிகிறது.

5. 11-3-1990 அன்று விடுதி மாணவர், காப்பாளரால் தாக்கப்பட்டு அபாயகரமான நிலையில் உள்ளார் என்பதுசரியல்ல. ஏனெனில் 11,12மற்றும் 13 தேதிகளில் அந்த மாணவர் விடுதி யிலேயே தங்கிப் படித்து தேர்வு எழுதியிருக்கிறார்.

திரு எஸ் டி.உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் படி 11-3-1990 அன்று காலை 5,00 மணியளவில் விடுதி காப்பாளர் அந்த மாணவர்களை அழைத்து அவரைப் பற்றி எழுதியிருக்கிற வாசகங்கள் குறித்து விசாரித்தாக சொல்லப்பட்டு இருக்கிறது, ஆனால், அங்கே சென்று நான் விசாரித்த நேரத்தில் அன்று காலை மாணவனை அழைத்து அந்த விடுதி காப்பாளர் ருல்தடியால் அடித்து இருக்கிறார் என்று அறிகிறேன். அதுபற்றி காவல் துறைக்கு புகாரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு மண்டையில் வெளிக்காயம் இல்லாமல், உள்காயம் பட்டிருப்பதால் 12-ம் தேதியும், 13-ம் தேதியும் தேர்வு எழுத சென்று இருக்கிறார்கள். 13-ம் தேதி எழுதுகிற நேரத்தில் அவருக்கு மிகவும் கைகால்கள் விழுந்து இருக்கிற சூழ் நிலை ஏற்பட்டதால், மேற் கொண்டு அவரால் தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டு அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற விவரம் அரசுக்கு தெரியுமா? அப்படிப்பட்ட நிலையில் தவறு செய்தி ருக்கிற அந்த விடுதி காப்பாளர் மீது வெறும் வழக்கு மட்டும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அதற்கு பிறகு இன்னும் ஒரு மாணவனை 15-ம் தேதி அழைத்து.... (மணியடிக்கப்பட்டது)

10.50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாதான் கேட்கவேண்டும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும், கவன ஈர்ப்பின் மீது வினாதான் கேட்கவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா? இன்னொரு வினா இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, 10.3.1990 அன்று மாலை விடுதியினுடைய காப்பாளரைப் பற்றி அவதூறாக சுவற்றில் எழுதியதன் பேரில் 11.3.1990 அன்று காலை விடுதிக் காப்பாளர் வந்து மாணவர்களை

விசாரிக்கிற நேரத்தில, மாணவர்கள் நாங்கள் எழுதவில்லை என்று சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன, 12 ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கிற மாணவன், பரசுராமன் என்பவர் அந்தநேரத்திலே விடுதிக் காப்பாளரை அவதூறாகத் திட்டியதன் பேரிலே சிறுசச்சரவுகள் ஏற்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், ரூல் தடியால் அடிக்கவில்லை. உட்காயம் ஏற்படவில்லை. மருத்துவமனையிலும் சேர்க்கப்படவில்லை. அதற்குப் பிறகு 12, 13, 14 தேதிகளில் நடந்த தேர்வில், விடுதியிலேயிருந்து தேர்வை எழுதியிருக்கிறார்கள். சில முக்கிய அரசியல் குறுக்கீடுகள் காரணமாக இந்தப் பிரச்சினை மிகைப் படுத்தப்பட்டதன் காரணமாக இதுபோன்ற பழிசுமத்தியிருக்கின்ற ஒரு காரணம் இருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சேர்ந் திருக்கின்ற காரணத்தை முன்னிட்டு, இந்த சம்பவத்தை அறிந்து மறுநாள் நான் அங்கே சென்று மாணவர்களை விசாரிக்கின்ற நேரத்தில், இதைபோல் விடுதிக் காப்பாளர் மாணவர்களை அடிக்கவில்லை என்றும்; பரசுராமன் என்கிற மாணவன் பக்கத் திலிருந்த அவர்களுக்கு உட்பட்ட ஆட்களைக் கூட்டிவந்து, விடுதியில் இருக்கின்ற கதவுகளையும், ஜன்னல்களையும், விடுதி யில் இருக்கின்ற வாட்ச்மேன்னையும் அடித்து காயப்படுத்தியிருக் கிறார் என்றும் அந்த விடுதிக் காப்பாளர் புகார் கொடுத்து இருக்கிறார். காயப்பட்ட விடுதியினுடைய வாட்ச்மேன் மற்றும் மாணவர்கள் மதுராந்தகம் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, 12—ஆம் வகுப்பு படிக்கின்ற பரசுராமன் எந்தவிதமான காயத்தையும் அவர்கள் அடையவில்லை, காயமும் இல்லை, சிகிச்சையும் பெறவில்லை. இதுபோன்ற சம்பவம் நடக்கவில்லை. ஆகவே 12,13,14 ஆகிய தேதிகளில் விடுதியிலே தங்கி நல்ல முறையிலேதான் தேர்வு எழுதிவிட்டு வீட்டுக்குச் சென்றிருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எஸ்.டி.உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மருத்துவ டாக்டர், அவர்களுக்கே நன்றாகத் தெரியும். தலையில் ஸ்கல்லில், அடிப்பட்டால், அதனுடைய இம்பாக்ட்-ஆனது 2, 3 தினங்களுக்கு பிறகுதான் தெரியும். அந்த முறையில், 2 தினங்கள் அவர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 4 தினங்கள் அவர்கள் தேர்வு ஏழுத முடியாத நிலைமை ஏற்பட்டு, மதுராந்தகம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். தற்போது சென்னையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், அதோடு மட்டுமல்லாமல் ........(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கவன ஈர்ப்பு வினாவாகக் கேளுங்கள். அமைச்சர் அவர்கள் தகவல் சொன்னால், அதன் பேரில் வினாவைத் தொடுங்கள். (குறுக்கீடு). எப்படிக் கேட்க வேண்டுமென்பதை வேண்டுமானால், நான் சொல்லட்டுமா?



(குறுக்கிடு). தகவல் தவறு என்றால், அவையில் மறுபடியும் வினா வாகக் கேட்க வேண்டியதுதானே, தவிர விளக்ஷ உரை ஆற்றிக் கொண்டிருக்ககூடாது.

திரு,எஸ்.டி. உகம்சந்த்: அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு அங்கேயிருக்கிற விடுதிக் காப்பாளர் ஏற்கனவே இந்த அரசு பதவி ஏற்ற பிறகு தவறு செய்திருக்கிற காரணத்தால், சஸ்பென்ட் செய்யப்பட்டு இருக்கிறார்கள், பிறகு சிலருடைய தலையீட்டின் காரணமாக மீண்டும் பணியிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை தெரிவிக்கவேண்டும். இப்படி தவறுகளச் செய்து, மாணவர்களை அடிக்கின்ற ஆசிரியர்கள் மீது என்ன நடவடிக் கையை துறை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ.இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்வதுபோல், எதுவும் நடக்கவில்லை, கடந்த காலத்தில், காப்பாளர் அவர்கள் மீது பல்வேறு பழிகளைச் சுமத்தி, பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்று சொன்னதும் உன்மையில்லை. இது போன்ற விஷயங்கள் இருந்தால் குறிப்பிட்டு ஆய்வுக்கு வந்தால், அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கோவை கிழக்குத் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் தொடராதது குறித்து.

திரு.கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாநகரம் கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் துவக்கப்பட்டுத் தொடர்ந்து பணி நடைபெறாமல் இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு 'பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கோவை மாநகராட்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு அரசு 1990—ம் ஆண்டு அனுமதியளித்தது. மதிப்பீடுகள் திருத்த வேண்டிய நிலை ஏற்பட்டதால் திருத்திய மதிப்பீடுகள் தயாரித்து அவை களுக்கு 1985—ல் அரசு அனுமதி வழங்கப்பட்டது,

2. கோவை மாநகருக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக இந்நகர் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பகுதி: 1 இது கோவை மாநகரின் தென்பகுதியாகும். இப்பகுதியில் அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டு தற்போது கோவை மாநகராட்சியின் பராமரிப்பில் இருந்து வருகிறது.

பகுதி: 2 கோவை வடக்குப்பகுதி இப்பிரிவின் கீழ் வருகிறது. இப்பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுவதற்கான அமைப்பைத் தவிர ஏனைய வேலைகள் முடிவுற்றுள்ளன. இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குழாய்களின் மூலம் வரும் கழிவு நீரை தற்காலிகமாக பகுதி ஒன்றுடன் இணைக்கப்பட்டு கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது.

பகுதி; 3 கோவை மாநகரின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி இப்பகுதியில் அடங்கும். கோவை மாநகர கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் டாடாபாட், புதிய சித்தாபுதூர் சிவானந்தாகாலனி, காந்திபுரம், உப்பிலிப்பாளையம் மற்றும் இராமநாதபுரம், இப்பகுதியின் கீழ் அடங்கும். இப்பகுதிக்கு வடிகால் குழாய் அமைக்கும் பணியும், வீட்டு இணைப்பு வேலைகளும் முடிவுற்றுள்ளன. மேலும் பிரதானக் குழாய் அமைக்கும் பணிக்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது, Anorobic Lagoon அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி இறுதியாக்கப்பட்டு வேலை செய்வதற்கான உத்திரவு வழங்கப்பட்டுள்ளது, பிரதானக் குழாய் அமைக்கும் பணிக்காக இருப்புப்பாதை கடக்கும் பணிக்காக (Railway Line Crossing) அனுமதி கோரப்பட்டுள்ளது, சமநிலைக் குட்டை (Equalising Pond) அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது, உறிஞ்சு கிணறு மற்றும் நீருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு (Suction well Cum Pump House) ஒப்பந்தப் புள்ளி பரிசீலனையில் உள்ளது. கழிவுநீர் இறைக்கும் யந்திரங்கள் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. கழிவுநீர் பண்ணை அமைக்க தேவையான நிலங்களைக் கையகப்படுத்த சிறப்பு தாசில்தார், கோவை அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேற்கூறிய வேலைகள் அனைத்தும் 1991-ஆம் ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10-55 மணி

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-லே அனுமதிக்கப்பட்டு 1985-ல் திருத்திய மதிப்பீடும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1990-ஆம் ஆண்டு ஆகியும்கூட, இந்தத் திட்டம் நிறைவேறாதது ட்வார்டு போர்டினுடைய நடவடிக்கைகளில் இருக்கும்படியான அலட்சியப் போக்கும், முன்பிருந்த அரசாங்கம் இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்காத குறைபாடும் சேர்ந்து பெரும் கோபமும், ஆத்திர உணர்வும் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.





இதற்கு ஒரு முடிவு ஏற்பட்டாக வேண்டும். அதன் மீது நமது அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த அறிக்கை பிரகாரம் பார்த்தால் 1991 ஆம் ஆண்டிற்குள்ளே இது முடிக்கப்படும், முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று இப்போதும் சொல்லப் பட்டிருக்கிறது, இது 10 வருஷத்திற்குக்கூட பொருந்தும், இந்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று சொல்வது. ஆகவே திட்ட வட்டமாக என்னென்ன நடவடிக்கைகள் பாக்கி நிற்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கூட இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. பிரதானக் குழாய் அமைக்கும் பணிக்காக இருப்புப்பாதை கடக்கும் பணிக்காக அனுமதி கோரப் பட்டுள்ளது. சமநிலைக் குட்டை அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. உறிஞ்சு கிணறு மற்றும் நீருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. கழிவுநீர் இறைக்கும் யந்திரங்கள் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. கழிவுநீர் பண்ணை அமைக்க தேவையான நிலங்களை கையகப்படுத்த சிறப்பு தாசில்தார், கோவை அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே இந்த நடவடிக் கைகள் எல்லாம் கடந்த ஓராண்டு காலத்திலே வேகப்படுத்தப் பட்டிருக்கிறது. நிச்சயமாக 1991 ஆம் ஆண்டிற்குள்ளாக இந்தப் பணிகளை முடிவு செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மீண்டும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, என்னென்ன பணிகள் பாக்கி நிற்கிறது என்பதை இப்போதுதான் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், இரயில்வேயிடமிருந்து அதற்கு அனுமதி பெற்றாக வேண்டும், இரயில்வேயிடமிருந்து அதற்கான அனுமதி மறுக்கப்படுகிறதா? 4, 5, வருஷ காலமாக போன அரசு செயற்படவில்லை என்ற நிலை இருக்கிறது. அது நமக்குத் தெரிகிறது. ஆனால் அந்தத் தொகுதி முழுவதும் அனேகமாக கோவைமாநகரத்தினுடைய எல்லை வரையிலும் பெரிய பைப்பு கள் எல்லாம் பதிக்கப்பட்டாகி விட்டது. அதற்கு அந்தப் பக்கம் இதனுடைய கழிவு நீரைக் கொண்டுபோய் பரப்ப வேண்டிய ஒரு பெரிய இடம், அது அரசாங்கத்தினுடைய கையில் இருக்கக்கூடிய புறம்போக்குநிலம் என்று தெரிய வருகிறது, அங்கிருந்த கலெக் டருடன் நாங்கள் எல்லாம் போய் அந்த இடத்தை பார்வை யிட்டோம், அது 700 ஏக்கருக்கு மேல் உள்ள நிலம், அந்த நிலத்தை கையகப்படுத்த வேண்டிய வேலையில்லை. ஏனென்றால் அது அரசினுடைய நிலம், ஆனால் சில தனிப்பட்ட நபர்கள் பெரிய வசதிக்காரர்கள் அந்தப் பக்கத்தில் நிலம் வாங்கி இந்த

D
143798
V21,31'N90

[திரு. கே. ரமணி] [1990 ஏப்ரல் 2

தண்ணீர் அந்தப் பக்கத்திற்கு வந்தால் பக்கத்தில் இருக்கிற பெரிய கிராமங்களுக்கு எல்லாம் குடிநீருக்கு மோசமாகிவிடும்; என்ற மாதிரி எல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டு, தடுக்கப் பட்டுள்ளது என்று கூட நான் கேள்விப்படுகிறேன். அவை யெல்லாம் உண்மையா? அப்படியென்றால், அதையும் தடுத்து குறிப்பிடப்பட்ட 1991–ஆம் ஆண்டு முடிவதற்குள், இந்தத் திட்டம் திட்ட வட்டமாக நிறைவேற்றப்படும் என்ற உத்தர வாதத்தை அமைச்சரவர்கள் இங்கே கொடுப்பாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினரவர்கள் கேள்விப்பட்ட செய்திகளை எல்லாம் இங்கே சொல்லி யிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் தகுந்த அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அந்தத் தடைகளை நீக்கி, அவைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மீண்டும் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்,

5. மானியக் கோரிக்கைகள் 1990–91—
விவாதமும் வாக்கெடுப்பும்–(தொடர்ச்சி)
கோரிக்கை எண். 17-கல்வி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்;

''மானியக் கோரிக்கை எண் 17– கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,42,02, 62,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங் கப்பெற வேண்டும்''.

திரு. என், பழனிவேல்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக தமிழகத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு உடனடியாகக் கட்டிட வசதிகள் செய்து கொடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 17 – கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ, 10,42,02,62,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

11–00 மணி

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி அரசு மேல் நிலைப்பள்ளி கீற்று கொட்டகைகளை அகற்றி கான்கிரீட் கட்டிடம் கட்டுவதுகுறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 17– கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,42,02,62,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''



1990 ஏப்ரல் 2]

திரு. டி. சி. விஜயேந்திரையா; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிக்கான பணியாளர்கள் காலியாகும் பணியிடங்களை நிரப்பிட தடை செய்யப்பட்டுள்ளதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 17-கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,42,02,62,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. எஸ். டி. உகம்சந்த்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பத்தாயிரம் மக்கள் தொகைக்கு ஓர் பிளஸ் 2 மேல்நிலைப்பள்ளியைத் துவக்குவது சம்மந்தமாக விவா திக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 17–கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,42,02,62,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. எஸ். எஸ். ராமசுப்பு; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சி பள்ளி ஆரம்பிப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண்.17–கல்வி என்ற தலைப்பில் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,42,02,62,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'',

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூறவிரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையை முன் வைக்கிறபோது அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் வழங்க எடுத்துக் கொள்ளப்படுகிற கல்வி வளர்ச்சி பற்றிய பல்வேறு திட்டங்களும் பல்வேறு நடைமுறைகளும் ஆய்வுக்கு வருகின்றன என்பதை நான் தெரிவித்தாலும் கூட கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி என்ற தலைப்பில் ஒரே ஒரு மானியக் கோரிக்கை விளக்க அறிவிப்பாக இங்கே வழங்கப்பட்டது. இந்த ஆண்டு தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் துறை விளக்கம் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்களாலே கவ னிக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தனியான ஒரு விளக்கக்குறிப் பாக வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சற்று ஆழ்ந்த கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே கவனிக்கப்பட்டாலும் கூட, இந்தக் கோரிக்கையிலேயே இடம்

பெறுவதால் அதற்காக ஒரு தனி விளக்கக் குறிப்பேடு வழங்கப்பட்டிருக்கிறது. கல்வியோடு நேரிடையான தொடர்பு இல்லாவிட்டாலும் கூட, மேலும் மேலும் ஆய்வு செய்து எரிசக்தி வளர்ச்சியை உருவாக்க வேண்டும் என்பதற்காகக் கல்விக்கான கோரிக்கையோடு இணைக்கப்பட்டு, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தினுடைய கொள்கை விளக்கக்குறிப்பும் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஒன்றாக இணைத்து இந்தக் கோரிக்கையிலே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் இவற்றை நான் படித்ததாக நடவடிக்கை குறிப்புகளில் * ஏற்றிக் கொள்ள வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன், கல்விப்பணி சிறப்பாக நடைபெறுவதற்கும் பொது மக்களோடு மிக நெருக்கமான தொடர்பு உடையதாக அமைவதற்கும், எந்த ஒரு பள்ளிக்கூடமாக இருந்தாலும் அந்த வட்டாரத்துப் பொது மக்கள், பிள்ளைகளுடைய பெற்றோர்கள் கண்காணிப்போடு மேலும் தகுந்த முறையில் செயல்படுவதற்கும் தகுந்த ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலேயே நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின் மீது அகில இந்திய அண்ணா தி. மு. க.வின் சார்பாக கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்விக்காக இந்த ஆண்டு தமிழக அரசு 1042 கோடியே 2 லட்சத்து 62 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி இருப்பதை பார்க்கிறபோது மொத்தப் பட்ஜெட்டில் நான்கில் ஒரு பங்கு தமிழக அரசு கல்விக்காக செலவிடுகிறது. இந்தக் கோரிக்கையை பார்க்கிறபோது மத்தியிலே ரயில்வேக்கு என்று தனியாக பட்ஜெட் போடுவதைப் போல தமிழகத்திலே கல்விக்காக ஒரு பட்ஜெட் கூடப் போட்டால் கூட நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். கல்வி மானியத்தை பொறுத்தவரையில் வரவினங்கள் மிகமிகக் குறைவு. அனைத்துமே செலவினங்கள் அடங்கிய கோரிக்கை, கல்வி மானியக் கோரிக்கையாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த ஆண்டு ஐநூறு மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு ஒரு ஆரம்பப் பாடசாலை என்று அறிவித்திருப்பதை மாற்றி 300 மக்கள் தொகை கொண்ட ஒரு கிராமத்திற்கு ஒரு ஆரம்பப்பாடசாலையை அமைத்துத்தர வேண்டும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஓராசிரியர் பள்ளிகள் என்பதை மாற்றி ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் கல்விச் சாலைகளை மாற்றித்தர வேண்

* 178-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.



டும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு கூடுதலாக நியமனமாக இருக்கும் 1,200 இடைநிலை ஆசிரியர்களுக்கு தொகுப்பு ஊதியம் என்ற நிலையை மாற்றி அவர்கள் பெற்றுள்ள பயிற்சியின் அடிப்படையில் ஏற்கெனவே ஆசிரியர் பெருமக்களுக்கு வழங்குகின்ற சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், ஆரம்பப்பள்ளிகள் என்ற அடிப்படையில், மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

11.05 மணி

சில வகுப்புகளில் 90 முதல் 100 வரை மாணவர்கள் படிக்கின்ற காரணத்தினால், மாணவர்களுடைய கல்வித்தரம் குறைவதோடு, ஆசிரியர் பெருமக்களுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. அந்த அடிப்படையில், ஒவ்வொரு வகுப்பிற்கும் 40 பேர் அல்லது 35 பேர் என்ற அடிப்படையில், வகுப்புக்களை ஏற்படுத்தி, அதற்கேற்ப ஆசிரியர்களை நியமித்துக் கொடுக்குமாறு, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலுள்ள பெரும்பாலான அரசு மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு போதுமான இட வசதியும், கட்டிட வசதியும், பெஞ்சு நாற்காலி போன்ற வசதிகளும் இல்லையென்ற ஒரு பெரும் குறை தமிழகத்தில் பல ஆண்டுகளாகவே இருந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். எனது தொகுதியான பெரணமல்லூரில், அரசு மேல்நிலைப் பள்ளிக்காக, பொதுப் பணித்துறையினரால் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு இடையிலே ஒப்பந்தக்காரர் இறந்துவிட்ட காரணத்தால், அந்தக் கட்டிடம் அதே நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதிகாரிகளைக் கேட்கின்றபோது ஏற்கனவே 'பில்'லை வாங்கிவிட்ட காரணத்தினால் அரசாங்கமே முடிவு எடுத்தால்தான், கட்டிடத்தை கட்டுவதற்கு—தொடங்குவதற்கு வாய்ப்பாக இருக்குமென்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் சொல்கிறார்கள். அதே போல், பெரிய பொறுப்பிலே இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் வகுப்பு நடந்து கொண்டிருக்கின்றபோதே, அதன் கட்டிடம் இடிந்து விழுந்து விட்டது. நல்ல வேளையாக, மாணவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல் இருந்தாலும் கூட, அந்தக் கட்டிடம் இன்னும் கட்டி முடிக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே, பொதுப் பணித்துறையின் மூலமாக அந்தக் கட்டிடத்தைக் கட்டி கொடுக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பெரணமல்லூர் அரிசனக் காலனியில் ஒரு ஆரம்பப் பாடசாலை பல ஆண்டுகளாக பழுதடைந்து, இடிந்து விழுகின்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு, அந்தப் பள்ளிக்கூடம்

இருந்து கொண்டிருக்கிறது. பலமுறை கல்வித்துறை அதிகாரிகளிடத்திலேயும், ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரிகளிடத்திலேயும், எடுத்துச் சொல்லியும், அந்தப் பள்ளிக் கட்டிடத்தை பிடித்துக் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே, அதைக் கட்டிக் கொடுக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வடபாதி மங்கலத்தில் உயர்நிலைப்பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில், பொது மக்கள் சார்பாக வசூலித்த ரூ.25 ஆயிரத்தை அரசுக்கு கட்டி, 4 வருடங்களுக்கு மேலாகியும், அந்த பள்ளி இன்னும் மேல்நிலைப் பள்ளியாக ஆக்கப்படாமல் இருக்கிறது. வடபாதி மங்கலத்தைச் சுற்றி 25 கிலோ மீட்டர் தூரம் சென்றால்தான், உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், மேல்நிலைப் பள்ளிக்கு செல்லவேண்டிய ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அந்த அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகக் கட்டித்தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியில் இருக்கின்ற அரசு மேல்நிலைப் பெண்கள் பள்ளியின் ஒருபுறம் காம்பவுண்ட் சுவர் இல்லாமல் இருக்கிறது. காம்பவுண்ட் சுவர் இல்லாமல் இருக்கின்ற அந்த பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு, அந்த இடத்திலே சுற்றிக் கொண்டிருக்கின்ற மாடுகளும், பன்றிகளும், பாம்புகளும் பகல் நேரங்களிலே வகுப்புகள் நடக்கின்ற நேரங்களிலே, உள்ளே வருவதால், பலவிதமான தொந்திரவுகள் ஏற்படுகின்றன. ஆகையால், அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கட்டித் தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வடஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட காரணத்தினால், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் போன்றவை எல்லாம், டாக்டர் அம்பேத்கார் மாவட்டத்திற்கே சென்றுவிட்டன. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், திருவண்ணாமலையில் ஒரு கலைக்கல்லூரியும். செய்யாறிலே ஒரு கலைக்கல்லூரி மட்டுந்தான் இருக்கின்றன. மற்ற சலுகைகள் அனைத்தும், அம்பேத்கார் மாவட்டத்திற்கே சென்றுவிட்டபடியால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதி ஆண்டிலேயே திருவண்ணாமலையில் அரசு சார்பாக ஒரு பாலிடெக்னிக்கை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பெரணமல்லூர் தொகுதியில் மட்டும், உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப்பள்ளிகளும் சேர்ந்து 24 தான் இருக்கின்றன.



அந்தத் தொகுதி மிகமிகப் பின்தங்கிய தொகுதியாகும். கல்லூரிக்கு செல்ல வேண்டுமென்று சொன்னால் கூட, திருவண்ணாமலைக்கோ, செய்யாறுக்கோ செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் தமிழக அரசு, புதிதாக கல்லூரிகள் தொடங்குகின்றபோது, பெரணமல்லூர் வட்டாரத்திலே ஒரு புதிய கலைக் கல்லூரியை ஆரம்பித்து, அந்தக் கல்லூரிக்கு டாக்டர் எம். ஜி. ஆர். அரசினர் கலைக் கல்லூரி என்று பெயர் வைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

11–10 மணி

வடஆற்காடு மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகத்திற்குச் செல்லவேண்டுமானால் வேலூருக்குத்தான் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வேலூரிலே இருக்கின்ற சி.இ.ஓ. ஆபீசுக்குப் போகின்றபோது, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலிருந்து செல்கின்றவர்களை ஒரு விதமாகப் பார்க்கின்றார்கள். ஆகையால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சம்புவராயர் மாவட்டத்திற்கென்று உடனடியாக முதன்மை கல்வி அதிகாரி அலுவலகத்தைத் திறக்குமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்;

பல சலுகைகளை அளித்திருக்கின்ற தமிழக அரசு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கென்று கல்வித் துறையில் எந்தவிதமான ஒரு சலுகையும் அறிவிக்காதிருக்கின்ற காரணத்தினால் திறந்த வெளி விளையாட்டரங்கம் ஒன்று திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே அமைத்துக் கொடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக, முன்னாள் சபாநாயகர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே ஆரணிக்கென்று ஒரு கலைக்கல்லூரி வேண்டும் என்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆண்டு, சம்புவராயர் மாவட்டத்தில் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொது மக்கள் சார்பாக ரூபாய் 10 லட்சத்தை வசூலித்து அரசுத் துறைக்குக் கட்டினால் கல்லூரி வருவதற்கான வாய்ப்பினை நாங்கள் ஏற்படுத்தித் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான ஆயத்தப் பணிகளில், பணம் கட்டுவதற்கு ஊரில் இருக்கின்ற சர்வ கட்சிப் பிரமுகர்களும்; வியாபார மக்களும் தயாராக இருக்கிறார்கள். எனவே, அரசு ஆரணிக்கு கலைக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தித் தருமாறு மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தகுதி அடிப்படையில் நியமிக்கின்ற ஆசிரியர் பெருமக்களுக்கு இந்த ஆண்டு கொடுக்கின்ற 800 ரூபாய் சம்பளம் போதாது என்ற அளவிலே, அதை முறைப்படுத்தி, முறைப்படியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அரசு ஆசிரியர்களை நியமிக்கின்றபோது, பல இடங்களில் பலருக்கு

வாய்ப்புக் கிடைக்காமலேயே உள்ளதால், முன்னுரிமைப் பட்டியலிலே தந்து, குறிப்பாக தமிழக அரசு பெண்களுக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு என்று அனைத்து துறைகளுக்கும் சொல்வது போல, தாய்மார்களுக்கும் குறிப்பாக விதவைத் தாய்மார்களுக்கும் அந்தப் பட்டியலிலே முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பிலே முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில நேரங்களில், கல்லூரிகளானாலும் சரி, மேல்நிலைப் பள்ளிகளானாலும் சரி, கல்லூரி தேர்தல் என்று வருகின்றபோது மாணவர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும், கல்லூரி பிரின்சிபால்களுக்கும் வேண்டாத இடர்பாடுகள் எல்லாம் வந்து பதிலே சிக்கல் வந்து விடுகிறது. குறிப்பாக சென்ற ஆண்டு கூட செய்யாறு அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியிலே மாணவர் தலைவருக்கும் பிரின்சிபாலுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக கல்லூரியையே மூடுகின்ற அளவுக்கு பல இடங்களில் சிக்கல் வந்து விட்டது. அதைத் தவிர்க்கும் பொருட்டு, அரசாங்கமே கல்லூரிகளில் மாணவர் தேர்தல் நடக்கின்றபோது இப்படித்தான் நடக்க வேண்டும் என்ற ஒரு விதியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில இடங்களிலே வேலை செய்கின்ற ஆசிரியர் பெருமக்கள் சங்கம் என்ற பெயரில் சங்கத்தை வைத்துக் கொண்டு, அவர்கள் நடத்துகின்ற நாடகங்களைப் பார்க்கின்றபோது, ஒரு அரசியல் கட்சி தேர்தல்களை நடத்துவது போன்ற ஒரு சூழ்நிலையை தமிழகத்திலே காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் களைவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆசிரியர் பெருமக்கள் சொந்த ஊர்களிலே வேலை செய்கின்ற ஒரே காரணத்திற்காக, விவசாயத் தொழிலிலே ஈடுபட்டுவிட்டு, காலை 10 மணிக்குக் கூட வந்து அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தரிலே கையெழுத்துப் போடுகின்ற துர்ப்பாக்கியமான சூழ்நிலை இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

சில பள்ளிகளில் இன்ன ஆசிரியர்களிடத்திலே டியூஷன் வைத்துக் கொண்டால்தான் மேல் வகுப்புக்கு மாற்ற முடியும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தி, அவர்களிடத்திலே டியூஷனுக்கு வராத மாணவர்களைப் பெயில் ஆக்குகின்ற சூழ்நிலை நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களில் ஆசிரியர் சிட்பண்டு நடத்துவது, பைனான்ஸ் நடத்துவது, ஏன் சில இடங்களில் வேறுவிதமான தொழில்களிலும் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி ஈடுபடுகிறவர்களை அரசுத்துறை அதற்கென்றே ஒரு கண்காணிப்புக்குழு ஏற்படுத்தி



அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் அமைதி ஏற்பட்ட பிறகும்கூட, பக்கத்திலே இருக்கின்ற மின் விசிறி ஒன்று அரவம் எழுப்பிக் கொண்டிருக்கிறது. அது அமைதிப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

11.15 மணி

*திரு. சா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற கல்வித்துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

''கல்வியில் பெருக்கம் வேண்டும்
கலைகளில் புதுமை வேண்டும்
சொல்லிலே உண்மை வேண்டும்
சோர்விலா உள்ளம் வேண்டும்
கல்லினுள் தேரை போல
உலகினை எட்டிக் காணும்
புல்லிய நிலையை ஞானத்
தீயினாற் புகைத்தல் வேண்டும்.''

என்ற அறிவுக் கதிரவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் தேன் தமிழ்க் கவிதையில் தொட்டுத் தொடங்கி இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவையில் வழங்கிய எங்கள் தலைவர் தமிழ் நாட்டின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை இன்று அறிவு உலகம் பாராட்டிக்கொண்டிருக்கிறது; பொருளாதார நிபுணர்கள் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாடே நன்றி தெரிவித்துக்கொண்டிருக்கிறது. எதிர்கட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கவேண்டும் என்பதற்காக பூதக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு குற்றம் குறைகளைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். கல்வித் துறைக்கு தலையாய முன்னுரிமை அளித்து 1,042 கோடியை அள்ளி வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள் நமது முதலமைச்சரும் நிதி அமைச்சருமான டாக்டர் கலைஞர் அவர்கள். பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்களும், அறிவு உலக மேதை அண்ணா அவர்களும் பிறந்த இந்த மாநிலம் கல்வித் துறையில் முன்னணியில் இருக்கவேண்டும் என்ற லட்சியத்தைக் கொண்டு இயங்குபவர் நமது கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் ஆவார்கள். இந்த லட்சியத்தை ஈடேற்றும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கல்வித் துறைக்கு தலையாய

[திரு. சா. கணேசன்] [1990 ஏப்ரல் 2

முன்னுரிமை வழங்கி திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே அறிவாளர்கள் நிரம்பி இருந்த மாநிலம் நமது தமிழகம். இடைக் காலத்தில் எப்படியோ பின் தங்கிவிட்டது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற அனைத்திந்திய தேர்வுகளில் ஆண்டுக்காண்டு நமது மாநிலத்திலே வெற்றி பெறுபவர்கள் எண்ணிக்கை குறைந்துக்கொண்டே வந்துள்ளது. தாய்மொழிக் கல்வி கூட பெற முடியாத நிலையில் நமது மக்களிடையே புதியக் கல்வித் திட்டம் என்ற பெயரால் இந்தியைப் புகுத்தும் நஞ்சு எண்ணத்தோடு நவோதியா பள்ளிகளை ஏற்படுத்தி அதற்கு கோடிக்கணக்கான ரூபாயை கொட்டி செலவழித்து திட்டம் வகுக்கப்பட்டது, முந்திய காங்கிரஸ் கட்சி ஆட்சியில் ஆகும். இந்த நவோதியா பள்ளிகளுக்கு இடம் இல்லை என்று தேசிய முன்னணி ஆட்சி இன்றைக்கு அறிவித்து இருப்பது எங்கள் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி ஆகும்.

ஆங்கிலேய ஆட்சியின் போது கல்வி, மாநில அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருந்தது. ஆனால் இப்போது அது பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதிலே மத்திய அரசின் முடிவே இறுதியானது. இது மாநில சுய ஆட்சி கொள்கைக்கு முரணானது. இதை மாற்றுவதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். சரிந்து போன நிலையை சரி செய்வதற்கு மீண்டும் முன்பு இருந்த முனைப்போடு கல்விச் செல்வத்தை பெருக்க, அறிவுத் துறையில் ஒரு மாநிலம் முன்னணியில் அடிக்கோல இந்த வரவு-செலவுத் திட்டம் அடிகோலியிருக்கிறது என்பதை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்கிறேன்.

''நீராருங் கடலுடுத்த'' என்ற பாடல் பாடிய மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் நெல்லையில் ஒரு பல்கலைக் கழகம்; நீலத்திரை கடல் ஓரத்திலே நித்தம் தவம் செய்யும் குமரி எல்லையில் வள்ளுவப் பெருந்தகைக்கு வான் உயர சிலை அமைப்பு; புரட்சிப்பாகுயில் பாரதிதாசனுக்கும், அரசியல் சட்டங்கள் கண்ட மாமேதை அம்பேத்கார் அவர்களுக்கும் கோலாகலமாக நூற்றாண்டு விழா கொண்டாட ஏற்பாடு; இடையிலே நிறுத்தப்பட்ட அகர முதலியும், தமிழ்நாடு வரலாறு மீண்டும் தொடரும் என்ற தித்திக்கும் செய்தி; பழந்தமிழ் இலக்கணம் ஆங்கில மொழி ஆக்கம் செய்யும் திட்டங்கள், கடல் கொண்ட பூம்புகாரை கண்டு அறிய அகழ்வாராய்ச்சி; கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழ் இன மக்கள் தாய்மொழியை மறவாமல் இருக்க எளிய தமிழ் பாட நூல்கள் வெளியிடுதல்: உலகப் புகழ் பெற்ற நூல்களைத் தமிழ் வெளியீடுகளை மலிவு விலையில் கிடைக்கச் செய்தல்—இது எல்லாம் தமிழகத்தை இப்போது ஆளுபவர்கள், தமிழ் ஆய்ந்த தமிழ் மகனார் கலைஞர் என்பதை உலகம் பறை சாற்றவில்லையா? வருகின்ற ஆண்டில் கூடுதலாக



[திரு. சா. கணேசன்]
1990 ஏப்ரல் 2]

1,200 இடைநிலை ஆசிரியர்கள் நியமனம்; ஆசிரியர்களுக்கு ரூபாய் 15 மருத்துவ உதவி; இப்படி இருக்கின்ற நிதிநிலை அறிக்கையை இதைவிட சிறந்த முறையில் வேறு எவரால் திட்டம் தீட்ட முடியும். இதை குறை சொல்பவர்கள் தமிழ் நெஞ்சம் கொண்டவர்களாக இருக்க முடியாது, மாறாக நெஞ்சினில் நஞ்சு கொண்டவர்களாகத்தான் இருக்க வேண்டும். எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் போராடியும் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானிய குழுவின் பரிந்துரையின்படி ஊதியம் வழங்க மறுக்கப்பட்டது. நமது கலைஞர் ஆட்சியில் தான் பல லட்சக் கணக்கான ரூபாய் ஊதியமாக பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. கடந்த எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் கல்வி ஒரு வியாபாரப் பொருளாக கையாளப்பட்டு வந்தது. சுயநிதிக் கல்லூரி என்ற பெயரால் பலர் கொள்ளை அடித்து வந்தனர். அதற்கு முற்றுப்புள்ளி வைத்தது இன்றைய தி.மு.கழக ஆட்சி.

என்னரும் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னரும் கலை ஞானத்தால்
பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமயமலைபோல்
ஓங்கிடும் கீர்த்தியெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?
தாயெழில் தமிழை என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்த நாளோ
ஆரிதைப் பகர்வார் இங்கே?

என்றார் பாவேந்தர் பாரதிதாசன்

11.20 மணி

அந்தப் புரட்சிக் கவிஞர் கண்ட கனவை நனவாக்க அந்த நன்னாளைக்காண இந்த பாவேந்தர் நூற்றாண்டில் கால்கோள் செய்திருக்கிறார்கள் முதல்வர் கலைஞர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் என்றால் அது மிகையாகாது. இது பாவேந்தர் நூற்றாண்டு மட்டுமல்ல. உலக எழுத்தறிவு ஆண்டும் ஆகும். இந்த ஆண்டிலே அறிவார்ந்த திட்டங்கள் பல தீட்டி கல்வி நீரோடை நாடெல்லாம் பாய நமது அரசு மிகப் பரந்த நோக்கத் துடன் செயலாற்றி வருகிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்கள் இவ்வற்றையும் இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்கலைக்கழகங்கள் அனைத்துக்கும் ஒரே சட்டம் கொண்டு
வரவேண்டும். இப்போது ஆங்கிலேயர் காலத்து சட்டப்படிதான்
சென்னைப் பல்கலைக் கழகம் இயங்கி வருகிறது. அந்தச்
சட்டத்தில் பல திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும். பல்கலைக்
கழகங்களுக்கிடையே சம்பள விகிதங்களில் மாறுபாடு உள்ளது.
ஆசிரியர் நியமனம் போன்றவற்றில் வேறுபாடுகள் உள்ளன.
இவற்றையெல்லாம் களைவதற்கு தனித்தனிச் சட்டங்கள்
இல்லாமல் ஒரே சட்டமாக உருவாக்கப்படவேண்டும். பல்கலைக்
கழகத்தை நிர்வாகம் செய்வது ஆட்சிமன்றக் குழுவாகும். இந்தக்
குழுவில் ஏராளமான அரசு அதிகாரிகள் இடம்பெறும் விதத்தில்
எம்.ஜி.ஆர். ஆட்சி, சட்டம் கொண்டு வந்தது. இதனால்
சிண்டிகேட்டில் ஜனநாயகத் தன்மை குறைந்துபோய் விட்டது.
குறிப்பாக, சிண்டிகேட் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும்
உரிமை மட்டும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு உண்டு. ஆனால்
அவர்கள் தேர்தலில் நின்று சிண்டிகேட்டுக்குச் செல்ல வாய்ப்பு
இல்லாத நிலையில் உள்ளனர். அவர்களும் தேர்தலில் நிற்க
உரிமை வழங்கப்படவேண்டும்.

இலவசக் காலணி வழங்கும் திட்டத்தை, ஒன்றாவது வகுப்பு
முதல் எட்டாவது வகுப்பு வரை செயல்பட எம்.ஜி.ஆர். ஆட்சிக்
கொண்டு வந்த திட்டத்தை, கலைஞர் கைவிட்டுவிட்டதாக ஒரு
கட்சியினுடைய தலைவி, அம்மையார் அவர்கள் கூறி வந்து
கொண்டிருக்கிறார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் இந்தத்
திட்டத்தைக் கைவிடவில்லை. மாறாக 3 கோடியே 16 லட்சம்
ரூபாயை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கி உள்ளார்கள். அதைப்
போல சத்துணவுத் திட்டத்தையும் கைவிடவில்லை. சீருடை
திட்டத்தைக் கைவிடவில்லை, இலவச பாடப் புத்தகத்
திட்டத்தைக் கைவிடவில்லை. மாற்றான் தோட்டத்து
மல்லிகையும் மணக்கும் என்ற அண்ணனின் பொன்மொழிப்படி
கலைஞர் அவர்கள் அந்தத் திட்டங்களையும் தொடர்ந்து நிறை
வேற்றி வருகிறார்கள்.

தமிழ்ப் புலவர்கள், பி.லிட் பட்டம் பெற்றவர்கள்; தமிழில்
எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் பலர் வேலையில்லாமல் திண்டாடி
வருகிறார்கள். அவர்களுக்கு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும்
மட்டுமே வேலை வாய்ப்பு அளிக்க முடியும். அவர்களுக்கெல்லாம்
புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க ஒரு வழி இருக்கிறது.
தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு நமது அரசு இயங்குகிறது.
கடிதங்கள், அரசு ஆணைகள் எல்லாம் தமிழிலே எழுதப்படு
கின்றன. கோப்புகளெல்லாம் தமிழிலே உருவாக்கப்படுகின்றன.
அரசுத் துறையிலே பணியாற்றக் கூடிய அலுவலர்கள், அதிகாரி
களுக்கெல்லாம் போதிய தமிழ்ப் புலமை இல்லாத காரணத்தால்
எழுத்துப்பிழையோடும் இலக்கணப் பிழையோடும் எழுதுகிறார்கள்.
அவர்கள் எல்லோருக்குமே மொழிப் புலமை இருக்கும் என்று



எதிர்பார்க்க முடியாது. எனவே, ஒவ்வொரு துறையிலும்
ஒவ்வொரு அலுவலகத்திலும் ஒரு தமிழ்ப் புலவரையோ, தமிழ்ப்
பட்டம் பெற்றவரையோ நியமித்தால் அவர்களுடைய உதவியால்
நல்ல தமிழ் அரசு அலுவலகங்களில் நடமாட முடியும். இப்படிச்
செய்வதால் தமிழ் படித்தவர்களுக்கும் புதிய வேலை வாய்ப்புகள்
உருவாகும். அரசுத் துறையில் தமிழும் தவழ்ந்து விளையாடும்.
தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் இதற்கான அலுவலர்களைத்
தேர்ந்தெடுத்து நியமிக்கலாம்.

11-25 மணி

ஏற்கெனவே, முந்தைய ஆட்சியில் வேலையில்லாத தமிழ்ப்
புலவர்களை கோயில் தேவஸ்தானங்களில் வேலைக்கு அமர்த்தப்
போவதாக அன்றைய முதல்வர் அறிவித்தார். எத்தனையோ
அறிவிப்புகளோடு இதுவும் வெறும் அறிவிப்பாக நின்று விட்டது.
தேவநேயப் பாவாணர் பெயரால் அமைந்துள்ள சென்னை
மாவட்ட நூலகக் கட்டிடத்தில் பொது நிகழ்ச்சிகள், இலக்கிய
நிகழ்ச்சிகள் நடத்துவதற்கென மிகக் குறைந்த வாடகையில்
முன்பு நமது கலைஞர் அவர்கள் இருந்த காலத்தில் 4 அரங்
கங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதாவது 500 பேர் அமரக்கூடிய
அவ்வை சண்முகம் பெயரால் அமைந்த அரங்கம், அதற்கு 120
ரூபாய் மட்டுமே வாடகை இருந்தது. அந்த அரங்கம் இப்போது
இல்லை. முந்தைய ஆட்சியில் அந்த அரங்கு மத்திய அரசு கிடங்
குக்கு வாடகைக்கு விடப்பட்டது. அதற்கு அடுத்ததாக, 200 பேர்
கள் அமரக்கூடிய சொற்பொழிவு அறையும், கருத்தரங்க அறையும்
இருந்தது. அதில் ஒரு அறை இப்போது இல்லை. ஒரு அலுவலகத்
திற்கு விடப்பட்டு இருக்கிறது. ஒரு சொற்பொழிவுக் கூடம், ஒரு
கருத்தரங்க அறைதான் அங்கே இப்போது இருக்கிறது. சொற்
பொழிவு அறைக்கு 60 ரூபாயாக இருந்த வாடகை இப்போது 300
ரூபாயாக உயர்ந்து விட்டது. கருத்தரங்க அறைக்கு பத்து ரூபா
யாக இருந்த வாடகை 60 ரூபாய் என்று உயர்த்தி விட்டார்கள்.
அதனால் பல இலக்கிய அமைப்புகள் நிகழ்ச்சிகளை நடத்த
முடியாமல் இருக்கிறது. எந்த நிகழ்ச்சிகள் அங்கே நடந்தாலும்
காவல் துறையின் அனுமதி வாங்கவேண்டிய நிலை இருக்கிறது.
முன்பு நெருக்கடி நிலை இருந்த நேரத்தில் எந்தக் கூட்டம்
போட்டாலும் போலீஸ் முன் அனுமதி வாங்கவேண்டுமென்று
இருந்தது. நெருக்கடி நிலை நீக்கப்பட்டு பல்லாண்டு ஆகியும்,
இந்தக் கெடுபிடி நீங்கவில்லை. அதனால் மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வர
விரும்புகிறேன்.

ஆண்டுதோறும் பொது நூலகத் துறைக்குப் புத்தகங்கள்
வாங்கப்பட்டு வருகிறது. இந்த பொது நூலகத் துறையே முன்பு
நமது கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டது. பதிப்
பகங்கள் மட்டுமல்லாமல், தனிப்பட்ட எழுத்தாளர்களும் நூலகங்
களை மட்டுமே நம்பி தங்கள் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடு

கிறார்கள். தமிழ்நாட்டில் இப்போது 1500 நூலகங்கள் உள்ளன. எனவே ஒவ்வொரு புத்தகத்தையும் 1500 படிகள் வாங்கலாம். ஆனால் நிதிப்பற்றாக்குறை காரணமாக 300 படிகள் மட்டுமே வாங்கப்படுகின்றன. இதனால் எல்லாப் புத்தகங்களையும் எல்லா நூலகங்களும் வாங்க முடியாமல் போகிறது. அவைகளில் தரம் இல்லாதவைகளைத் தள்ளிவிடலாம். தரமுள்ள புத்தகங்களை மட்டுமே வாங்கவேண்டுமென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் நிதிப் பற்றாக்குறை காரணமாக வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது நூலகங்களில் நிதி நிலைமையை உயர்த்திட, நகராட்சிகள் மூலம் கிடைக்கிற நூலக வரியைக் கூட உயர்த்திக் கொள்ளலாம். முன்பு ரூபாய்க்கு மூன்று பைசாவாக இருந்த வரி 1972 லிருந்து 5 பைசாவாக உயர்த்தப் பட்டது. அதை இப்போது பத்து பைசாவாக உயர்த்த முயற்சிக்கலாம். பொது நூலகத்திற்குக் கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதி கட்டிடம் கட்டுவதற்கும் நிர்வாகச் செலவிற்குமே போய் விடுகிறது. எஞ்சியுள்ள கொஞ்சத் தொகையை வைத்துத்தான் புத்தகங்கள் வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, படிப்போர் எண்ணிக்கை பெருகி வருவதாலும், புத்தகங்களின் விற்பனை பெருக வேண்டியும், எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் நூலகங்களுக்கு கூடுதலான புத்தகங்களை வாங்க, அரசு கூடுதல் மானியம் வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் கல்வி நிலையங்கள் நன்கொடை என்ற பெயரில் லட்சக்கணக்கான பணத்தைப் பெற்று, கல்வியை வணிகமாக்கு வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதன் மூலம் ஏழை எளிய மக்கள் கல்வி பெற வாய்ப்பு ஏற்படும். (மணியடிக்கப் பெற்றது)

இன்னும் ஓரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மேலும் இன்றைக்கு குறிப்பாக நகரங்களில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் சி.பி.எஸ்.சி. பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை நாம் எல்லாம் அறிவோம். அந்தப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தரமான மாணவர்களாகவும், தேர்வுகளிலே நூற்றுக்கு நூறு பேர் வெற்றி பெருகிறார்கள் என்றும் சொன்னால், அதற்கு மூலகாரணமாக இருப்பவர்கள் ஆசிரியர் பெருமக்களும், அந்தப் பள்ளிகளில் பணியாற்றுகிற நிர்வாகிகளும் தான் காரணம். அப்படியிருக்கிறபோது, அந்தப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அரசுப் பள்ளி ஆசிரியர்களின் அளவுக்குச் சம்பளம் பெறுகிறார்களா என்றால் இல்லை. எனவே அரசாங்கம், அரசாங்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதியத்தைப் போலவே தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். இந்த ஆண்டிலே ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கு பணம் கல்வி மானியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அளவிற்கு பணம் ஒதுக்கிய உடனே கல்வியின் தரம் உயர்ந்துவிடுகிறதா, அல்லது நிர்வாகம் சரியாக நடைபெற்றுவிடுகிறதா என்பதைப் பற்றிச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். சொன்னதைச் செய்கிற இந்த ஆட்சி வந்தவுடனே செகண்டரி கிரேட் டீச்சர்ஸ் எடுத்தார்கள். இதிலே ஏற்பட்ட, இதுவரை இல்லாத, ஒருசில தவறுகளைச் சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன். முன்பெல்லாம் சி.இ.ஓ.-தான் செக்கண்டரி கிரேட் டீச்சர்லை எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த முறை அந்த சி.இ.ஓ. எடுக்கக் கூடாது என்று சொல்லி வேறு ஒரு சி.இ.ஓ.—வை வைத்து தான் பென்சிலால்மார்க் போடவேண்டுமென்று சொல்லி டைரக்டரேட்டிலே இருந்து லிஸ்ட் கொடுத்து....

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி 9, 10 வழக்குகள் இருக்கின்ற காரணத்தால் 'சப்ஜுடிஸ்' என்ற முறையில், இதைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டால் நான் மறுக்க முடியும் என்றாலும்கூட, அவர்கள் பேசுவதும் நான் பதில் சொல்வதும், நீதி மன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தால் இங்கு இடம் பெறக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் வழக்கு இருப்பது யாருக்கெல்லாம் வேலை கிடைக்கவில்லையோ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு திரு. சுந்தரதாஸ் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நீங்கள் நீதிமன்றங்களில் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற ஒரு வழக்கறிஞர் எனவே உங்களுக்கு அதிகமாக நான் சொல்லத்தேவையில்லை. பேரவை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஒரு விஷயம் பற்றிப் பேரவையில் பேசக்கூடாது என்பது உங்களுக்குத் தெரியும். It will be sub judice or res judicata.

திரு. மா. சுந்தரதாஸ்: துணைத் தலைவர் அவர்களே, நான் மெரிட்டுக்குள் போகவில்லை. The matter pending in the High Court has no relation to this. Those who are not selected have gone to Court. அதிலே அமைச்சர் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லலாம். மெரிட்டிலே அல்லது டெக்னிக்கல் பாயிண்ட்டிலே நான் போகவில்லை.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு போடப்பட்டிருக்கின்றது என்ற அளவுக்குத் தான் நாம் தெரிந்துகொள்ள முடியுமே தவிர,

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில விஷயங்களைக் குறிப்பிட்டு என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் சுரங்கப்பாதை தோண்டப்பட்டு அது இன்னமும் முடிவடையாமல் இருக்கிறது. வேலைகள் நின்று போய்விட்டன. காரணம் என்னவென்றால் நிலங்களைக் கையகப் படுத்துவது என்பதில் சட்டச் சிக்கல் ஏற்பட்டு, அது வழக்கு மன்றத்திற்குச் சென்று கடைசியாக இப்போது அவார்டு அளிக்கின்ற நிலையில் இருக்கிறது. எனவே அந்தப் பணியைத் துரிதப் படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரத்திலே இன்னும் பல இடங்களில் தனியார் தெருக்கள் இருக்கின்றன. மின் விளக்குகளே காணாத தெருக்கள் குடிநீர் குழாய்களே இல்லாத தெருக்கள், பாதாள சாக்கடை வசதியில்லாத தெருக்கள் எல்லாம் இன்னமும் இருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே அப்படிப்பட்ட தெருக்கள் இருக்கின்றன. கடந்த காலத்தில் கலைஞர் அவர்கள் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோது கிராஷ் புரோகிராம் ஒன்றைப் போட்டு ஒரு கோடி ரூபாய் செலவில் காரியங்களை எப்படிச்செய்தார்களோ, அதைப்போல இந்த ஆண்டில் (குறுக்கீடு) நம்முடைய முதல்வர் அவர்கள் தனியாக நிதியினை ஒதுக்கி இப்படிப்பட்ட தெருக்களை எல்லாம் ஏற்று அந்தப் பணிகளை நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

11.30 மணி.

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியிலே வடபழனி ஆண்டவர் கோயில் இருக்கிறது. அதற்கு அதிகமான நிதி வந்து கொண்டிருக்கிறது. அந்த நிதியிலிருந்து அந்தக் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் திருமணக்கூடங்கள் கட்டவேண்டுமென்று எழுதிக் கேட்டு அதற்குப் பின்னால் திட்டம் தீட்டப்பட்டு நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டு விழாவிலே அடிக்கல் போடப்பட்டு விட்டது. அந்தப் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல. பெண்கள் பாலிடெக்னிக் எங்களுடைய தொகுதியிலே அந்த அறநிலையத் துறையின் மூலமாக அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள் கிறேன்.

கடைசியாக ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் அசோக் நகரிலே அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது: அந்தப் பள்ளியில் மரத்தடியில் சில வகுப்புகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் காரணம் சமூக விரோதிகளின் செயல்களால் அந்த வகுப்பறைகளின் கூரைகள் எல்லாம் கிழித்தெறியப்பட்டதுதான். உடனடியாக அந்த வகுப்பறைகளை எல்லாம் சீர்படுத்தி அந்தப் பணிகளை எல்லாம் முறையாக நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.



வழக்கிலே என்னென்ன பிரச்சினைகளை எழுப்புகிறார்கள், என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆகவே இங்கே நாம் பேசும் கருத்து அதையொட்டிய கருத்தாக இருந்தால் அது எந்த வகையிலாவது அந்த வழக்கை பாதிக்கக் கூடும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து நான் பதில் சொல்லக்கூடிய கருத்தாக இப்போது அமைந்திருக்கவில்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை நான் ஏற்று அதை இத்தோடு நிறுத்தி விடுகிறேன்.

அடுத்தபடியாக எங்களுடைய மாவட்டத்தில் அதிகமான பேர் படிக்கிறார்கள். அதாவது கன்னியாகுமரி மாவட்டம் என்று சொன்னால் அங்கே அதிகமான பேர் படித்திருக்கிறார்கள். முன்பு 1972-லே கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஹெட்மாஸ்டர் ப்ரமோஷன் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால அவருக்கு ப்ரமோஷன் கொடுத்து வெளி மாவட்டங்களுக்கு, அதாவது, தென் ஆற்காடு அல்லது செங்கற்பட்டுக்கு மாற்றி, அவர்கள் திரும்ப எங்களுடைய மாவட்டத்திற்கு வரவேண்டும் என்றால் என்ன நடைமுறை கையாளப்பட்டது என்பதைச் சொல்கிறேன். டிரக்டரேட்டிலே லிஸ்ட் போடுவார்கள். இவர் 6-வது இடத்திலே இருந்து இருக்கிறார் என்றால் 5 பேர்களை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாற்றிய தற்குப் பிறகு தான் ஆறாவதாக இருக்கிறவர் உள்ளே வரமுடியும். இது அங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கும் தெரியும். முன்னால் இருந்த கலைஞர் ஆட்சிக்காலத்திலேதான் இந்தப் பிரச்சினை வந்து அதற்கான ஆர்டர் போடப்பட்டது. அதற்குப் பிறகு வந்த அரசு இதைக் கடைப்பிடித்து வந்தது. இப்போது இந்த அரசு வந்தவுடனே என்னுடைய பகுதியிலே இருக்கின்ற இரண்டு பேருக்கு ப்ரமோஷன் கொடுத்து அங்கேயே போட்டிருக் கிறார்கள். ஆனால் பத்தாண்டுக் காலம், செங்கற்பட்டிலே, தென் ஆற்காட்டிலே பணியாற்றிய ஆசிரியர்கள் அங்கேயே வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள்.

What is the guarantee for them to go back to Kanyakumari district before retirement?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்; தலைவர் அவர்களே, 10,15 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு முறை வைக்கப்பட்டிருந்தால் அதே முறைதான் இப்போதும் பின்பற்றப்படவேண்டும் என்பது கட்டாயம் இல்லை. மற்றொன்று தங்களுடைய மனைவியோ அல்லது தங்களைச் சேர்ந்தவர்களோ அந்தப் பகுதியில் பணி யாற்றுகிற காரணத்தாலோ நாங்கள் எங்கள் மாவட்டத்திற்குச் சென்றால்தான் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்றோ அல்லது வேறு சில தனிப்பட்ட காரணங்களாலோ விண்ணப்பித்திருப்பார்களேயானால் அதுவும் சில நேரங்களில் பரிசீலிக்கப் படுகிறது, எல்லாவற்றையும்விட, இந்த விதிமுறைகளைப் பற்றி

11.35 மணி

ஆசிரியர் சங்கம் தெரிவித்ததற்குப் பின்னர், அந்த விதிமுறைகளையே பின்பற்றுங்கள் என்று திரும்பவும் இலாகாவிற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கணவனும் மனைவியும் வேலை செய்வது வழக்கமான வாடிக்கை. அது பிரச்சினையல்ல. என்னுடைய மனைவிகூட வேலைசெய்கின்றார். காலேஜ் லெக்சரராக வேலை செய்கிறார். ஆனால் அது மெட்ராஸ் சிட்டி. கன்னியாகுமரி ஜில்லாவிற்கும் அது அப்ளிக்கபில் இல்லை என்று பல இலாக்காக்களில் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு பேர், மூன்று பேர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு தலைமை ஆசிரியர் பொறுப்புக்கு மாறுதல் கேட்கிறபோது, மற்றவற்றைவிட மனைவி அங்கே வேலைசெய்கிறார் என்ற முறையிலே சிலருக்கு உரிமை வந்துவிடுகிறது. சில பேருக்கு உடல்நிலைமை குறைவு காரணமாக முன் உரிமை வருகிறது. அவரவர்கள் பணி புரிகின்ற இடத்தை விட்டு மாற்றவேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது, அவர்களுடைய மாவட்டத்திற்கே மாற்றிவிடுவது என்ற நிலைமை ஏற்படுகிறது. இது அட்மினிஸ்ட்ரேடிவ் கன்வீனியன்ஸ் என்ற முறையிலே ஏற்படுவது. இது வேண்டுமென்று யாருக்கும் இடையூறாகச் செய்யப்படுவதல்ல.

திரு மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்சினை பேரால் இப்போது 4,5 டீச்சர்ஸ், ஹெட்மாஸ்டர்ஸ் எங்களுடைய மாவட்டத்தில் ஜூனியர்மோஸ்ட் ஆக இருக்கிறார்கள். ஆனால் 10 ஆண்டுகள் காலம் வேலை செய்த ஹெட்மாஸ்டர்கள் தென்னாற்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு என்ன வழி இருக்கிறது? இப்போது அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். என்னிடத்திலே நேரிலேகூட அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இனிமேல் நடக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். நடந்ததற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக டீச்சர்ஸ் ஸ்டுடன்ஸ் ரேசியோ. எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சுப்ரீம்கோர்ட்டிலே கேஸ் பெண்டிங் இருக்கிறது. என்னவென்று சொன்னால், மைனாரிட்டி ஸ்கூல்ஸ் நடத்துகின்றார்கள். அதிகமாக நடத்துவது எங்களுடைய



மாவட்டத்திலேதான். கேரள மாநிலத்திலே பொறுத்தவரையில் ஒரு பள்ளிக்கூடம் தொடங்கி, ஜூன் மாதம், ஜூலை மாதம் ஆகும்போது டி.இ.ஓ. வருகின்றார்கள். பிசிக்கல் வெரிபிகேஷன் ஆப் தி ஸ்டுடன்ஸ் நடத்துகிறார்கள். இத்தனை மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று நேரடியாகப் பார்த்து அங்கே ஆணைப் போட்டுவிட்டுப் போகிறார்கள். இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரையில் எனக்கு நன்றாகத் தெரியும், நான் படித்த பள்ளிக்கூடத்திலேகூட, 62–63-ல் ஹைஸ்கூல்கள், பள்ளிக்கூடங்கள்கூட இந்த பிரச்சினையில், சுப்ரீம்கோர்ட்டுக்கு போனதற்குப் பின்னால்கூட, உயர்நீதிமன்றம் உச்சநீதிமன்றம் சொன்னதற்குப் பிறகும் கூட அரசு பணம் கொடுக்கத் தயாராக இல்லை. 8,10 வருடங்களாக வேலைசெய்கின்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே உள்ள பிரச்சினையிலேகூட வழக்கு இருக்கிறது என்று சொல்லி நான் அதிகமாக விளக்கம் சொல்லாமல்கூட இருக்கலாம். ஆனாலும் வழக்கிலே இருக்கின்ற பிரச்சினையில் இரண்டு பக்கத்திலேயும் இருப்பதை சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளங்கிக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். சிறுபான்மையோராக இருக்கின்றவர்கள் அரசியல் சட்டப்படிக்கான உரிமையை அடிப்படையாகக் கொண்டு அவர்களாகவே தமது கல்வி நிலையங்களில் மேல் வகுப்புகளை பல இடங்களிலே தொடங்கிவிடுகிறார்கள். அரசாங்கத்தின் அனுமதி கேட்டு அதற்கான நிதி ஒதுக்க அரசாங்கம் இசைந்து ஏற்றுக்கொண்ட பிறகு அவர்கள் அதை தொடங்கி இருப்பார்களேயானால் அந்த நிதியை நாம் தரமுடியும். அவர்களாகவே வகுப்பைத் தொடங்கிவிட்டு, 2 ஆண்டு 3 ஆண்டுகள் நடத்தி நிதி தராத காரணத்தினால் நீதி மன்றத்திற்குப் போய் உயர்நீதி மன்றத்திலே நிதி வழங்கும்படியான ஆணை பிறப்பிக்கப்பட்டு அதன்படி தொடர்ந்து வழங்கவேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு இருப்பதன் காரணத்தினால், இதே முறையை எல்லோரும் கையாள நேரிடில் அவர்களுடைய விருப்பத்தின்படி அரசாங்கத்தினுடைய பணத்தை, வரி பணத்தை நாம் தரவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறோம். அந்த நிலையை மாற்றி உச்ச நீதி மன்றத்திலே மறுவிண்ணப்பம் செய்து தீர்ப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. மா சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்கத்து மாநிலமான கேரளாவில் மைனாரிட்டி என்று சொன்னால் 'இட் இஸ் ய பண்டமெண்ட்டல் ரைட் ஆப் தெம்' அது அவர்களுடைய ஜீவாதார உரிமை. மைனாரிட்டி ரைட். அதை நாம் எடுக்கமுடியாது. கேரளாவிலே என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், உண்மையிலே போகஸ் என்ற முறையிலே இருந்தால் கொடுக்கக்கூடாது. அதுவும் பிசிக்கல் வெரிபிகேஷன் அடிப்படையில்....

[1990 ஏப்ரல் 2

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையோர் உரிமை என்பதற்காக அவர்கள் பள்ளிக்கூடம் நடத்தலாம், கல்லூரி நடத்தலாம். அவர்கள் உரிமை பெறலாம். விதி முறைகளின்படி நடத்தலாம். ஆனால் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாத நிதிச் செலவை கட்டாயமாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றால், புதிய வரிச்சுமையை மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றுதான் பொருள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் "Point of Clarification" கேட்கிறார்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி, மைனாரிட்டி என்று சொல்கிறார்கள். மைனாரிட்டி ஆக இருக்கின்றவர்களுக்குள்ள பன்டமெண்ட்டல் ரைட்ஸ் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும். மைனாரிட்டியினர் இஷ்டம்போல் எந்த பள்ளிக்கூடம் வேண்டுமானாலும், கல்லூரியை வேண்டுமானாலும் ஆரம்பித்துவிட்டு அரசாங்கம் சம்பளத்தைக் கொடுக்கவேண்டும் என்று, பணத்தை கொடுக்கவேண்டுமென்று, கிராண்ட் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு அரசியல் சட்டத்திலே இடம் இருக்கிறதா என்பதை விளக்கமாகச் சொல்லட்டும்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது என்று சொன்னால் மாணவர்கள் இருந்தால், அதனுடைய ரேசியோ பிக்ஸ் செய்ய வேண்டும். ஒரு 30 மாணவர்கள் 50 மாணவர்கள் அளவுக்கு ஒரு ஆசிரியர் என்று சொன்னால், அங்கே வெரிபிகேஷன் வைத்து கொடுக்கவேண்டும். ஏதோ மைனாரிட்டியினர் தொடங்கியதற்காகக் கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அந்த பகுதிகளிலே 8.10 வருடங்களாக ஆசிரியர்கள் வேலை செய்கின்றார்கள். மாணவர்கள் படிக்கிறார்கள். மாணவர்கள் படிக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். செங்கற்பட்டு மாவட்டம் போன்ற இடங்களில் இப்படி இருப்பதாகச் சொல்கின்றார்கள். சும்மாவே தொடங்குகிறார்கள். அவர்கள் அரசாங்கத்தை ஏமாற்ற நினைப்பதாகச் சொல்கிறார்கள்...ஆனால் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமாகச் சொல்கிறேன். அங்கே இருக்கின்ற கன்னிகாஸ்தீரிகள் நடத்துகிறார்கள். அவர்கள் ஃபிராட் செய்யவில்லை. அந்த இடங்களிலே சொல்கிறேன். உண்மையாகவே நடத்துகின்றவர்களுக்காகக் கேட்கிறேன் உண்மயாகவே ரெககனிசன் வாங்கியிருக்கிறார்கள். ரெககனிசன் சீ.ஈ.ஓ. அவர்களிடம் பிரைமரி ஸ்கூல்ஸ்க்கு வாங்குகிறார்கள். ஹைஸ்கூல், ஹையர் செகண்டரி ஸ்கூல் என்றால் நம் டைரக்டரிடம் வாங்குகிறார்கள். வாங்கியதற்குப் பின்னர்....



1990 ஏப்ரல் 2]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரிகக்னிசன் வழங்குகிறபோது அரசாங்கம் நிதியுதவி செய்யத்தேவையில்லை, என்ற முறையில் மற்றவற்றிற்கு மாணவர் தேர்வு எழுதுவது போன்றவற்றிற்கு, ரிகக்னிசன் வழங்கப்படுகிறது. அந்த அளவுக்கு நிதியுதவி இல்லாமல், பள்ளிகட்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதை வைத்தும் பின்னர் நிதிக்காக வழக்குக்குப் போயிருக்கிறார்கள்.

11.40 மணி

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறு ரிகக்னிசன் தரப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் 1961–62 ஆம் ஆண்டில் அதற்கு முன்பு தொடங்கப்பட்ட பள்ளிக்கூடங்களில் ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு சாலரி கொடுக்கப்படவில்லை. ஆகவே, அத்தகைய உண்மையான பள்ளிக்கூடங்களுக்கு, 1960, 1961, 1962 க்கு முன்னால் தொடங்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு அரசு அனுமதி பெற்று தொடங்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு, ஆசிரியர்களுக்குரிய சாலரியை உடனே அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இன்கம்சர்டிபிகெட் வேண்டுமென்றால் அதற்கு மிகவும் தேவையாக இருப்பது ரேசன் கார்டு. இன்றைக்கு அங்கே என்ன நிலைமை என்றால், பேமிலி ரேசன் கார்டு என்பது பாஸ்போர்ட் மாதிரி மதிப்புள்ளதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ரேசன் கார்ட் இல்லாதவர்கள், தங்களுக்கு அது வேண்டுமென்று கேட்டால் கொடுக்க மறுக்கிறார்கள். இதனால் எந்த ஒரு ரெவின்யூ அதிகாரியும், இன்கம் சர்டிபிகெட், நேட்டிவிடி சர்டிபிகெட் போன்றவற்றைக் கொடுக்கத் தயாராக இல்லை. ரேசன் கார்டு வழங்கப்படாததால் அங்குள்ள மக்கள் ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். தயவுசெய்து குடும்ப ரேசன் கார்டுகளை வழங்குவது இந்த இலாகாவின் பொறுப்பு அல்ல என்றாலும் மாணவர்கள் இன்றைய தினம் பாதிக்கப்பட்டிருக்கிற நிலையில், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்படாததால், அந்தக் குடும்பங்களிலுள்ள மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது. படிப்பு பாதிக்கப்பட்டிருப்பதுடன் அரசு சலுகைகளும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு மாணவனும் இருக்கின்ற எந்த ஒரு குடும்பத்துக்கும் ரேசன் கார்டு வழங்கப்படவேண்டும். இன்றைக்கு வெளிநாட்டின் பாஸ்போர்டுக்கு உள்ள மதிப்பு ரேசன் கார்டுக்கு இருக்கிறது, மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் அதை கட்டாயம் வழங்க ஏற்பாடு செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேசன் கார்டு வழங்குவது என் துறை சம்பந்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வி மானியத்திலே ரேசன் அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே யார் யாருக்கு ரேசன் அட்டை இல்லையோ அவர்களுக்கு எல்லாம் முறைப்படி, விசாரணை செய்து, ஆய்வு செய்து அவர்களுக்கு வழங்கப்படும் என்பதை அரசு ஆணை மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் உரிய அதிகாரிகளைச் சந்தித்து விளக்கம் கேட்டால் விளக்கம் தருவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மன்றத்தில் அடிக்கடி புழுங்கல் அரிசியைப் பற்றிப் பேசக்கூடியவர் அந்த உறுப்பினர்தான். ஆகவேதான் ''Ration Card'' பற்றிப் பேசுகிறார்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேரளா பார்டரில் இருப்பவன். ஆதலால் அங்குள்ள அரிசி கஷ்டம் எனக்கு நன்றாகத் தெரியும்.. (குறுக்கீடு)

THE HON. DEPUTY SPEAKER ; You are always in the border. (சிரிப்பு)

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேசன் கார்டுகள் வழங்குவதைப் பொறுத்த வரையில் இந்த மானியத்தோடு சம்பந்தமில்லையென்று சொன்னாலும், ரேசன் கார்டு இல்லையென்று சொன்னால் இன்கம் சர்ட்டிபிக்கெட் கொடுக்க மாட்டார்கள். அதைத்தான் இங்கே சொல்ல வந்தேன்.

அடுத்து, பள்ளிக் கட்டிடங்களைப் பொறுத்த வரையில்—என்னுடைய கையிலே இருக்கிறது—எங்கள் மாவட்டத்திலுள்ள ஹைஸ்கூல், செகன்டரி ஸ்கூல் போன்றவைகளின் நிலைமை அந்த அளவுக்கு மிகவும் மோசமாக இருக்கிறது. ஏற்கெனவே களியிக்காவிளையில் இருக்கிற ஹைஸ்கூல் முந்திய சர்க்காரில் கட்டிக் கொடுக்கப்பட்டது..... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என் என்னிடம் காட்டாமல் பேசுகிறீர்கள் ?

(குறிப்பை உறுப்பினர் துணைத் தலைவரிடம் அளித்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசுங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, களியிக்காவிளையில் மற்றும் பேப்பலா



விளையில் இருக்கிற பள்ளிக்கூடங்களில் சரியாக கட்டிட வசதி கிடையாது. மற்ற மாவட்டங்களைப் பொறுத்தமட்டிலும் பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களை மெயின்டெயின் பண்ணுகிறது ஆனால் எங்கள் கன்னியாகுமரி மாவட்டம் மட்டும் 1956 ஆம் ஆண்டு வரை எல்லா ஹைஸ்கூல்களும் அரசாங்கத்தால் மெயின்டெயின் பண்ணப்பட்டன. நம்முடைய ஸ்டேட்டை பொறுத்த வரையில் கன்னியாகுமரி மட்டும் இந்த விஷயத்தில் தனி. காரணம் மற்ற மாவட்டங்களில் மிடில் ஸ்கூல், பிரைமரி ஸ்கூல் எல்லாம் பஞ்சாயத்து யூனியன்களின் பராமரிப்பில் இருக்கின்றன. ஆனால் எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற எல்லா ஹைஸ்கூல்களும் அரசுப் பள்ளிகள்தான். ஆகவே அரசே தான் இதற்கு ஆவன செய்ய வேண்டும். போதுமான பணம் வழங்க வேண்டும். ஆனால் எங்கள் மாவட்டத்திற்கு இந்தப் பணம் வந்து சேர்வதில்லை. சென்னையிலிருந்து, செங்கல்பட்டு, அப்புறம் திருநெல்வேலியுடன் அது தீர்ந்துவிடுகிறது. ஆகவே, பில்டிங்கைப் பொறுத்தவரையில் அதிகம் பணம் ஒதுக்க வேண்டும். மற்ற மாவட்டங்களில் இருப்பது போல மிடில் ஸ்கூல் வரை உள்ள பில்டிங்குகளைக் கட்டுவதைப் பொறுத்தவரையில் அதற்கான பொறுப்புகளை பஞ்சாயத்து யூனியன்களிடமும், ஊராட்சி ஒன்றியங்களிலும் கொடுத்தால், பஞ்சாயத்து நிலைமைக்கு ஏற்ப கமிஷனரே ஆங்காங்கு ஓலை கட்டியாவது ஓரளவு நிலைமைகளை சமாளிக்கலாம். ஆனால் இன்றைக்கு நிலைமை, கட்டிடங்கள் ஒழுகுகிற நிலைமை இருப்பதால் மழைக்காலங்களில் அந்தப் பக்கம் போக முடியவில்லை. எங்களைப் பார்த்து அங்குள்ள மக்கள் கேவலமாக பேசுகிற நிலைமை இருக்கிறது.

11.45 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுபூர்வமான இந்தக் கருத்தை நான் உணர்ந்திருக்கிறேன். அவர்கள் சொல்வதற்கு முன்னரே எனக்கும் தெரியும். இந்த மாதிரிப் பிரச்சினை தமிழ்நாடு முழுவதும், எல்லா ஒன்றியங்களிலும் பரவலாக இருக்கிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினரை தலைவராகக் கொண்டு ஒவ்வொரு வட்டத்திலும், அந்தச் சட்டமன்ற உறுப்பினர் இருக்கிற அந்த வட்டத்தில் ஒரு குழு அமைப்பதன் மூலமாக உடனடித் தேவையை நிறைவு செய்ய முடியுமா என்ற ஆலோசனையில் நான் இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய ஆர்வத்தை அது குறித்தும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கட்டிடங்கள் இடிந்து விட்டது என்றால் நாங்களே சென்று எல்லா உதவிகளையும் செய்கிறோம். பஞ்சாயத்து ஒன்றியத்திலே எத்தனையோ பள்ளிக் கூடங்கள் இருக்

கின்றன. எல்லா இடங்களிலும் ரிப்பேர் செய்ய முடியாது. ஒன்றிரண்டு என்றால் கவனித்துக் கொள்ளலாம். எனவே மிக மோசமான நிலையில் பள்ளிக்கட்டிடங்கள் உள்ள களியக்காவிளை தோட்டாவரம், பேப்பிலாவிளை போன்ற இடங்களில் பள்ளிக் கூடமே நடத்த முடியாமல் இருக்கிறது. இவைகளையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குவாலிட்டி ஆஃப் எஜுகேஷன் வேண்டும். நம்மைப் பொறுத்தவரையில் ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகள் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் குறைவாக இருக்கிறார்கள். நான் டெல்லியிலே ஒரு அதிகாரியிடம் கேட்டதற்கு இந்த ஆண்டு பீகார் மாநிலத்திலிருந்து 7000 பேர் ஐ. பி. எஸ். தேர்வுக்கு அப்பியர் ஆகப்போகிறார்கள் என்று சொன்னார். ஆனால் தமிழகத்திலிருந்து 700 பேர்தான் அப்பியர் ஆகிறார்கள். 700 பேர் எழுதினால் எத்தனைப் பேருக்குக் கிடைக்கும்? ஆகவே குறைந்தபட்சம் 10,000 பேராவது ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். தேர்வுகளை எழுதுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்போதுதான் 50, 100 பேர்களுக்காவது கிடைக்கும். அதற்காக ஒரு நிதி ஒதுக்கினால்கூடப் பரவாயில்லை. ஏனென்றால் இந்தி படித்தவர்கள் ஆளுவது நமக்குப் பிடிக்கவில்லை. எங்களுடைய மாவட்டத்திலே ஒரு எஸ். பி. வருகிறார் என்றால், இந்தி படித்தவரா என்று எங்கள் மாவட்டத்திலே உள்ளவர்கள் கேட்பார்கள். கலெக்டர் என்று சொன்னால், இந்தி தெரிந்தவர், தமிழ் தெரியாது. நாம் அவர்களைக் குறை சொல்லிப் பயனில்லை நம்முடைய குவாலிட்டியை இம்ப்ரூவ் பண்ணவேண்டும். அதற்காக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். இன்ஸ்டிடியூட்டுகளை மாவட்டந்தோறும் இல்லையென்றாலும் கூட, இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு சென்ட்டரைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து லைப்ரரி வசதிகள் கூட்டப்பட வேண்டும். இன்றைக்கு இன்டிசிப்ளின் கல்லூரிகளில், பள்ளிகளில் இருக்கிறது. பிரவுன் சுகா போன்ற போதைப் பொருள்கள் நமது மாநிலத்திலே, மாணவிகள் விடுதிகளிலேகூட நடமாடுவதாகச் சொல்லுகிறார்கள். நாம் சாராயக் கடைகளைத் திறக்கப் போகிறோம். ஆதலால் தயவு செய்து இதைக் கட்டுப்படுத்துவதற்காக, நல்ல திட்டத்தை தீட்டி, ஒரு அதிகாரியைப் போட்டு, மாணவ மணிகளை போதைப் பொருள்கள் அருந்தாத அளவுக்கு மாற்ற வேண்டுமென்று சொல்லி பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி சொல்லி, அமைகிறேன்.

* திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கல்வி மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றிக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்: மதுரைக்குத் தெற்கேயுள்ள தென் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை, ஒரு பல்கலைக் கழகம் அங்கே அமைக்கப்பட வேண்டு



மென்பதாகும். அவர்களின் கோரிக்கையை ஏற்று, திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் பல்கலைக் கழகம் அமைக்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் தமிழகத்தில் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம் தொடங்கியதுபோல இந்த ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் தொடங்க இருக்கிறது. ஆண்டுக்கு ஒரு பல்கலைக்கழகம் தொடங்குகிற ஆற்றல் மிகுந்த முதலமைச்சர், இனமானத் தலைவர், பாட்டாளிகளின் பகலவன் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, கல்விக் கடலின் கலங்கரை விளக்கமாக இருக்கிற கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு பாராட்டையும், நன்றியையும் தெரிவித்து, உரையைத் தொடங்குகிறேன்.

நடப்பு ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக சுமார் 1042 கோடியை, அதாவது மொத்த ஒதுக்கீட்டில் 23 சதவிகிதத்தை ஒதுக்கியிருப்பது கல்வி வளர்ச்சியின்பால் இந்த அரசு கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. நல்லாசிரியர் விருது பெற்றவர்களுக்கு இதுவரை வழங்கி வந்த பரிசுத் தொகை 500 ரூபாய் என்பதை ஆயிரம் ரூபாயாக உயர்த்தியதற்காகவும் நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்கள், அரசு நிதி உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் உள்பட 1 லட்சத்து 20 ஆயிரம் ஆசிரியர்களுக்கு மாதம் 15 ரூபாய் மருத்துவப்படி வழங்கி இருப்பதற்காக ஆசிரியர் சமுதாயம் இந்த அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. மாதம் 800 ரூபாய் தொகுப்பு ஊதியத்தில் 1200 இடைநிலை ஆசிரியர்களை நியமனம் செய்ய இருப்பது, வேலையில்லாத படித்து பட்டம்பெற்ற ஆசிரியர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமையவிருக்கிறது என்பதால் அதையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்கள் பணி நிலைகளில் ''சிறப்பு நிலை'' அனுமதித்ததற்காக ஆசிரியர் பெருமக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 8 வது வகுப்பு வரை கல்வி பயிலுகின்ற மாணவ மாணவியர்கள் பேருந்துகளில் இலவசமாக சென்றுவர பாஸ் வசதி, அதுமட்டுமல்லாமல் கல்லூரி வரையில் பயிலுகிற மாணவர்களுக்கும் பேருந்துகளில் 50 சதவீத சலுகைக் கட்டணம் வழங்கிட இருப்பதை ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், இன்றைக்கு செய்தித் தாள்களைப் பார்த்து நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்து அவர்கள் சார்பாக எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

11.50 மணி

வரும் கல்வி ஆண்டில் ஆரம்பப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு சுமார் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை சுமார் 5 கோடியாக உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு செய்வதன் மூலமாக கிராமப் பகுதிகளில் ஆரம்பப்பள்ளி கட்டிடங்கள் ஏராளமாக உருவாகி வழி பிறக்கும். என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்,

குறிப்பாக எனது தொகுதியில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் உள்ள கூரை வேயப்பட்ட பகுதி தீ விபத்து ஏற்பட்டு எரிந்துவிட்டது. அந்தப் பகுதியில் கட்டிடம் கட்டுவதற்காக 23 இலட்சம் ரூபாயில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அது சி. இ. ஓ. அனுமதியோடு அரசுக்கு அனுப்பப்பட்டு இருப்பதாக அறிகிறேன். அதற்கு உடனடியாக நிதி வழங்கி அந்தக் கட்டிடத்தைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இப்பள்ளியில் படிக்கின்ற மாணவியர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி பெறுவதற்கான இடவசதி பள்ளியில் இல்லாதகாரணத்தால் மிகவும் சிரமப் படுகிறார்கள். எனவே அப்பள்ளிக்கு மிக அருகில் உள்ள எல்லிஸ் நகரில் வீட்டுவசதி வாரியத்தால் விளையாட்டு மைதானத்துக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் நவீன வசதியுடன் கூடிய நல்லதொரு விளையாட்டு மைதானத்தை அமைத்திட ஆவன செய்யுமாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1989-90 கல்வி ஆண்டில் மொத்தம் 107 பள்ளிகள், நடுநிலை பள்ளிகளிலிருந்து உயர்நிலைப்பள்ளிகளாகவும், 75 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டு இருப்பது போல் வரும் கல்வி ஆண்டில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் அதிக எண்ணிக்கையில் உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வு விடைத் தாள்கள் திருத்தும் பணி "மைய மதிப்பீட்டு" முறையில் நடைபெறுவதால் முடிவுகள் விரைவாக வெளிவர ஏதுவாக இருக்கிறது. மேலும் தொழில் படிப்பு, பட்டப் படிப்புகளுக்கு மாணவர்களைத் தேர்வு செய்ய வசதியாக இந்த ஆண்டு மேல்நிலைக் கல்விக்கு தேர்வு முன்கூட்டியே நடத்தப்பட்டதை நான் பாராட்டுகிறேன்.

நடந்து முடிந்த பிளஸ் 2 தேர்வில் கணிதப் பாடத்தில் சுமார் 40 மதிப்பெண்களுக்கு மேலாக கேள்விகள் பாடத்திட்டத்தில் சேராத பகுதிகளிலிருந்து கேட்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. அதுபற்றி செய்தித் தாள்களிலும் செய்தி வெளி வந்து இருக்கிறது. இதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன் பாதிக்கப் பட்ட மாணவர்களுக்கு உதவிடுமாறும் அரசாங்கத்தை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கடந்த ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுப் பாடங்களில் பாடங்கள் வாரியாக அதிகமான மதிப்பெண்கள் பெறுவோருக்கு பரிசுகள் வழங்கியதுபோல், இந்த ஆண்டு முதல் பிளஸ் 2 தேர்வுகளில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும் பாடங்கள் வாரியாக அதிக மதிப்பெண்கள் பெறுவோர்களுக்கு—22 பாடங்களுக்கு, 66 பேர்களுக்கு அரசின் சார்பில் பரிசுகள் வழங்கிட இருப்பதை நான்



பாராட்டுகிறேன். அப்படி வழங்குவதன் காரணமாக மாணவர்களின் கல்வித் தரம் உயர்வதற்கு வழி வகுக்கும் என்ற கருத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டு இறுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் 3 மாதம் பயிற்சி தரும் திட்டம் ஒன்று செயல்படுவதாக மானியக் கோரிக்கையில் தெரியப்படுத்தப் பட்டு இருக்கிறது. ஆனால் அது பற்றி மாணவர்களுக்கும், மக்களுக்கும் சரிவர தெரியாத காரணத்தால் அதுபற்றி முறையாக விளம்பரப்படுத்த வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கு அரசு உதவித் தொகையாக ரூ. 380 வீதம் வழங்கி, 6 மாத காலத்திற்கு "தொழில் பழகும் பயிற்சிக் குழு" மூலமாக பயிற்சி அளிக்கப்படுவதற்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதோடு, அவ்வாறு பயிற்சி பெற்ற மாணவர்கள் எதிர் காலத்தில் தொழில் தொடங்க விரும்பினால் அரசு போதிய நிதி உதவியை வழங்குமாறும், தொடர்ந்து அவர்கள் டிப்ளமோ அல்லது டிகிரி கோர்ஸ் படிக்க விரும்பினால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

இளைஞர்களின் விளையாட்டுப் பயிற்சி மற்றும் மாநில விளையாட்டுக் கழகத்தின் செயல்பாடுகளுக்கு 1990-91-ஆம் ஆண்டுக்கு 3 கோடி வழங்கப்பட்டுள்ளது. இன்றைக்கு விளையாட்டுத் துறையில் அகில இந்தியப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் வண்ணம் அதை உயர்த்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

11.55 மணி

வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு மாதம் 75 ரூபாய் வீதம் 50 பேர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்படி 50 பேர்களுக்கு மட்டும் வழங்குவது என்று இல்லாமல், கூடுதலான எண்ணிக்கையில் அதிகத் தொகையினை—75 ரூபாய் என்பதை உயர்த்தியும் வழங்குமாறு அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டிகளில் பங்கேற்கும்பொழுது காயம்பட்ட, ஊனமுற்ற விளையாட்டு வீரர்களுக்கும் வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கும் "இராஜ சேகரன் நினைவு நிதித் திட்டத்"தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகையினை இன்றைய வாழ்க்கைச் செலவுக்கேற்ப—இன்றைய செலவினைப் பார்க்கின்றபொழுது

வழங்கப்படும் தொகை மிகக்குறைவாக இருக்கிற காரணத்தால் இதை உயர்த்தி கூடுதலாக வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு தருகின்ற வேலைவாய்ப்புகளில் விளையாட்டு வீரர் களுக்கு முன்னுரிமை கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மூன்று நகரங்களில் விளையாட்டு விடுதிகள் உள்ளன. அங்கே பயிலும் மாணவர்களுக்கு அரசின் சார்பில் மாதம் தோறும் உதவித்தொகை ரூபாய் 350 வழங்கப்படுகிறது. அந்தத் தொகையானது இன்றைய நிலையில் அந்த மாணாக்கர்களுக்குப் போதாத நிலையில் உள்ளது ஆகவே, அதையும் மனதிற்கொண்டு ரூபாய் 500 ஆக அதை உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிபுணர் குழு அமைத்து அகில இந்தியத் தரத்திற்கு நமது மாநில வீரர்களையும் உருவாக்கிடத் திட்டம் தீட்டி அதற்கான காரியங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

போட்டியின்பொழுது நான் முன்பே சொன்னதைப்போல, இப்படிப்பட்ட போட்டிகளில் எல்லாம் சில நேரங்களிலே அவர்கள் ஊனமுறுவதும், காயப்படுவதும் உண்டு. அதனால் போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து அதோடு அவர்கள் விலகிக் கொள்வார்கள். அவர்களுக்குச் சரியான மருத்துவ உதவி செய்து கொடுக்கவேண்டும். நிரந்தரமான வகையில் ஊனமுற்றிருந்தால், எதிர்காலத்திலே வேலை வாய்ப்புக்கான திட்டத்தை நீங்கள் நிச்சயமாக வழங்கிட வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி தரும் வகையில் மதுரையில் ஒரு நீச்சல் குளம் அமைத்திட வேண்டுகிறேன். நீச்சல் குளங்கள் என்பது சென்னையிலே இரண்டு இடங்களிலும், மற்ற இடங்களிலும் இருக்கின்றன. அதேபோல மதுரையிலேயும் ஏற்படுத்தித் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் ஆலோசனைப்படி கிராமப் பகுதிகளில் கல்வி வளர்ச்சிக்கான வழிவகைகளைக் கண்டறிய "பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்" நடத்தப்படுகின்றன. சமீபத்திலேகூட உசிலம்பட்டி கல்வி மாவட்டத்தில் நடைபெற்ற சீரமைப்பு மாநாட்டில் பொதுமக்களின் சார்பாக ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள இடங்களும், பள்ளிகளுக்குத் தேவையான உபகரணங்களும் நன்கொடையாக வழங்கப்பட்டன. மாண்புமிகு கல்வி அமைச்ச



ரவர்களும் அதிலே கலந்துகொண்டு அந்த விழாவிலே சிறப்புரை யாற்றினார்கள், தொடர்ந்து இது போன்ற பணிகளை ஊக்குவிக்குமுகத்தான் எல்லா மாவட்டங்களிலேயும் பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நடத்திட கல்வியதிகாரிகளும், பொது மக்களும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கடமை உணர்வோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலத்தான், திருச்சி மாவட்டத்தில் லால்குடியில் கூட சீரமைப்பு மாநாடு நடத்தி அதன்மூலம் இலட்சம் ரூபாய் பெறுமான பொருட்களை அரசுக்குக் கொடுத்திருக்கிறார்கள், தொடர்ந்து இப்பணியை நல்லமுறையிலே வெற்றிகரமாக நடத்தித்தர வேண்டுமென்று மீண்டும் அதிகாரிகளை நான் கேட்டுக் கொள்கிறேன்.

பணம் படைத்தவர்களை நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எத்தனையோ நல்ல காரியங்கள் கோயில்களுக்கு மற்றவர்களுக்குச் செலவழிப்பதைவிட இந்தப் பள்ளிகளில் படிக்கின்ற சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் எதிர் காலத்தில் நீங்கள் செய்திட முன் வர வேண்டுமென்று அவர்களையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் நூலக வளர்ச்சிப் பணிகளுக்காக 7.90 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.5,000-க்கும் கூடுதலாக மக்கள் தொகை கொண்ட 500 கிராமங்களில் நூலகங்கள் தொடங்கப்பட வேண்டுமென்ற சூழ்நிலை இருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 20 இடங்களில்தான் இப்பொழுது துவங்கப் போவதாக அறிகிறேன். அதை விரிவாக்கி எல்லாயிடங்களிலும் துவங்குவதற்கு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு நூலகங் களைத் துவங்குவதற்கு இப்படிப்பட்ட அடிப்படையான வேலைகளை அரசு மேற்கொள்ள வேண்டுகிறேன்.

சிலயிடங்களில் நூலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்ற காரணத்தால், நூலகங்களின் கட்டிட உரிமை யாளர்கள் அந்த இடத்தை எப்படியாவது காலி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் அந்த இடங்களில் அசௌகரியம் உள்ள சூழ்நிலையை உண்டாக்கிக் கொடுப்பதை அரசு கவனத்திற்கொண்டு, அந்தக் கட்டிடங்களைச் சீர் செய்வதற்கு ஆவன செய்யுமாறு அரசை கேட்டுக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் கல்வி வளர்ச்சிக்கான பல்வேறு ஆக்க பூர்வமான திட்டங்களை அறிவித்துள்ள இந்த அரசாங்கத்தை மனப்பூர்வமாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனது தொகுதியான மதுரை மத்திய தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி எதுவுமே கிடையாது. இருக்கின்றவை

களெல்லாம் மதுரையின் வடபகுதியில் இருக்கின்ற காரணத்தால்
எனது தொகுதியைப் பொறுத்த மட்டில், மதுரை மாநகரில்
இதன் பகுதியில் 'மகளிர் கலைக் கல்லூரி ஒன்றை அமைத்துத்தர
வேண்டுமென்று' கேட்டுக் கொள்கிறேன்'.

வெள்ளி விழா காண இருக்கும் மதுரை வேளாண்மைக்
கல்லூரியை வேளாண்மைப் பல்கலைக் கழகமாக உயர்த்திட
வேண்டுமென்று நமது இனமானத் தலைவர் மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்களையும் மாண்புமிகு வேளாண்மைத்
துறை அமைச்சரவர்களையும் நான் அன்போடு கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்,

மேலூரில் உள்ள அரசுக் கலைக் கல்லூரி 1969—ஆம் ஆண்டு
துவக்கப்பட்டபோது கல்லூரிக்கு மாண்புமிகு முதலமைச்சர்
டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயர் வைக்கப்பட்டிருந்தது.
பின்னர் வந்த ஆட்சியாளர்கள் அதை எடுத்துவிட்டார்கள்.
ஆகவே, கல்வி அமைச்சர் அவர்களை மீண்டும் முதல்வர் கலைஞர்
அவர்களின் பெயரை அக்கல்லூரிக்கு வைக்க ஆவன செய்ய
வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

12—00 மணி

கல்வி மானியக் கோரிக்கை மீது பேசுகிற வாய்ப்பினைத்
தந்தமைக்கு என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில்
மாற்று முகாமில் இருக்கிறவர்கள் பேசியதை நாம் பார்க்கிற
போது, கடந்த 10, 13 ஆண்டுகளாக கல்வித்தரம் குறைந்து
விட்டது என்று சொன்னார்கள். அவர்களை மிகப் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) கல்வியைப்
பொதுவான கண்ணோட்டத்துடன் சிந்தனை செய்து, இந்த
நாட்டில் கல்வி வளர்ச்சி அடைந்தால்தான் எதையும் செய்ய
முடியும் என்பதை அனைவரும் உணர்ந்து, செயல்பட வேண்டு
மெனக் கூறி வாய்ப்பிற்கு என்னுடைய நன்றியை மீண்டும்
தெரிவித்து உரையினை நிறைவு செய்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, கல்வி
மானியத்தில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன். இந்தக் கல்வி மானியத்தில் மாமன்றத்தில் பிரேரணைகள்
செய்து பேசுகிற நேரத்தில் கொள்கைக் குறிப்பில் சொல்லப்
பட்டிருப்பது கல்விக்கு தலையாய முன்னுரிமை அளித்து
நாட்டிலே கல்வியை வளரச் செய்ய வேண்டும் என்று சொல்லி
இருக்கிறார்கள். இன்றைக்கு சற்றேறக்குறைய 45 விழுக்காடு
எழுதப்படிக்கத் தெரியாத நிலையில் மக்கள் இருந்துகொண்டிருக்
கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாடு விடுதலை



பெற்று 43 ஆண்டுகளான பிறகு, அரசியல் சட்டத்தின்
அடிப்படை கல்வியை இலவசமாக அளிக்க வேண்டுமென்று
சொல்லியிருந்தாலும், இன்றைக்கும் 45 விழுக்காடு எழுதப்
படிக்கத் தெரியாத நிலை தமிழகத்திலும், நாட்டில் பல பகுதி
களிலும் இருப்பதை நான் எண்ணிப் பார்க்கிறபோது, இந்தத்
துறை இன்றைக்கு மேலும் பாதுகாக்கப்பட வேண்டும்,
வளர்க்கப்பட வேண்டும் என்பதை அவசியத்தை கல்வி அமைச்சர்
அவர்கள் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள்.

அப்படிப் பார்க்கிறபோது கடந்த ஆண்டுகளைக் காட்டிலும்
இன்றைக்கு ஏறக்குறைய 150 கோடி ரூபாய் அதிகமாக இத்
துறைக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்
கிறோம். ஆனால் 150 கோடியில் ஆசிரியர்களுக்கு கொடுத்த
சம்பள உயர்வும் சேர்த்து இன்னும் நியமிக்கப்படயிருக்கிற 1500
ஆசிரியர்கள் ஊதியமும் சேர்த்து இந்தத் தொகை வந்திருக்கும்
என்று கருதுகிறேன். அப்படியென்றால் தமிழகத்தில் இன்றைக்கு
கல்வி தேவையை நம்மால் இன்னும் பல ஆண்டுகள் ஆனாலும்
பூர்த்தி செய்ய முடியாத நிலை இருக்கிறது என்பதை எண்ணிப்
பார்க்க வேண்டும். குறிப்பாக ஆரம்ப கல்வியை இன்றைக்கு
பலமான அஸ்திவாரத்தோடு வழங்க வேண்டுமென்றால், அங்கே
போதிக்கப்படுகிற பாடங்கள், கல்விச்சாலை இவைகளை
பார்த்தால் கல்விச் சாலையாகவே இல்லை. தமிழகத்தில் பல
ஆண்டுகளாக ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டட வசதியே இல்லை
யென்று பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இருக்கிற கட்ட
டங்களும் பாழடைந்து இருக்கின்றன. பள்ளிக்கூடமே நடத்த
முடியாத நிலை இருக்கிறது. பள்ளி வகுப்புகளை இன்றைக்கு
வெளியே மரத்தடியில் நடத்துகிற நிலைமை இருக்கிறது.
குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியில்
வரதரெட்டி பள்ளி, வரதாயாளையம், மார்கொல்லபள்ளி,
பொன்னம்பட்டி என்ற பல பகுதிகளில் நான் நேரில் சென்று
பார்த்தேன். மாணவர்கள் உள்ளே உட்கார்ந்து படிக்க
முடியாத நிலை இருக்கிறது. அந்த அளவிற்கு சீர்கெட்டு
இருக்கின்றன.

அதைப்போல குடியாத்தம் நகரத்தை எடுத்துக்கொண்டால்
நெல்லூர்பேட்டை, கன்னம்பேட்டை போன்ற பகுதிகளில்
ஆரம்பப்பள்ளிகளுக்கு கூரையே கிடையாது. அங்கே படிக்கிற
பிள்ளைகளுக்கு கீழே உட்கார பலகையோ, ஆசிரியர்கள்
உட்கார நாற்காலி, பெஞ்சுகளோ இல்லாமல் இருக்கிறது.
இந்த அறிக்கையில் உயர்நிலைப் பள்ளி கட்டடத்திற்கும், ஆரம்ப
கல்வி பள்ளி கட்டடத்திற்கும் ஏறக்குறைய ஐந்து கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது 'யானை பசிக்கு சோளப் பொறி'
என்பதைப் போன்றது. இதனால் நம்முடைய தேவையை

பூர்த்தி செய்ய முடியாது. இன்றைக்கு இருக்கிற பள்ளிக் கட்டடங்களைப் பார்த்தால் நீண்ட ஹாலாக இருக்கிறது. அதிலே பல வகுப்புகள் 3, 4 வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஒரே நேரத்தில் அந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆசிரியர், என்ன பாடம் போதிக்கிறார் என்று பிள்ளைகள் கூர்ந்து கவனித்து படிக்கக்கூடிய வசதி கூட இல்லாமல் இருக்கிறது, அத்தகைய கட்டடங்களை நிச்சயமாக பழுது பார்ப்பதற்கும், புதிய கட்டடங்களை கட்டிக் கொடுப்பதற்கும் வேண்டிய உதவிகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம். என்றாலும் கூட இந்தத் துறைக்கு எப்படியாவது மேலும் நிதியை ஒதுக்கி, மக்களை பாதிக்கிற முறையில் வரியைப் போடாமல் மக்கள் நன்மை பெறுகிற முறையில் நிதியாதாரங்களைப் பெருக்குவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களை எடுத்துக் 12.05 மணி
கொண்டால்கூட, இதே நிலைமைதான். குடியாத்தம் நகரத்திலே உள்ள நெல்லூர்ப் பேட்டையில் உள்ள மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுச் சுவரே கிடையாது. வகுப்பறைகள் இல்லை. அங்கே வெட்டவெளியிலேதான் பாடங்கள் நடத்தப்படுகின்றன. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தந்த தொகுதியி லுடைய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைத்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று சொன்னார்கள். நான் ஏற்கனவே என்னுடைய சொந்த கிராமமான காட்பாடியில் பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் மூலமாக கட்டிடக் குழு அமைத்து, சற்றேறக்குறைய 3 லட்சம் ரூபாய் வரையில் வசூலித்து 12 வகுப்பறைகள் கட்டினோம். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களை அழைத்துத்தான் திறப்புவிழா நடத்தினோம். என்றாலும்கூட, அங்கே இடவசதி போதவில்லை.

மக்களுடைய மத்தியிலே, மாணவர்கள் மத்தியிலே படிக்க வேண்டும் என்ற எண்ணமும், பெற்றோர்களும் பிள்ளைகளை படிக்க வைத்தால்தான் எதிர்காலத்திலே ஏதாவது செய்ய முடியும் என்ற நிலையும் இருக்கிற காரணத்தால், ஆர்வம் இருக்கிற காரணத்தால், இன்றைக்கு கல்வியினுடைய தேவை அதிகரித்து வருகிறது. ஆகவே இதை நிறைவு செய்கிற முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் 10 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கூடங்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. ஆரம்பப் பள்ளிக் கூடங்களை நடுநிலைப் பள்ளியாகவோ அல்லது நடுநிலைப் பள்ளிகளை



உயர்நிலைப் பள்ளியாகவோ மாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு எந்தவிதமான முயற்சியும் இல்லை. ஆரம்பப் பள்ளிகளிலே படித்த மாணவர்கள் நடுநிலைப் பள்ளிகளுக்குப் போக வேண்டும் என்றால், 4 கிலோ மீட்டர் 5 கிலோ மீட்டர் சென்றால்தான் முடியும். என்னுடைய தொகுதியிலே ஆரம்பப் பள்ளிகள் சுமார் 184 இருக்கின்றன. 18 நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளைச் சுற்றிப் பார்த்தால், 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் போனால்தான் ஆறாம் வகுப்பு வரையில் படிக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. அவ்வளவு தூரம் சென்று படிக்க முடியாத நிலையிலே மாணவர்கள் இடையிலே நின்று விடுகிறார்கள். தொடர்ந்து படிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு இடையிலே நின்று விடுகிறார்கள். அதேபோல் எட்டாம் வகுப்பு வரை படித்துவிட்டு மேற்கொண்டு உயர்நிலைப் பள்ளிக்கு போக வேண்டும் என்றால், அதிக தூரம் போக வேண்டியதாக இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதியிலே இருக்கிற, குறிப்பாக நான் சொல்லவேண்டும் என்று சொன்னால், வளத்தூர், வரதாமி, ராமாலை போன்ற இடங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகள் இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றக்கூடிய நிலைமையிருக்கிறது. தமிழகத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும். பள்ளிகளினுடைய நிலையை உயர்த்த வேண்டும் என்றால், அதற்கு அந்தப் பகுதி மக்கள் பணம் கொடுக்க வேண்டும். இடம் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திலே விதிகளை விதித்திருக்கிறார்கள். இந்த விதிகளை வைத்துக் கொண்டு போனால், இன்னும் எத்தனையோ ஆண்டுகள் ஆனாலும்கூட இந்தக் கல்வியை உயர்த்துவதற்கு பள்ளிகளை அதிகப்படியாக ஏற்படுத்துவதற்கு சாத்தியம் இல்லாமல் போகும். ஆகவே அனைத்து இடத்திலும் செய்ய முடியாது. வாழ்வதற்கு கஷ்டப்படுகிற பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே, அரசாங்கமே இதற்கு போதிய நிதியை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று பாடப் புத்தகங்கள், மேல்நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால், வொக்கேஷன் கல்வியைப் போதிக்கிறார்கள். பல பள்ளிகளில், போதிய கருவிகள் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே கூட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போது சொன்னார்கள். அத்தகைய கூடங்களிலே நடமாடும் ஊர்தி மூலமாக வாரத்திற்கு ஒருமுறையோ, நாளைக்கு ஒரு முறையோ, சென்று பாடத்தை போதிக்கிற முறையிலே ஏற்பாடுகள் இருப்பதாகச் சொன்னார்கள். என்றாலும்கூட அது போதுமானதாக இல்லை. இந்தப் பாடத்தைப் போதிப்பதற்காக நியமிக்கப்படுகிற ஆசிரியர்கள் இருக்கிறார்களே, அவர்கள் பகுதி நேர ஆசிரியர்கள். அந்த பகுதி நேர ஆசிரியர்களிலே ஒரு நேர பகுதி ஆசிரியர்கள்,

[திரு. கே. ஆர். சுந்தரம்]. [1990 ஏப்ரல் 2

இரண்டு நேர பகுதி ஆசிரியர்கள் என்று இரண்டு முறைகள்
இருக்கின்றன. அதிலே ஒருமுறை போதிக்கிறவர்களுக்கு 400
ரூபாய் என்றும், இரண்டுமுறை போதிக்கிறவர்களுக்கு 800
ரூபாய் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படியும்கூட
ஆசிரியர்கள் போதாத நிலைமை இருக்கிறது.

மேல்நிலைப் பள்ளிகளிலே இன்றைக்கு தொழில் கல்வி
பயிலுகின்ற மாணவர்கள், வெளியிலே வருகிற நேரத்திலே,
ஏதாவது தொழில் செய்து வாழ்வதற்கான வழியிருக்கவேண்டும்
என்ற முறையில்தான் இந்தக் கல்வியைக் கொண்டு வந்திருக்
கிறோம். ஆத்தகைய நிலைமையிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே
பகுதி நேர ஆசிரியர்களை எடுத்துவிட்டு முழு நேர ஆசிரியர்கள்
இருந்து தொழில் பயிற்சி அளிக்கக்கூடிய வகையிலே ஆசிரியர்களை
அதிகமாக நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். அந்த ஆசிரியர்கள் கடந்த காலத்திலே தங்களை நிரந்தரப்
படுத்த வேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகளின் ஈடுபட்ட
நேரத்தில், கடந்த ஆண்டிலே கல்வி அமைச்சர் அவர்கள் அது
கவனிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். எனவே அந்த
ஆசிரியர்களை நிரந்தரப்படுத்தி, அவர்களுடைய ஊதியத்திற்கு
வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

அதேபோல், இன்றைக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்
கிறது. 1,200 புதிய இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்
படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்படுகிற
ஆசிரியர்களுக்குக்கூட 800 ரூபாய் தொகுப்பு ஊதியம் என்று
சொல்லப்படுகிறது. 2 ஆண்டுகள் முடிந்தால், அவர்களுக்கு
முழுச் சம்பளம் அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.
இப்படிப்பட்ட முறைகள் இன்றைக்கு தனியார் துறையிலேதான்
இருக்கிறது. வெளியிலே இருப்பவர்கள்தான், இப்படி நிரந்தரமாக
வேலை செய்யக்கூடிய, திறமை பெற்றவர்களுக்கு வேண்டிய
ஊதியத்தைக் கொடுக்காமல், தொகுப்பு ஊதியம் என்று
சொல்லி, பல்வேறு பெயரிலே கொடுக்கிறார்கள். அந்த முறையும்
அரசாங்கத்திலே வந்துவிடுமோ என்று அச்சம் இருக்கிறது. ஆகவே
அரசாங்கம் இதைக் கவனித்து முழு நேர ஆசிரியர்களுக்குக்
கிடைக்கின்ற ஊதியத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக்
கருத்து அடிப்படையில் ஏராளமான ஆசிரியர்கள் பள்ளிகளுக்குத்
தேவைப்படுகிறார்கள். 500 ஆசிரியர்களுக்குத்தான் புதிதாக
நிதி ஒதுக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. 500, 600 ஆசிரியர்கள்
மட்டும் நியமிக்கப்பட்டால், எத்தனையோ பள்ளிக்கூடங்களில்
ஆசிரியர்கள் போதுமான அளவு இல்லை என்ற குறை இன்னும்



10 ஆண்டுக்காலம் ஆனாலும் தீராது. மேலும் அதிக அளவு
எண்ணிக்கையிலே போட்டிக்கு வருகிற நிலைமையிருக்கிற
காரணத்தால், குறிப்பிட்ட 2 ஆண்டுக் காலத்திற்கு குறைந்த
ஊதியத்திலே அதிகம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும்
இரண்டு ஆண்டுக் காலம் கழித்து அவர்கள் முறையான பணியை
ஏற்பதற்கும், தற்காலிகமான பணியாக, இடைக்காலத்திலே
தருவது சமூகத் தேவையையும், பள்ளிக்கூடத்தினுடைய பணி
நிலைமையையும் கருதிச் செய்யப்பட்ட ஒரு முடிவு. இது
செயல்படுகிறபோது இரண்டு ஆண்டுக்காலம் முறையாக வேலை
பார்த்துவிட்டால், நிரந்தரமான வேலை அவர்களுக்குக்
கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் பணியாற்றலாம்.

12.10 மணி

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த ஆசிரியர்களை நியமிக்கிற நேரத்திலேகூட,
மாண்புமிகு அமைச்சரவர்களே சொன்னார்கள். இன்றைக்கு மிக
அதிகமான ஆசிரியர்கள் தேவைப்படுகிறது. குறிப்பாக என்னுடைய
தொகுதியிலேகூட நான் அங்கேயுள்ள கல்வி அதிகாரிகளைப்
பார்த்துக் கேட்டேன். நம்முடைய பள்ளிகள் எப்படி
நடக்கின்றன, எவ்வளவு ஆசிரியர்கள் தேவை. என்ன நிலைமை
என்று கேட்டு, அவர்களும் சொன்னார்கள். குடியாத்தம்
தொகுதியிலே மட்டும் இன்றைக்கு உள்ள பள்ளிகளுக்கு
ஆசிரியர்கள் தேவை. இன்றைக்கு இருப்பதைக்காட்டிலும்
மேலும் 120 ஆசிரியர்கள் தேவை என்று சொன்னார்கள்.
அவர்கள் அப்படிச் சொன்னாலும், மாண்புமிகு அமைச்சரவர்கள்
சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இது ஒரு
பகுதி என்று சொன்னால்கூட, தமிழகத்தின் இன்றைக்கு
பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் நியமிக்க வேண்டிய நிலைமை
இருக்கிறது. ஆகவே இதைக் கருத்தில் கொண்டு, மேலும்
அதிகப்படியான ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஏற்கனவே பல உறுப்பினர்கள் சொன்னார்கள்.
ஒரு வகுப்பில் 35, 40 பிள்ளைகள் இருக்கவேண்டுமென்று
சொன்னால், இன்றைக்கு 60, 70 பிள்ளைகள் இருக்கின்ற
நிலைமை இருக்கிறது. அவைகளை மாற்றுகின்ற முறையிலே
அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை மேலும் வலியுறுத்து
வதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். இன்றைக்கு கல்விக்காக
என்று ஒரு குறிப்பிட்ட வழியிலே மட்டும் செலவழிக்கப்படுகின்ற
ரூ. 1,042 கோடியில் ஆசிரியர்களுடைய சம்பளத்திற்காக செல
வழிக்கப்படுவது ரூ. 944 கோடி. 91 சதவீதம் ஆசிரியர் சம்பளத்
திற்காகவும், நிர்வாகத்திற்காகவும்தான். அதற்கு மேற்பட்ட
ஒரு பகுதிதான் மற்ற எல்லா வளர்ச்சிக்கும் செலவிட வேண்டி

[டாக்டர் க. அன்பழகன்] [1990 ஏப்ரல் 2

யிருக்கிறது. அதனால் ஏற்படுகிற இடர்ப்பாட்டை கொஞ்சமாவது
குறைத்துக் கொள்ளத்தான் இடைக்காலத் திட்டமாக
இப்படிப்பட்ட தற்காலிகப் பணிகளை இரண்டு ஆண்டுகளுக்கு
வழங்குவதன் மூலமாக அவர்களுக்கும் ஒரு வேலைவாய்ப்பு
கிடைத்து, அவர்களும் முறையாக வேலை பெறுவதற்கான
ஒரு பயிற்சியை இரண்டு ஆண்டுக் காலத்திலே பள்ளிக்கூடத்திலே
பணியாற்றி, பெற்றுக் கொண்ட நிலையில் அடுத்து அவர்கள்
நல்ல ஊதியத்தில் தொடர்ந்து பணியாற்றுகின்ற வாய்ப்பையும்
அவர்களுக்கு வழங்கிட இதன்மூலம் வழி செய்யப்பட்டிருக்
கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு அமைச்சரவர்கள்
சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்த ஆசிரியர்
நியமனத்தைப்பொறுத்தவரை கடந்தபல ஆண்டுகாலமாக கவனிக்
கப்படவே இல்லை. அதனால்தான் இத்தகைய ஒரு நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. நமது ஆட்சி அமைந்ததற்குப் பின்னாலே
இப்போது ஆசிரியர்கள் நியமனம்நடந்துகொண்டிருக்கிறது. அந்த
நியமனங்களில்கூட இன்றைக்கு வெளியிலே சொல்கிறார்கள்,
பள்ளிகளிலே சொல்கிறார்கள், பள்ளி தொடங்குகின்ற
நேரத்திலே இல்லாமல் ஆண்டு இறுதி வாக்கில் நியமிக்கக்கூடிய
நிலைமை இருக்கிறது என்று. வரும் ஆண்டிலாவது பள்ளிகள்
திறக்கப்படுகின்ற நேரத்திலே இந்த ஆசிரியர்கள் நியமனம்
செய்யப்படுவதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே
மாத்திரமல்ல' வட ஆற்காடு, வாணியம்பாடி, திருப்பத்தூர்,
குடியாத்தம், விஷாரம் போன்ற பல பகுதிகளிலே உருது பள்ளிக்
கூடங்கள் இருக்கின்றன. அந்த உருது பள்ளிகளுக்கான உருது
ஆசிரியர்கள் சற்றேறக்குறைய நான் அறிந்தவரையில் 30
ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எனவே அங்கேயுள்ள இடங்களில்
உருது பயிற்சி சொல்லிக் கொடுப்பதற்கு உண்டான ஆசிரியர்களை
நியமனம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களில்
மலையாள மொழிப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அங்கே
மலையாளம் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் இல்லை என்று
சொல்லப்படுகிறது. அவர்களையும் நியமனம் செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி ஏற்கெனவே நான் குறிப்பிட்டேன். நடுநிலைப்
பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், ஆரம்பப் பள்ளிகளை
நடுநிலைப் பள்ளிகளாகவும் உயர்த்துவதற்கு உண்டான
முறைகளிலே இன்றைக்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டு
மென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 2] [திரு. கே. ஆர். சுந்தரம்]

என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டொரு வார்த்தை
களைச் சொல்லி முடிக்கின்றேன். அதேபோன்று கல்லூரியிலேகூட
தொகுப்பு ஊதிய முறையிலே ஆசிரியர்கள் இருப்பதாகச்
சொல்லப்படுகிறது. அவர்களும்கூட தங்களை நிரந்தர
ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அதையும்
அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று தேர்வாணைக் குழுவிலே தினச் சம்பளம்
பெறுகின்ற நிலை இருப்பதைப் பற்றி கூட மாண்புமிகு
கல்வியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வேலை
தேடித்தரும் ஸ்தாபத்தின் மூலமாக வேலைக்குச் சேர்ந்தவர்கள்.
அதனாலே அவர்களுடைய பெயர் அங்கிருந்து எடுக்கப்படு
கிறது. அங்கே அவர்கள் வேலைக்கு சேர்ந்து 30 வயதிற்குமேல்
ஆகி விட்டால், வேறு வேலைகள் பெறமுடியாது. ஆகவே
அவர்களை தொடர்ச்சியான வேலைகளில் வைத்துக் கொள்வதன்
மூலமாகத்தான் அவர்களுக்கு வாழ்வு அளிக்க முடியும். அங்கே
முழுமையாக வேலை வாங்கக்கூடிய நிலைமை இல்லை
யென்று சொன்னால், அரசுத் துறைகளிலே அவர்களுக்கு
'டெபுடேஷன்' மூலமாக அவர்களைக் கொண்டு செல்ல
முடியும். வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு இல்லை.
30 வயதும் முடிந்துவிட்டது. தங்களுடைய எதிர்காலம் என்ன
வாகுமோ என்று பயந்து கொண்டிருக்கக்கூடிய அந்த
ஊழியர்களை நிரந்தரப்படுத்தி, அந்த வேலை முடிந்ததற்குப்
பிறகு, வேறு ஏதாவது வேலைகளில் அவர்களைச் சேர்க்க
முடியுமா என்பதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்

12.15 மணி

கடைசியாக என்னுடைய தொகுதியிலே திருமகள் ஆலைக்
[illegible] பி. காம்., பி.எஸ்.ஸி., எம்.எஸ்.ஸி., போன்ற
பட்ட படிப்புகள் துவக்குவதற்கு அனுமதி வேண்டும் என்று
கல்லூரியிலே கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த
அனுமதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அதேபோன்று குடியாத்தம் நெல்லூர் பேட்டையிலே ஒரு
அரசினர் மேல்நிலைப் பள்ளியிலே இங்கிலீஷ் மீடியம் 6 ஆம்
வகுப்பு துவக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதற்கு எந்தவித
பணச் செலவும் தேவையில்லை. ஆசிரியர்கள் புதியதாக தேவை
இல்லை. இருக்கின்ற ஆசிரியர்களை வைத்துக் கொண்டே
செய்ய முடியும் என்று அரசுக்கு எழுதியிருப்பதாக அறிகிறேன்.
அதனை துவக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு கடைசியாக மேல்முட்டலூர் என்ற ஊராட்சியிலே
தனியார் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளிக்
கூடத்திற்கு 2 மாதத்திற்கு முன்னால் நான் போனேன். அங்கே
ஒரு சின்ன மாட்டுக் கொட்டகை போன்று ஒரு கொட்டகை

போட்டு வகுப்புகளை நடத்துகிறார்கள். ஆசிரியர் ஒருவர் இருக்கிறார். 80, 90 பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்தக் கிராமத்திலே இருப்பவர்கள் சொல்லுகிறார்கள். அதை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். தனியார் நிர்வாகம் அங்கே சரிவர நடைபெறவில்லை என்று சொல்லி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகவே, அந்த பள்ளியை அரசு பள்ளியாக ஆக்க வேண்டும், எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தில் அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று ஆதரித்து என்னுடைய ஓரிரு கருத்துக்களை தெரிவித்துக் கொள்வதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைக் கூறி என்னுடைய உரையை துவக்குகிறேன்.

''நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமென திகழ்பரதக் கண்டமதில்....''

என்று தமிழ்த் தாய் வாழ்த்தை நமக்கு அளித்த மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் இன்றைக்கு ஒரு பல்கலைக் கழகத்தை, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தை நெல்லையிலே கண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகம் என்றென்றைக்கும் நன்றி உடையதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அந்த தமிழ் உணர்வோடு தமிழ்நாட்டில் கல்விப் பணியை சிறப்பாக ஆற்றுவதற்கு உறுதுணையாக இருக்கிற நம்முடைய கல்வியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியறிதலை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியில் அவர்கள் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் தான் இன்றைக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் 1,042 கோடி ரூபாயை போராடி பெற்று நாட்டு மக்களின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நல்ல திட்டங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவுதான் அரசாங்க பணத்தை நாம் செலவு செய்தாலும், 1,042 கோடி என்று பெரிதாக சொன்னாலும் கூட அதிலே 944 கோடி ரூபாய் சம்பள வகையிலேயும் மற்ற செலவுகளிலும் செலவு செய்து விட்டு, ஏறக்குறைய 100 கோடி ரூபாய் செலவிலேதான் இன்றைக்கு கல்விப்பணி இந்த நாட்டிலே நிறைவேற்றப்பட செலவிடப்படுகிறது என்று பார்க்கிற நேரத்தில் சற்று வருத்தமாக இருந்தாலும் கூட நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைக்கு கோரிக்கையிலே சொல்லியிருப்பது போல கல்வி அறிவு பெற்ற ஒவ்வொருவரும் மற்ற ஒருவருக்கு கல்வி அறிவு படிப்பித்து ''Each one Teach one'' என்று



சொல்லுகிற அந்தக் கொள்கையை சாதாரணக்குடிமகனே, அதைக் கையாண்டு நாட்டு கல்வி அறிவை, கல்வியறிவு பரவலாக்கும் விவரத்தை அதிகரித்து நாட்டு மக்களுக்கு கல்வி போதிக்கக்கூடிய நல்ல திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லியிருக்கிறார்கள். சாதாரண குடிமகனுக்கே அந்த உணர்வை ஊட்டுகிற அந்த வாசகத்தை தந்திருக்கிற பேராசிரியர் அவர்கள் 944 கோடி ரூபாயை சம்பளமாக பெறுகின்ற அந்த ஆசிரியப் பெருமக்கள் தங்கள் கடமையை மேலும் நன்றாக உணர்ந்து, நாட்டிலே கல்விப் பணியை சிறப்பாக செய்வார்கள் என்பதிலே இந்த நேரத்திலே எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரையில் பார்க்கிற நேரத்தில் நம்முடைய தமிழ்நாடு கல்வியிலே சிறந்து விளங்குகின்றது. 46.76 விழுக்காடு நம் இந்திய திருநாட்டைப் பொறுத்தவரையில் கல்வியிலே முன்னேறி இருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அகில இந்திய சராசரி என்று பார்த்தால் 36.23 என்று இருக்கிறது. அதேபோல மகளிரைப் பார்க்கிற நேரத்தில் இந்திய சராசரி 24.82 விழுக்காடு என்று இருக்கிற நேரத்தில் தமிழ்நாட்டு மகளிர் 34.99 விழுக்காடு படித்திருக்கிறார்கள். எனவே இந்த அளவிலே நமக்கு உயர்வு இருந்தாலும் எதிர்காலத்தில் மேலும் சிறப்பாக கல்வி அறிவிலே நாம் முன் நிற்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு அதற்கு நாம் அனைவரும் நல்ல முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கேரளாவிலே ஒரு மாவட்டத்திலே நூற்றுக்கு நூறு கல்வி அறிவிலே அங்கே வாழ்கிற மக்கள் நிறைவு பெற்றிருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே செய்தியை பார்த்தேன். அதுமாதிரி நம்முடைய அரசாங்கமும் ஒவ்வோர் ஆண்டுக்கு ஒவ்வொரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டு அந்த மாவட்டத்திலே கல்வி அறிவை அதிகப்படுத்துகிற வகையிலே பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொள்வதற்கு புதிய திட்டங்களை இந்த அவையிலே உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

12.20 மணி

அடுத்து செய்திருக்கின்ற முக்கியமான ஒரு விஷயம், வயது வந்தோர் கல்வி என்கிற அந்தத் திட்டத்தில், இன்றைக்கு 21 மாவட்டங்களிலே, ஏறத்தாழ 8,100 மையங்களில் இது போதிக்கப்படுகிறது. இதற்கான இந்த முதியோர் கல்வி திட்ட இயக்ககத்தில், வாழ்க்கைக் கல்வி, தொலைக்காட்சி மூலமாக மக்களுக்கு போதித்து வருமாறு, நல்ல சிறந்த அனுபவசாலியான டாக்டர் மா. நன்னன் அவர்களைத் துணைத் தலைவராக நியமித்து, அதன்மூலம் வெகு எளிதான முறையில், வயது

வந்தோருக்கு கல்வி போதிக்கக்கூடிய ஒரு நல்ல திட்டத்தை நடத்துவதற்கு வழிவகை செய்த, இந்த அரசை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வி அறிவு வளர்வதற்கு இன்னொன்று சிறப்பாக இருக்க வேண்டும். அது என்னவென்றால், நூலகங்கள் சிறப்பாக இயங்க வேண்டும். அந்த நூலகங்களுக்காக இந்த ஆண்டு ஏறத்தாழ ரூ. 7.90 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். மயிலைத் தொகுதியைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டில் 2 நூலகக் கட்டிடங்களை நாங்கள் திறந்திருக்கின்றோம். அது நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களின் முயற்சி. அதைப்போல், தமிழகம் எங்கணும், ஏறத்தாழ 1,543 மையங்களில் நூலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றைச் சீர்தூக்கி விட வேண்டும். ஐயாயிரத்திற்கும் குறையாத மக்கள் தொகை உள்ள ஊர்களில் நிச்சயமாக நூலகங்கள் அமைய வேண்டும். நூலகங்கள் அமைகின்ற அதேநேரத்தில், அந்த நூலகங்களைப் பயன்படுத்துவதற்கு, மக்களுக்கு நாம் விளம்பரத்தையும் செய்ய வேண்டும். பிரசாரத்தையும் செய்ய வேண்டும், என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக இன்னொரு பிரச்சினையை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புவது, நம்முடைய விளையாட்டுத் துறைக்கு என்று ஒரு இயக்குநர் இருக்கிறார்கள். விளையாட்டுத் துறை என்றும் ஒன்று இருக்கிறது. 1971 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன்; அன்றைய தினம், டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்று, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில், இந்த விளையாட்டு துறை உருவாக்கப்பட்டதாக நான் நினைக்கிறேன். தவறாக இருந்தால், ஒப்புக் கொள்கிறேன். இந்த விளையாட்டுத் துறையில் பல்வேறு நலத் திட்டங்களை அவர்கள் செயல்படுத்து வதற்கு முயன்றாலும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி மிகவும் குறைவான நிதி. ஏறக்குறைய 64 லட்சம் மாணவர்கள் இருக்கின்ற இந்த தமிழ்நாட்டில் அது பள்ளிக் கல்வியாக இருந்தாலும், கல்லூரிக் கல்வியாக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியாக இருந்தாலும், மிடில் ஸ்கூல் கல்வியாக இருந்தாலும், அத்தனையிலும் ஈடுபட்டிருக்கின்ற மாணவர்கள், விளையாட்டுத் துறையிலே ஒரு முன்னேற்றத்தைக் காண்பதற்கு, நாம் ஒதுக்கி இருப்பது மிகவும் குறைவானத் தொகை என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். sound mind is sound body என்று சொல்வார்கள். ''ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா'' என்று பாரதியார் பாடியிருக்கிறார். அதேமாதிரி சிறப்பான உடலமைப்போடு, ''Health is Wealth'' என்று சொல்லக்கூடிய விதத்தில் நல்ல உடலமைப்பும், அதன்மூலம் நல்ல உள அமைப்பும் அதன்மூலம் நல்ல அறிவாற்றலும் பெறக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாவதற்கு நாம் விளையாட்டுத் துறையை நிச்சயமாகப் பயன்படுத்தியாக வேண்டும். பல்வேறு



பள்ளிக்கூடங்களிலே விளையாட்டு மைதானங்கள் கிடையாது. பல்வேறு ஊர்களிலே இன்றைக்கு அரசாங்கம் முயற்சி எடுத்து, விளையாட்டுத் திடல்களைக் கட்டி வருகிறது. இருந்தாலும், இந்த விளையாட்டுப் பயிற்சியிலே நாம் அக்கறை செலுத்தாத காரணத்தினால்தான், இன்றைக்கு ஓட்டப் பந்தயத்திலே எல்லோரையும் துரத்திக் கொண்டு ஓடுகின்ற நிலைமைக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆகியிருக்கின்றோம் என்பதை நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன். எனவே, நாம் அதிலே கவனம் அதிகமாகச் செலுத்த வேண்டும். அதிலே அக்கறை உள்ள டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழக முதல்வர் அவர்கள் நம்முடைய தமிழ்நாட்டைச் சார்ந்த கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த் அவர்களை கௌரவப்படுத்தி இருக்கிறார்; அவருக்கு வீட்டுமனை கொடுத்திருக்கிறார். அதைப்போல, பல்வேறு விளையாட்டு வீரர்களுக்கு தக்க உதவிகளைச் செய்திருக்கிறார். ஆகவே ஒரு நல்ல திட்டமாக உருவாகி, இந்த நாட்டில் விளையாட்டின்மூலம் நாட்டு மக்களின் மனத்தையும், மன வளத்தையும், அறிவுத் திறத்தையும் வளர்ப் பதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு தனிப்பட்ட முறையிலே ஒரு அமைச்சகம் அமைத்தால்கூட, மிகச் சிறப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தாற்போல், நம்முடைய தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கக்கூடிய விதத்தில் இங்கே இருக்கின்ற பல்கலைக்கழகங் களிலே அண்ணா பல்கலைக்கழகம் சிறப்பாக விளங்கி வருகிறது. அந்த அண்ணா பல்கலைக்கழகத்தில் படிம வளர்ச்சி என்கின்ற திட்டத்தின்கீழ், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அந்தத் திட்டத்தை அகில இந்திய அளவில், யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன்கூட உதவி செய்து, இன்றைக்கு பெருத்த விஞ்ஞான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. அதன் காரணமாக, இந்திய திருநாட்டில், பல்வேறு பல்கலைக்கழகங்கள் இருந்தும், இங்கே வந்து பயிற்சி பெறக்கூடிய ஒரு நல்ல நிலைமையில் அந்தப் பல்கலைக்கழகம் இருந்து கொண்டிருக்கிறது. ஓஹியோ யூனிவர்சிடி என்று அமெரிக்காவிலே இருக்கின்ற பல்கலைக் கழகமும், அண்ணா பல்கலைக்கழகமும் இன்றைக்கு ஒருவருக்கொருவர் ஒப்பந்தம் செய்து கொண்டு, கல்வி வளர்ச்சியிலே, விஞ்ஞான வளர்ச்சியிலே பீடுநடை போடுவதில் அண்ணா பல்கலைக்கழகம் சிறந்து விளங்குகிறது. அப்படிப்பட்ட பல்கலைக் கழகத்திற்கு மேலும் நிறைய நிதியை ஒதுக்கி, நம்முடைய நாட்டின் விஞ்ஞான திறத்தையும், அறிவு வளத்தையும், பல்வேறு புதிய கண்டுபிடிப்பு களையும் செய்வதற்கு வாய்ப்பு வசதிகளை இந்த நேரத்திலே அரசாங்கம் தேடித் தரவேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். கணபதி] [1990 ஏப்ரல் 2

12.25 மணி

அடுத்து, எனக்கு இருக்கின்ற குறையை நான் இங்கே சொல்லிதான் ஆகவேண்டும். மயிலை தொகுதியைப் பொறுத்தவரையில், விளையாட்டு மைதானம் என்று ஒன்றும் கிடையாது. பெசன்ட் நகரில் அங்கே அறிஞர் அண்ணா பள்ளிக்கூடம் இருக்கிறது. உயர்நிலைப்பள்ளி இருக்கின்றது. அந்தப் பள்ளிக்கு அருகிலேயே இருக்கின்ற ஒரு காலி மைதானத்தில் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் கட்டிடம் கட்ட முனைகின்றார்கள். அதைத் தடுப்பதற்கு மக்கள் இயக்கமும், நடக்கின்றது. நீதிமன்றத்திலும் வழக்கு நடக்கின்றது. இருந்தாலும் மத்திய அரசை எதிர்த்து நாங்கள் வெற்றி பெறமுடியுமா என்றால் நிச்சயமாக அது சந்தேகத்திற்குரிய ஒரு கேள்வியாகத்தான் இருக்கிறது. எனவே, இந்த அரசாங்கம் அதற்கு முயற்சி எடுத்து அங்கே இருக்கின்ற காலி மனையை ஒரு விளையாட்டு மைதானமாக, ஸ்டேடியமாக ஆக்கித் தருவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, 'ஆல் இந்தியா கவுன்சில் ஃபார் டெக்னிக்கல் எஜுகேஷன்' என்கின்ற ஒரு அமைப்பு வந்து, அதற்கு சட்ட ரீதியாக அந்தஸ்தைக் கொடுத்து, நம்முடைய மாநிலத்தின் உரிமையே பறிபோகக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இங்கே இருக்கின்ற பொறியியல் கல்லூரிகள் எல்லாம் அந்த ஒரு அமைப்பின் அங்கீகாரத்தைப்பெற்று, ஒப்புதலைப் பெற்றுத்தான் இங்கே இருக்கமுடியும் என்கின்ற ஒரு நிலையும், புதிதாகத் துவக்கப்பட வேண்டிய எந்த ஒரு கல்லூரியாக இருந்தாலும், எந்த ஒரு பயிற்சி மையமாக இருந்தாலும், டெக்னிக்கல் எஜுகேஷனைப் பொறுத்தவரையில் அவர்களுடைய ஆதரவை, ஒப்புதலைப் பெற்றால்தான் இருக்கமுடியும் என்ற நிலைமை, இன்றைக்கு அந்தச் சட்டம் 1988 மார்ச்சு மாதம் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வந்த பிறகு இங்கே உருவாகியிருக்கிறது. அதற்கு ஆதரவாக இன்றைக்கு பல்வேறு உயர் நீதிமன்ற, நீதிமன்றத் தீர்ப்புகளேகூட, அந்தச் சட்டத்திற்கு ஆதரவாக இன்றைக்கு இருக்கின்றன. நம்மைப் பொறுத்தவரையில், மாநில சுயாட்சி கேட்கின்றோம், மாநில சுயாட்சி. . . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தச் செய்தியையொட்டி ஒரு விளக்கம். அண்மையில் உச்சநீதிமன்றத்தில் உயர் நீதிமன்றத் 'தீர்ப்பு' தடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. 'ஸ்டே' வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கணபதி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை பெறப்பட்டிருந்தாலும், 'கன்கரண்ட் லிஸ்ட்' என்றப் பொதுப்பட்டியலிலேயிருந்து கல்வி, மத்திய சென்ட்ரல் லிஸ்ட் என்று சொல்லக்கூடிய அந்த லிஸ்ட் ஒன்றிற்கு எடுத்துச்



1990 ஏப்ரல் 2] [திரு. என். கணபதி]

செல்லப்பட்டு இன்றைக்கு அவர்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தின் அடிப்படையிலே அந்தச் சட்டம் இயற்றப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. நம்முடைய மாநில சுயாட்சிக் கோரிக்கையில், திராவிட முன்னேற்றக் கழகம், கல்வி மாநிலத்தின் பட்டியலிலே சேர்க்கப்படவேண்டும், மாநிலங்களின் பட்டியலிலே கல்வி சேர்க்கப்பட்டால்தான் பல்வேறு நலத் திட்டங்களை அமல்படுத்தி கல்வியை வளர்க்க முடியும் என்ற நல்ல கொள்கையை நாம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம். எனவே, அந்த அடிப்படையில் அந்த 'ஆல் இந்தியா கவுன்சில் ஃபார் டெக்னிக்கல் எஜுகேஷன்' என்கின்ற அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு நம்மாலான முயற்சியை நாம் இந்த நேரத்தில் செய்யவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் என்ற அதிகாரியை வைத்துக்கொண்டு, அவர் சொல்வது சட்டமாகாது, ஆனால் மத்தியிலே இருக்கின்ற யாரோ ஒரு அப்பர் டிவிஷன் கிளார்க் சொல்வது சட்டமாகும் என்ற நிலைமையை மாற்றவேண்டும். நம்முடைய அதிகாரிக்கும் அந்தஸ்தைக் கொடுக்கவேண்டும், அரசிற்கும் அந்தஸ்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, மைனாரிட்டி, மைனாரிட்டி என்று சொல்லக் கூடிய ஒரு நிலைமை இந்த நாட்டிலே மிக வருந்தத்தக்க சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. மைனாரிட்டி என்று சொல்லக்கூடிய நேரத்தில் அரசியல் அமைப்பின் 30-வது பிரிவின் கீழ், அவர்களுக்கு சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இல்லையென்று நான் சொல்லவில்லை. அவர்களுடைய மொழியைக் காப்பாற்றிக் கொள்ள, அவர்களுடைய மதத்தைக் காப்பாற்றிக் கொள்ள, அவர்களுடைய இனத்தைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் பள்ளிகளை அமைத்து நடத்தி வருவதற்கு அவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல்வேறு மைனாரிட்டி இனங்களைச் சேர்ந்தவர்கள் தாங்கள் மைனாரிட்டி, மைனாரிட்டி, எனவே நாங்கள் பொதுவான கல்வி ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதற்கு எங்களுக்கு எத்தவித அனுமதியும் தேவையில்லை, அரசாங்கம் எங்களுக்கு எல்லா உதவியும் செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, பாதிக்கப்பட்டிருப்பது ஆசிரியர் பயிற்சி மையங்கள் தான். ஏதோ ஓரிரண்டு ஆசிரியர் பயிற்சி மையங்களில் சிறப்பான முறையில், தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களை நல்லமுறையில் பயிற்சி அளித்து, எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்கு அந்த மையங்கள் பயன்பட்டாலும், அந்த வியாபாரப் பொருளாக மாற்றக்கூடிய ஏறக்குறைய 200-க்கு மேற்பட்ட ஆசிரியர் பயிற்சி மையங்கள் இன்றைக்கு தமிழ்நாட்டில் அங்கீகாரம் இல்லாமல் மைனாரிட்டி என்ற பெயரிலே இருந்துகொண்டு இருக்கின்றன.

இதை அங்கீகாரம் செய்யாமல் இருப்பதற்கு இந்த அரசு கடுமையான வரன்முறையை நியமித்து 1977-லே விதிமுறைகள் போட்டார்கள்; 1989 மே மாதத்தில் சில விதிமுறைகள் போட்டார்கள். இந்த விதிமுறைகளை சற்று கடுமையாக கடைபிடித்து நல்ல பயன் உள்ள ஆசிரியர் மையங்களை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக ஆசிரியர் கல்விக்காக அமைக்கப்பட்டு இருக்கின்ற அந்த இயக்குநர் அலுவலகம், அந்த இயக்குநர்களும் இதிலே தனிக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் "காலேஜ் ஆப் ஆர்ட்ஸ் அண்டு கிராப்ட்ஸ்" என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. இது ஏறக்குறைய 1850-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, இன்றைக்கு 150 ஆண்டு காலம் முடிந்தும் அதில் எந்த ஒரு விழாவோ எந்த ஒரு நிகழ்ச்சியோ நடைபெறாமல் ஏதோ ஒரு சாதாரண ஒர்க் ஷாப் போல அது இருந்து கொண்டு இருக்கிற ஒரு நிலைமை இன்றைக்கு இருக்கிறது. அது 1850 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அதிலே புகழ் பெற்ற உழைப்பாளர் சிலையைச் செய்த ராய் சௌத்திரி போன்ற பெரியவர்கள் எல்லாம் அங்கே இருந்து; பணிக்கர் போன்ற பெரியவர்கள் எல்லாம் அங்கே இருந்து நம்முடைய கலையை கலாச்சாரத்தை வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த கல்லூரி இன்றைக்கு சாதாரண ஒரு பாலிடெக்னிக் அளவில் வைக்கப்பட்டு ஏதோ அனாதைப் பிள்ளையைப் போல நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. 1962 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். சபாநாயகம் அவர்கள் தலைமையில் புகழ் பெற்ற கலைஞர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் கல்லூரி மேம்பாட்டுக்காக பல்வேறு நடவடிக்கைகள் அறிக்கைகள் பெற்று எடுக்கப்பட்டு இருக்கின்றன.

அதைப்போல இன்றைய தினம் நல்ல ஒரு குழுவை அமைத்து அந்தக் கல்லூரி சிறப்பான முறையில் விளங்குவதற்கு நடப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அன்றைக்குச் சொல்வார்கள். விக்டோரியா மகாராணி அவர்கள் தனக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் அந்தக் கல்லூரியில் செய்து எடுத்துக் கொண்டு செல்வார்கள் என்ற அந்த வரலாறு கூறப்பட்டு அந்தக் கல்லூரியில் ஒரு மியூசியம் இருக்கிறது. கைத்திறன் போன்ற பல்வேறு கலைப் பொருட்கள் அது மரத்தினால் ஆனாலும் சரி, அது துணியால் நெய்ததாக இருந்தாலும் சரி அல்லது தங்க ஆபரணமாக, வெள்ளி வேலைப்பாடுகளாக இருந்தாலும் சரி, அல்லது சாதாரண ஓவியமாக இருந்தாலும் சரி. அல்லது ஸ்கல்ப்சர் என்று சொல்லக்கூடிய விதத்தில் சிற்பமாக இருந்தாலும் சரி. இவைகள் அத்தனையும் சிறப்பாக இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றை ஒரு மியூசிய



மாக வைத்து அந்த மியூசியத்தில் வெளியார் வந்து பார்க்கக் கூடிய நிலைமை இருந்தது, அந்த மியூசியம் இன்று மூடிக்கப் பட்டு, விலை மதிக்க முடியாத அத்தனை அழகிய கலை பொக்கிஷங்கள் எல்லாம் மூலையில் அடைக்கப்பட்டு அங்கே தூங்கிக்கொண்டு இருக்கின்றன. அவைகளை புதுப்பிப்பதற்கு இந்த நேரத்தில் நல்ல ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தக் கலைக் கல்லூரியில் பணியாற்றுகின்றவர்களுக்கு சாதாரண பாலிடெக்னிக் போல் நடத்தி அவர்களுக்கு ஊதிய விகிதங்களை அந்த அளவுக்கு கொடுக்கக்கூடாது. நல்ல அதிக உயர்ந்த ஊதியத்தை உயர்ந்த ஊதிய விகிதங்களை கொடுக்க வேண்டும். அகில இந்திய அளவில் போற்றக்கூடிய, மதிக்கக்கூடிய ஒரு கலைக் கல்லூரி, அந்தக் கலைக் கல்லூரி இங்கே சாதாரண பாலிடெக்னிக் போல் நடத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை நல்ல முறையில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைசியாக ஒரு கருத்தைச் சொல்லி விடைபெறுகிறேன், இந்த ஓராசிரியர் பள்ளி ஆரம்பிப்பதாக இங்கே அறிவிப்பு கிடைத்து இருக்கிறது. அது மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறது. ஆனால் ஒரே ஒரு ஆசிரியர் ஒரு கிராமத்தில் 5, 6 வகுப்புகளை எப்படி கண்காணிப்பார் என்பதை சற்று இந்த அரசு சிந்தித்துப் பார்த்து தேவைப்பட்டால் அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளியும் தொடக்க வகுப்பிலே தான் தொடங்கப் படும். அந்த முதல் வகுப்புதான் முதல் ஆண்டில் தொடங்கப் படுமே தவிர, எடுத்த உடனே 4 வகுப்புகள் தொடங்குவதற்கு அவசியம் இருக்காது. முதல் இரண்டு வகுப்புகள் வரையிலே கூட முதல் ஆண்டில் தொடங்கினாலும் கூட ஒரு ஆசிரியரைக் கொண்டே 10, 20 பிள்ளைகளை வைத்துக்கொண்டு பாடம் நடத்தி அடுத்த ஆண்டில் இரண்டாவது ஆசிரியர் இடம் பெறத் தகுந்த ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. என். கணபதி:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உலக எழுத்தறிவு ஆண்டாக கொண்டாடப்படுகிறது. இதிலே தனி அக்கறை எடுத்துக்கொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 4, 5 நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் போன்ற பிரச்சார நடவடிக்கைகளை எடுத்து செய்து இருக்கிறார்கள். இது ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலும் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் அல்லது நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அதிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கலந்து கொள்வதற்கு நேரம் இல்லை என்றாலும் மற்ற தமிழக அமைச்சர்களை ஒவ்வொருவரும் அந்த அந்த மாவட்டத்திலே அவர்கள் சொந்த மாவட்டத்திலே கலந்து கொண்டு இந்த கல்வி அறிவு நடவடிக்கையை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். சிங்காரம்: தலைவர் அவர்களே. இந்தப் பேரவையினுடைய மாற்றுத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் கருப்பு சிவப்புத் துண்டை அணிந்து கொண்டு தலைவர் இருக்கையில் அமர்ந்து இருக்கிறாரே..... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): தயவு செய்து உட்காருங்கள். அணிந்து கொள்ளலாம்.

12.35 மணி

திரு. ஆர். சிங்காரம்: அப்படி ஒரு கட்சியினுடைய சின்னத்தை அணிந்து மாற்றுத் தலைவர் அமரலாமா என்பதை அவையினுடைய முன்னவர் அவர்கள் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கதர் வேட்டி கூட காங்கிரஸ் கட்சிக்கு ஒரு வகையிலே சின்னம் தான். அதற்காக அதை நீக்கச்சொல்லி யாரும் கேட்க மாட்டார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: கதர் வேட்டி சின்னம் கிடையாது...... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பெ. சு. திருவேங்கடம்: நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வது. நான் ஏற்கெனவே இந்த அவையிலே இருந்து இருக்கிறேன். எனக்கு முன்னால் பல அவைத் தலைவர்கள் கட்சியினுடைய சின்னம் போட்ட துண்டு அணிந்து இருக்கிறார்கள். எனவே அதை அணிந்திருப்பதில் தவறு இல்லை என்று நான் கூறி; மேற்கொண்டு, திரு. கே. ஆர். இராஜேந்திரன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*திரு. கே. ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டின் கல்வி மானிய அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் கழகத்தின் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவியின் சார்பாகவும் நன்றியை உரித்தாக்கி, இந்த அவையிலே பேசுவதற்கு, வாய்ப்பு அளித்த அவையின் தலைவருக்கு நன்றியை உரித்தாக்கி சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில், என்னுடைய பர்கூர் தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதியாகும். அதிலும், கல்வி மானியத்தின் மீது பேசும்பொழுது, எங்கள் தொகுதியிலுள்ள ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைபள்ளியாக மாற்றுவதற்கு பல வருடங்களாக முயற்சி எடுத்தும் இன்னும் அரசு, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கவில்லை. ஆகவே, அரசு, தொகரப் பள்ளியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியையும், செந்காரப்பள்ளியிலுள்ள அரசு



உயர்நிலைப் பள்ளியையும், சாமல்பட்டியிலுள்ள அரசு உயர் நிலைப் பள்ளியையும், இந்த மூன்று அரசு உயர்நிலைப்பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மேலும்......

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்திற்கு 3, 4 பள்ளிகள் மட்டுமே உயர்த்தப்படக் கூடிய நிதிநிலையும் இருக்கின்றது. அதற்கான முன்னுரிமைகள் எவை என்ற அந்த அடிப்படையிலே தான் அமைகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 பள்ளிகளைச் சொல்கிறபோது எந்த இடத்தில் அதிக மாணவர்கள் மிக இக்கட்டான நிலையிலே இருக்கிறார்கள், எது அவற்றில் முக்கியத்துவம் பெறவேண்டியது என்பதையும் உறுப்பினர் சொன்னால் இலாக்காவினர் அதையும் குறித்து வைத்துக்கொண்டு கவனிப்பார்கள்.

திரு. கே. ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் தொகரப் பள்ளியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மிக அதிகமான மாணவர்கள் படிக்கக் கூடிய பள்ளியாக இருக்கிறது. ஆகவே, முதன்முதலாக அதை அரசு மேல்நிலைப்பள்ளியாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மத்தூர், வீராச்சிக்குப்பம் போன்ற கிராமங்களில் உள்ள சில ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்களே வராமல் குழந்தைகள் மரத்தடியில் விளையாடிக்கொண்டிருக்கிற நிலைமையெல்லாம் இருக்கிறது. அதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், பிற மாவட்டங்களிலே நிறைய பேருந்துகள் விடப் பட்டிருந்தாலும் என்னுடைய மாவட்டத்திலுள்ள பர்கூர் தொகுதியில் இதுவரையில் ஒரு பேருந்து கூட விடாமல் இருப்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப் பட்டுள்ளேன்.

மேலும் மக்கள் நலப் பணியாளர்கள் விழிப்பு உணர்ச்சிக் குழு என்ற அமைப்பில் கழகத்தைச் சேர்த்தவர்களுக்குமட்டும் தான் அரசு வேலைவாய்ப்புத் தரவேண்டுமென்றால் நாங்கள் கட்டுகின்ற வரிப் பணம் அரசு வசூலிக்காமல் இருக்கவும், விற்பனை வரியை வசூலிக்காமல் இருக்கவும் அரசு ஆவன செய்ய வேண்டும். பர்கூர் தொகுதியைப் பொறுத்தவரையில், மத்தூர் யூனியனுக்கும், மற்ற யூனியனுக்கும் ஒதுக்கப்பட்ட நிதியைப் போல எங்கள் தொகுதியிலுள்ள யூனியனுக்கும் ஒதுக்கவேண்டுமென்று அரசத்துறையை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

12.40 மணி

எங்கள் தொகுதியில் பாலங்கள் எல்லாம் பழுதடைந்திருக்
கின்றன. அவைதைக் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, எல்லாப் பள்ளிகளிலும்
ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தால்
அந்தப் பள்ளிகளில் கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்கவேண்டு
மென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இதுவரை பேச வாய்ப்பளித்
தமைக்காக தங்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்,
வணக்கம்.

*திரு. வெ. கோவிந்தன்: மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, 1990-91ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்
கல்வி மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பளித்த தமிழக
முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர்
மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த
நன்றியைக் கூறி, இந்த உரையின் மீது பேச வாய்ப்பளித்த
தங்களுக்கும் நன்றி கூறி என்னுடைய உரையைத் தொடங்கு
கிறேன்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப் படும்'

என்ற வள்ளுவர் குறளுக்கிணங்க, கழக அரசு படைத்துள்ள
சாதனைகள் ஏராளம், ஏராளம். தமிழுக்கு ஆக்கமாக விளங்குகிற
அண்ணாவின் பொன் மொழியைத் தந்து இங்கே கலைஞர்
அவர்கள் படைத்துள்ள வரவு-செலவுத் திட்டத்தினை, நிதிநிலை
அறிக்கையினை பார்த்தால், இந்த கழக அரசின் சாதனைகள்
விளங்கும். குழந்தையின் முகமறிந்து பாலூட்டும் தாயைப் போல
கலைஞர் அவர்களின் அரசு ஆசிரியர்களுக்கு ஊதியத்தை அளித்
துள்ள பாங்கு கடையெழு வள்ளல்களுக்கு மேலாக, ஏன்
எட்டாவது வள்ளலாகவே ஏன் யாருக்கும் எட்டாத வள்ளலாகவே
உயர்ந்து விட்டார்கள் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டு
கிறது. முந்தைய கழக ஆட்சிக் காலத்தில், பல சாதனைகளை
ஆசிரியர் பெரு மக்களுக்காக அள்ளித் தந்திருக்கிறார்கள்
கலைஞர் அவர்கள். குறிப்பாக தமிழ் ஆசிரியர்களுக்கும் பிற
மொழி ஆசிரியர்களுக்கும் வழங்கியது, தங்கத் தட்டில் பொறித்த
எழுத்துக்களாக மின்னிக் கொண்டிருப்பதை நாமெல்லாம் காண்
கிறோம்.

இந்த ஆண்டு கல்வி மானியத்திற்கு சுமார் 1,050 கோடி ரூபாய்
ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டை விட 150
கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு
900 கோடி தான் ஒதுக்கப்பட்டது. கல்விக்கான தொகை
அதிகரிக்கப்பட்டிருப்பது குறித்து நான் எனது மகிழ்ச்சியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். நான் என்னுடைய பாராட்டு
தலையும் போற்றுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
தமிழகத்தில் கல்வி அறிவு பெற்றவர்களின் சதவீதம் இப்போது
46.76 ஆக இருக்கிறது. இது அகில இந்திய அளவில் பார்த்தால்



36.23 சதவீதம் என்பதை விட 10.53 விழுக்காடு அதிகமாக
இருக்கிறது. அகில இந்திய அளவில் மற்ற மாநிலங்களோடு
ஒப்பிட்டுப் பார்த்தால், கேரளாவில் 70.74 சதவீதம் என்றும்.
மகாராஷ்டிராவில் 47.18 சதவீதம் என்றும், தமிழகத்தில் 46.76
சதவீதம் என்று இருப்பதால், இந்தியாவிலேயே மூன்றாவது
இடத்தை வகிக்கிறது. இன்னும் கொஞ்சம் முயற்சித்து,
இந்தியாவிலேயே கல்வி அறிவு பெற்றவர்களின் சதவீதம் தமிழ்
நாட்டில் அதிகம் என்பதை உயர்த்து, முதலாவது இடத்திற்கு
தமிழகத்தை உயர்த்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில்
கேட்டுக் கொள்ள விழைகின்றேன்.

சமுதாயத்தில் சமுதாய நலத் திட்டங்களில் மிக முக்கியமான
திட்டம் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கலும், சீருடை
வழங்குதலும், மதிய உணவு வழங்குதலும் எனபது தான். நமது
கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட உடன். மதிய சத்துணவு
வழங்குவது மட்டுமல்லாமல், மாதத்தில் இரண்டு முறை முட்டை
யோடு கூடிய சத்துணவு வழங்கி, உண்மையான சத்துணவை
பள்ளி குழந்தைகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

என்னுடைய தொகுதியில் பாப்பனப்பள்ளியில் உள்ள
சத்துணவு மையத்திற்குச் சென்று நான் பார்வையிட்டதில்,
விடுமுறை நாட்களில் பள்ளிகளுக்கு அதிகமான மாணவர்கள் வர
வில்லை என்று தெரியவந்தது. 90 மாணவர்கள் வர வேண்டிய
இடத்தில் 40 மாணவர்களோ வந்திருந்தார்கள். இப்படி வீணாகும்,
பணத்தை. பள்ளிப் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக
செலவிடும் வகையில். சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்
களில் சத்துணவு போடுவதை நிறுத்துவது நலமாக இருக்கும்
என்பது என்னுடைய கருத்து.

12.45 மணி

அடுத்து தமிழகத்தில் சுமார் 30,000 பள்ளிகள் இயங்கி
வருகின்றன. 22,000 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் 5,000
தனியார் பள்ளிகளும், மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளும் ஆக
மொத்தம் 30,000 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த
ஆரம்பப் பள்ளிகளில் 1,20,000 ஆசிரியர்கள் பணியாற்றி
வருகிறார்கள். இந்த ஆரம்பப் பள்ளிகள் பஞ்சாயத்து யூனியன்
களிலும், அரசு கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. பல
மாவட்டங்களில் பள்ளிக்குச் சரியான கட்டிட வசதி இல்லாமல்
இருப்பதை உணர்ந்த கழக அரசு கட்டிடம் கட்டுவதற்கான
முயற்சியை மேற்கொண்டு, கரும்பலகைத் திட்டத்தின் மூலம் 300
பள்ளிக்கூடங்களுக்கு 1989-90-ல் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு
வருகின்றன.

சுமார் 365 பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஓராசிரியர்
என்பதை மாற்றி ஈராசிரியர்களைப் பணியமர்த்தி ஓராசிரியர்
வேலைப் பளுவை அந்தப் பள்ளிகளில் குறைத்திருக்கிறது.

மேலும் கரும்பலகைத் திட்டத்தின் மூலமாக 360 புதிய
ஆசிரியர்களை நியமிக்க 1989 டிசம்பரில் ஆணை பிறப்பிக்கப்பட்டு
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக
நான் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் பள்ளிகளுக்கு புதிய கட்டிட
வசதி செய்து தருகின்ற வகையில் 736 பள்ளிகளுக்கு ஜவஹர்
வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதிய கட்டிடங்களைக் கட்டு
வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.
இவைகள் கட்டி முடிக்கப்படுமேயானால் கட்டிட வசதி இல்லாத
கிராமப்புற பகுதிகளில் உள்ள குழந்தைகள் பெருமளவுக்குப்
பயன் அடைவார்கள். இந்த ஆண்டு 439 ஆரம்பப் பள்ளிகளைத்
திறப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனை
என்னைப் போன்ற கிராம மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.
கரும்பலகைத் திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 5,995 பள்ளி
களில் குழந்தைகளுக்குத் தேவையான புத்தகங்கள், விளையாடு
வதற்குத் தேவையான விளையாட்டுப் பொருட்கள் ஆகியவை
வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது
கட்டமாக 8,212 பள்ளிக்கூடங்களில் இப்படிப்பட்ட காரியம்
நடைபெற்று வருகிறது. தற்போது மூன்றாவது கட்டத்திற்குத்
தமிழகம் தன்னைத் தயார் படுத்திக்கொண்டு மற்ற பகுதிகளுக்குத்
தேவையான வசதிகளைச் செய்து தருவதற்கு ஆயத்தப் பணி
களில் ஈடுபட்டுக் கொண்டு வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும் கல்வி வளர்ச்சியை முன்னிட்டு ஒவ்வொரு மாவட்டத்
திற்கும் கல்வி ஆலோசனைக் குழு அமைத்து அந்தக் குழுவில்
பெற்றோர்களும், ஆசிரியர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும்,
பொதுமக்களும், கல்வி வல்லுநர்களும் அங்கம் பெற்றால்
அவர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை வழங்க முடியும்.
இப்படிப்பட்ட குழுக்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும்
அமைத்து அக்குழுக்கள் அரசுக்கு ஆலோசனைகளை எடுத்துச்
சொல்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தவேண்டும். அந்த ஆலோசனை
களின் பேரில் அரசு நல்ல முறையில் செயலாற்ற முடியும்.
இதுபற்றி அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். பெற்றோர்-ஆசிரியர் சங்கம் என்பது பள்ளிக்
கூடத்திற்குப் பாலமாக அமைகிறது. இவற்றின் மூலம் ஒவ்வொரு
ஊரிலும் சிறு, சிறு மாநாடு போல் அமைத்து அந்தந்த ஊர்களில்
நடைபெறுகின்ற பள்ளிகளுக்கு வேண்டிய உபகரணங்கள்,
இடங்கள் போன்றவற்றை வழங்குவது குறித்து கலந்து பேசினால்
அந்தப் பள்ளிகள் முன்னேறுவதற்கான வாய்ப்பு இருக்கும்.
மேலும் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களின் மூலம் நடைபெறும்
கல்விச் சீரமைப்பு மாநாட்டின் மூலம் விஞ்ஞானத்திற்கும்
முக்கியத்துவம் உண்டாகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் விஞ்ஞான
சோதனைக்கூடங்கள் மற்றும் கருவிகள் கிடைக்க வசதி ஏற்படு
கிறது. மேலும் இவற்றின் மூலம் பள்ளிகளில் வளர்ந்துவரும்
விஞ்ஞான யுகத்திற்கு ஏற்ப சோதனைக்கூடம், விஞ்ஞான கல்விக்
கூடம் போன்றவை உருவாக வாய்ப்பு ஏற்படும்.



அடுத்து ஆசிரியர்களுக்குப் பல நன்மைகளை இந்த அரசு
செய்து உள்ளது குறித்து ஏற்கெனவே நான் குறிப்பிட்டேன்,
இருப்பினும் அதில் ஒரு பகுதியாக ஒரு கோரிக்கையை வைக்க
விரும்புகிறேன். ஆசிரியர்களின் குழந்தைகளின் உயர்படிப்புக்கு
வட்டியில்லாத கடன் வழங்கி கல்வியில்லாத மக்களை மாற்ற
அரசு முன் வரவேண்டும். அதுபோல் ஆசிரியர்களின் குழந்தை
களுக்கு தொழில் கல்வியிலும் புதிய சலுகைகளை வழங்க
வேண்டும். அண்ணா பயிற்சி ஆசிரியர் மற்றும் தொழில் பயிற்சி
களில் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு குறிப்பிட்ட விழுக்காடு
சலுகைகளைத் தரவேண்டும். ஆசிரியர் பயிற்சி முடித்து பணியில்
சேருகின்ற காலத்திலும் அவற்றில் அவர்களுக்குச் சலுகைகளை
வழங்கவேண்டும்.

12-50 மணி

பேரணாம்பட்டுத் தொகுதியில் பள்ளிக்கூடங்கள் இல்லாத
கிராமங்கள் உள்ளன. அதில் அலங்காநல்லூர், கமலாபுரம்,
கலைஞர் நகர், பொன்னப்பல்லி போன்ற ஊர்களில் பள்ளிகளே
இல்லை. இந்த ஆண்டிலாவது மாண்புமிகு கல்வி அமைச்சர்
அவர்கள் அதைக் கவனத்தில் கொண்டு, அந்த ஊர்களில்
பள்ளிகள் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும்
வடசேரி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உமாராபாத்தில் ஒரு
பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் துவக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்வி மானியத்தின் மீது பேச
வாய்ப்பளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி
தெரிவித்து, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு தலைவர் அவர்களே,
கல்வி மானியத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு
நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது உரையைத் தொடங்கு
கிறேன். 1990-91-ல் இந்தக் கல்வி மானியத்திற்காக ஒதுக்கிய
தொகை, ரூ.1,050 கோடியாக இருக்கிறது. இவ்வளவு பணம்
செலவழிக்கப்பட இருக்கிறது. அரசு ஒரு நல்ல சமுதாயத்தை
உருவாக்கும், சிறந்த மாணவர்களை, உயர்ந்த மாணவர்களாக,
அறிஞர்களாக, விஞ்ஞானிகளாக உருவாக்கும் திட்டத்தை இதில்
சிறப்பாக வைத்திருந்து, இந்தப் பணத்தைச் சிறப்பாகச்
செலவிட்டாலொழிய இந்த நேரத்தில் நமது மாநிலத்திற்குள்ளே
நல்ல, சிறந்த மாணவர்களை உருவாக்க முடியாது.

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.'

என்று வள்ளுவன் சொல்லியிருக்கின்றார். கல்வியின் தரத்தை
நமது தமிழகத்திலே இன்று பெருக்கவேண்டும். கல்வியின் தரம்
உயராவிட்டால் நல்ல மாணவர்களை உருவாக்க முடியாது
மாணவர்களின் தரம் உயர வேண்டுமென்றால், நல்ல தரமான
கல்வியைப் போதிக்க வேண்டும், ஆனால், அதே சமயத்திலே,
மாணவர்—ஆசிரியர்களுடைய விகிதாச்சாரம் குறைக்கப்பட
வேண்டும். 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலே

இன்று கல்விஸ்தாபனத்திலே ஏற்படுத்தாவிட்டால் நமது கல்வித்
தரத்தை நிச்சயமாக உயர்த்த முடியாது. நமது தமிழகத்திலே
பல பள்ளிகளுக்குச் சென்றால், ஆரம்பப் பள்ளியாக இருந்தாலும்
சரி, உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, 100 மாணவர்
களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் கூட இருக்கிறது. இப்படி
மாணவர்களைச் சத்திரத்தில் அடைப்பதைப் போல் வைத்திருப்
பதால், ஆசிரியர் மாணவர்களுக்கிடையே ஒரு ரிலேஷன்ஷிப்
இல்லாத நிலையிலே, மாணவர்களுக்குக் கல்வி போதிக்கப்
பட்டால் எப்படி கல்வியினுடை தரம் உயரும் என்பதைப் பார்த்து,
அங்குள்ள ஆசிரியர்களை அதிகமாக்கி, கல்வியினுடைய தரத்தை
உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1200 ஆசிரியர்கள் தொகுப்பூதியத்திலே கூடுதலாக நியமிக்கப்
படவிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், ஏற்கனவே,
உயர்நிலைப் பள்ளியிலே பணிபுரிகின்ற இடைநிலை ஆசிரியர்கள்
சம்பளத்திலே குறைபாடு இப்பதாகக் கூறிப் போராடுகின்றார்கள்.
இதற்கிடையில், 800 ரூபாய் தொகுப்பூதியத்திலே ஆசிரியர்களை
நியமிக்க இருக்கிறார்கள். ரூ.800 தொகுப்பூதியத்தைக் கொடுத்து
அந்த ஆசிரியர்களை நியமித்தால், அவர்களும் சம்பளத்தை
அதிகமாக்கித் தரும்படி கேட்பார்கள். அந்த மாதிரி ஒரு
நிலையை உருவாக்காமல், இப்போதே அவர்களுக்கு நியாயமான
சட்டபூர்வமான சம்பளத்தைக் கொடுத்து அவர்களை நியமிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் முதல் பகுதியிலே பேசுகிறபொழுது, 1 ஆசிரியருக்கு
100 மாணவர்கள் இருக்கிறார்கள் என்று அந்தக் கஷ்டத்தைச்
சொன்னார். அடுத்த பகுதியில், ஆசிரியர்களை அதிகம் நியமிக்க
அரக ஏற்பாடு செய்தால், முழுச் சம்பளம் கொடுத்து நியமிக்க
வேண்டுமென்கிறார்கள். அப்படி என்றால் போதுமான ஆசிரியர்
இல்லாத நிலையில் ஒரு ஆசிரியருக்கு 120 மாணவர்கள் கூட சில
இடங்களிலே அமையும். அதையும் உறுபபினர் ஏற்றுக்கொள்ள
வேண்டும்.

திரு.எஸ் எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்
பொழுது 120 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரை நியமிப்பதாகச்
சொல்கிறார்கள். நான் சொல்வது, ரூ.800 தொகுப்பூதியம்
கொடுக்க இருக்கிறீர்கள். இப்பொழுதுள்ள விலைவாசியில்
அவர்களுக்கு இந்தச் சம்பளம் போதாது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வேலை
கிடைக்காதபோது ரூ.100 கூட கிடைக்காத துன்பத்தில் உள்ள
வர்கள் தற்காலிக வேலை என்ற முறையில் 2 ஆண்டுகள் வேலை
பார்த்தவர்கள் ஆசிரியர்களாக வருவது நல்லது. ஏனென்றால்
எந்தவிதமான தகுந்த பயிற்சியும் இல்லாமலே கூட சில பேர்
ரூ.1,400 வாங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. நம்முடைய
பொருளாதார நிலையில், தற்காலிகமாக ஆசிரியர்களை நியமிக்கா



விட்டால், பள்ளிக்கூடங்கள் மிக அதிக அளவில் பாதிக்கப்படும்.
எனவே, இடைக்கால ஏற்பாடாக, இரண்டு ஆண்டுகளுக்கு,
இப்படித் தொண்டு செய்கிறவர்கள் பின்னர் முழு ஊதியத்தில்
நிலையாகப் பணியாற்றும் வாய்ப்புப் பெறுவார்கள் என்பது
பலரும் வரவேற்பதாகும்.

12.55 மணி

திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, தமிழக அரசின் ஏற்றுக்கொள்ளப்பட்ட
கொள்கை என்பது தொகுப்பு ஊதியம் தரக்கூடாது, முழு
ஊதியம், வேலைக்கு ஏற்ற ஊதியம் அனைவருக்கும் தரப்பட
வேண்டும் என்பதுதான். Conferment of Permanent Status Act,
1980-ல் சொல்லப்பட்டிருக்கிறது. முழுமையாக அரசே ஏற்றுக்
கொண்ட, எந்த வேலைக்கும் உரிய ஊதியம் கண்டிப்பாகத்
தரப்படவேண்டும் என்பதுதான் தமிழக அரசின் கொள்கையாக
இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : அதனால்தான் நிரந்தர
மான வேலை என்று சொல்லவில்லை நான். தற்காலிக வேலை
தான் தருகிறோம். நிரந்தரமான வேலை தருவதற்காக ஒரு குழு
அமைத்து, 'ஆசிரியர் வாரியம்' போல அமைத்து ஒரு குழுவால்
ஆசிரியர்கள் நியமிக்கப்படக்கூடிய ஒரு நிலைமை இருக்குமானால்
மாண்புமிகு உறுப்பினர் சொல்வது நியாயம். ஏராளமானவர்
களை ஆங்காங்கே மாவட்ட அளவிலே தேர்ந்து எடுக்கிறபோது,
எடுத்தவுடனே அவர்களுக்குப் போதுமான அளவுக்கு ஆர்வத்
தோடு பணியாற்றுகிற உணர்வு இருந்தாலும் இல்லாவிட்டாலும்
முழு ஊதியத்திலே நியமிப்பதைவிட இரண்டு ஆண்டுக் காலம்
அவர்கள் ஆற்றுகிற பணித் திறமை, கடமை உணர்வு,
இவைகளைப் பார்த்து முடிவு செய்கின்ற வகையில் இந்தப்
பணி வழங்கப்படுவது தவறல்ல.

திரு.எஸ்.எஸ். ராமசுப்பு : தலைவரவர்களே, அடுத்தபடியாக,
ஏற்கெனவே நான் ஒரு கேள்வி நேரத்தில் மாண்புமிகு அமைச்சர்
பெருமானிடம் கேட்கும்போது தகுதி அடிப்படையில் நடுநிலைப்
பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப்
பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் ஆக்கும்போது விளை
யாட்டு மைதானம், ஆய்வுக் கூடங்கள், மருத்துவ வசதி, நூல்
நிலையங்கள், மேலும் 'பர்னிச்சர்ஸ்' போன்றவை எல்லாம்
இல்லாமல்—அந்தத்தகுதியே இல்லாத பள்ளிகள்கூட—நடுநிலைப்
பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள்
மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்படுவதற்கு 'பெர்மிஷன்'
வழங்கியிருக்கிறார்கள். அதைச் சொல்லும்போது அமைச்சர்
பெருமானார் சொன்னார். அது கல்வியோடு இணைந்து வந்து

விட்டது, இது போன்ற நிலைமைகள் எல்லாம் தவிர்க்க முடியாதவை என்று சொன்னார்கள். அதைக் கண்டிப்பாகத் தவிர்க்காவிட்டால் எப்படி ஒரு பள்ளியிலே பாடம்நடத்தமுடியும்? 'பிராக்டிகல் கிளாஸ்' நடத்த வேண்டுமென்றால் அதற்குத் தேவையான உபகரணங்கள் கிடையாது: ஆய்வுக்கூடங்கள் கிடையாது. ஆய்வுக் கூடம்இல்லாமல் எப்படி பிராக்டிகல் கிளாஸ் நடத்த முடியும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகையால் இப்படிப்பட்ட பள்ளிகளுக்கு நீங்கள் உரிமங்கள் வழங்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்திற்காகத்தான் சொல்கிறேன். ஏற்கெனவே கல்வி நிலையங்களிலே மேல் வகுப்பு ஏற்படுத்துவதற்காகப் பல கட்டத்தில் உயர்த்திக்கொண்டே வந்தபோது பல பள்ளிக்கூடங்களிலே ஆய்வுக் கூடங்கள் இல்லாத நிலையிலேயும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அட்படி உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் ஓர் ஆய்வுக்கூட வண்டி (வேன்) வைத்து, அதன் மூலமாக 2, 3 ஆண்டு காலமாகவே 56 கல்வி மாவட்டங்களிலேயும் தொடர்ந்து இந்த முறையில் ஆய்வுக்கூடம் இல்லாத பள்ளிகளில் உள்ள மாணவர்கட்கும்—பயிற்சி அளிக்கப்படுகிறது. அது போதுமானது அல்ல எனவே, இப்போது மத்திய அரசு உதவுகிற அறிவியல் வளர்ச்சித் திட்டம் என்பது போன்ற திட்டங்களில் சில பள்ளிகளுக்கு, நூலகங்களுக்கு விஞ்ஞான அறிவியல் நூல்கள் வழங்குவதற்கு, சில பள்ளிக்கூடங்களுக்கு ஆய்வுக்கூடங்கள் அமைப்பதற்கு என்று சில திட்டங்கள் இருக்கின்றன. அவற்றையும் தமிழக அரசு முழு அளவிலே பயன்படுத்துவதற்குத் தீவிரமாக முனைந்திருக்கிறது.

திரு.எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு தலைவர் அவர்களே, அடுத்தபடியாக ஆசிரியர்களுக்கு 'பிரமோஷன் பாலிஸி' இருக்கிறது. தனியார் பள்ளிகளில் மட்டுமல்ல. அரசாங்கப் பள்ளிகளிலே கூட பிரமோஷன் தகுதி அடிப்படையிலே தராமல், அவர்களுடைய சீனியாரிட்டியை ஓவர்லுக் பண்ணி, தகுதி உடையவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அதனால் நல்ல திறமையுள்ள ஆசிரியர்களுக்கு மனக்கசப்பு ஏற்பட்டு, அதிருப்தி அடைந்துவிடுகிறார்கள். இப்படி இருந்தால் ஆசிரியர்கள் எப்படி கல்வி கற்றுக்கொடுத்து, எப்படி மாணவர்கள் முன்னேற முடியும் என்று நான் கேட்கிறேன்.

அது மட்டுமல்ல, தற்போது, தமிழ்நாட்டில் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது பரவலாகப் பேசப்படுவது, பணம் பெரிதும் விளையாடி இருக்கிறது என்பதுதான். அதனால் மக்கள் பீதி டைகிறார்கள். ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த படித்த அர்கள் சில தனியார் பள்ளிகளுக்கு வேலை கேட்டுப் போகும்



போது 20,000 ரூபாய், 30,000 ரூபாய் கேட்கிறார்கள்; கொடுக்கிறார்கள். அப்படி வேலைகொடுக்கின்ற தனியாரிடம் கேட்டால் அவர்கள் சொல்வது, நாங்கள் இந்த 'போஸ்ட் கிரியேட்' பண்ணுவதற்கு எவ்வளவு செலவிடுகிறோம் தெரியுமா என்று கேட்கிறார்கள். அது என்ன செலவு என்று எங்களுக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, தனியார் பள்ளிக்கூடங்களில் இப்போது ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்த முடியாது. யாராவது தவறி, இறந்து போனால் அந்த இடம் வரைக்கும்தான் தரப்படுகிறதே தவிர பொதுவாகப் புதிய இடங்கள் கேட்கும்போது, நிதி வசதி இல்லாத காரணத்தால் அந்தப் பள்ளிகளுக்கு வழங்கப்படுவதில்லை. அந்தந்த பள்ளிகளிலே அவர்களே நியமித்துவிட்டு, அவர்களே சம்பளம் கொடுக்கும் நிலைமையிலேதான் சில இடங்களை நிரப்பக்கூடும். அதிலே உள்ள குறைபாடுகளைப்பற்றித் திட்டவட்டமாக ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை, குறைபாடுகளைப் போக்குவதற்காக எந்த நேரத்திலும் கூறப்படும் ஆலோசனைகள் ஆலோசித்து ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு.எஸ்.எஸ். ராமசுப்பு: விளக்கத்திற்கு நன்றி, தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள பல பள்ளிக் கட்டங்கள் பராமரிக்கப் படாமல் இருக்கின்றன. முக்கியமாக அரசுப் பள்ளிக்கூடங்களில் தான் இந்த நிலைமை அதிகமாக இருக்கிறது. பல பள்ளிகளிலே கூரைகள் கிடையாது. என்னுடைய தொகுதியிலே வானூர் வட்டாரத்தில் பள்ளையார்குளம் என்ற ஊரில் கூரை இல்லாமல் பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்த ஊரில் இருக்கிற பள்ளிக்கூடம் ஓலைக்கூரை போட்டு, கட்டடம் இடியும் தருவாயில் உள்ளது.

13—00 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.பெ.சு. திருவேங்கடம்); அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப் படுகிறது.

திரு.எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற அந்த பகுதியில் அந்தப் பள்ளிக்கூடம் மிகவும் முக்கியமானது. அதை நீங்கள் பராமரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த பகுதியில் உள்ள வெங்கலபொட்டல் என்ற கிராமத்தில், அது ஒரு தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதியாகும், அங்கே உள்ள ஒரு பள்ளிக்கூடத்தை ஊராட்சி ஒன்றியத்திலே எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக அந்த ஊர் மக்கள் கேட்ட போதிலும்கூட அந்தப் பள்ளி இன்னும் குறைக்கப்படாமல் இருக்கிறது, அதை உடனடியாகத் திறப்பதற்கு ஆவன செய்ய

வேண்டும். ஊத்துமலை பகுதியில்—அதாவது அந்த பகுதியைச் சுற்றி 30 கிராமங்கள் இருக்கின்றன. அங்கேயுள்ள மாணவர்கள் ஊத்துமலை வந்து படிக்கவேண்டிய சூழ்நிலை இருப்பதால், அங்கே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளி யாகவும் ஆலங்குளத்திலே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலியை ஒரு மையமாக வைத்து பல்கலைக்கழகம் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை போன ஆண்டு கல்வி மானியத்திலே வைத்து பேசினேன். இப்போது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அமைப்பதாக சொல்லியிருக்கின்றார்கள். அந்த பல்கலைக்கழகத்தோடு அங்கே ஒரு சட்டக் கல்லூரி நிறுவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுடைப் பிரச்சினை. தனியார் பள்ளி ஆசிரியர்கள் இப்போது கொத்தடிமைகளைப் போல் நடத்தப்படுகின்றார்கள். அவர்கள் பல கோரிக்கைகளை வைத்து 30 ஆம் தேதியில் இங்கே உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர் களுடைய கோரிக்கைகள் மிகவும் முக்கியமான கோரிக்கைகள். நீங்கள் அதை கவனிக்கவேண்டும். பரிவுடன் கவனிக்கவேண்டும். ஏனென்றால் அவர்கள் தமிழகத்திலே மாணவர்கள் ரிசல்ட் கொண்டு வருவதிலே மிகவும் திறமையாக இருந்து நன்கு உழைக்கின்றார்கள். ஆதலால் இதுபோன்ற தனியார் பள்ளி ஆசிரியர்கள் கோரிக்கைகளை ஏற்று நீங்கள் அதை நிறைவேற்ற ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மெட்ரிகுலேஷன் ஸ்கூல் என்று பல ஸ்கூல்ஸ் இருக்கின்றன. இந்த மெட்ரிகுலேஷன் ஸ்கூல்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அடிக்கடி வேலை விட்டு நீக்கப்படுகின்றார்கள். அவர்கள் எந்த பணிப்பாதுகாப்பும் இல்லாமல் இருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, அந்த மெட்ரிகுலேஷன் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்காக ஆசிரியர்கள் அதிகமாக இரத்தை எடுத்து சொல்லிக்கொடுத்து அங்கேயே அவர்கள் கிடந்து கஷ்டப்படு கிறார்கள். இவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுப் பதற்கு மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு தக்க ஆலோசனை வழங்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. அங்கே விளையாட்டு மைதானம் இல்லாமல் சில பள்ளிகள் இருக்கின்றன. இந்த விளையாட்டு மைதானங்கள் மிக முக்கிய மான தேவையாகும். இளம் வயதிலே விளையாட்டிலே அவர்கள் நல்ல திறமையோடு இருந்தால்தான் விளையாட்டிலே நம் இந்திய நாடு ஒரு உயர்ந்த நாடு என்று சொல்லமுடியும். விளையாட்டிலே நாம் பின் தங்கியிருக்கிறோம். இதுபோன்ற பயிற்சிகள் கொடுப்பதற்கு விளையாட்டு மைதானங்கள், விளை யாட்டு சாமான்களை எல்லாம் அங்கே வைக்கவேண்டும்.



மேலும் இரட்டைக் கல்வி முறை என்றுதான் சொல்ல வேண்டும். அதாவது பணக்காரர்கள், ஏழைகள் என்று பிரித்து பாகுபாடுள்ள முறையிலே இந்த தமிழகத்திலே கல்வி முறை இருக்கிறது.

தனியார் பள்ளிகளில், கல்லூரிகளிலே படிக்கின்ற பிள்ளைகள் இப்போது இந்தி, ஜெர்மன், இத்தாலி, ரஷ்யன் போன்ற மொழிகளை படிப்பதற்கு பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் மெட்ரிகுலேஷன் ஸ்கூல்ஸ் மற்றும் பல பள்ளிகளிலே சென்று பணத்தைக் கொடுத்து அவர்கள் படித்துவிடுகிறார்கள். ஆனால் கிராமத்திலே வாழ் கின்ற பிள்ளைகள் ஏழைப் பிள்ளைகள். அவர்கள் அரசுப் பள்ளியிலேதான் படிக்கின்ற சூழ்நிலையிலே தான் இருக்கின் றார்கள். அந்த அரசுப் பள்ளியிலே படிக்கின்ற பிள்ளைகள் ஒரு இந்தியை படித்தோ அல்லது வேற்று மொழியைப் படித்தோ வேறு வேலைக்கு அதாவது டெல்லிக்கு செல்லவேண்டுமென்று சொன்னால், அங்கே அவர்கள் சென்று வேலை பார்க்கமுடியாத சூழ்நிலையில் இருக்கின்றார்கள். முக்கியமாக இராமங்களிலே வாழ்கின்றவர்கள் 70 சதவிகிதம் பேர்கள் இருக்கின்றார்கள். இந்த பிள்ளைகளுக்கெல்லாம் . . . . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு வேளை வேறு மொழிகளைச் சொல்லிக் கொடுத்தால்கூட, அதற்காக டெல்லியிலோ வேறு இடத்திலோ வேலை கிடைக்காது. வேண்டுமென்றால் மந்திரி வேலை வேண்டுமானால் கிடைக்கலாமே தவிர வேறு எந்த வேலையும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அதாவது நீங்கள் இந்தி மொழியின் அவசியத்தை தெரிந்துகொள்ளவேண்டும். டெல்லியிலே நாங்கள் செல்லும்போதுதான் தெரிந்துகொண்டேன். இங்குள்ள உறுப் பினர்கள் எல்லாம் வந்தார்கள். கமிட்டி உறுப்பினராக செல்லும் போது நான் பார்த்தேன். சாதாரணமாக ஒரு சுவட்டர் கடைக் காரன் ரூ. 25 விற்கக்கூடிய சுவட்டரை ரூ. 50க்கு நம்மிடம் விற்றுவிடுகிறான். அப்படி மொழி தெரியாததனால் அப்படிப் பட்ட சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறோம்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதேமாதிரிதான் டெல்லியிலே இருப்பவர்கள், உத்தரப்பிரதேசத்திலே இருப்பவர்கள், வங்காளத் திலே இருப்பவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தால் தமிழ் தெரியாத நிலையில் அவர்களும் அதே நிலையைத்தான் சந்திக்கிறார்கள் இங்கே. நமக்கு மட்டும் அந்தத் தாழ்வு மனப்பான்மை அவ்வளவு எளிதாக வரக்கூடாது. வேண்டுமானால் இங்கேயே 'சுவட்டர்' வாங்கிக்கொண்டு டெல்லி போகவேண்டும்.

திரு எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தேமதுரத் தமிழ் ஓசையை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாடிய பாட்டின்படி நாம் தேமதுரத் தமிழ் ஓசையை உலகத்திலே எல்லாம் பரவச் செய்யவேண்டுமென்றால், வேறு நாட்டிலுள்ள இலக்கியங்கள் வேறு மாநிலங்களில் உள்ள இலக்கியங்கள் எல்லாம் இங்கே வரவேண்டும். அப்படி கொண்டுவரவேண்டுமென்றால் நாம் அந்நிய பாஷைகளையும் படித்து இருந்தால்தான் முடியும்.

13–05 மணி

ஆதலால், அப்படிப் படிப்பவர்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். அரசுத் துறையில் உள்ள பள்ளிகளில் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். பணக்காரப் பிள்ளைகளில் பல மாணவர்கள் இப்படி படித்திருக்கிறார்கள். ஆனால் ஏழை மாணவர்களால் அப்படி படிக்க முடியவில்லை என்கிற நிலை உருவாகிவிடக் கூடாது. தமிழ் நாட்டில் எந்தவகையிலும் இத்தகைய ஒரு இரட்டை முறை வந்துவிடக் கூடாது,

அடுத்து, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் சென்று வேலைக்கு வேண்டி தங்கள் பெயரை பதிவு செய்திருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. பெயில் போன்ற அல்லது அதற்கு கீழே படித்தவர்களாக இருந்தால் பியூன் வேலைக்கு அவர்கள் அனுப்புகின்ற நிலை இருக்கிறது. ஆனால் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் அல்லது அதற்கு மேலே எம்.ஏ. படித்திருந்தால் கூட வேலை கிடைக்காத நிலை இருக்கிறது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் நீண்ட நேரம் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்நிலை தவிர்க்கப்படவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு என்ன செய்யவேண்டுமென்று சொன்னால், இப்போது கல்லூரிகளில் பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.ஏ., எம்.எஸ்ஸி. என்று எல்லாம் பட்டம் கொடுக்கப்படுகிறது. இப்படி அவர்கள் பட்டம் படிக்கிறபோதே. பி.ஏ. என்றால் கோவாப்பரேசன், ஜெர்னலிசம் போன்ற சர்டிபிக்கெட் கோர்சும், பி.எஸ்ஸி. பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி போன்ற பாடங்களைப் படிப்பவர்களுக்கு கம்ப்யூட்டர் சயன்ஸ் போன்ற சர்ட்டிபிக்கெட்டுகளையும் வழங்கவேண்டும். அதுபோல ஹெல்த் சம்பந்தப்பட்ட கோர்ஸ் பற்றி சொல்லிக்கொடுத்து சர்ட்டிபிக்கெட் கோர்சுக்கான சான்றிதழ் வழங்கலாம். டிகிரி கொடுக்கும்போதே இவர்கள் சர்ட்டிபிக்கெட் கோர்சுக்கான சான்றிதழையும் வாங்கிவந்தால் வேலைவாய்ப்பு பெற முடியும்.



குறிப்பாக அரசு வேலைவாய்ப்பு பெற முடியும். இதற்குரிய ஏற்பாடுகளைச்செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் கிராமப்புறங்களில் உள்ளவர்கள் என்ஜினியரிங், மெடிக்கல் போன்ற படிப்புகளுக்கான டெஸ்ட்களில் தேர்ச்சி பெற முடியாத நிலை இருக்கிறது. ஐ.ஏ.எஸ். படித்துத் தேர்ச்சி பெறவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் இளம் வயதிலேயே, இப்படிப்பட்ட கோர்ஸ்கள் பற்றி பிராக்டிகல் ஆக சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்கள் பிராக்டீஸ் பண்ண ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமத்துப் பிள்ளைகளுக்கு என்ஜினியரிங், மருத்துவக் கல்லூரி போன்றவற்றில் மார்க்குகள் குறைவாக இருந்தாலும் அதிகமாக இடங்கள் கொடுக்க வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 17 மணித்துளிகளாகப் பேசுகிறீர்கள். இதற்கு மேல் அனுமதிக்க முடியாது.

திரு. ஆர். மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற, 1990-91 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பை தந்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கல்வித் துறையின் மேம்பாட்டிற்காக தமிழக அரசு எடுத்துக்கொள்கிற முயற்சிகள், நிதி நிலை ஒதுக்கத்தால் ஏறத்தாழ 1050 கோடி ரூபாய் கல்வித் துறைக்காக செலவிடப்படுவது தமிழகத்தில் எதிர்காலம் மிக வெளிச்சமான, ஒரு காலகட்டத்தை விளக்கிக் காட்டுகிறது என்பதைக் குறித்து நான் மனப்பூர்வமாக மகிழ்ச்சியுடன் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். புறப்பொருட்டாக இருக்கின்ற துறைகளுக்குச் செலவிடுவதைக் காட்டிலும், அகப்பொருட்டாக விளங்குகின்ற அறிவு வளர்ச்சிக்கு செலவிடும் தொகை ஒரு சமுதாயத்தின் எதிர் காலத்தை மிகவும் உன்னதமான நிலைக்கு இட்டுச் செல்கிற முயற்சி என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நமது அரசு ஒரு கணிசமான தொகையை ஒதுக்கி இருக்கின்றது என்பதிலிருந்து நாம் பெறக்கூடிய செல்வங்களில் எல்லாம் கேடில்லாத செல்வம், கேடில் விழுச் செல்வம் கல்வி என்பதை நாம் உண்மையாக பாராட்டுகிறோம் என்ற அளவிற்கு இந்த கல்வியின் சிறப்பை அறிந்து செயல்படும் தமிழக அரசின் தன்மை பாராட்டப்படக்கூடிய ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வியைப் பொறுத்தவரை நமக்கு உறுதியாள ஒரு திட்டம் தேவை. கேட்பவர்களுக்கெல்லாம், கேட்ட இடங்களில் எல்லாம் அது தொடக்கப்பள்ளியாக இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, அல்லது மேல்நிலைப்பள்ளியாக

இருந்தாலும் சரி, கொடுப்பதை விட்டுவிட்டு, அரசே ஓர் ஆய்வு செய்து, இன்னின்ன இடங்களில் இன்னின்ன கல்விக்கூடங்கள் வரவேண்டும் என்கின்ற முறையில் ஒரு எஜுகேசன் மேப் தயார் செய்து, அந்த இடங்களில்தான் பள்ளிக்கூடங்கள் புதியதாக நடத்த அனுமதி கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று பணிவன்போடு கழக அரசை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நமக்கு சில உறுதியான திட்டம் கல்வித்துறையைப் பொறுத்த வரையில் கட்டாயம் இருக்க வேண்டும். ஆரம்பப் பள்ளியில் படிப்பவர்கள் ஒரு மைலுக்கு மேல் நடக்கக்கூடாது என்கின்ற முறையிலும், நடுநிலைப் பள்ளிகளில் படிப்பவர்கள் இரண்டு மைலுக்கு மேல் நடக்கக் கூடாது என்கின்ற முறையிலும் உயர்நிலைப் பள்ளிகளில் படிப்பவர்கள் மூன்று மைலுக்கு மேல் நடக்கக்கூடாது என்கின்ற முறையிலும் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த முறையில் ஆய்வு செய்து, மாவட்ட ரீதியாக ஒரு திட்டம் தயார் செய்து, அமுல்படுத்த அரசு முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழில் நுட்பக் கல்வியைப் பொறுத்தவரையில், தொழில்நுட்பக் கல்விக்காக கல்வித் துறையில் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 1050 கோடியில், சுமார் 32 கோடிகள் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று ஆகும்.

13.10 மணி

தொழிற்கல்வியைப் பொறுத்தவரையில் தமிழகத்தில். அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பாலிடெக்னிக்குகள் இயங்கி வருகின்றன. இவைகளில் படிக்கும் மாணவர்களுடைய தரம், நல்ல முறையில் முன்னேற்றம் பெற்று இருக்கின்றது என்று கருதுகிறேன். அரசு பொறியியல் கல்லூரிகளையும், பாலி டெக்னிக்குகளையும் இன்னும் திறம்படச் செயல்படுத்தி, நவீன முறையில் நவீனக் கருவிகளைக் கொண்டு பயன்படுத்தலாம். அதன் மூலம் தமிழக மாணவர்கள் மேலும் பயனடைவார்கள். இதே போல் தமிழகத்தில் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளும், பாலிடெக்னிக்குகளும், ஒரு நால்கைந்து ஆண்டுகளுக்குப் பெருமளவாக அதிகரித்து, நடைபெற்று வருகின்றது. இப்படிப் பட்ட கல்லூரிகளில் மாணவர்களுடைய கல்வித் தரத்தை மேம் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, கழக அரசு பொறுப் பேற்றவுடன், மரியாதைக்குரிய டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையில் குழு அமைத்து அந்தக் குழுவி னுடைய அறிக்கையின் அடிப்படையில், சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் தரத்தை உயர்த்துவதற்கு தமிழக அரசு, குறிப்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்கள். அதற்கு நான் அவர்களைப் பாராட்டு



கிறேன். இதன்மூலம் சில கல்லூரிகள் தங்களுடைய அடிப்படைத் தேவைகளை ஓரளவு பூர்த்தி இருக்கும் என நினைக் கின்றேன். இன்னும் சில கல்லூரிகள் கால அவகாசத்தையும் நீதி மன்றத்திற்குச் சென்று வழக்காடியிருப்பதும் நாம் அனை வரும் தெரிந்த ஒன்று. சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் ஆனாலும், பாலிடெக்னிக்குகள் ஆனாலும் மாணவர்கள் படிப்பின் தரத்தை உயர்த்திட முன்வர வேண்டும். மாணவர்களிடமிருந்து பணம்பெறுவதையே ஒரு குறிக்கோளாகக் கொண்டு சில கல்லூரி கள் செயல்படுவதை தடை செய்தாக வேண்டும். அதற்கான நட வடிக்கைகளை கழக அரசு மேலும் தீவிரமாக ஆராய்ந்து, கல்வி யினுடைய தரத்தை, குறிப்பாக பொறியியல் கல்லூரி, பாலி டெக்னிக்குகள் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சிகள் மேற் கொள்ள வேண்டும் என மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியர் பயிற்சி நிலையங்களைப் பொறுத்தவரையில் முதலில் இருந்த ஆசிரியர் பயிற்சிக்குமேல், புதிய பயிற்சி நிலையங்கள் பல தமிழகத்தில் ஆண்டுதோறும் பெருகிக் கொண்டிருப்பதும், அதனை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதற்குப் பாராட்டுகிறேன். சென்ற ஆண்டு இப்படிப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட வேண்டுமானால், அரசினுடைய முன் அனுமதியையும், அங்கீகாரத்தையும் பெற்றுத்தான் துவங்கப்பட வேண்டும் என்ற கண்டிப்பான அறிவிப்பானது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இப்பொழுது ஆசிரியர் பயிற்சி நிறுவனம் என்ற பெயரால் பல்வேறு இடங்களில் சிறுபான்மை யினர் என்ற பெயரால் பள்ளியை நிறுவியும், நடத்தியும் வந்துள்ளனர். அரசினுடைய கட்டுப்பாட்டையும் மீறி இப் பொழுது பல மாவட்டங்களில் ஏழை, எளிய மாணவர்களிடம் நன்கொடையும் பெற்று வருகின்றார்கள். இப்படி அரசு விதியை மீறி மாணவர்களைச் சேர்த்து இருக்கின்ற நிறுவனங்கள் மீது தக்க நடவடிக்கையை முறையாக கழக அரசு மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாக ஆசிரியர் பயிற்சி நிறு வனம் என்ற பெயரால் தமிழகத்தில் முயற்சிப்பவர்களை கட்டுப்படுத்திட வேண்டும். மேலும் அரசு அங்கீகாரமின்றி வளர்ந்துவரும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைக் கட்டுப்படுத் திட உயர் மட்டக்குழு ஒன்றை அமைத்து, அதற்கான ஆலோ சனைகளைப் பெற்று செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் சிலர் நடத்துகின்ற பள்ளிக்கூடங்கள், பாலி டெக்னிக்குகள், கல்லூரிகளில் மாணவர்களும், ஆசிரியர்களும் தங்களுடைய நியாயமான தேவைகளை முறையாகக் கேட்கின்ற போது, அந்த நிர்வாகம் அதைத் தர மறுக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் மாணவர்களையும், ஆசிரியர்களையும் மிரட்டு கின்றார்கள்.

இப்படி மிரட்டுகின்ற காரியங்களில் ஈடுபடுகின்ற நிறுவனங் களுக்கு, முறையாக செயல்பட வேண்டுமென்பதை அரசு தெளிவு படுத்த வேண்டும். அப்படித்தான் அவர்களை முறைப் படுத்த வேண்டும். அவர்கள் சரியாகச் செயல்படவில்லை என்றால் அரசினுடைய மானியத்தை நிறுத்த அரசு முன்வர வேண்டும். அதற்கு ஏற்றவகையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நமது மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களுடைய பல்வேறு நடவடிக்கைகள், எடுத்திருக்கின்ற முயற்சிகள், இன்னும் வேறு பல காரியங்கள் எல்லாம் வரவேற்கக்கூடியதாக இருக்கின்றன. மேலும் இது போன்ற நடவடிக்கைகள கல்வியின் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் அமைந்திருக்கின்றன என்று பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்,

எனது தொகுதியில் ஆதியூர் ஊராட்சியில் அமைந்துள்ள பாண்டியன் பாலிடெக்னிக் தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த சட்டப்பேரவை தேர்தல் நேரத்தில் அந்தக் கல்லூரி நிர்வாகம் மாணவர்களை வாக்குகள் சேகரிக்கும் பணியில் ஈடுபடுத்தியது. அந்த நேரத்தில் சில மாணவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால், கல்லூரியை விட்டு சஸ்பெண்டு செய்தார்கள். அவர்களுக்கு ஆதரவாக இருந்த ஆறு ஆசிரியர்களை டிஸ்மிஸ் செய்தார்கள். இந்த அதிருப்தி செயலில் ஈடுபட்டிருக்கும் கல்லூரி நிர்வாகத்தின்மீதும், கல்லூரியின் முதல்வர் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கழக ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டுக் காலத்தில் எனது தொகுதியில் மூன்று மேல்நிலைப் பள்ளிகளையும், ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும் உருவாக்கித் தந்த தமிழ் மக்களின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இனமானப் பேராசிரியர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக இந்த மாமன்றத்தின் மூலம் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்,

13-15 மணி

புதுப்பேட்டை, குரும்பேரி, பேராம்பட்டு ஆகிய மூன்று கிராமங்களில் உள்ள மக்கள் சுமார் 10 வருடங்களாக மேல் நிலைப் பள்ளிக்கூடங்கள் வேண்டும் என்று கடந்த கால அரசைக் கேட்டார்கள். கடந்தகால அரசு கல்வித் துறையில் சரியாக அக்கறை காட்டாத காரணத்தினால் அந்தப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர வாய்ப்பு இல்லாத நிலை ஏற்பட்டது. ஆனால் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு கல்வித்துறையின் அமைச்சர் பொறுப்பை ஏற்று இருக்கின்ற மாண்புமிகு கல்வி



அமைச்சர் அவர்கள் வேகமாகச் செயல்பட்டு நீண்ட காலமாக நிலுவையில் உள்ள அனைத்தையும் ஆய்வு செய்து, எந்தெந்தப் பகுதிக்கு மேல்நிலைப் பள்ளிக்கூடங்கள் வேண்டும், எந்தெந்தப் பகுதிக்கு உயர்நிலைப் பள்ளிகள் வேண்டும் என்பதை மனதில் கொண்டு, செயல் வடிவம் தந்து இருக்கின்றார்கள். அத்தகைய நல்ல உள்ளம் படைத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

நாட்ராம்பள்ளி தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி, கிராமங்கள் நிறைந்த பகுதி. கிராமங்கள் நிறைந்த இந்தப் பகுதியில் புதியதாக ஆரம்பப் பாடசாலைகள் அதிக அளவில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாசிரி யப்பனார், கசிநாயக்கம்பட்டி, சந்திரபுரம் ஆகிய மூன்று நடு நிலைப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தித் தர வேண்டுகிறேன். சுந்தரம்பள்ளி, நத்தம், வெலக்கல்நத்தம் ஆகிய மூன்று உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தித்தர கழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில் கல்வித் தரம் உயர விஞ்ஞானக் கூடங்களை ஏற்படுத்த அரசு பல திட்டங்களை வகுத்து இருக்கிறது. அதை மேலும் வலுப்படுத்தி இந்த ஆண்டு முதல் நாம் எதிர்பார்க்கின்ற அளவு தரத்தை உயர்த்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முல்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கட்டிடங்களைப் பொறுத்த வரையில் நாம் பெரிய அளவில் செலவு செய்து வருகின்றோம். கட்டிடங்களைக் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு அதிகமாக இருக்கின்றது. அதிகம் என்று சொல்லும்போது தொகை அளவில் அது தேவைக்கு அதிகமானது என்று நான் சொல்லவில்லை. ஒதுக்கீடு ஓரளவுக்கு மற்றத் தலைப்புகளுக்கு இருப்பதைவிட அதிகமாக இருக்கிறது என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். இந்தக் கட்டிடங்களுக்கான பராமரிப்புக்கு கடந்த கால ஆட்சியில் மிகக் குறைந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு இருந்தது. அதன் காரணமாகத்தான் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக கிராமப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்கள் பாழ டைந்த நிலையில் நிற்கின்றன. இந்த நிலையை மாற்ற கட்டி டங்களின் பராமரிப்புக்கு அதிகக் கவனம் செலுத்திட வேண்டும் என்பதைக் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறிப்பாக எனது தொகுதியில் ஜெயபுரம் அரசு பள்ளிக்கூடம் இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றது. நத்தம், வெலக்கல் நத்தம், திரியாலம் மல்லப்பள்ளி, மட்றப்பள்ளி ஆகிய உயர் நிலைப் பள்ளிக்கூடங்கள் தேவையான அளவு கட்டிடங்கள்

இல்லாத நிலையில் செயல்பட்டு வருகின்றன. மேற் குறிப்பிட்டுள்ள இடங்களில் நிலையான கட்டிடங்களைக் கட்டித்தர வேண்டும் எனக் கழக அரசை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நாட்ராம்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களும், கெஜல்நாயக்கம்பட்டி மேல்நிலைப் பள்ளி மாணவர்களும், பிளஸ் 2 தேர்வுகள் எழுதுவதற்கு வாணியம்பாடி, செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது. திருபபத்தூர் வழியில் மூன்று இரயில்வே கேட்டுகள் அமைந்துள்ளன. செல்லுகின்ற நேரங்களில் கேட்டுகள் மூடப்பட்டால் மாணவர்கள் தேர்வுக்குத் தாமதமாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. தயவு செய்து இந்த முறையை மாற்றி, நாட்ராம்பள்ளி மேல்நிலைப் பள்ளியிலும், கெஜல்நாயக்கம்பட்டி மேல் நிலைப் பள்ளியிலும் பிளஸ் 2 தேர்வு எழுத அரசு அனுமதி வழங்கிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சத்துணவுத் திட்டத்தை சிறப்பாகவும், செம்மையாகவும் செயல்படுத்தி வருகின்றார்கள். அதன் காரணத்தால் சத்துணவு சாப்பிடுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகின்றது, சத்துணவு சாப்பிட்ட மாணவ மாணவிகள் சாப்பிட்ட பின்னர், தண்ணீர் குடிக்க வழி இல்லாமல் பல பள்ளிக் கூடங்களில் அவதிப் படுகின்றார்கள். எனவே கல்வித் துறையின் மூலமாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தாய்க்குலம், தாய்க்குலம் என்ற சொல்லை ஒரு தாரக மந்திரமாகப் பயன்படுத்தியவர்கள் எல்லாம் தாய்க் குலத்தை மறந்துவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு பெண்களுக்கு, தாய்க்குலத்துக்கு பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து இருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சொத்துக்களில் பெண்களுக்குச் சம பங்கு என்ற ஒரு சட்டம், வேலைக்கு செல்கின்ற நேரத்தில் 30% பெண்கள் நியமனம், 8–ஆம் வகுப்பு வரையிலும் அதற்கு மேலும் படித்த ஏழைப் பெண்களுக்கு அவர்களுடைய திருமணச் செலவிற்காக ரூ. 5,000 உதவித் தொகை, கருவுற்ற தாய் மார்களுக்கு ரூ. 200 உதவித் தொகை, ஆரம்ப பாடசாலைகளில் முதல் இரண்டு வகுப்புகளுக்கு பெண்களே ஆசிரியர்களாக நியமனம் செய்ய வேண்டும் என்ற ஒரு திட்டத்தையும் அறிவித்துள்ள கழக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.



நிதிநிலை அறிக்கையில் பதிலுரை வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஏழைக் குழந்தைகள் 8-வது வகுப்பு வரையாவது படிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தை எண்ணிப் பார்த்து, 8-ஆம் வகுப்பு வரையில் படிக்கின்ற மாணவ மாணவியர்கள் தங்களுடைய பள்ளிக்கூடங்களுக்குச் சென்றுவர இலவசமாக பஸ் பாஸ் வழங்கப்படும் என்று அறிவித்து இருக்கின்றார்கள். இந்தத் திட்டம் கல்வியில் வளர்ச்சிக்கு ஒரு நல்ல திட்டமாக அமையும், இந்தத் திட்டங்களை அறிவித்த கழகத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றி கலந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி. காம். போன்ற வணிகவியல் தேர்வில் வினாத் தாள் ஆங்கிலத்தில் இருந்தாலும் மாணவர்கள் பரவலாக தமிழில் விடை அளிக்கின்றார்கள். எனவே, கல்லூரிகளில் பி. காம், படிப்பை தமிழிலும் நடத்த அரசு தூண்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம்-காட்பாடி ஆகிய இரண்டு இடங்களுக்கு இடையில் பெண்கள் கல்லூரிகள் ஏதும் இல்லை, எனவே, திருப்பத்தூர் நாட்ராம்பள்ளி இரு தொகுதிகளையும் மையமாகக் கொண்டு கல்லூரியே இல்லாத நாட்ராம்பள்ளியில் ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்கக் கழக அரசை அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

13.20 மணி

கடைசியாக எனது நாட்ராம் பள்ளி தொகுதி .. .. .. ..
(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிறையப் பேசி விட்டீர்கள்.

திரு. பா. அப்துல்சமத்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற 1990–91 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பு கின்றேன். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ரூபாய் 150 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது. என்றாலும், இன்றைக்கு இருக்கக்கூடிய தேவைக்கு இது போதாது என்பது என்னுடைய கருத்து.

இன்றைய நிலையில் ஆரம்பப் பள்ளியாக இருந்தாலும் சரி, மேல்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, எந்தப் பள்ளியாக இருந்தாலும், ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்து கொண்டுதானிருக்கிறது, போதிய அறை வசதிகள் இல்லை ஒரே அறையில் பல வகுப்புகள் நடைபெறுகின்றன. இதையெல்லாம் சீர்செய்ய இந்தத் தொகை போதாது என்று நான் கருதுகின்றேன்.

கல்வியை கண்காணிப்பதற்கு டெபுடி இன்ஸ்பெக்டர்கள், டி.ஈ.ஓ.-க்கள், சி.ஈ.ஓ.-க்கள் மாவட்டத்தில் இருக்கின்றார்கள். அனேக இடங்களில் கண்காணிக்கக்கூடிய டி.ஈ.ஓ.க்களின் இடங்கள் பலயிடங்களில் காலியாக உள்ளன. அந்த இடங்களை நிறைவு செய்வதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹையர் எலிமெண்ட்ரி ஸ்கூலை ஹைஸ்கூலாக மாற்றுவதற்கும் ஹைஸ்கூலை ஹையர் செகண்டரியாக மாற்றுவதற்கும் பல்வேறு மாவட்டங்களிலேயிருந்து அநேக கோரிக்கைகள் வருகின்றன. நிதிநிலை போதாது என்றாலும், படிப்படியாக இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். இந்தக் கோரிக்கைக்கு, தேவைக்குப் பணம் கட்டப்படுகிறது; இடம் தரப்படுகிறது; கட்டிடமும் தரப்படுகின்றது, ஆனால் ஆசிரியர்களுக்குக்கூட சம்பளம் கொடுக்க மக்கள்தான் ஓரிரு ஆண்டுகளுக்கு வசூல் செய்து கொடுக்கச் சொல்வது என்றால் அது இந்த மக்களால் இயலாத காரியம். இதனால் தனியார் கல்லூரிகள் கல்வியை வியாபாரமாக ஆக்க இது உதவுகிறது. இந்த நிபந்தனையைத் தவிர்க்க வேண்டுகிறேன்.

அடுத்து கட்டிடங்கள், அரசுப் பள்ளிகளில் பலயிடங்களில் பார்க்கின்றபொழுது தேவையான ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. மக்கள் நலப்பணிக்கு ஒதுக்கப்படும் பல திட்டங்களில் கல்வித் திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, ஜவஹர் வேலைவாய்ப்பு போன்ற திட்டங்களுக்கு வரும் மொத்தத் தொகை, ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகளுக்குச் சாலை கால்வாய்கள் போன்றவற்றிற்கு ஒதுக்கப்படும் ஓராண்டு தொகை பூராவையும் கல்விக்கூடங்களுக்கு ஒரு ஆண்டுக்காவது மாற்றி இந்தக் குறையை நிறைவு செய்யலாம் என்று நான் என்னுடைய கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தொகுதியில்கூட பெரியபேட்டையில் ஒரு ஸ்கூல், வாடகை ஸ்கூல், அது நகராட்சியால் நடைபெற்று வந்தது, ஆனால் அந்த நகராட்சிப் பள்ளி மிகவும் இடிந்து தற்போது மரத்தடியில் வகுப்புகள் நடந்து வருகின்றன. இந்த நகராட்சிப் பள்ளிக்கு ஏதாவதொரு ஒரு தொகையைக் கொடுத்து





அதை அரசே பெற்று அங்கே ஒரு கட்டிடம் கட்டி அந்த மாணவர்களுக்கு ஒரு கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்காயத்தில் பல பள்ளிகளில் கழிப்பறைகளே இல்லை. பள்ளிக்கு வருகின்ற மாணவர்கள் கழிப்பறைகளுக்குச் செல்ல வேண்டுமென்றால் பக்கத்தில் வீடுகளுக்கோ அல்லது பக்கத்திலுள்ள தோட்டங்களுக்கோதான் செல்ல வேண்டும். சில வயது வந்த மாணவர்களின் நிலையைக் கண்டு இந்த அவையிலே சொல்வதற்கே நான் மிகவும் கூச்சப்படுகிறேன். பத்து ஆட்களை வைத்து வேலை வாங்குகின்ற ஒரு தொழிற்சாலையானாலும் கூட அதற்கு லைசென்ஸ் வழங்குகின்ற நேரத்தில் அதில் கழிப்பறை இருக்கிறதா என்று நாம் பார்க்கிறோம். இல்லாவிட்டால் அதற்கு லைசென்ஸ் வழங்குவது இல்லை. இப்படிப்பட்ட நேரத்தில் . . . . . . . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, பள்ளிக்கூடங்களில் அந்தப் பள்ளியினுடைய நிர்வாகம் கழிப்பறைப் போன்ற வசதிகள், குடிதண்ணீர் போன்ற வசதிகளை முதல் பொறுப்பாக செய்து தர வேண்டுமென்று பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி செய்யாததால் எங்கேனும் குறை இருக்குமானால், பெற்றோர்-ஆசிரியர் சங்கம் மூலமாக அந்தக் குறையை உடனடியாக நிவர்த்திக்க முடியும். எந்த அளவு நிதி மிச்சமிருந்தாலும் அதை அவர்களே பயன்படுத்திக் கொள்ள முடியும். அதற்கு மேலும் அவர்களால் முடியாது என்ற நிலையில் அரசுக்கு தெரிவிப்பார்களேயானால், இந்தப் பணிக்கு முன்னுரிமை தந்து அரசு உடனடியாக கவனிக்கும்.

திரு. பா. அப்துல் சமத் : தலைவரவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. இது அரசுக்குச் சொந்தமான பள்ளிகளில் இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது என்று நான் தெரிவித்து இருந்தேன். நான் என்னுடைய தொகுதியில் எத்தனை பள்ளிகளில் இந்தக் குறை இருக்கிறது என்பதை எல்லா விவரங்களுடனும் அமைச்சரிடம் கொடுத்து, இதை நிறைவு செய்வதற்கு நான் தமிழ்நாடு முழுவதுக்குமாகவும், கொடுக்கிறேன்.

13.25 மணி

அடுத்து நுழைவுத் தேர்வு. ஒருமுறை நுழைவுத் தேர்வு எழுதிவிட்டு மீண்டும் ஒருமுறை நுழைவுத் தேர்வு எழுதுவது சரியல்ல என்பது எங்களுடைய கருத்தாகும். நல்ல மார்க் வாங்கிய மாணவர்கள் கூட இந்த நுழைவுத் தேர்வில் தவறி விடுகிறார்கள். ஆகவே, நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே சில ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. அதை வேண்டுமானால் நான் எடுத்துச் சொல்ல முற்படுவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக உருது மொழி பற்றி கூற விரும்புகிறேன்' சுமார் பத்து ஆண்டுகளாக உருது பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. உருது பள்ளியில் உருது ஆசிரியர்களாக தமிழ் ஆசிரியர்களை நியமித்து இருக்கிறார்கள். தலைமை 10 ஆண்டுகளாக உருது மொழியை நசுக்க வேண்டுமென்பதை கருத்திற் கொண்டு முன்பு நடைபெற்ற அரசு நடந்து கொண் டிருக்கிறது என்பதை நாங்கள் உணர முடிகிறது.

ஆம்பூரில் ஒரு ஓரியண்டல் காலேஜ் இருக்கிறது. ஒரு உருது ஆசிரியர் இரண்டு ஆண்டுகளாக சம்பளம் பெறாமல் அதில் இருக்கிறார். டைரக்டரிடம் கேட்டால் போதுமான இல்லாவிட்டால் சம்பளம் கொடுக்க இயலாது என்று ஓர்க்லோடு கிறார்கள், சிறுபான்மையினரின் மொழியான உருது மொழியை சொல் காப்பாற்றுவதற்காக தாங்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறுபான்மையினர் மொழியான உருது மொழியும் தமிழ் மொழிக்கு அடுத்தாற் போல ஒரு இலக்கிய மொழிதான் நம்முடைய பாரத பிரதமர் வி.பி.சிங் அவர்கள் பேசுவது இந்த மொழிதான். பாரத பிரதமர் வி.பி.சிங் அவர்கள் பதவிப் பிரமாணம் உருது மொழியில்தான் எடுத்துக் கொண்டார். ஆகவே, என்னுடைய தாய் மொழியான உருது மொழியை காப்பாற்ற அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு அமர்கிறேன், வணக்கம்.

*திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு வாய்ப்பு பெற்றதற்கு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

'' வறியோர்க்கு எல்லாம் கல்வியின் வாடை
வரவிடவில்லை மத குருக்களின் மேடை
நறுக்குத் தொலைந்தது அந்தப் பீடை
நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை''

என்ற புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய கருத்துப்படி இன்றைக்கு கல்வி நீரோடை எந்தப் பீடைகளால் எவ்வாறு தடுக்கப்பட்டிருந்தது என்று வரலாற்றை எல்லாம் நாம் விவரித்துக் கொண்டிருக்க முடியாது. அந்தக் கல்வி நீரோடை தெளிவு உள்ளதாய், துல்லியமாக வறுமையால் வாடக்கூடிய பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், பாட்டாளி மக்களுடைய குழந்தைகள், கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய குழந்தைகள் எல்லாம் பெறத்தக்க விதத்தில் இந்த மானியக் கோரிக்கை அறிக்கையில் 1,050 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிற இந்த அரசை நான் மனமார பாராட்டுகிறேன்.



சென்ற ஆண்டில் 900 கோடி ரூபாய் ஒதுக்கிய இந்த அரசு இந்த ஆண்டில் 1,050 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இந்திய நாடு சுதந்திரம் பெற்றபோது ஏழு கோடி அளவில், இருந்த கல்விமானிய பட்ஜெட் இன்றைக்கு 1,050 கோடியாக 150 மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்திய துணைக் கண்டத்தின் வேறு எந்த மாநிலமும், வேறுஎந்த அரசும் இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கியதில்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த அறிக்கையின் மிகச் சிறந்த கருத்துக்களை எல்லாம் வரிசையாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவைகளை திரும்பச் சொல்லி நேரத்தை வீணாக்க விரும்ப வில்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகிறபோது, நான் சென்ற ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கையை வைத்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது இந்த அரசு என்று கூறினாரே தவிர, இந்த அரசுக்கு பாராட்டு என்று சொல்வாரா என்று பார்த்தேன். அதைக் கூட சொல்லவில்லை. உடனே மற்றொரு கோரிக்கையை வைத்து விட்டார். அங்கே சட்டக் கல்லூரி வேண்டுமென்று கேட்டார். அந்த வகையில் நல்ல காரியங்களைச் செய்கிறது இந்த அரசு.

13.30 மணி

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு, என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் அந்த மணத்தைக் கூட நுகர மறுக்கிறார்கள். ஒரு பெரிய பல்கலைக் கழகம் நம்முடைய தமிழகத்திலே 13-வது பல்கலைக் கழகம், அதுவும் நம்மையெல்லாம் ஆளாக்கி, இதே மன்றத்திலே அறிவு மழை பொழிந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நம்முடைய இயக்கத்திலே சோர்வு ஏற்படுகிற நேரத்திலேயெல்லாம் ஒரு வார்த்தையைச் சொல்வார்கள், 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்', அந்த வார்த்தைகளுக்குச் சொந்தக்காரரான மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை, தமிழ் அன்னை, 'நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்', என்ற தமிழ்த் தாயின் பாடல்களை உருவாக்கிய, அந்த நூலாசிரியருடைய பெயரால், அந்த இலக்கிய வேந்தனுடைய பெயரால், ஒரு பெரிய பல்கலைக்கழகத்தை, அதுவும் இங்கிலாந்து நாட்டிலே யிருக்கிற கிராமப்புற பல்கலைக் கழகத்தைப் போல, நெல்லை மாவட்டத்திலே தெற்குப் பகுதியிலே ஒரு பெரிய பல்கலைக்

[திரு.ச. அழகுவேலு] [1990 ஏப்ரல் 2

கழகத்தை அமைத்த கலைஞர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்; இந்த அரசை பாராட்டக் பட்டிருக்கிறேன். அதற்குத் துணையாக கடமைப் சான்றோர், இங்கே தமிழகத்தினுடைய இருக்கக்கூடிய தமிழ்ச் இருக்கிறார்கள், அந்த செந்தமிழ் கல்வி அமைச்சராக கடமைப்பட்டிருக்கிறேன். அந்தணரை நான் பாராட்டக்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 14-வது வயது வரை அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டும் என்ற குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றினாலும் கூட, எல்லா நாட்டினரையும் அறைகூவி அழைக்கின்ற திட்டத்தை எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒரு அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு எழுத்தறிவு ஆண்டு. ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலக மக்களுக்கு எல்லாம் அறியாமையைப் போக்குகின்ற வகையிலே, எழுத்தறிவைப் பரப்ப வேண்டும் என்று உலக மக்களுக்கு எல்லாம் அழைப்பு விடுத்திருக்கின்ற ஆண்டு. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூட இந்த ஆண்டு, தென் ஆற்காடு மாவட்டத்திலே, அதனுடைய தலைநகராக இருக்கிற கடலூரிலே கூட்டத்திலே கலந்து கொண்டு, அதை ஒரு மக்கள் இயக்கமாக—அதிகாரிகள் நடத்துகின்ற விழாவாக இல்லாமல், அதை மக்கள் இயக்கமாக நடத்த வேண்டும் என்ற அழைப்பை விடுத்தார்; தென்னாற்காடு மாவட்டத்திலேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு அதில் கலந்து கொண்டோம். 'எல்லோரும் கல்வி கற்று' என்று இங்கே கூறினார்களே பாவேந்தர் பாரதிதாசனுடைய கனவுகளை நிறைவேற்றுகிற வகையிலே பாவேந்தர் பாரதிதாசனோடு நான் நெருக்கமாக இருந்தவன் என்ற வகையிலே, பாரதிதாசனுடைய கருத்துக்கள், பாரதிதாசனுடைய எண்ணங்கள் எவ்வப்போது எல்லாம் எப்படி எப்படி எழுதப்பட்டது என்பதை நான் ஓரளவு உணர்ந்தவன். பாரதிதாசன் அவர்கள் சொல் வார்கள், "கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்கா சுடற்கு தூக்கு மரம் ஆங்கே உண்டாம்" என்று சொன்னார்கள். அவர்கள் இயற்றிய குறிஞ்சித்திட்டு என்ற நூலிலே எழுதுகிற போது அந்த வரிகளைச் சொன்னார்கள். சமுதாயத்திலே யார் குற்றவாளி என்று சொன்னால், இங்கே பேசுகின்றபோது சொன்னார்களே, Each one, Teach one என்று, படித்த ஒருவர் படிக்காத ஒருவரைப் பார்க்கிற போது நிச்சயமாக அவர்களை படித்தவர்களாக மாற்றுவதற்கு வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அது இல்லாதவர்களுக்கு தூக்குமரத்தை நிறுவ வேண்டும் என்றுகூட பாரதிதாசன் அவர்கள் கடுமையாகப் பேசினார்கள், "கல்லாரைக் காணுங்கால், கல்வி நல்கா சுடற்கு தூக்கு மரம் ஆங்கே உண்டாம்" என்று சொன்னதற்கு இணங்க ஐக்கிய நாடுகள் அமைப்பு எல்லா நாடுகளுக்கும் அறியாமையை ஒழிக்க வேண்டும், எழுத்தறிவை உண்டாக்க வேண்டும் என்ற



1990 ஏப்ரல் 2] [திரு. ச. அழகுவேலு]

சீரிய நோக்கத்தோடு இந்த ஆண்டை எழுத்தறிவு இயக்கம் நிறைந்த ஆண்டாக இதை விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள்.

அதோடு கல்வித் துறையிலே உள்ள ஆசிரியர்கள் அறிவினுடைய கம்பீரத்தோடு விளங்க வேண்டும். அவர்களுடைய ஆளுமை மிகச் சிறந்ததாக இருந்தால் தான், பல்கலைக் கழகங்களிலே, கல்லூரிகளிலே ஏன், தொடக்கப் பள்ளிகளிலேகூட, சிறிய மாணவர்களைக்கூட அடக்கி ஆளக்கூடிய திறமை இல்லாதவர்கள் எல்லாம் பள்ளிக்கூடத்தினுடைய தலைமை ஆசிரியர்களாக இருக்கிறார்கள், இன்றைக்கு கல்வித் துறையிலே இருக்கக்கூடிய பெரிய தேக்கம்,—நான் சொல்வதற்கு வருத்தப்படுகிறேன், நான் ஆசிரியனாக இருந்தவன்தான். இருந்தாலும் இந்தத் துறையினுடைய கருத்துக்களைச் சொல்வதில் அதிகாரிகள் வருத்தப்படக் கூடாது. ஒரு காலத்திலே கல்வித் தந்தை திரு. சுந்தரவடிவேலு அவர்கள், இந்த கல்வித் துறையினுடைய நெறியாளராக இருந்த போது இப்படிப்பட்ட சட்டமன்றங்களிலே கோரிக்கைகள் வைக்கின்ற பிரச்சினைகளுக்கு எல்லாம் அவரே முடிவெடுப்பார். அப்போது அவர் Director of Public Instruction. அப்பொழுதெல்லாம் இப்படி துணை இயக்குநர்கள் இல்லை. ஒரே இயக்குநர், தமிழகம் முழுவதும் சுற்றிச்சுற்றி வந்து கல்விச் சீரமைப்பு மாநாடுகளை நடத்தி, அவர்களுடைய தேவைகள் எல்லாம் என்ன, இந்த ஊரினுடைய தேவைகள் என்ன, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல கழிவறைகள், வகுப்பறைகள், அந்தப் பள்ளியினுடைய essential necessities என்று சொல்வார்களே, அடிப்படைத் தேவைகளை அந்த ஆசிரியர்களும், அங்கேயிருக்கக்கூடிய பெற்றோர்–ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்தவர்களும் நிறைவேற்றக்கூடிய அளவுக்கு கல்வியை இயக்கமாக நடத்தினார்கள் என்பதை கல்வியின் வளர்ச்சியிலே அக்கறையுள்ள நம்மைப் போன்றவர்கள் மறந்து விடக்கூடாது.

13–35 மணி

நான் இப்படிச் சொல்வதன் மூலமாக மற்ற இயக்குநர்கள், கல்வித் துறையை இயக்கக்கூடியவர்கள் எல்லாம் மீண்டும் இதை சிந்திக்க வேண்டும். ஏராளமான கோரிக்கைகளை மக்களுடைய பிரதிநிதிகளாக நாங்கள் அமைச்சரிடத்திலே வைக்கின்றோம். அவைகளை எல்லாம் கல்வித்துறை நெறியாளர்களும், அதனுடைய துறைச் செயலாளர் அவர்களும், அதனுடைய அடித்தளத்து அதிகாரிகளாக இருக்கக்கூடிய, ஏ.ஈ.ஓ., டி.ஈ.ஓ., சி.ஈ.ஓ. என்று எத்தனையோ ஆயிரக்கணக்கான அதிகாரிகள் இன்றைக்கு கல்வித் துறையிலே புகுந்துகொண்டிருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் இந்தக் கல்வித்துறை வளர்வதற்காக என்ன செய்கிறார்கள் என்பதை தயவுசெய்து ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். கல்வி என்பது ஒரு இயக்கமாக நடைபெறவேண்டும். நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அடிக்கடி

சொல்வார்கள். ஆசிரியர் பணி என்பது ஒரு தொழில் அல்ல. அது ஒரு பணி. அது ஒரு சேவை, அது ஒரு தொண்டு, அந்த எண்ணத்தோடு, தொண்டு எண்ணத்தோடு இங்கே பணியாற்றக் கூடிய ஆசிரியர்கள் எத்தனை பேர் என்பதை நாம் இன்றைக்கு நினைத்துப் பார்க்கவேண்டும். ஆரம்பப் பள்ளியிலிருந்து பல்கலைக் கழகம் வரை இங்கேயிருக்கக்கூடிய பல்கலைக் கழகங் கள் எல்லாம் தனித் தன்மை கொண்டதாகும். ஒவ்வொரு பல்கலைக் கழகமும் தனித்தனியாக சட்டதிட்டங்களோடு இயங்கு கின்றன. பல்கலைக் கழகங்கள் தனி அமைப்பு என்றால்கூட, அரசினுடைய சட்டதிட்டங்களை உரிய வகையில் அமல்படுத்த வேண்டும். பல்கலைக் கழகங்களுடைய பொறுப்புக்கலை நெறிப் படுத்த சரியான குழுக்களை ஏற்படுத்தி, நியமனங்கள், பணி யிடங்கள் முதலியவை நடைபெறுகின்றன. அவைகள் சரியாக முறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். எனவே அனைத்துப் பல்கலைக் கழகங்களும் சேர்த்து இப்போது ஆசிரியர்களுக்கு என்று தனியாக தேர்வு வாரியங்கள் இருப்பது போன்று வங்கிகளுக்கு தேர்வாணைக் குழு இருப்பதைப் போன்று ஒரு வாரியம் அமைத்து, அந்த வாரியத்தினுடைய நியமனங்களை முறைப்படுத்த வேண்டுமென்பதை நான் இந்த மன்றத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய முன்னாள் பதிவாளர் மற்றும் அலுவலர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை சற்று துரிதப்படுத்தப்பட வேண்டுமென்பதை தெரிவித்துக்கொள் கிறேன்.

அதுபோலவே கல்லூரியினுடைய கல்வித் தரம் உயர்த்தப் படவேண்டும். பல கல்லூரிகளில் கல்வியின் தரமும், ஒழுக்கமும் சரியாக நிர்வகிக்கப்படவில்லை. அத்தகைய கல்லூரிகளின் மீது, கல்வித்தரம் குறைந்த கல்லூரிகளின் மீது, தக்க நடவடிக்கையை நாம் கட்டாயமாக எடுக்கவேண்டும். கண்டிப்பும், கட்டாயமும் தான் கல்வித் துறையை ஒழுங்குப்படுத்தும் என்று கருதுபவன் நான். ஆசிரியர்களிடையே ஒருவிதத் தொழிற்சங்க மனப்பான்மை நிலவுகின்றது, போராட்டம், ஸ்டிரைக், வகுப்புகளைப் புறக் கணித்தல் போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. கல்லூரி முதல்வர் தன் அறிவின் கம்பிரத்தாலும், தனது கடுமை யாலும் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டும். மாணவர் களுக்காக சக்தியையும், கம்பிரத்தையும் ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். மாணவர்களின் ஒழுங்கு என்பது ஆசிரியர்கள் ஒழுங்கைப் பிரதிபலிக்கும் ஒரு நேரடி அளவு கோலாகும் என்பதை ஆசிரியர்கள் உணரவேண்டும். கல்வித்தரம் சிறந்த தமிழ்நாட்டில் 1989-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள சில கல்லூரி களில் பி.ஏ. பட்ட வகுப்பில் 6 சதவிதம் மாணவர்கள் தான் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள், 1989 ஆம் ஆண்டில். பி.எஸ்சி. பட்ட வகுப்பில் 10 சதவிதம் தேர்ச்சி. இப்படி ஆயிரம் கோடி



ரூபாய் செலவழிக்கக் கூடிய கல்வித்துறையில் அதனுடைய பலன். பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஒரு கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரத் தேர்வில் ஒருவர்கூட தேறவில்லை.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போன்று ஒருவர்கூட தேறாத காரணத்தால் அவர்கள் தகுந்த தேர்ச்சி பெறாதவர்கள், தவறியும் தேறிவிடாத காரணத்தால் 'பொருளாதாரம்' பிழைத்துக் கொண்டது என்று கருதலாம்.

திரு. ச. அழகுவேலு : 1987-ல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்சி. கணிதத்தில் 5.5 சதவீதம் மட்டுமே தேர்ச்சி. இதே பல்கலைக் கழகத்தில் 1987-ல் எம்.ஏ. ஆங்கிலம் தேர்வு எழுதியவர்கள் 1,276 பேர். இவர்கள் ஒருவர்கூட முதல் வகுப்பில் தேறவில்லை.

13:40 மணி

1987 ஆம் ஆண்டு 2,980 மாணவர்கள் எழுதிய எம்.ஏ. பொருளாதார தேர்வில் முதல் வகுப்பில் தேறியவர் ஒரே ஒருவர். இந்தியாவிலேயே 2-வது பெரிய பல்கலைக் கழகமான இதில் 22 பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் ஒருவர் கூட தேறவில்லை. அந்த நிலைக்கு என்ன காரணம்? கல்வியாளர்கள் சிந்திக்க வேண்டும். குறைகளைக் களைய வேண்டும். நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக வைர விழாவிலே கலந்துக் கொண்டு உரையாற்றும்போது ஒரு அருமையான கருத்தைக் கூறினார்கள். வேதனைப்பட்டார்கள். நம்முடைய 2 ஆம் தர கல்லூரிகள் மூன்றாம் தர மனிதர்களை உற்பத்தி செய்கின்றன என்று. பல்கலைக் கழகப் பட்டம், வேலை வாங்கக் கூடிய ஒரு பாஸ் போர்ட் என்று மக்கள் நினைக்கிறார்கள். வேலை இல்லாத் திண்டாட்டத்தின் கொடுமையை நம்முடைய பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் கண்டு கொள்வதே இல்லை. தன்னம்பிக்கையை ஊட்டி நல்ல குடிமக்களை உருவாக்காத கல்லூரிகள் என்ன கல்லூரிகள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நான் செய்தித்தாளில் பார்த்தேன். நம்முடைய சர்வீஸ் கமிஷனில் எழுதக்கூடிய மாணவர்களில் ஒருவர், நேரு யார் என்று கேட்டதற்கு—பண்டித நேரு யார் என்று கேட்டிருந்த கேள்விக்கு ஒரு எம்.ஏ. பட்டதாரி பதில் எழுதியிருப்பதாக நான் ஒரு பத்திரிகையிலே படித்தேன். நேரு என்பவர் தமிழ்நாட்டினுடைய மின்சார அமைச்சர் என்று. உண்மையாகவே நான் இதை சொல்லிக் கொள்வதிலே உள்ளபடியே வெட்கப்படுகிறேன். இன்னொரு மிக முக்கியமான விஷயம் (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'ஹைலர்ஸ்' என்று சொல்லப்படுகிற இப்படிப்பட்ட ஒன்றிரண்டு விடைகளை வைத்துக்கொண்டு மொத்தமாக, அப்படி ஒரு நிலை அந்தப் போட்டியிலே ஈடுபடுபவர்களுக்கு மொத்தமாக உரியதாக நாம் கருதக்கூடாது. இரண்டாவதாக ஒரு கேள்வி கேட்கும் போது, நேரு என்பவர் யார் என்று கேட்டால் அந்தக் கேள்வியிலேயே என்ன தொனிப் பொருள் ஏற்படுகிறது. தெரிந்த நேருவைப் பற்றி யாருமே கேட்கமாட்டார்கள். தெரியாத நேருவைப் பற்றித்தான் கேட்டிருப்பார்கள் என்று தமிழகத்தினுடைய மின்சார அமைச்சர் என்று சொல்லக்கூடிய ஒரு எண்ணம் வருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஒரே கேள்வி இரண்டு விதமாக உணர்வதற்கும் இடம் தந்து விடுகிறது. எனவே அவற்றையெல்லாம் பெருங்குற்றமாகக் கருதி, அவைதான் மொத்த நிலை என்று முடிவு எடுக்க முடியாது. பத்திரிகையிலே அவற்றை மக்கள் தெரிந்து கொண்டால் அதை நகைச்சுவையாக கருதுவார்கள் என்று வெளியிடுகிறார்கள் என்றுதான் நாம் கருத முடியும்.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் மீடியத்திலே படிப்பது கேவலம் என்ற மனப்பான்மை தமிழ் மக்களிடம் பரவி வருகின்ற ஒரு நோய். தமிழில் முடியும், தமிழாலும் முடியும் என்ற தன்னம்பிக்கையை நம்முடைய பல்கலைக் கழகங்கள் உண்டாக்க வேண்டும். இன்னும் ஒரு மிக முக்கியமான செய்தி, நம்முடைய கல்வித்துறைக்குச் சம்பந்தம் இல்லாத செய்தி என்றாலும் கூட தமிழ் மீது ஆழ்ந்த அக்கறை உள்ளவர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள கவிஞர்கள் அனைத்து சிந்தனையாளர்களும் நினைத்துப் பார்க்க வேண்டிய ஒரு செய்தி, தமிழுக்கு இன்று வரை ஒரு நோபல் பரிசு பெற வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற கருத்தை நான் உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு கல்வி இலாக்கா பொறுப்பு என்று நான் குற்றம் சாட்டவில்லை. நேற்று பிறந்த மொழி, நெறிப்பட்ட மொழியல்லாத மொழிகள் எல்லாம் இந்தியாவிலே எல்லா மொழிகளிலும் அந்தந்த மொழிகளில் இலக்கியத்திலே நோபல் பரிசு பெற்றிருக்கின்றன. நம்முடைய தமிழ், நம்முடைய சிறப்பு வாய்ந்த தமிழ், நம்முடைய வரலாற்றிலேயும் அதனுடைய சிறப்பையெல்லாம், அழகை எல்லாம் நாம் நாள் கணக்கிலே பேசிக் கொண்டிருக்கிறோம். அதிலே நோபல் பரிசு பெறக்கூடிய இலக்கியங்கள் ஏராளமாக இருக்கின்றன. நான் இல்லை என்று சொல்லவில்லை. குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை. சற்றுக் கூடுதலாகத்தான் சொல்கிறேன்.

நம்முடைய பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்கள் இருந்த காலத்திலே நான் இந்தக் கேள்வியை அவரிடத்திலே



கேட்டேன். தமிழ் ஏன் இதுவரை நோபல் பரிசு பெறப்படவில்லை என்று கேட்டபோது அவர்கள் சொன்னார்கள், நம்முடைய திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததை நாங்கள் நோபல் பரிசுக்காக ஒரு தடவை அனுப்பினோம். அவர்கள் படித்துப் பார்த்துவிட்டு அதில் இல்லாத கருத்து கீதாஞ்சலியில் என்ன இருக்கிறது, நிச்சயமாக இதற்கு நோபல் பரிசு தரவேண்டுமே என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் தரப்படவில்லை என்ற கருத்தை அவர் என்னிடத்திலே சொன்னார். அது சரியா தவறா என்பது பேராசிரியரைப் போன்றவர்களுக்குத் தான் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதுவும் சரியான கருத்தாகவும் அல்லது மதிக்கப்பட வேண்டிய ஒரு நூலாகவும் இருந்தாலும் கூட திருவாசகத்தினுடைய மொழி பெயர்ப்புத்தான் கே.எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய ஆங்கில ஏடு என்ற காரணத்தாலும் 'கீதாஞ்சலி' கவி தாகூர் சொந்தமாக எழுதியது என்ற காரணத்தாலும் ஒரு வேற்றுமை ஏற்படுவதற்கு இடம் இருக்கிறது. சொந்தமாக தாகூர் எழுதினார் என்பது போல, அண்மைக் காலத்திலே பாரதியார் எழுதிய நூலை வைத்துக்கொண்டு, பாரதிதாசன் எழுதிய நூலை வைத்துக்கொண்டு மொழி பெயர்த்துக் கொடுத்து அவர்களை பரிசுக்குரியவர்களாக கருதுவதாக இருந்தால் பரிசு வழங்கக்கூடும்.. அந்த முயற்சியை அதிலே ஆர்வம் உள்ளவர்கள் மேற் கொள்ளலாம்.

13.45 மணி

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டாவது, வள்ளுவர் கோட்டத்தில் அமையக் கூடிய இந்தக் குழு, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய சங்கத் தமிழ், குறளோவியம் போன்றவற்றை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து, 'நோபல் பரிசு' பெறக்கூடிய தகுதியை—பரிந்துரையை நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல பொதுப்பட்டியலிலே. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பழைய செய்தியை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். குறளோவியம் எப்பொழுதோ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தாகி விட்டது.

திரு. ச. அழகுவேலு : 'நோபல் பரிசு'க்காக அனுப்ப வேண்டுமென்று சொன்னேன்.

அதைப் போலவே பொதுப் பட்டியலில் இருக்கும் கல்வியை மாநிலப் பட்டியலில் மாற்றம் கொண்டு வரவேண்டும். மெக்காலே காலத்து ஆங்கிலக் கல்வியின் ஆதிக்கம், தமிழகத்தை விட்ட

[திரு. ச. அழகுவேலு] [1990 ஏப்ரல் 2

பாடில்லை. பல்கலைக் கழகங்களிலுள்ள அனைத்துத் துறை களிலும். தமிழ்த் துறையைத் தவிர பிற துறைகளில் தமிழே இல்லை. கலைப் பாடங்கள், அறிவியல் பாடங்கள் என வரும் அனைத்துப் பாடங்களிலும் ஆய்வுகள் தமிழிலேயே நடைபெற வேண்டும் என கூறி எனது தொகுதி பிரச்சினைகள் சிலவற்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.... (மணியடிக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3–4–1990) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 13.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

54. தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை சாமை மற்றும் மொச்சை ஆகியவற்றின் மீதான கொள்முதல் மற்றும் விற்பனை யினை கட்டுப்படுத்துதல் குறித்து வேளாண்மைத் துறையின் 24—7—89 ஆம் நாளிட்ட 528 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. குறிப்பிட்ட சில வேளாண்மை விளைபொருள்களை பொறுத்தவரை ஆலங்குளம் அங்காடியினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 26—10—89-ஆம் நாளிட்ட 804-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவில் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

56. கொள்ளினை பொறுத்தவரை சேலம் மாவட்டத்தினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 13—12—89-ஆம் நாளிட்ட 946-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1990 ஏப்ரல் 2]

57. சென்னை உதைனி டிரஸ்டுக்கு சொந்தமான டி.எம்.வி. 1864 எண் கொண்ட மோட்டார் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின் 1–1–1989-ஆம் நாளிட்ட 2362-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

54. கோரிக்கை எண் 17—தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

55. கோரிக்கை எண் 17—தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

56. கோரிக்கை எண். 17—தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

57. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழிற் கல்வி பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1990–91 (ஆங்கிலம்).

58. கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

59. காட்டுவளத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1990–91 (ஆங்கிலம்).

60. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (மூன்றாவது பட்டியல்).

61. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (நான்காவது பட்டியல்).

[1990 ஏப்ரல் 2

## இணைப்புகள்.

[104 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

### 1. தோற்றுவாய்.

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

என்றார் வள்ளுவர்.

எண்ணும் எழுத்தும் கருவியாக நின்று, எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்கின்றது. மனிதனின் எண்ணங்கள்—அவன் அறிந்து கொள்ளும் செய்திகளால் பெருகின்றன. செய்திகளை அறிந்து கொள்ள, அதன் மூலம் உலகோரின் வாழ்வையும் முன்னேற்றத் தையும் புரிந்துகொள்ள, அவற்றை ஒப்புநோக்கிச் சிர்தூக்கிப் பார்த்துத் தெளிவடைய, வாழ்வில் தானும் ஒரு மனிதனாக நிமிர்ந்து நிற்க, தனது கடமையைத் தீர்மானித்துக் கொள்ள, உரிமையைக் காத்துக்கொள்ள, செய்யத்தக்கதும் அல்லாததும் தெளிந்திட, கல்வியே பெரிதும் கருவியாகின்றது. அதனாலன்றோ, வாழும் உயிர்கட்கெல்லாம்—அவற்றின் வாழ்வுக்குத் துணையாகும் கண்போன்று மாந்தர்க்கு எண்ணும் எழுத்தும் இன்றியமையாத் துணை என்றார். கண்களின்றேல் விலங்குகள் படும் இடர்ப்பாடு —துன்பம் அனைத்து என்ன எழுத்து அறிவுபெறா மாந்தர் உறும் துன்பம் என்பது கருத்து. கண்ணிருந்தும்—எழுத்தறிவு பெறாதார்—விலங்கொடு ஒத்ததாழ் நிலைக்குத் தள்ளப்படு கின்றனர். கல்லாத மாந்தரின் கண்கள்—புண்களை ஒத்துத் துன்பம் அடைவதற்கே துணையாகி விடும் என்னும் எச்சரிக் கையை—வள்ளுவர்

''கண்ணுடையவர் என்பவர் கற்றோர், முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லா தவர்''

என்னும் குறளால் தெரிவிக்கின்றனர். கல்லாமையின் துன்பத் தைக்கூட எழுத்தறியாதார் எளிதில் தெளிவதில்லை. கல்லாமை— இல்லாமையினும் கொடிது. கல்லாமை—பகுத்தறியும் திறன் வளர இடமளிக்காமையினால் மனித வாழ்வையே பயனில்றிப் பாழாக்குவது.



''உளரென்னும் மாத்திரையர் அல்லால்—பயவாக்
களரனையர் கல்லா தவர்''

என்னும் குறள் மூலம், கல்லாதவர் உயிருடன் உள்ளனர்—என்று கொள்ளப்படும் அளவினராய் (மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு உரியவராவரன்றி) ஒன்றும் விளைய முடியாதகளர் நிலத்திற்கு ஒப்பாகத் தமக்கும் பிறர்க்கும் பயனற்றவராவர் என்றார் வள்ளுவர், கல்லாமை—அறியாமை வளரவும்—மூடநம்பிக்கைகள் முதிரவும், அடிமை மனப்பான்மை படியவும், ஏதுவாதலின், எழுத்தறியாத மக்கள் பெருகி நிற்கும் ஒரு நாடு முன்னேற முடியாது. மனித வள ஆற்றல் பெருக, உழைப்புத் திறன் வளர, மனித முயற்சியின் பலன் சிறக்க எழுத்தறிவு வழிப்பட்ட கல்வி— நாட்டினர் எல்லோருக்கும் இன்றியமையாததாகும்.

2. நம்நாடு சுதந்திரம் பெற்று—நாற்பதாண்டுகளைக் கடந்தும், கல்வி வழங்கும் கடமையும்—பள்ளிகளை உருவாக்கும் பணியும் தொடர்ந்தும், கல்வி பெற்றோர் எண்ணிக்கை ஆண்டு தோறும் பெருகியும்—ஆசிரியர் மாணவர் தொகை பலமடங்காகி யும்—அரசு கல்விக்கெனச் செலவிடும் தொகை—விடுதலைபெற்ற காலத்தில் 7 கோடியாக இருந்து, இன்று 1000 கோடியாக,—நூறு மடங்குக்கு மேல் உயர்ந்தும், எழுத்தறியாதார் தொகையும் போட்டி போட்டுக் கொண்டு உயர்ந்து வருகிறது என்னும் உண்மை நம்மைக் கவலச் செய்கின்றது. ''இந்த ஆண்டு உலக எழுத்தறிவு ஆண்டு'' என்று ஐ.நா. அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது. 'எல்லோருக்கும் எழுத்தறிவு' ஏற்படுத்திட, எல்லோரும் முனைவோம் என்று, எல்லா நாட்டினரையும் அழைக்கின்றது. நமது நாட்டிலும் அந்தக் குறிக்கோளை ஏற்று நிறைவேற்ற முற்பட்டுள்ளோம். நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் பதினான்கு வயது வரை அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்னும் குறிக்கோள் இடம்பெற்றிருப்பினும், நமது மாநிலத்தில் அந்தக் குறிக்கோள் நிறைவேறுவதற்கு ஏதுவான முறையில் இலவசக்கல்வி வழங்குவது நடைமுறைக் கொள்கையாகச் செயற் படினும்—மேலும் பள்ளியில் சிறுவர் சேர்ந்து பயில்வதை ஊக்கப் படுத்த—இலவசமாகச் சத்துணவு, சீருடை பாடப்புத்தகங்கள். சாலணி ஆகியவை பெருஞ்செலவில் வழங்கப்படினும், கல்வியின் பலபடி நிலை—வகை—துறைகளுக்காக ஏறத்தாழ ஆண்டு நிதி வரவு செலவுத் திட்டத்தில் 22 விழுக்காடு ஒதுக்கப்பட்டு வந்தாலும்—அவரவர் சூழ்நிலையால், பழக்கத்தால் கல்வியின் அருமையை உணராமையால், தம் தம் பின்தங்கிய, தாழ்த்தப் பட்ட சமுதாயச் சூழலின் தாக்கத்தால்,—எழுத்தறியாதார் விழுக்காடு—இன்றும் ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆக நிலவுகிறது. அப்படிப்பட்ட மக்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கக்கூடிய—தாழ்த்தப்பட்ட பழங்குடிமக்கள் வாழ்பகுதி, பிற்படுத்தப்பட்ட மக்கள் உறையும் ஊர்கள் ஆகியவற்றினைத் தேர்ந்து எடுத்து, வயதுவந்தோர் எழுத்தறிவுத் திட்டப்பணி மேற்கொள்ளப்பட்ட இடங்களில் எழுத்தறியாதார் கற்றுக்கொள் வதில் காட்டும் ஆர்வத்தினால் தகுந்த அளவு பலனளித்துள்ளது

என்பது நமக்கு நம்பிக்கை தரும் செய்தியாகும். அங்குள்ள கல்லாத பெண்கள் அதிக அளவில் பயன்பெறச் செய்யும் நோக்குடன், வயது வந்தோர் கல்வி வழங்கும் திட்டம் செயற் படுகிறது. எனினும் இத்திட்டம் இன்னும் ஐந்தாண்டு தொடர்ந் தாலும்—''எல்லோரும் கல்வி கற்றவர்—எனருந் தமிழ்நாட்டின் கண்'' என்று பாடும் நாள் வருமா என்பது கேள்விக் குறியேயா யினும், இந்த முயற்சியை விரிந்த அளவில் தொடர்ந்து மேற் கொள்வது நமது கடமை.

3. கல்வி கற்ற ஒவ்வொருவரும் கல்லாத ஒருவருக்குக் கல்வி அளிப்பது (Each one Teach one) என்று முன் வந்தால்—இந்தக் குறிக்கோளும் விரைவில் நிறைவடையும். மக்கள் ஆட்சி நெறி யினை ஏற்று—மக்கள் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையாகவே அரசாட்சி அமைத்திடும் முறை செயற்படுத்தப்படும் நம் நாட்டில், மக்கள் சிறந்த ஆட்சியை உருவாக்கிடும் திறன் பெறவும் அனைவரும் எழுத்தறிவு பெற்றவராதல் வேண்டும் என்பதை மறத்தற்கில்லை. எனவே எல்லாக் குழந்தைகளும் உரிய வயதில் பள்ளியில் சேர்ந்து பயின்றிடவும்—தகுந்த அளவு உயர்நிலை மேல் நிலைக் கல்வி பெறவும்—பயிற்சித்திறன் உடைய இளைஞர் கல்லூரிக் கல்வியும்—தொழிற்கல்வியும் பெறவும் வழி செய்வதும் வாய்ப்பளிப்பதும் அரசின் குறிக்கோள் ஆகும். சமுதாய வாழ்விலும் முன்னேற்றத்திலும் கல்விப் பயிற்சி உடையாரின் பங்கும், தாக்கமும் பெரிது. நமது சமுதாயம், வரலாற்றின் பல்வேறு கால கட்டத்தின் விளைவுகளால் பல நிலைப்பட்டதாக ஆகி, ஏற்றத் தாழ்வுகளுக்கு ஆட்பட்டு, ஒடுக்கப்பட்டவர்களும் ஒதுக்கப்பட்டவர்களும் கொண்டதாக உருப்பெற்று விட்டதால், அவர்களின் முன்னேற்றத்துக்கும் வழி கண்டாலன்றி-சமுதாயமோ —நாடோ முன்னேற முடியாது என்பதுடன், நீதி மறுக்கப்பட்ட மக்களைக் கொண்ட சமுதாயம் நெருக்கடிகளைச் சந்திக்க நேரும் என்பதையும் கருதியே—தாழ்த்தப்பட்டோர், மிகவும் பின் தங்கி யோர், பின் தங்கியோர், மகளிர் ஆகியோர் கல்வி பெறும் வாய்ப்பைப் பெருக்குவதற்கு ஏற்ற வழிவகை காண்பதிலும் தனி கவனம் செலுத்தப்படுகிறது.

4. கடந்த ஆண்டு, பெண்ணுரிமை பேணும் ஆண்டாகக் கொண்டாடப்பட்டதை ஒட்டி—இளங்கலைப் பட்டப்படிப்பு முடிய—ஏழை மாணவிகட்கு இலவசப் படிப்பு அறிவிக்கப்பட்டது. ஏழ்மையில் வாடும் குடும்பத்தார்—தமது பெண்களை எட்டு, ஒன்பது, பத்து வயதுக்கு மேல் படிக்கவைப்பது வீண் என்று கருதி பள்ளி செல்லாது நிறுத்திவிடும் பழக்கத்தைக் கைவிட்டு தொடர்ந்து படிக்க வைத்திடப் பெற்றோர்களை ஊக்கப்படுத்தும் ஒரு வழியாகவே—எட்டாவது படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமணத்திற்காக ரூ. 5,000 உதவித்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டதில்—பல்லாயிரம் பேர் பயனும் பெற்றுள்ளனர். பழங்குடிப் பெண்களாயின் ஐந்தாவது படித்தாலே இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. இவற்றின் ஒட்டுமொத்தப் பலனாக, நெடுங்காலமாகவே பெண்கள் கல்வி



பெறுவதைப் புறக்கணித்து வந்துள்ள நம் சமுதாயத்தில், இதனால் பரவலாகப் பெண்கள் ஓரளவு கல்வி பெற்றவர்களாகி, பெண்ணின் பெருமையையும் உரிமையையும் காத்திட வல்லவராவர் என்ப துடன் நாடு முன்னேறவும் ஏற்ற அடித்தளம் அமைத்ததாகும். மகளிர் தொழிற் கல்வி வாய்ப்புப் பெருகுவதற்கு ஏதுவாக சேலம், கோவை, திருச்சி ஆகிய மாவட்டங்களில்—மூன்று புதிய தொழில் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

5. இனிவரும் ஆண்டுகளில் எட்டாவது வகுப்பு வரையில் பயிலும் மாணவியர் எண்ணிக்கை பெருகி, அது மேல் வகுப்பு களிலும் தொடரும் என எதிர்பார்க்கலாம். துவக்கக் கல்வி மேலும் பரவலாகக் கிடைக்க 500க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 439—சிற்றூர்களில் வரும் ஆண்டில் புதிய ஓராசிரியர் ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படும். படிக்க முன்வரும் பதினான்கு வயது வரை உள்ள சிறுவர் எண்ணிக்கை பெருகு வதற்கு ஏற்ப, அதிக ஆசிரியர்களைப் பணியிலமர்த்த, வரும் ஆண்டில் கூடுதலாக 1,200 இடைநிலை ஆசிரியர்களை, இரண்டு ஆண்டு காலத்திற்கு மாதம் ரூ. 800 தொகுப்பூதியத்தில் நியமித் திட வகை செய்யப்பட்டுள்ளது. அவர்கள் இரண்டு ஆண்டுகட்குப் பின்—இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதங்களில் முறைப்படுத்தப் பட்டு நியமிக்கப்படுவர்.

6. ஆசிரியர் பயிற்சியின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக மாவட்டக் கல்விப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட வேண்டும் என்னும் நோக்கத்தில், பதினான்கு மாவட்டங்களில் உருவாகி வருவதை தொடர்ந்து மேலும் ஏழு மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படும். பள்ளிக் கல்வித்துறை இயக்கத்தின் பணிச் சுமையைக் குறைத்துச் சீராக்கவும், ஆசிரியர் பயிற்சி நிலையங் களின் பயிற்சித் தரத்தை கண்காணித்து மேம்படுத்தவும்— தனியார் பயிற்சி நிலையங்களின் செயற்பாட்டை ஒழுங்குபடுத் தவும், ஆசிரியர் பயிற்சித்துறைக்கென ஒரு தனி இயக்ககம் ஏற்படுத்தப்பட இருக்கிறது.

7. அரசு மானிய உதவிபெறும் பள்ளி நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர்கட்கும்—ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கட்கும் இந்த ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து மாதம் ரு. 15 வீதம் மருத்துவப்படி வழங்கவும் தீர்மானித்துள்ளது. இதன்மூலம் 1,25,000 பேர் பயனடைவர்.

8. தொழிற் கல்வி இயக்ககத்தின் நிருவாகப் பொறுப்பு பெருகி வருவதைக் கருதி, பொறியியல் கல்லூரிக் கல்வி (Engineering colleges) பலதொழில் பயிற்சி நிலையங்கள் (Polytechnics) தொழிற் கல்வித் தேர்வுகள் ஆகிய மூன்று பிரிவாகக் கொண்டு, தனிப் பொறுப்பில் செயற்படுத்த அரசு திட்டமிட் டுள்ளது. பல்கலைக்கழக - கல்லூரி ஆசிரியர்கள் 16,000 பேருக்கும், பொறியியல் கல்லூரி, பலதொழில் பயிற்சி நிலைய ஆசிரியர்கள் 4,000 பேருக்கும் பல்கலைக் கழக மானியக்குழு,

அனைத்திந்தியத் தொழிற்கல்வி மன்றம்—ஆகியவை அறிவித்த
ஊதிய விகிதம் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

9. கல்லூரிக் கல்வியின் தரமும் திறமும் மேம்படவும்,
பட்டம் பெறும் மாணவர்கள் அகில இந்திய அரசு அலுவல்
தேர்வுகளில் (I.A.S., I.P.S., I.F.S. முதலானவற்றில்) சிறந்து
விளங்கிடவும், ஏற்ற வழி காணப் பல்கலைக் கழகங்கள் கேட்டுக்
கொள்ளப்பட்டுள்ளன. தமிழிலேயே கல்லூரிக் கல்வி பெறுவது
எளிதாக வாய்த்திட அறிவியல் துறைகள் அனைத்திலும் தகுந்த
பாடநூல்கள் வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
தெற்கு மாவட்டங்களில் ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும்
என்னும் கருத்து ஏற்கப்பட்டு, அந்தப் பல்கலைக்கழகம்—'நீராரும்
கடலுடுத்த' என்னும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை வழங்கிய
வரும், தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியவருமான மாமேதை
நினைவு போற்றும் வண்ணம் ''மனோன்மணீயம் சுந்தரனார் பல்
கலைக்கழகம்'' என்னும் பெயரில் அமையவிருக்கிறது.

10. பள்ளி, கல்லூரி, தொழிற் கல்வி நிலையம்—முதலான
கல்விப்பணி ஆற்றும் அமைப்புகள் எதுவாயினும், ஆசிரியர்களின்
அறிவு ஆற்றலாலும், தொண்டு ஆர்வத்தாலும் சிறப்படை
கின்றன. ஆசிரியர் பணி—ஒரு தொழிலல்ல— மாறாக ஒரு
தொண்டு; சமுதாய நல்வாழ்வுக்கும் முன்னேற்றத்துக்கும் வழி
வகுக்கும் சீரிய தொண்டு, பெருமைக்குரிய பணி என்பதை
உள்ளங்கொண்டு, மாணவர்கட்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத்
திகழ வேண்டும் என்னும் ஆர்வத்துடன், அவர்தம் குறைகளை
போக்குவதற்கு வாய்ப்பாக கல்வி மாவட்டங்களின் அளவிலும்,
மாநில அளவிலும் ஆசிரியர் அமைப்பு நிருவாகிகள் கலந்து
கொள்ளும் கலந்தாய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

11. பள்ளிகளில் பயிலும் மாணவர் பெறும் கல்வியின் தரமும்
—பயனும் சிறப்புற வேண்டுமெனில், மாணவர்களின் பெற்றோர்
கட்குப் பள்ளியுடன் நெருக்கமான உறவு அமைய வேண்டும்
என்பதற்காக, ஒவ்வொரு பள்ளியிலும் 'பெற்றோர்—ஆசிரியர்
கழகம்' அமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுச் செயற்
படுத்தப்படுகிறது.

12. பொது நூலக இயக்கம் வளர்ந்திடப், பொதுமக்கள் ஒத்
துழைப்போடு மாவட்ட நூலக இயக்க மாநாடுகள் பல நடத்தப்
பட்டு, நூலகம் கட்டுவதற்கான மனையும், நூலகங்களின் தேவைக்
கான தளவாடங்களும் பெறப்பட்டு நிறைவு செய்யப்பட்டு
வருகின்றது.

13. கல்வித் துறையின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் மைய
அரசு கொண்டு வந்த நிதி உதவித் திட்டங்கள் முழு அளவில் நிறை
வேற்றப்பட்டுள்ளன. துவக்கப்பள்ளி வளர்ச்சிக்கு உறுதுணை
யான கரும்பலகைத் திட்டம, பள்ளிகளில் அறிவியல் கல்வியை
மேம்படுத்தும் திட்டம், தொடர் கல்வி நிலையப் பணித் திட்டம்,
உயர் கல்வியியல் நிறுவனங்கள் உருவாக்கும் திட்டம் ஆகியவை



மைய அரசின் பாராட்டினைப் பெறும் அளவிற்கு நிறைவேற்றப்
பட்டு வருகின்றன.

14. கடந்த ஆண்டுக் கல்வி மானியக் கோரிக்கை வைக்கப்
பட்டபோது தெரிவிக்கப்பட்டிருந்த பல பணிகளும் தொடர்ந்து
நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 'கல்வி' எல்லையற்றது. 'கலை'
வரம்பற்றது. 'பண்பாடு' ஆழமானது. அவற்றை உள்ளீடாகக்
கொண்ட கல்வித்துறையின் திட்டமும்—கடமையும்—பணியும்
எந்நாளும் தொடர்வது. தொடரும் பணியாதலின் என்றும்
ஆய்வுக்கும் உரியதாவது. காலத்தினை விட விரைந்து வளரும்
அறிவியல் வளர்ச்சியின் பயனை நிறைவாக அடையும் வரையிலும்
தமிழ்மொழி ஆக்கமும் பண்பாட்டுச் சிறப்பும் தொடர்ந்து வளரும்
வகையிலும், கல்வித்துறையின் பணி நாளும் வளர்வதாகும்.

கல்விச் செலவும் மாநில வரவு—செலவுத் திட்டமும்.

கல்விக்காக 1990–91 ஆம் ஆண்டில் ''மானியக் கோரிக்கை
17—கல்வி''-ன்கீழ் ஒதுக்கியுள்ள ரூபாய் 1042 கோடி அவ்வாண்டு
வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 4,814
கோடியில் சுமார் 22 விழுக்காடாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1990–91 ஆம்
ஆண்டின் வரவு—செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப்
பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:—

1990–91 ஆம் ஆண்டு வரவு—செலவு மதிப்பீடு.

| | திட்டமில்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 2059. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்புச் செலவு .. | 3.52 | .. | 3,52 |
| 2202. பொதுக் கல்வி— | | | |
| 01. தொடக்கக் கல்வி.— | 4,09,06 | 20.18 | 4,29,24 |
| 02. உயர்நிலைப் பள்ளிக் கல்வி .. .. | 3,17,78 | 92 | 3,18,70 |
| 03. கல்லூரிக் கல்வி | 84,64 | 2,30 | 86,94 |
| 04. வயது வந்தோர் கல்வி .. | 1,92 | 7,76 | 9,68 |
| 05. மொழி வளர்ச்சி .. | 1,58 | 18 | 1,76 |
| 80. பொது—ஏனைய செலவு .. .. | 85,03 | .. | 85,03 |
| கூட்டுக—திருப்பி வசூலிப்பவை | 92 | .. | 92 |
| பொதுக் கல்வி மொத்தம்.. | 9,00,93 | 31.34 | 9,32,27 |

| (1) | திட்டமில்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | 1990–91 வரவு-செலவு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2203. தொழில் நுட்பக் கல்வி. | 30,37 | 2,01 | 32,38 |
| 2204. விளையாட்டும், இளைஞர் நலனும் | 6,48 | 1,63 | 8,11 |
| 2205. கலை, பண்பாடு நூலகங்கள் | 7,70 | 20 | 7.90 |
| ஆவண காப்பகங்கள் | 55 | 27 | 82 |
| நுண்கலைக்கல்வி—கலை கைத்தொழில் கல்லூரிகள் | 61 | 1 | 62 |
| இசைப் பயிற்சி மையங்கள் | 17 | 10 | 27 |
| கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு | 10 | 1,03 | 1,13 |
| தொல்பொருள் ஆய்வு .. | 56 | 11 | 67 |
| அருங்காட்சியகங்கள் .. | 51 | 5 | 56 |
| பிற செலவுகள் | 72 | .. | 72 |
| கலை பண்பாடு மொத்தம் .. | 10,92 | 1,77 | 12,69 |
| 2235. சமூக பாதுகாப்பும் நலனும் | 27 | .. | 27 |
| 2236. சத்துணவு .. | 51,00 | .. | 51,00 |



| (1) | திட்டமில்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | 1990–91 வரவு செலவு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 3425- ஏனைய அறிவியல் பணிகள் .. | .. | 1,73 | 1,73 |
| 3454. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரங்கள்— மாவட்ட விவரச் சுவடிகள் .. | .. | 5 | 5 |
| பெருமொத்தம் மானியக் கோரிக்கை '17 கல்வி' .. | 10,03,49 | 38,53 | 10,42,02 |

துறைவாரியாக ஒதுக்கீடு விவரம் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| கல்வித்துறை .. | 10,01,40 | 37,19 | 10,38,59 |
| தமிழ் வளர்ச்சி— பண்பாட்டுத்துறை .. | 2,09 | 1,34 | 3,43 |
| மொத்தம் .. | 10,03,49 | 38,53 | 10,42,02 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காகப் பிற மானியக் கோரிக்கைகளின்கீழ் 1990-91-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு:—

(அ) வருவாய்க் கணக்கில் செலவு:

| | | | |
|---|---|---|---|
| மானியக் கோரிக்கை 28— சமுதாய வளர்ச்சி— சமூகக் கல்வி .. | .. | 15 | 15 |

| | 1990-91 வரவு-செலவு மதிப்பீடு | | |
|---|---|---|---|
| | திட்ட மல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மானியக் கோரிக்கை 37—பொதுப்பணி—அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள் சிறுபணிகள் | 8 | 6 | 14 |
| 2071. தனியார் மற்றும் உ ்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் .. | 64,48 | .. | 64,48 |
| 2236. சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவுப்.. பொருள் வகையில் செலவு | 86,55 | 5,75 | 92,30* |
| (ஆ) வருவாய் கணக்கின் கீழ் வராத செலவு: | | | |
| 4202, கல்வி, கலைகள் பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச்செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிற்கான கட்டிடங்கள் .. | 96 | 5,01 | 5,97 |
| 4515. ஊரகத் தொடக்கப் பள்ளி கட்டிடங்கள் | | 3,00 | 3,00 |
| 6202. தேசிய கடன், படிப்பு உதவித் தொகைகள் .. | .. | 25 | 25 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன் | 1 | .. | |
| 7615. தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்குக் கடன்கள் | 8 | .. | |
| மொத்தம் .. | 1,52,16 | 14,22 | 1,66,38 |

* '2236'' என்ற தலைப்பில் உள்ள நிதி ஒதுக்கத்தில் ஒரு பகுதி இளைஞர் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்ததாகும்.



மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1990-91ஆம் ஆண்டிற்கான கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூபாய் 1,206 கோடிக்குச் சற்று கூடுதலாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின்வருவதாகும்;—அதாவது ஆதிதிராவிடர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதிதிராவிடர், பழங்குடி வகுப்பினர், பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு, சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஊனமுற்றோர்களுக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு, மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால் நடை மருத்துவக் கல்வி ஆகிய வகைக் கல்விகளுக்கு ஆகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளிவிவரங்கள் எவற்றிலும் இடம் பெறவில்லை.

1990—91 ஆம் ஆண்டு கல்வித் திட்டப்பணி செலவு விவரம் :—

5. எல்லா தலைப்புகளின் கீழ் (2202. கல்வி, 4202. கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு, 6202. கடன் முதலியனக்) கல்விக்காக 1990-91ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு விவரம் வருமாறு ("+") குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினங்களைக் குறிக்கும்.

| | பொறுப்பேற்ற செலவினம். | 1990-91-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (i) பொதுக் கல்வி— | | | |
| 1. தொடக்கக் கல்வி | 22,28 | 90 | 23,18 |
| 2. பள்ளிக் கல்வி .. | 1,14<br>+ 1,96 | 1,91 | 3,05<br>+ 1,96 |

| | பொறுப் பேற்ற செலவினம். | 1990-91-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள் | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (i) பொதுக் கல்வி—தொடர்ச்சி. | | | |
| 3. வயதுவந்தோர் கல்வி | 2,65 + 5,11 | 10 | 2,75 + 5,11 |
| 4. கல்லூரிக் கல்வி | 2,80 + 25 | 10 | 2,90 + 25 |
| 5. தமிழ் வளர்ச்சி .. | 10 | 4 | 14 |
| | 28,97 + 7,32 | 3,05 | 32,02 + 7,32 |
| (ii) தொழில் நுட்பக் கல்வி | 2,13 + 7 | 16 | 2,29 + 7 |
| (iii) விளையாட்டு. இளைஞர் நலன் | 93 + 1,32 | 4 | 97 + 1,32 |
| (iv) கலைப் பணிகள்— | | | |
| கல்வித்துறை .. | 56 | 16 | 72 |
| தமிழ் வளர்ச்சித்துறை | 1,05 | 15 | 1,20 |
| மொத்தம் .. | 1,61 | 31 | 1,92 |
| (v) ஏனைய அறிவியல் ஆராய்ச்சி | 70 + 5 | 17 | 87 + 5 |
| பெருமொத்தம் .. | 34,34 + 8,76 | 3,73 | 38,07 + 8,76 |



## II பள்ளிக்கல்வி

### (i) பொது.

1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி மானியத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ 1,642 கோடியில் ரூ.748 கோடியானது பள்ளிக் கல்விக்காக (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உள்பட) ஒதுக்கப்பட்டுள்ளது, 30-9-1989 அன்றைய நிலவரப் படி தமிழ்நாட்டில் இருந்த பள்ளிகள் வருமாறு;-

| | பள்ளிகளின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்.) | மாணவர்/மாணவியர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தொடக்கப் பள்ளிகள் (1-5.வகுப்புகள்.) | 29.491 | 1.19 | 54.46 |
| நடுநிலைப் பள்ளிகள் (1-8 அல்லது 6-8 வகுப்புகள்) | 5,651 | 0.66 | 29.98 |
| | 35.142 | 1.85 | 84.44 |
| உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள் (பொதுவாக 6-10/6-12 வகுப்புகள்.) | 4,949 | 1.13 | 38.24 |
| | 40,091 | 2.98 | 122,68 |

வகுப்புத் தொகுதிவாரியாக மாணவ, மாணவியர் எண்ணிக்கை வருமாறு:—

| வகுப்புகள். (1) | மாணவர். (2) | மாணவியர். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | |
| 1—5 .. .. | 41.40 | 35.38 | 76.78 |
| 6—8 .. .. | 17.57 | 12.76 | 30.33 |
| 9—10 .. .. | 6.83 | 4.24 | 11·07 |
| 11—12 .. .. | 2.63 | 1.87 | 4.50 |
| மொத்தம் .. | 68.43 | 54.25 | 122.68 |

நிருவாக வாரியாக பள்ளிகளின் விவரங்கள் இணைப்பில் தரப் பட்டுள்ளன.

2. 1990-91 ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு கூடுதலாக கீழ்க் கண்ட ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன:—

| | |
|---|---|
| ஏற்கெனவே உள்ள பள்ளிகளுக்கு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் (முதலிரண்டு ஆண்டுகளுக்கு மாதம் ரூ. 800 தொகுப்பூதியத்தில்). | 1,200 |
| உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு தமிழ் ஆசிரியர் பணியிடங்கள். | 50 |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பி.எட். தர ஆசிரியர் பணியிடங்கள். | 63 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கு பி.எட். தர தலைமையாசிரியர் பணியிடங்கள். | 50 |

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்:

(3) பள்ளிகளின் வசதிகளைப் பெருக்குவதற்காக தல முயற்சிகளைத் திரட்டும் நோக்குடன் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்படுகின்றன. 1989-90 இல் நடந்த ஐந்து பள்ளி சீரமைப்பு மாநாடுகளின் மூலம் ரூ. 2.82 கோடி மதிப்புள்ள பலவகைப்பட்ட பொருள்கள் நன்கொடையாகப் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டன.



II. தொடக்கக் கல்வி

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் (1989-90)ல் 6—11 வயது குழந்தைகளுள் 100 சதவிகிதமும், 11-14 வயது குழந்தைகளுள் 75 சதவிகிதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது இந்திய அரசு கருதியுள்ள இலக்கு ஆகும். தமிழ்நாட்டில், 6-11 வயது தொகுதியினர் 100 விழுக்காடும், 11-14 வயது தொகுதியினருள் 80 விழுக்காடும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுவிட்டனர் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் 1989-90—ல் கூடுதலாக சேர்க்கப் பட்டோரின் எண்ணிக்கை வருமாறு:—

| வயது தொகுதி. (1) | மாணவர் (2) | மாணவியர் (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | |
| 6-11 | 0.51 | 0.52 | 1.03 |
| 11-14 | 0.66 | 0.63 | 1.29 |
| மொத்தம் .. | 1.17 | 1.15 | 2.32 |

1989—90 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 100 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களைக் கொண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் புதிதாக 50 தொடக்கப் பள்ளிகள் திறக்கப் பட்டன. ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 439 குடியிருப்புகளுக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் ஆரம்பப் பள்ளிக்கூடம் இல்லாத நிலை இன்னும் நிலவுகிறது. இந்தக் குடியிருப்புகள் அனைத்திலும் இவ்வாண்டில் புதிய ஓராசிரியர் பள்ளிகள் தொடங்கப்படும்.

2. தொடக்கக் கல்வி வளர்ச்சியில் தீவிரக்கவனம் செலுத்தும் நோக்குடன் 12-7-1986 லிருந்து ஒரு மூத்த அலுவலர் தலைமையில் ஆரம்பக் கல்விக்குத் தனி இயக்குநரகம் ஏற்படுத்தப் பட்டுள்ளது பிப்ரவரி 1988 முதல் இவ்வியக்ககம் மேலும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

3. பள்ளிகளை நன்முறையில் மேற்பார்வையிடவும், கண்காணிப்பதற்கும் ஏதுவாக உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம், பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகம் இரண்டும் தற்போது ஒரே அலுவலகமாக இணைக்கப்பட்டுள்ளன. உதவிக் கல்வி அலுவலரே இவ்வலுவலகத்தின் தலைவராவார். உதவிக் கல்வி அலுவலர். பள்ளித் துணை ஆய்வாளர் இருவருமே பள்ளிகளின் ஆய்வாளர்களாகப் பணியாற்றுவர். பள்ளி ஆய்வுப் பணியை இருவரும் பகிர்ந்து கொண்டு அனைத்துப் பள்ளிகளின் செயல்பாட்டையும் செவ்வனே ஆய்வு செய்வர்.

4. குழந்தைகள் காப்பகங்கள் (28,268) ஒவ்வொன்றிலும் தற்போது ஓர் இளஞ்சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இளம் சிறுமியர் தங்கள் தம்பித் தங்கையரை கவனித்துக் கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்க்கவும் இவை உதவும்.

### தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் 1-10 வகுப்பு பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு.

5. தமிழ்நாடு தொடக்கப் பள்ளி மதிய உணவுத் திட்டம் 1957-முதல் 1982 வரை அமுல்படுத்தப்பட்டது. அதன் இடத்தில் 198?-லிருந்து தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் அமுலாக்கப்பட்டது. இப்புதிய திட்டம் முன்னதைவிட விரிவானதும் பரவலானதும் ஆகும். தமிழ்நாட்டில் 1-7-1982/15-9-1982 முதல் 1-5 வகுப்புகளிலும், 15-9-1984 முதல் 6-10 வகுப்புகளிலும் இத்திட்டம் அமுலாக்கப்பட்டது.

6. 1—10 வகுப்புகளில் பயிலும் ஏறக்குறைய 65 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு 35,510 பள்ளி உணவு மையங்கள் (பெரும்பான்மை மையங்கள் ஆரம்பக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளன) மூலம் இத்திட்டத்தின் கீழ் சத்துணவு அளிக்கப்படுகிறது. (இதர மையங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வு இயக்குநரகம் பிற்படுத்தப்பட்டோர் இயக்குநரகப். நகராட்சி நிருவாகம், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை நகராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.) 1—5 வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் அதாவது 365 நாட்களிலும் உணவு அளிக்கப்படுகிறது. (சில குறிப்பிடப்பட்ட ஏறக்குறைய 20 விடுமுறைநாட்களில், முன்னதாகச் சமைக்கப்பட்ட உணவு கொடுக்கப்படுகிறது.) 6—10 வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு எல்லா பள்ளி நாட்களிலும் சத்துணவு அளிக்கப்படுகிறது. மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் பங்கீடு வருமாறு:—

| | வகுப்புகள் (1-8) கிராம். | வகுப்புகள் (9-10) கிராம். |
|---|---|---|
| அரிசி .. .. | 100 | 120 |
| பருப்பு .. .. | 15 | 15 |
| எண்ணெய் .. | 3 | 3 |
| காய்கறிகள் .. | 50 | 50 |



7. குழந்தைகளுக்கு வழங்கும் உணவில் புரதச் சத்து அதிகரிப்பதற்காக, ஜூன் 1989 முதல் இரு வாரங்களுக்கு ஒரு முறை வேகவைத்த முட்டையும் வழங்கப்படுகிறது.

### 1-8 வகுப்பு மாணவ மாணவியருக்கு இலவச சீருடை :

8. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1—8 வகுப்புகளில் பயில்வோருள் தமிழக அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு பெறுவோர் அனைவருக்கும் ஆண்டுக்கு ஒரு முறை இலவசச் சீருடை 1985-86 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1989-90-ல் மொத்தம் ரூ. 18 கோடி செலவில் 62.10 லட்சம் மாணவ, மாணவியருக்குச் சீருடைகள் அளிக்கப்பட்டன. இத்திட்டம் கைத்தறி மற்றும் நெசவுத்துறை, சமூக நலத்துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் 1990 91-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

### 1-8 வகுப்பு மாணவ மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் :

9. மதிய உணவு பெற்று வந்த 1-3 வகுப்பு மாணவ மாணவியருக்கு 1966—67 முதல் பாடப்புத்தகங்கள் இலவசமாக அளிக்கப்பட்டு வந்தன. 1985-86 முதல் இது 4-8 வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

1989-90-ல் 1—8 வகுப்புகளில் பயனடைந்தோர் 62.10 இலட்சம் பேர் ஆகும். 1990-91—ம் ஆண்டில் ரூ. 7.50 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1989-90—ல் 1-ம் வகுப்பில் பயின்ற சுமார் 5 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.12 இலட்சம் செலவில் கற்பலகைகள் இலவசமாகத் தரப்பட்டன.

### இலவச காலணி வழங்கும் திட்டம் :

10. 1-8 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இலவசமாகக் காலணிகள் வழங்கப்படுகின்றன. 1989-9-0ல். ரூ.3.16 கோடி செலவில் 22 இலட்சம் மாணவர்கள் இதனால் பயனடைந்துள்ளனர்.

### புத்தக வங்கி :

11. அநேகமாக அனைத்துப் பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உயர்வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும், சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும் இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மகளிர் கல்வி :

12. பொதுவாகவே கல்வியிலும், பயிற்சியிலும் மிகுந்த ஊக்கங்காட்டுபவர்களாகிய மகளிர் அனைத்து நிலைக்கல்வியிலும் சிறந்த சாதனைகளைச் செய்துள்ளனர். 1990-ம் ஆண்டு சிறுமியர் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்திற்கொண்டு மாணவிகள் படிப்பைத் தொடராமல் நின்றுவிடும் நிலையைப் போக்க தனி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பெண் கல்வியை ஊக்குவிக்கும் விதத்தில் ''மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உதவித் திட்டம்'' என்று ஒரு புதிய திட்டம் 1989-90 லிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கீழ் 8-ம் வகுப்பு (பழங்குடியினர் பெண்டிர்க்கு 5-ம் வகுப்பு) மற்றும் அதற்கு மேல் படித்த ஏழைப் பெண்டிர்க்கு ரூ. 5,000 திருமண நிதியுதவி வழங்கப்படுகிறது. மொத்தம் ரூ.5.05 கோடி செலவில், இத்திட்டத்தின் மூலம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்துள்ளனர்.

13. கொடைத்தன்மை வாய்ந்தோர் 1–8 வகுப்புகளில் பயிலும் சிறுமியரைத் தத்து எடுத்து, அச்சிறுமியரின் பெற்றோருக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.250 வழங்குவதற்கான ''வளர்ப்பு-பெற்றோர் திட்டம்'' என்ற புதுமையான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, பள்ளிகளில் சேர்பவர்கள் தொடர்ந்து பயிலாமல் இடையில் நின்றுவிடும் நிலை சிறுமியரிடையே அதிகமாக உள்ளது. இதனைச் சீர்செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

14. அனைத்துப் பள்ளிகளிலும் 1-2 வகுப்புகளில் பயிற்றுவிக்க மகளிரே ஆசிரியைகளாக நியமிக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. தவிரவும், தொடக்கப்பள்ளிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 50 விழுக்காடு பெண்களே ஆசிரியைகளாக நியமிக்கப்படுவர்.

கரும்பலகைத் திட்டம் :

15. 1987-88 ஆம் ஆண்டிலிருந்து மைய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக கரும்பலகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்பக் கல்வி நிலையில் பெருமளவில் முன்னேற்றம் கொண்டு வருவதும், வசதிகளைப் பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் முக்கியமான மூன்று அம்சங்கள் பின்வருமாறு:—

(1) ஆரம்பப் பள்ளிகளுக்குத் தேவையான இட வசதிகளை உருவாக்குவது.

(2) ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றுவது.

(3) கற்பிப்பதற்கு இன்றியமையாத துணையாகும் பொருள்களை படிப்படியாக எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் அளித்தல்.



16. இத்திட்டம், 1987–88 முதல் 1989-90 முடிய இம்மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு அனைத்துத் தொடக்கப் பள்ளிகளும் பயன் பெற்றுள்ளன. 1,000–க்கும் மேற்பட்ட பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஓராசிரியர் பள்ளிகளில் இரண்டாவது ஆசிரியர் நியமனம் செய்வதற்காக 1,686 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாடநூல்கள், தேச படங்கள், கரும்பலகைகள், உலக வடிவக் கோளங்கள், விளையாட்டுக் கருவிகள், இசைக்கருவிகள் போன்ற கற்பிப்புச் சாதனங்கள் வழங்குவதுடன் குடிநீர் வசதியும் எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் செய்யப்பட்டு வருகின்றன. இக்கருவிகளை கையாளுவதற்காக 10 நாள் பயிற்சி ஒன்றும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு ரூ. 25 கோடிக்கு மேல் மைய அரசு நிதியுதவி செய்துள்ளது.

நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டம் :

17. மைய அரசு பொறுப்பேற்கும் மற்றொரு திட்டத்தின் கீழ் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழு உருவாக்கிய அறிவியல் கருவிப் பெட்டிகள் நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுவருகின்றன, இதற்காக இதுவரை ரூ.33 இலட்சம் மைய அரசில் நிதியுதவி கிடைத்துள்ளது. மேலும் ரூ.27 லட்சம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

18. தொழில்நுட்பவியல் மூலம் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக மைய அரசு அளித்த ரூ.30 இலட்சம் நிதியுதவியைக் கொண்டு ஒவ்வொன்றும் ரூ. 1,125 மதிப்புள்ள வானொலி மற்றும் ஒலிப்பதிவுக் கருவிகள் 2,666 ஆரம்பப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் 7,000 பள்ளிகளுக்கும் இக்கருவிகளை வழங்கிட ரூ. 70 இலட்சம் நிதியுதவி கிடைத்துள்ளது.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் :

19. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1–6–1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டடப் பராமரிப்பு தவிர பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதையும் ஆரம்பக் கல்வி இயக்குநர் கவனித்து வருகிறார். இப்பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 97,323 ஆகும், இவ்வாசிரியர்களுக்கு பணி விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள் :

20 ஆரம்பப்பள்ளிகளில் கூடுதலாக சேர்க்கப்படும் மாணவர்களுக்கு போதிய இடவசதி தற்போது இல்லை. எனவே கிராமப்புற ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள் சரிவர பராமரிக்கவும் பழுது பார்க்கவும் ரூபாய் 3 கோடி 1990–91 நிதி ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி மற்றும் மாநகராட்சி தொடக்கப் பள்ளிகள்:**

21. நகராட்சிகள், நகரியம், மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிருவாகத்தின்கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதவர் 1–6–1986 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இப்பணியாளர்களை அரசுப் பணியில் ஈர்த்துக் கொள்வதற்கு வழி முறைகளை வகுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு தனது பரிந்துரைகளை அளித்துள்ளது. அவை அரசின் ஆய்வில் உள்ளன. உள்ளாட்சி மன்ற பள்ளிப் பணியாளர்கள் தொடக்கப்பள்ளி கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோரில் நிருவாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இவர்களுக்கான ஊதியம் 1–4–90 முதல் அரசு நிதியில் இருந்து அளிக்கப்படும். 1989-90-ல் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள் நிருவகித்து வந்த தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை 1,550 (1,127 தொடக்கப் பள்ளகள், 423 நடுநிலைப் பள்ளிகள்). ஆகும். அவைகளில் 16,571 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

### III உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1989-90-ல் தமிழ்நாட்டில் 14-16 வயதுத் தொகுதியினரான 19,20 இலட்சம் பேர்களுள் 57,59 விழுக்காடாகிய 11,07 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9–10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1989-90ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

| | மாநிலக் கல்வித் துறை மேற்பார்வையிலுள்ள பள்ளிகள் (ஆங்கிலோ இந்திய மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட) | நடுவண் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை. | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உயர்நிலைப் பள்ளிகள் | 2,945 | 89 | 3,034 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 1,828 | 87 | 1,915 |
| மொத்தம் .. | 4,773 | 176 | 4,949 |



1989–90-ல் மேற்கண்ட பள்ளிகளில் வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :

| (1) | மாணவர்களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்.) (2) |
|---|---|
| 1—5 வகுப்புகள் .. | 3.24 |
| 6—8 வகுப்புகள் .. | 19.43 |
| 9—10 வகுப்புகள் .. | 11.07 |
| 11—12 வகுப்புகள் .. | 4.50 |
| மொத்தம் .. | 38.24 |

1989-90-ல் 110 உயர்நிலைப்பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன.

**அறிவியற் கல்வி :**

2. உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியற் கூடங்களை அமைப்பதற்கான இத்திட்டத்தின்கீழ் 1989-90 முடிய 1,163 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. இத்திட்டத்தின்படி ஆய்வுக்கூட சாதனங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் மொத்தமாக வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. பள்ளி ஒன்றுக்கு ரூ. 25,000 மதிப்புள்ள சாதனங்கள் வழங்கப்படுகின்றன. அரசு பள்ளி ஒன்றுக்கு ஆய்வுக் கூடக் கட்டட மதிப்பு ரூ. 1.00 இலட்சமாகும். உள்ளாட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூட கட்டடத்திற்காகக் கட்டடச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 60,000 இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

3. ஆய்வுக்கூட வசதியைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் சோதனைகளை நடத்திக் காட்டுவதற்காக மொத்தம் உள்ள 56 கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி உள்ளது.

4. பெங்களூரில் உள்ள விசுவேசுவரய்யா தொழில் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகம் தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகியவற்றிற்கு தென் இந்திய அறிவியல் கண்காட்சி ஒன்றை நடத்தி வருகிறது. 1989-90 ஆம் ஆண்டிற்கான

தென் இந்திய அறிவியல் கண்காட்சி 1990—ல் (பிப்ரவரி மாதத்தில்) ஆந்திர மாநிலத்தில் உள்ள அனந்தபூரில் நடைபெற்றது. இக்கண் காட்சியில் தமிழ்நாடு சிறந்த இடத்தைப் பெற்றது. தமிழ்நாட்டிலிருந்து 55 பள்ளிகளைச் சார்ந்த 55 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

5. அறிவியல் காண்காட்சிகள் ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு மாநில அளவிளான அறிவியல் கண்காட்சி 1990 சனவரியில் சேலத்தில் நடத்தப்பட்டது. 130 பள்ளிகள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டன.

6. கல்வி தொழில்நுட்ப செயல்பாடு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ரூ. 72,20 இலட்சம் செலவில் ஒரு கல்வித் தொலைக்காட்சி படநிலையம் கட்டுவதற்கு மைய அரசு அனுமதித்துள்ளது. இதன் கட்டுமானப் பணி முடியும் தருவாயில் உள்ளது. இப்பட நிலையத்தையும் கல்வித் தொழில்நுட்பப் பிரிவையும் இணைத்து ''மாநிலக் கல்வி — தொழில்நுட்ப நிறுவனம்'' என மறு பெயரிடப்பட்டுள்ளது. தொலைக்காட்சி மற்றும் வானொலிக்காக கல்வி சம்பந்தமான ஒலி/ஒளிப் பதிவு நாடாக்களை தயாரிக்கும் பணி கல்வித் தொழில்நுட்பப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையத்தினர் இவ்வகையான கல்வி ஒலி/ஒளிப் பதிவு நாடாக்களைத் தயாரிக்கும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். வானொலி, தொலைக் காட்சி நிலையங்கள் மாநிலத் கல்வித் தொழில்நுட்ப நிறுவனம் தயாரித்துத் தரும் நிகழ்ச்சிகளை ஒலி/ஒளி பரப்பும் பணியை மட்டும் மேற்கொள்ளும்.

**பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துவதற்கான மைய அரசு பொறுப்பேற்கும் திட்டம்**

7. இத்திட்டத்திற்காக 1987—88 மற்றும் 1988—89 ஆம் ஆண்டுகளுக்கான திட்டத்தின்கீழ் மொத்தம் 1,761 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தலா ரூ. 35,000 செலவில் அறிவியல் சாதனங்களும் நூலகங்களுக்கு அறிவியல் புத்தகங்களும் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அறிவியல் சாதனங்கள் கிட்கோ நிறுவனம் மூலம் வழங்கப்படுகின்றன.

**பள்ளிகளில் சுற்றுப்புறச் சூழல் கல்வி :**

8. பள்ளிகளில் சுற்றுப் புறச் சூழல் கல்வித் திட்டத்தை ரூ.34 இலட்சம் செலவில் செயல்டுத்த, மைய அரசு பங்கேற்கும் திட்டம் ஒன்று தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள 5 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற நடவடிக்கைகளோடு பள்ளிகளில் செடிகள் வளர்த்தலும், பழம்தரும் மரங்கள் மற்றும்



பள்ளி வளாகத்தில் வளர்த்து, சுற்றுப்புற
பிற மரங்களை இத்திட்டத்தில் நோக்கமாகும்.
சூழலை சிறப்படையச் செய்வது

**மருத்துவ உதவித் திட்டம் :**

17—ல் உயர்நிலை மற்றும் மேல
9. வருவாய் மாவட்டங்கள் மாணவ/மாணவியர்களை மருத்துவ
நிலைப் பள்ளிகளில் பயிலும் அவர்களுக்குத் தொடர் சிகிச்சை அளித்
பரிசோதனை செய்து ''மருத்துவ உதவித் திட்டம்'' ஒன்று செயல்பட்டு வருகின்
றது. 6— 12 வகுப்பு மாணவர்களிடமிருந்து தலா ஆண்டுக்கு
ரூபாய் ஒன்று மட்டும் மருத்துவ ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்
பட்டு அத்தொகையைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்
பட்டு வருகிறது.

**உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்:**

10. 1990-91 வரவு—செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களுக்கான நிதி ஒதுக்கீடு விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டட மானியம். | 3 |
| அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள்—சிறு பணிகள். | 6 |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டட வேலைகள். | 81 |
| புதுப் பணிகள் .. .. .. .. | 150 |
| வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் சேதமாகும் கட்டடங்களுக்கான பழுது பார்த்தல் பணிகள். | 5 |
| மொத்தம் | 245 |

உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல்
அரசினர் கட்டுதல், நிலங்களைக் கையகப்படுத்துதல்,
வகுப்பறைகள் கட்டுதல் ஆகியவற்றிற்கு 1989-90-ல் மொத்தம்
சுற்றுச் சுவர்கள் ஏற்பளிக்கப்பட்டது. இத்தொகை 38 அரசினர்
ரூ.1.50 கோடி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு இரண்டு அல்லது
மகளிர் வகுப்பறைகள் கட்டுவதற்கு செலவிடப்பட்டது, அடுத்த
மூன்று ஆண்டில் ஹட்கோ நிறுவனத்திடமிருந்து எதிர்பார்க்கும் உதவி
யுடன் பெருமளவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

கல்விச் சலுகைகள் படிப்புதவித் தொகைகள் மற்றும் பிற ஊக்குவிப்புப் பணிகள் :

11. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1–12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் இலவசமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்பு படிப்புதவித் தொகைகளையும், சலுகைகளையும், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர் அதே போன்ற வசதியை இதர மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர்.

12. 9—12 வகுப்பு மாணவியருக்கு இலவசக் கல்வி காரணமாக எந்த அளவுக்குப் படிப்புக் கட்டணத் தொகை செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்படுகிறதோ அந்த அளவுக்குக் கல்விக் கட்டணத் தொகையை மைய அரசு பொறுப்பேற்கும் ஒரு திட்டத்தின்கீழ் அளித்து வருகிறது. 1987–88, 1988–89. ஆம் ஆண்டுகளுக்கு இத் திட்டத்திற்காக மொத்தம் ரூ. 121 லட்சம் மைய அரசு அளித்தது. 1989-90 ஆம் ஆண்டிற்கு ரூ. 77 லட்சம் மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மாணவியர் கல்வி முன்னேற்றத் திட்டங்களுக்காக இத் தொகை செலவிடப்படுகிறது.

13. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 6–8 மற்றும் 9–10 வகுப்புகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பு மாணவியர்களை அதிகமாகச் சேர்த்து அவர்களுக்கு தொடர்ந்து கல்வி அளிக்கும் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பரிசளிப்பதற்கு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி 6–8 வகுப்புகளுக்கும் 9—10 வகுப்புகளுக்கும் தனித்தனியே முதல் பரிசு ரூபாய் 500-ம் இரண்டாம் பரிசு ரூபாய் 300-ம் மூன்றாம் பரிசு ரூபாய் 200-ம் வழங்கப்படுகின்றன.

மேற்பார்வைப் படிப்பு :

14. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடிப் பொறுப்பில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுகிறது. 625 தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில், 8,9,10, வகுப்புகளில் இச்சமுதாயத்தைச் சார்ந்த 62,799 மாணவர்களுக்கும், 375 மேல்நிலைப் பள்ளிகளில் 24,057 மாணவர்களுக்கும் இத்திட்டம் பயனளித்து வருகிறது.



பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி :

15. ஆண்டு முடிவில் நடைபெறும் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் சிறப்புப் பயிற்சி தரும் திட்டம் ஒன்று செயல்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் இரண்டு முழுநேர பி.டி. ஆசிரியர்கள், மூன்று மாதங்கள் பயிற்றுவிக்கின்றனர். அந்தந்த இடத்திலுள்ள தேவை மற்றும் வசதிக்கேற்ப பள்ளிநேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திலோ அல்லது பகல் வேளையிலோ இம்மையங்கள் இயங்குகின்றன. 18 வயதுள்ள மாணவர்கள் இத் திட்டத்தின்கீழ் பயனடையலாம். 1989-90ல் 1,421 மாணவர்கள் இதன்மூலம் பயனடைந்துள்ளனர்.

## IV. பள்ளிப் பாடத்திட்டம், பாடங்கள் வரைதல் மற்றும் பாடப் புத்தகங்கள்

தேசியக் கல்விக் கொள்கை 1986-ன்படி பள்ளிகளில் பாடத்திட்டமும், பாடங்களும் திருத்தி அமைக்கப்பட வேண்டியிருந்தன. 1 முதல் 12 வகுப்புகளுக்கு, திருத்திய பாடங்களை பாடத்திட்டத் திருத்தக் குழுக்கள், உயர்மட்டக் குழுவின் ஆலோசனையின்படி தயாரித்தன. 1988-89 முதல் அவைகளை அறிமுகமாக்க அரசு ஒப்புதல் அளித்தது.

2. தற்போதுள்ள பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்ட பள்ளிப் பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்களைத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் படிப்படியாக பின்வருமாறு அச்சிடுகிறது :—

| ஆண்டு. | வகுப்புகள். |
|---|---|
| 1988–89 .. .. | 1, 3 மற்றும் 6. |
| 1989–90 .. .. | 2,4,7,9 மற்றும் 11 |
| 1990-91 .. .. | 5,8,10 மற்றும் 12, |

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் :

3. தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாடநூல்கள் மாவட்ட மற்றும் வட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன. இக் கூட்டுறவுச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லரை விற்பனையாளர்கள் மூலமாகப் பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந்நிறுவனம் தனது வெளியீடுகளை நேரடியாக விற்பனை செய்கிறது.

4. 1979-80 முதல் தமிழ்நாட்டுக்கு இந்திய அரசு ஒதுக்கும் மலிவுவிலைத் தாள்களைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத்

தயாரித்து விநியோகிக்கும் பணியையும் இந்நிறுவனம் செய்து வருகிறது. 1989–90ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ஏறத்தாழ ரூபாய் 2.50 கோடியாகும்.

5. தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் மாநிலத்தின் கல்விப் பணிக்கு ஆதரவாக ஆற்றிவரும் வேறு பணிகளுள் 1–8 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்களை வழங்கும் செலவில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளுதல், அரசினர் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிக்கட்டிடங்கள் கட்ட, கட்டட நிதி வழங்குதல், பள்ளிச்சாராக் கல்விக்கான புத்தகங்கள், கல்லூரிப் பாடநூல்கள் தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு நூல்கள் ஆகியவற்றை வெளியிடுதல் முதலியன குறிப்பிடத்தக்கவையாகும்.

## V. ஆசிரியர் பயிற்சி.

தற்போது பின்வரும் விவரப்படி அங்கீகரிக்கப்பட்ட 100 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன:

| | ஆடவர் | மகளிர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள். | .. | .. | 14 |
| ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்: | | | |
| அரசு | 5 | 9 | 14 |
| அரசு உதவு பெறுபவை (தனியார்) | 14 | 31* | 45 |
| உதவி பெறாதவை | 13 | 14 | 27 |
| மொத்தம் | | .. | 100 |

1984–85–லிருந்து ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 40 மாணவர்கள் இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

2. இளநிலை ஆசிரியர்கள் இடைநிலைத் தகுதிபெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வியாராய்ச்சி நிறுவனம் நடத்தி வரும் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சியின் மூலம் 60,000க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.

*இவற்றில் சென்னை-7-ல் உள்ள கிறித்தோபர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியோடு இணைந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பிரிவு ஒன்றும் இளஞ்சிறார்களுக்கான ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் மூன்றும் அடங்கும்.



3. ஆங்கில மொழி பயிற்றுவிப்புக்கான 10 மையங்கள் 1967-68 முதல் 1989-90 வரை மூன்று அல்லது நான்கு வாரங்கள் ஆங்கில மொழி பயிற்சியினை 6-8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் 48,402 இடைநிலை ஆசிரியர்களுக்கு அளித்துள்ளன. 1967–68 முதல் 1989–90 வரை இவ்வகைப் பயிற்சியில் பயனடைந்த பி.டி. ஆசிரியர்கள் 16,308 பேர்கள் ஆகும். இவர்களுள் 836 பேர் 1989-90ல் பயிற்சி பெற்றவர்களாவர், 1989–90ல் இத்திட்டத்திற்கான மொத்த செலவு சுமார் ரூ. 34 இலட்சங்கள் ஆகும்.

4. பெங்களூரிலுள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்திற்கு இவ்வரசு 1989-90ல் ரூ. 3.94 இலட்சம் நிதியுதவியை அளித்துள்ளது. 1989–90ல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 29 ஆங்கில ஆசிரியர்கள் நான்கு மாதப் பயிற்சிபெற இந்நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டனர்.

### மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்:

5. மைய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் மாநிலத்திலுள்ள 14 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களாகத் தரமுயர்த்த இந்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. இந்நிறுவனங்களின் தொடராச் செலவினங்களுக்கென (தளவாடங்கள் மற்றும் கட்டுமானச் செலவு) மைய அரசு மொத்தம் ரூ.802 இலட்சம் அனுமதியளித்துள்ளது. தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தின் கீழ் இயங்கும் கட்டுமானப் பிரிவு இந்நிறுவனங்களுக்கான கட்டுமானப் பணியைச் செய்கிறது. இந்நிறுவனங்களுக்குத் தேவையான பணியிடங்கள் ஏற்பளிக்கப்பட்டு விட்டன. சிறு தொழில்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவை இந்த மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்குத் தேவையான அறிவியல் கருவிகள் மற்றும் அலுவலகத் தளவாடங்கள் அளிக்கின்றன.

## VI தமிழ்நாடு கல்வியாராய்ச்சி —பயிற்சி நிறுவனம்

1976ல் முன்பிருந்த மாநிலக் கல்வி நிறுவனம் மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாக மேம்படுத்தப்பட்டது. மாநில மதிப்பீட்டுப் பிரிவும், அறிவியல் பிரிவும், மாநிலக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் சேர்க்கப்பட்டன. பள்ளிக் கல்வியின் ஒரு பிரிவாக இயங்கிவரும் இந்நிறுவனம் பல்வேறு நிலைப் பள்ளி ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு கருத்தரங்குகள், பணிக்களரிகள், புத்தறிவு வகுப்புகள்/பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றை நடத்தி வருகிறது.

கல்வியின் தரத்தை முன்னேற்றுவதுபற்றிய திட்டங்களுக்கேற்ப இந்நிறுவனத்தின் செயல்கள் அமைந்துள்ளன. பள்ளிக் கல்வி இயக்குநரே இந்நிறுவனத்தின் இயக்குநர் ஆவார்.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெஃப் உதவியுடன் இந்நிறுவனம் செயற்படுத்தி வருகிறது:—

| திட்டம். (1) | செயற்படுத்தும் இடங்கள். (2) |
| --- | --- |
| தொடக்கக் கல்வி வாய்ப்புகளைப் பரவலாக்குதல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட 9–14 வயது தொகுதியினரின் கல்வி மேம்பட பள்ளிசாராக் கல்வி முறையை உருவாக்குதல்) | 100 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |
| இளஞ்சிறார் கல்வி (3–5 வயது குழந்தைகளுக்கு) | காரியாப்பட்டி வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ள 61 இளஞ்சிறார் பள்ளிகள் |
| கல்வி சமுதாயம் - பொருளாதாரம் பண்பாடு மற்றும் நுண்கலை முன்னேற்றத்திற்காக ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆழ்நோக்கு கல்வி திட்டம். | இத்திட்டத்தை செயல்படுத்த பின்தங்கிய பகுதியாகிய [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. |

மக்கட் தொகைக் கல்வி.

3. மக்கட் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிதி (UNFPA)-யின் மூலம் தமிழ்நாட்டில் மக்கள் தொகைக் கல்வித்திட்டம் 1980 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு பேராசிரியர், திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒருவர், திட்ட அலுவலர்கள் மூவர் மற்றும் ஓர் ஆராய்ச்சி அலுவலர் ஆகியோரைக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் ஏற்படும் ஊதியம் பற்றிய எல்லாச் செலவையும் மாநில அரசு முதற்கண் செய்து பின்னர் ஐக்கிய நாடுகள் நிதியிடமிருந்து செலவுத் தொகையைப்பெற்றுக் கொள்கிறது. மக்கட் தொகைக்கல்வி குறித்து வகுப்பறை செயல் ஆய்வுத்திட்டங்களை வகுக்குமாறு அனைத்து நிலைகளிலும் உள்ள பள்ளி ஆசிரியர்களும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். வரும் ஆண்டுகளில் முறைசாராக் கல்வி மற்றும் ஆசிரியர் கல்வியிலும் இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

அனைவருக்கான அஞ்சல் முறைப்பள்ளி:

4. உயர்நிலைப் பள்ளி நிலையில் பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு அனைவருக்குமான அஞ்சல் முறைப்



பள்ளியை 1985-86 முதல் மாநில கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் தொடங்கியுள்ளது. ஏற்கெனவே 8-வது வகுப்பு தேறி 15 வயது நிரம்பியவர்கள் இதில் சேரலாம். ஆண்டுதோறும் 2,500 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்படிப்பு மிகவும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. அனைவருக்குமான (அஞ்சல் முறை) பள்ளியில் பயின்ற மாணவர்களில் ஐந்து அணியினர் படிப்பை முடித்து, இறுதித் தேர்வுகளை எழுதினர். 5,997 பேர் இதுவரை பயன் அடைந்துள்ளனர்.

VII பள்ளி ஆசிரியர்கள் —ஆசிரியரல்லாதோர் நலன்:

தனியார் உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதவர்களின் பணிப்பாதுகாப்புக்காக சட்டபூர்வமான பாதுகாப்பு, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் 1973 மற்றும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளி (விதிமுறைகள்) விதிகள் 1974, 1-12-1974 முதல் இயற்றப்பட்டு அமுலில் உள்ளன. அண்மையில் இச் சட்டம் மற்றும் விதிகள் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பொருந்தும் படி செய்யப்பட்டுள்ளது.

2. இந்நாள் வரையிலும் தற்காலிகமாக அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் 661 பள்ளி உதவியாளர்ககள், 585 மொழி ஆசிரியர்கள் மற்றும் 22 உடற்பயிற்சி இயக்குநர்களுடைய பணி வரன் முறைப்படுத்தப்பட்டு 3-8-1988 முதல் பணப்பலன் அடைந்துள்ளனர். 1-7—1978 முதல் 28-4-1981 வரையிலான காலத்தில் தற்காலிகமாக நியமனம் பெற்ற முழுத்தகுதியுடைய 355 முதுநிலை ஆசிரியர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது.

3. மாணவர்களின் எண்ணிக்கை 750 அதற்கு மேல் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே பி.டி. தரத்தில் உள்ள உதவித் தலைமையாசிரியரைத் தவிர, ரூ. 1,820—3,200 ஊதிய விகிதத்தில் உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர் ஒருவர் உதவித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றவும் அதற்கான சிறப்பு ஊதியமாக ரூ. 25 பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. இது உயர்நிலை வகுப்புகளுக்கு உள்ள பி.டி. தர உதவித் தலைமை ஆசிரியர் பதவியைத் தவிர கூடுதல் பதவியாகும்.

4. மாணவர்களின் எண்ணிக்கை 750 அதற்கு மேல் உள்ள உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் நடுநிலை வகுப்புகளுக்கு மற்றொரு இடைநிலை ஆசிரியர் உதவித் தலைமை ஆசிரியராக பணியாற்றவும் அதற்காக சிறப்பு ஊதியமாக ரூ.25யைப் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது.

5. மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 'உட்படுத்தப்பட்ட' உடற் கல்வி இயக்குநர்களுக்கு 'ஓராண்டுக் கால முதுநிலை சான்றிதழ் வகுப்புகள்' நடத்திட 1989-90-ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. இதன் மூலம் 400 உடற் கல்வி இயக்குநர்கள் பயனடைவர்.

## இணைப்புகள்

அரசு அல்லாத கல்வி நிறுவன ஆசிரியர்கட்கும் பிற பணியாளர்களுக்கும் ஓய்வூதியம்:

6. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) பள்ளி ஆசிரியர்களுக்கு 1-6-1970லிருந்தும், தனியார் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1-4-1972 லிருந்தும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு 2-10-1970 லிருந்தும் பிறவகையான தனியார் கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கு வேறு வேறு நாட்களிலிருந்தும் தாராள ஓய்வூதிய விதிகளின் பயன்கள் தரப்பட்டுள்ளன.

7. தமிழ்நாடு சிறப்பு வைப்பு நிதி பணிக்கொடைத்திட்டம் 1-4-1984 முதல் அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. மேலும் மானிய உதவி பெறும் பள்ளி நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கும் மாதம் ரூ. 15 வீதம் மருத்துவப்படி 1-4-1990 முதல் வழங்கப்படும்.

உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிவோருக்கு வைப்பு நிதி:

8. தனியார் பள்ளி ஆசிரியர்களின் வைப்பு நிதிக் கணக்குகள் அஞ்சலக சேமிப்புக் கணக்கு மூலமாகச் செயல்படுவதற்குப் பதிலாக, அரசு ஊழியர்களுக்கு எவ்வாறு செயல்படுத்தப்படுகிறதோ, அதே முறையில் 1-4-1986 முதல் செயல்படுத்துமாறு ஆணையிடப்பட்டுள்ளது அப்படியே உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் வைப்பு நிதியை மாவட்டக் கல்வி அலுவலர்கள்/மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் கவனித்து வருகின்றனர். 1-4-1988 முதல் வைப்பு நிதிச் சந்தா அரசுக்கணக்கில் செலுத்தப்படுகிறது. அவ்வப்போது அரசு ஊழியர்களுக்கு எவ்வாறு வழங்கப்படுகிறதோ அவ்வாறே உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிவோரும் ஆசிரியர் வைப்பு நிதிக்கான வட்டியைப் பெறுவர்.

ஆசிரியர் நலனுக்கான நிதி:

9. ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தையொட்டி கொடி விற்பனை, நன்கொடை முதலியவற்றின் மூலம் 1-4-1989முதல் 31-12-1989வரை ரூ. 40.71 இலட்சம் வசூல் செய்யப்பட்டது. இத்தொகையில் ரூ. 4.07 இலட்சம் ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதிக்கு மற்றப்பட்டது. ஆசிரியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும்போது நிதியுதவி செய்யவும், அவர்களுடைய குழந்தைகளுக்கு மேற்படிப்புக்காக உதவித் தொகைகளை, அதற்கான விதி முறைகளுக்குட்பட்டு, அளிப்பதற்கும் 1962-ல் தொடங்கப்பட்ட இந்நிதியிலிருந்து உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. மருத்துவம்





பொறியியல் போன்ற தொழிற் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 1,000, தொழிலியல் பட்டயப் படிப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 500 என்பது உதவித் தொகையின் விகிதமாகும். 1989-90ல் 118 பேர் உதவித் தொகை பெற்றனர். காசநோய் போன்ற சில குறிப்பிட்ட கடுமையான நோய்களால் அவதிப்படும் ஆசிரியர்களுக்கு, ரூ. 750 நிதியுதவி தரப்படுகிறது. 1988-89-ல் 2 ஆசிரியர்கள் நிதியுதவி பெற்றனர். சைதாப்பேட்டை கல்வியியல் கல்லூரி வளாகத்தில் ஆசிரியர்கள் இல்லம் ஒன்றைக் கட்ட அரசு நிதி அளித்துள்ளது.

ஆசிரியர்களுக்கான விருதுகள்:

10. பள்ளி ஆசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 1988-89 ஆம் ஆண்டில் பின்வரும் விவரப்படி 228 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் .. .. | 112 |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் | 112 |
| ஆங்கிலோ-இந்தியப்பள்ளி ஆசிரியர்கள் .. .. | 2 |
| மெட்ரிகுலேசன் பள்ளி ஆசிரியர்கள் .. .. | 2 |
| | 228 |

இவ்விருது ஒவ்வொன்றும் ரூ. 1,000 பணமுடிப்பு, வெள்ளிப் பதக்கம், தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டது. 30 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும், 14 இடைநிலைப்பள்ளி ஆசிரியர்களும் இந்திய அரசிடமிருந்து 1989ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வுப் பணி வாரியம்:

11. பள்ளிகளில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை தமிழ்நாடு தேர்வாணைக் குழு மூலம் ஆசிரியர்களைத் தேர்வு செய்து நிரப்புவதில் இருந்துவந்த நடைமுறை இடர்பாடுகளை நீக்க ஆசிரியர் தேர்வுப் பணிவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் 1989-90-ல் பல்வேறு பாடப் பிரிவுகளுக்குத் தேவையான 958 ஆசிரியர்களை தெரிவு செய்துள்ளது.

12. பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கு மட்டுமே முதலில் இவ்வாரியம் அமைக்கப்பட்டது. எனினும், இவ்வாரியம் இந்நாள்வரை ஆற்றியுள்ள சிறந்த பணியினைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு கல்லூரிக் கல்விப் பணி, தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி சார்நிலைப்பணி மற்றும் தமிழ்நாடு சட்டக் கல்விப் பணி போன்றவற்றைச் சேர்ந்த சில பதவிகளுக்கும் ஆசிரியர்களைத் தேர்வு செய்ய இவ்வாரியத்தைப் பயன்படுத்திக் கொள்ள, முறைப்படியான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்காக இவ்வாரியத்தை தக்கவாறு மாற்றி அமைப்பதற்கான கருத்துரு அரசின் ஆய்விலுள்ளது.

தமிழ்நாட்டில் 1989-90-ல் செயல்பட்டு வந்த 1,828 மேல்நிலைப் பள்ளிகளின் நிருவாக அடிப்படையான விவரங்கள் வருமாறு:

பள்ளிகளின் வகை:

அரசுப் பள்ளிகள்—

| | | |
|---|---|---|
| பள்ளிக் கல்வித் துறை .. .. | | 764 |
| ஆதிதிராவிடர் நலத் துறை .. | 30 | |
| சமூக நலத்துறை .. .. | 2 | |
| வனத்துறை .. .. | 1 | |
| விளையாட்டுத்துறை .. .. | 1 | |
| தொழில்நுட்பக் கல்வித் துறை .. | 14 | 48 |
| | | 812 |
| தனியார் .. | 727 | |
| நகராட்சி மற்றும் மாநகராட்சி .. | 68 | 1,607 |
| மெட்ரிகுலேசன் .. .. | | 192 |
| ஆங்கிலோ இந்தியன் .. | | 29 |
| | | 1,828 |

இப்பள்ளிகளில், 1989–90-ல் புதிதாக தொடங்கிய பள்ளிகள் 108 (அரசு 39, தனியார் 29, நகராட்சி/மாநகராட்சி 6, மெட்ரிகுலேசன் 34) மேற்கண்ட 1,828 மேல்நிலைப்பள்ளிகளில் நடுவண் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் CBSE உடன் இணைந்த பள்ளிகள் சேர்க்கப்படவில்லை. 1989–90 ஆம் ஆண்டில் மேற்கூறிய மேல்நிலை வகுப்புகளில் பயின்றுவந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | மாணவர். | மாணவியர். | மொத்தம் |
|---|---|---|---|
| பொதுப் பாடங்கள் .. | 2,10,491 | 1,38,127 | 3,48,718 |
| தொழிற் பாடங்கள். | 47,941 | 45,200 | 93,141 |
| மொத்தம் .. | 2,58,432 | 1,83,427 | 4,41,859 |

2. 1978-79 ல் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்ட பொழுது மேல்நிலை வகுப்புகளில் கலை, அறிவியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத் தகுதி பெற்ற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம் செய்தும் முதுகலைப் பட்டத் தகுதி பெற்றிராத உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலை வகுப்புகள் நடத்த ''உட்படுத்தியும்'' பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாண்டும் அதற்குப் பின்னர் உள்ள ஆண்டுகளுக்கும்

புதிதாக துவக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கூடிய பிரிவுகளுக்கு கூடுதலாகத் தேவைப்பட்ட மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் தேவையினைப் பூர்த்திசெய்யும்பொருட்டு இதுவரை 10,000-க்கு அதிகமான மேல்நிலை வகுப்பு ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 650-ம், ஆய்வுக் கூட உதவியாளர் பணியிடங்கள் இது வரை 900-ம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணி விதிகள் ஏப்ரல் 1981-ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளியிலிருந்து ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு மேற்படிப்புத் தகுதியடைய போதிய காலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதுவரை இவ்வாசிரியர்களுக்கு மாதந்தோறும் ரூ. 40 சிறப்பூதியம் அளிக்கப்படுகிறது. ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்களின் நலனுக்காக மாநிலக் கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் பத்து மாத அளவிலான ''பட்ட மேற்படிப்புச் சான்றிதழ்'' வகுப்பை நடத்தியுள்ளது. இவ்வகுப்பில் தேர்ச்சி பெறுபவர்கள் மேல்நிலை வகுப்பு ஆசிரியர்களுடைய சம்பள விகிதத்தைப் பெறுவர்.

பயிற்று மொழி :

4. மேல் நிலை வகுப்புகளில் தமிழ் மொழி அல்லது தமது தாய்மொழி வாயிலாகப் பயிலும் சிறுபான்மை மொழி மாணவர்களிடமிருந்து பள்ளிக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. தங்கள் தாய்மொழி வழியாகப் பத்தாம் வகுப்புவரை பயின்ற சிறுபான்மை மொழி மாணவர்கள் அதே மொழியில் 11—12 வகுப்புகளில் பாடங்களைப் பயில வாய்ப்பில்லையெனில் ஆங்கில மொழி வாயிலாகப் பயில அனுமதிக்கப்படும் பள்ளிக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. மேல்நிலை வகுப்புகளில் ஆங்கில மொழி வாயிலாகப் பயிலும் ஏனைய மாணவர்களிடமிருந்து பருவம் ஒன்றுக்கு ரூ. 20 அல்லது ஆண்டிற்கு ரூ. 200 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தொழிற் பாடங்களைப் பொருத்தவரை அந்தந்தத் தொழிற் பாடத்தில் பகுதி III-ல் பொதுக் கல்வியில் தொடர்புடைய பாடத்திற்கு எது பயிற்று மொழியோ அதுவே அந்த தொழிற் பாடத்துக்கும் பயிற்று மொழியாகக் கருதப்பட்டு அதற்கேற்ப பள்ளிக் கட்டணம் வசூலிப்பதா இல்லையா என்பது நிர்ணயிக்கப்படுகிறது.

5. மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் சாதனை அகில இந்திய வட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளது. 1989-90-ல் மொத்தம் 1,375 மேல்நிலைப் பள்ளிகளில் 108 வகையான தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1989—90-ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 4.47 இலட்சம் மாணவர்களில் 98,141 பேர் பின்வரும் விவரப்படி தொழிற் பாடங்களைப் பயின்று வந்தனர்:—

| தொழிற் பாடவகை. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
| --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) |
| 1. வேளாண்மை .. | 5,691 | 179 | 5,67 |
| 2. மனையியல் .. | 103 | 5,152 | 5 255 |
| 3. வாணிகத் துறை .. | 23,037 | 22,113 | 45,150 |
| 4. பொறியியலும், தொழில் நுட்பவியலும் .. | 18,848 | 1,391 | 20,239 |
| 5. உடல் நலம் .. | 262 | 5,431 | 5,693 |
| 6. ஆசிரியர் பயிற்சி | .. | 10,934 | 10,934 |
| மொத்தம் .. | 47,941 | 45,200 | 93,141 |

6. மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பொதுப் பாடங்களைப் பயிலும் மாணவர்கள் விருப்பப் பாடங்களாகத் தந்த வேண்டிய 4 பாடங்களில் ஒன்றுக்குப் பதிலாக தொழிற் பாடம் ஒன்றைப் பயில அனுமதிக்கும் திட்டத்தை விருப்பமுள்ள மேல்நிலைப் பள்ளிகள் 1984–85 முதல் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளன.

7. முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழுநேர தொழிற் பாட ஆசிரியர்களோடு புதிதாக நியமிக்கப்பட்ட 3,927 பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களும் தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். பகுதி நேர ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் ரூ. 400/800 ஆகும். தொழிற் பாட கலை மாணாக்கர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் செயல்பட்டு வருகிறது. மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தொழிற் பாடங்களுக்கான தளவாடங்கள் வகையில் அரசு பணத்திலிருந்து மட்டும் செய்துள்ள செலவு ரூ. 40 இலட்சத்திற்கு மேல் ஆகும். அத்துடன் அந்தந்தப் பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்தும் தனியார் நிருவாகங்களின் பணத்திலிருந்தும் தொழிற் பாட தளவாடங்களுக்காகச் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

8. பகுதிநேர தொழிற் பாட ஆசிரியர்களிடமிருந்து அவர்களின் பணியினை வரன்முறை செய்து போதிய ஊதியம் அளிப்பதற்கு அடிக்கடி கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. பகுதிநேர தொழிற்பாட ஆசிரியர் இருவருக்குரிய பணியை (ஒரே பள்ளியிலோ இருபள்ளிகளிலோ) ஒருவரே செய்து வரும் நேர்வுகளில் அத்தகையோருடைய பணியினை இரு கட்டங்களாக (1990-91-ல் 50 விழுக்காடு, 91-92-ல் மற்றவர்கள்) வரன்முறை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.



9. மேல் நிலைப் பள்ளித் தொழிற் பாட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், அவர்கள் உயர் கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல் போன்ற நோக்கங்களுடன் மேல்நிலைக் கல்வித் தொழிற் பாட வகுப்புகளின் பாடங்கள், பாடத்திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக அரசு அமைத்த குழந்தைசாமி குழுவின் பரிந்துரைகளைப் படிப்படியாக அரசு செயற்படுத்தி வருகிறது.

10. மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்களைப் பயின்று தேறி வெளிவரும் மாணவர்களுக்கு 6 மாதச் சிறப்புப் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 20 தொழில்களில் ஏதாவது ஒன்றில் மொத்தம் 1,300 பேருக்கு "தொழில் பழகு பயிற்சிக் குழு"-வின் மூலமாகப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 880 உதவித் தொகை தரப்படும்.

11. மின்கணிப்புப் பொறியைப் பற்றிய கல்வியானது 1984–1985 லிருந்து பள்ளிகளில் நடத்தப்பட்டு வருகிறது. மைய அரசினால் நாடெங்கிலும் நடத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை நமது மாநிலத்தைச் சார்ந்த 181 உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

12. மேல்நிலைப் பள்ளித் தொழிற் கல்வி பயில்வோர் வேலை வாய்ப்பை மேலும் அதிகரிக்கும் பொருட்டு, வேலை நியமனங்களுக்கும், உயர் படிப்புகளுக்கும் கீழ்க்கண்ட தொழிற் கல்விப் பாடங்கள் அரசினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன:—

(1) "அலுவலகக் கல்விப் பணி" (Office Secretaryship) பாடத்தின் கீழ் வழங்கப்படும் தட்டச்சு (மேல்நிலை) மற்றும் சுருக்கெழுத்து (கீழ்நிலை).

(2) தொழிற் கல்வி பயிலும் மாணவர்களும் மேல் நிலைக் கல்வி, பொதும் பிரிவு மற்றும் தொழிற் பிரிவுகளின் பயின்ற பாடங்களுக்கேற்பவும், பல்கலைக் கழக விதி முறைகளுக்கு உட்பட்டும் பொறியியற் கல்லூரிகள், மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றில் சேரத் தகுதியுடையவராவர்.

(3) அவர்கள் பல்தொழில் பயிலகங்களில் நேரடியாக இரண்டாமாண்டில் சேரத் தகுதியுடையவராவர். இதற்காக 10 விழுக்காடு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(4) தொழிற் கல்வியில் செவிலியர் பணி (Nursing Course) பாடம் படித்தவர்கள் நேரடியாக செவிலியர் பணி இளங்கலை வகுப்பில் இரண்டாமாண்டில் சேரத் தகுதியுடையவராவர்.

மேல்நிலை வகுப்புகளில் தொழில் சார்ந்த பாடங்கள் கற்பித்தலுக்கான மைய அரசு பொறுப்பேற்கும் திட்டம்.

14. 1987. ஆண்டுதோறும் மாநிலத்திற்கு 100 பள்ளிகள் விதம் மேல்நிலை வகுப்புகளில் தொழிற் கல்வி கற்பிப்பதற்கு மைய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. மைய அரசு முதற் கட்டமாக (1987-88-ல்) இம்மாநிலத்துக்கு ரூ. 192 இலட்சத்தினை கட்டிடங்கள், உபகரணங்கள் முதலியவற்றிற்காக அளித்துள்ளது. இத்தொகை பள்ளிக் கல்வி இயக்குநருக்கும், தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கும், அளிக்கப்பட்டுள்ளது. தொழிற் கூடங்கள் கட்டுமானப்பணி முடிக்கப்பட்டு தலைமை ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. கருவிகளை வழங்கும் பொறுப்பை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் பள்ளிக் கல்வி இயக்குநர் ஒப்படைத்துள்ளார்.

மேலும் இரண்டாவது கட்டமாக (1988-89-ல்) மேலும் 100 பள்ளிகளில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 225 இலட்சத்தை இம்மாநிலத்துக்கு மைய அரசு அனுமதித்துள்ளது.

கட்டிடங்களும் தளவாடங்களும்:—

15. அரசு மேல் நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக் கூடமும் கட்ட அரசு ஏற்பளித்துள்ளது. படிப்படியாக நிறைவேற்றப்படும் இத்திட்டத்திற்கு இதுவரை ஆன செலவு ரூ. 15.22 கோடியாகும்.

16. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல் நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக்கூடத் தளவாடங்கள் வழங்க ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 1 இலட்சம் செலவிடப்படுகிறது. சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1986-87-ல் உயர்த்தப்பட்ட 58 மேல் நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடத் தளவாடங்கள் வாங்குவதற்கு ரூ. 26.10 இலட்சம் முன்பணமாக 1988-89-ல் இந் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

17. தனியார் மேல் நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டவும் தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 49 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் (கட்டிடத்திற்கு ரூ. 75,000 மற்றும் ஆய்வுக்கூட தளவாடங்களுக்கு ரூ. 25,000) என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றினையும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை இவ்வாறு இணை மானியமாக ... ஏற்பளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை சுமார் ரூ. 3.00 கோடியாகும்.



## IV அரசுத் தேர்வுகள்

(1)

அரசுத் தேர்வுத் துறையின் தலைமை அலுவலகம் சென்னையில் இயங்கி வருகிறது. அத்துடன் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சென்னை ஆகிய ஐந்து இடங்களில் வட்டார அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

2. இத்துறை மாநிலம் முழுவதற்குமாக நடத்திவரும் 41 பொதுத் தேர்வுகளில். எஸ். எஸ். எல். சி. மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுகள் முக்கியமானவைகளாகும். இத்தேர்வுகளின் முக்கிய விவரங்கள் வருமாறு:-

தேர்வுகளுக்குப் பதிவு செய்த தேர்வர்களின் விவரங்கள்.

| தேர்வுகள். | மார்ச்/ ஏப்ரல் 89. | செப்டம்பர்/ அக்டோபர் 1989. | மார்ச்/ ஏப்ரல் 1990 (தோராயமாக). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. எஸ். எஸ். எல். சி:— | | | |
| பள்ளித் தேர்வர்கள் | 3,58,310 | — | 3,94,200 |
| தனித் தேர்வர்கள் | 1,48,829 | 2,22,705 | 1,63,800 |
| மொத்தம் | 5,07,139 | 2,22,705 | 5,58,000 |
| 2. ஆங்கிலோ இந்தியன் பள்ளித் தேர்வு:— | | | |
| பள்ளித் தேர்வர்கள் | 3,615 | — | 4,000 |
| தனித் தேர்வர்கள் | 285 | 669 | 500 |
| மொத்தம் | 3,900 | 669 | 4,500 |
| 3. மெட்ரிக்குலேஷன் தேர்வு: | | | |
| பள்ளித் தேர்வர்கள் | 12,392 | — | 13,500 |
| தனித்தேர்வர்கள் | 783 | 1,629 | 1,500 |
| மொத்தம் | 13,175 | 1,629 | 15,000 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4. மேல்நிலைப் பள்ளித் தேர்வு:— | | | |
| பள்ளித் தேர்வர்கள் .. | 1,81,105 | — | 2,13,500 |
| தனித் தேர்வர்கள் .. | 64,363 | 1,09,352 | 71,500 |
| இடைநிலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி தேர்வு .. | 13,227 | — | — |
| மொத்தம் | 2,58,695 | 1,09,352 | 2,85,000 |

தனி மாணவர்களைப் பொறுத்தமட்டிலும் மார்ச் 1978 தேர்விலிருந்து பகுதி முறைத் தேர்வு (அதாவது ஒரு தடவையோ, பல தடவைகளிலோ ஒவ்வொரு பாடத்திலும் 35 விழுக்காடு மதிப்பெண் பெற்றால் தேர்ச்சி என்னும் முறை) பின்பற்றப்பட்டு வருவதால், தேர்ச்சி சதவீதம் கணக்கிட இயலாது. மார்ச் ஏப்ரல் 1989 தேர்வில் பள்ளித் தேர்வர்களுடைய தேர்ச்சி விழுக்காடு பின்வருமாறு இருந்தது:—

| | |
|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. .. | 53.6 சதவீதம். |
| ஆங்கிலோ இந்தியன் .. | 84 சதவீதம். |
| மெட்ரிகுலேசன் .. | 87 சதவீதம். |
| மேல்நிலைப் பள்ளி .. | 59 சதவீதம். |

தேர்வு மையங்களின் விவரங்கள்.

| தேர்வின் பெயர். | தேர்வு மையங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | மார்ச் 1989. | அக்டோபர் 1989. | மார்ச் 1990. தோராயமாக. |
| (1) | (2) | (3) | (4) |
| 1. இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வு. | 2,114 | 633 | 2,200 |
| 2. ஆங்கிலோ இந்தியப் பள்ளி இறுதித் தேர்வு. | 26 | 2 | 28 |
| 3. மெட்ரிகுலேஷன் பள்ளித் தேர்வு | 111 | 6 | 126 |
| 4. மேல்நிலைக் கல்வித் தேர்வு. | 1,336 | 363 | 1,500 |



தனித் தேர்வர்கள் தேர்வு அனுமதிக்கான தகுதிகள்.

| தேர்வு. (1) | குறைந்தபட்ச கல்வித் தகுதி. (2) | குறைந்த பட்ச வயது வரம்பு. (3) |
|---|---|---|
| 1. இ.எஸ்.எல்.சி. | இல்லை. .. | டிசம்பர் திங்கள் முதல் நாளன்று 13 வயது நிரம்பியிருத்தல் வேண்டும். |
| 2. எஸ்.எஸ்.எல்.சி. | எட்டாம் வகுப்பில் ஆங்கிலப் பாடத்துடன் தேர்ச்சி பெற்றிருத்தல் (அல்லது) அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் எட்டாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல். | மார்ச்சு திங்கள் முதல் நாள்/ செப்டம்பர் திங்கள் முதல் நாள் 15 வயது நிரம்பியிருத்தல் வேண்டும். |
| 3. மேல்நிலைத் தேர்வு பொதுக் கல்விப் பாடங்கள் (செய்முறைக் கல்வியில்லாத பாடங்கள்.) | 10–ம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல். | ஏப்ரல் முதல் நாள்/ அக்டோபர் முதல் நாள் 17 வயது நிரம்பியிருத்தில் வேண்டும். (அரசு தேர்வுத் துறை இயக்குநரால் வயது வரம்பு 3 மாதங்கள் வரை தளர்த்தப்படுகிறது). |

தேர்வுக் கட்டணம்.

| தேர்வு. (1) | கட்டணம். (2) |
|---|---|
| 1. இ.எஸ்.எல்.சி. .. | பகுதி முறை மற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் ரூ. 10 மட்டும். |
| 2. எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி., ஆங்கிலோ–இந்தியன், மெட்ரிகுலேஷன். | பகுதி முறை மற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் ரூ. 25 மட்டும். |

3. மேல்நிலைத் தேர்வு ... ஒரு பாடத்திற்கு ரூ. 10 மட்டும். அனைத்துப் பாடங்களுக்கும் ரூ. 50 மட்டும்.

3. மேற்கூறிய தேர்வுகள் தவிர ஆசிரியர் கல்வியில் பட்டயப் [illegible] தொழிற் கல்வி (வணிகவியல் அல்லாத) பாடங்கள், [illegible] சான்றிதழ் படிப்பு போன்ற தேர்வுகளையும் இத்துறை நடத்தி வருகிறது.

மேல்நிலைத் தேர்வில் தேறியவர்களும் கூடுதல் மதிப்பெண் பெறும் நோக்குடன் மீண்டும் தேர்வு எழுத அனுமதி:

4. மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களும் ஏற்கனவே பெற்றுள்ள மதிப்பெண்ணை உயர்த்திக்கொள்ளும் வகையில் மீண்டும் தேர்வு எழுத அனுமதிக்கும் ஒரு முன்னோடித் திட்டம் ஏப்ரல் 1990 தேர்விலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, மேல்நிலைத் தேர்வில் ஏற்கனவே தேர்ச்சி பெற்றுள்ளவர்கள், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவர இயல் மற்றும் விலங்கியல் பாடங்களில் மதிப்பெண்களை உயர்த்தும் நோக்குடன் மீண்டும் இத்தேர்வுகளை எழுதலாம். மதிப்பெண்களை உயர்த்த அவ்வாறு இருமுறை மட்டுமே அனுமதிக்கப்படுவர். இம்முறையினால், தொழிற் கல்வி பயிற்சி களில் சேர விரும்பும் மாணவர்கள் தங்கள் தகுதியினைப் பெருக்கிக் கொள்ள முடியும். 1990 அக்டோபர் தேர்விலிருந்து இப் புதிய திட்டம், மேல்நிலைத் தேர்வின் பிற பாடங்களுக்கும் விரிவாக்கப்படும்.

[illegible] விடைத்தாள்கள் மதிப்பிடுதல்:

5. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைக் கல்விப் பொதுத் தேர்வு விடைத்தாள்களைத் திருத்தும் பணி, மைய மதிப்பீடு முறையில் செய்யப்பட்டு வருகிறது. தேர்வுகளின் முடிவுகளை விரைவில் வெளியிடுவதற்கு இம்முறை உதவுகிறது. மேலும், தொழில் படிப்புக் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தெரிந் தெடுக்கும் பணியினை விரைவில் முடிக்க வகை செய்யும் பொருட்டு 1990ஆம் ஆண்டு மேல்நிலைக் கல்வித் தேர்வு முன் கூட்டியே தொடங்கப்படுகிறது.

சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான தேசியத்தேர்வு:

6. 1986-ஆம் ஆண்டிலிருந்து இத்தேர்வின் முதற்கட்டம் [illegible] நடத்தப்படுகிறது. இத்தேர்வின் இரண் டாவது கட்டம் தேசிய கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்தால் (என்.சி.இ.ஆர்.டி.) நடத்தப்படுகின்றது. கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களில் 60 சதவீதத்திற்கு [illegible] மதிப்பெண்கள் பெற்றுள்ளவர்கள் இத்தேர்வினை



எழுதலாம். 1989 டிசம்பரில் 29 தேர்வு மையங்களில் நடைபெற்ற இத்தேர்வினை 9227 மாணவர்கள் எழுதினர். இவர்களுள் 219 பேர் ஆதிதிராவிடரும் பழங்குடியினரும் ஆவர்.

7. இது தவிர, என்.சி.இ.ஆர்.டி. அமைப்பினுக்காக இவ் வியக்ககம் ''கல்வித் திறல் சாதனை தேர்வு'' என்ற ஒரு புதிய தேர்வினை முதன்முறையாக 1990-ல் நடத்தியது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இத்தேர்வு நடத்தப்படும். மாநிலம் முழுவதிலும் இவ்வாண்டினில் தெரிந்து எடுக்கப்பட்ட 200 பள்ளிகளில் 10-ம் வகுப்பு மாணவர்களுக்கும், 164 பள்ளி களில் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கும் இத்தேர்வு நடத்தப் பட்டது. தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தகுதிச் சான்றி தழ்கள் வழங்கப்படும்.

V. வயதுவந்தோர் கல்வியும், பள்ளி சாராக் கல்வியும்.

வயது வந்தோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1990-91 நிதிநிலை அறிக்கையில் ரூ. 9.68 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

வயது வந்தோர் கல்வி.

2. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி எழுத்தறிவு பெற்றவர்கள் விழுக்காடு தமிழ்நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்தது—

| | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (விழுக்காடு). | |
| இந்தியா .. .. | 46.89 | 24.82 | 36.23 |
| தமிழ்நாடு .. .. | 58.26 | 34.99 | 46.76 |

தமிழ்நாட்டில் வயதுவந்தோர் கல்வி மையங்கள் கீழே விளக்கிக் கூறப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களின் கீழ் நடத்தப் படுகின்றன.

ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி.

3. மைய அரசின் முழுப் பண உதவியுடன் நடைபெறும் இத் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்தில் உள்ள 21 மாவட்டங்களிலும் மொத்தம் 8,100 மையங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொன்றிலும் 300 மையங்கள் கொண்ட 27 செயற்பிரிவுகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுகின்றன. மைய அரசு வகுத்துள்ள வரைமுறைகளின்படி இத்திட்டம் செயல்படுகிறது. ஒவ்வொரு செயற் பிரிவுக்கும் (300 மையங்கள்) முதலாமாண்டிற்கு ரூ. 15.54 இலட்சமும் பின்னர் ஆண்டுக்கு ரூ. 13.89 இலட்சம் வீதமும் செலவினம் அனுமதிக்கப்படுகிறது.

4. இத் திட்டத்தின்கீழ் 8 முதல் 12 முதியோர் கல்வி நிலையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் நியமிக்கப்படுகிறார். மேற்பார்வையாளர்களின் குறைந்த அளவுக் கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சியாகும். அவர்கள் மேற்பார்வையின் கீழ் உள்ள முதியோர் கல்வி நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ. 400 மதிப்பூதியம் பெறுகின்றனர். தவிரவும், சிறப்பு ஈட்டுப்படியாக மாதம் ரூ. 50-ம் அவர்கள் பெறுகின்றனர். வயது வந்தோர் கல்வி மையம் ஒவ்வொன்றிலும், ஓர் ''எழுத்தறிவு ஊக்குநர்'' உள்ளார். அவருக்கு மாதம் ரூ. 100 மதிப்பூதி-





யமாகவும், ரூ. 88 [illegible] வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் பின்வரும் முன்னுரிமைப்படி எழுத்தறிவு இல்லாதவர்கள் 30 பேர் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர்.

1. ஆதி திராவிடர் (மகளிர்);
2. பெண்கள் (பொதுவாக);
3. ஆதி திராவிடர் (ஆடவர்) மற்றும்
4. பிற வகுப்பினர் (ஆடவர்).

இம் மையங்கள் அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் வகுப்புகளை நடத்துகின்றன.

மாநில வயதுவந்தோர் கல்வித் திட்டம்.

5. மாநில அரசின் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றிலும் 100 மையங்கள் கொண்ட 149 திட்டப் பிரிவுகள் செயல்படுகின்றன. இவற்றில் இரண்டு திட்டப் பிரிவுகள் மீனவர்களின் நலனுக்காக ''டேனிடா'' திட்டத்தின்கீழ் டென்மார்க் அரசின் உதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

6. ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவுத் திட்ட மையங்களைப் போன்றே இம்மையங்களும் செயல்படுகின்றன. முப்பது முதல் முப்பத்தைந்து மையங்களுக்கு ஒருவர் வீதம் மேற்பார்வையாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 700 சம்பளமும், போக்குவரத்துச் செலவுக்கு ரூ. 75-ம் தரப்படுகிறது.

7. வயது வந்தோர் கல்வித் திட்டத்தைப் பயனுள்ளதாக்கவும் கல்வியறிவற்றவர்களை எழுத்தறிவு மையங்களுக்கு ஈர்ப்பதற்கும், எழுத்தறிவு மையங்களில் அந்தந்த வட்டாரத் தேவைக்கேற்ப சிறு சிறு கைத் தொழில்களும் கற்றுத் தரப்படுகின்றன. அத் தொழில்கள் மூலம் அவர்கள் தம் வருமானத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும். அவர்கள் கடன் வசதி பெறுதல், உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கும், அவர்களுக்கு உதவப்படுகிறது.

பிற அமைப்புக்களின் எழுத்தறிவிப்புப் பணிகள்.

8. தனியார் அமைப்புகள், நேரு இளைஞர் மையங்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் எழுத்தறிவுப் பணிக்கான பெருந் திட்டம், தேசியப் பணித் திட்டம் ஆகியவையும் வயது வந்தோர் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன.

9. வயதுவந்தோர் கல்விக்கான பல்வேறு திட்டங்களிலும் சேர்ந்து மொத்தம் இதுவரை எழுத்தறிவு பெற்றுள்ளவர்கள் விவரம் வருமாறு:—

| திட்டத்தின் பெயர். | ஆடவர். | மகளிர். | மொத்தம். | மொத்த எண்ணிக்கையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஆறாவது திட்டக்காலம் (1980–85). | | | | |
| | 7.36 | 16.25 | 23.61 | 12.34 |
| ஏழாவது திட்டக்காலம் (1985–90). | | | | |
| 1. ஊரகத் தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டம். | 3.06 | 10.16 | 13.22 | 5.64 |
| 2. மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம். | 6.32 | 16.71 | 23.03 | 9.92 |
| 3. தொண்டு நிறுவனங்கள். | 0.83 | 3.23 | 4.06 | 2.00 |
| 4. கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும். | 0.34 | 0.43 | 0.77 | 0.25 |
| 5. நேரு இளைஞர் மையங்கள். | 0.20 | 0.24 | 0.44 | 0.18 |
| 6. பிற அமைப்புகள். | 2.50 | 1.48 | 3.98 | 0.82 |
| மொத்தம் .. | 13.25 | 32.25 | 45.50 | 18.81 |
| 6—7. திட்டக் காலங்களின் பெரு மொத்தம். | 20.61 | 48.50 | 69.11 | 31.15 |





10. 1989 ஆம் ஆண்டின் இறுதியில் செயல்பட்டு வந்த வயது வந்தோர் கல்வி மையங்களின் மொத்த எண்ணிக்கை 25,860 ஆகும். அம்மையங்களில் டிசம்பர் 1989 வரை பயின்று வந்தோரின் எண்ணிக்கை 9.17 இலட்சம் பேர் ஆகும். இவர்களுள் பெரும் பாலோர் அதாவது 5.62 இலட்சம் பேர் மகளிர் ஆவர். மொத்த எண்ணிக்கையாகிய அந்த 9.17 இலட்சம் பேரில் 3.56 இலட்சம் பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவராவார்.

ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள் மற்றும் தொடர் கல்வி நிலையங்கள்.

11. தொடர் கல்வியையும், ஏட்டறிவு நிலைத் திட்டத்தை யும் தொடர்ந்து செயற்படுத்த வகை செய்வதே, தொடர்கல்வி நிலையங்களின் நோக்கமாகும். அடிப்படைக்கல்வி அறிவுத் திட்டம், ஏட்டறிவு நிலைத் திட்டம் மற்றும் தொடர்கல்வியினை யும் ஒருங்கிணைக்கும் வகையில், தேசிய எழுத்தறிவிப்புப் பணி அறிக்கையின்படி 700 தொடர் கல்வி நிலையங்களை நிறுவ, இம் மாநிலத்திற்கு மைய அரசு முழு நிதியுதவி வழங்கியது. அந்த 700 நிலையங்களும் 27 ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவுப் பணி செயற் பிரிவுகளில் 2–10–1988 முதல் துவக்கப்பட்டன. 1989–90-ல் மேலும் 313 தொடர் கல்வி நிலையங்களுக்கு மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒவ்வொரு தொடர் கல்வி நிலையத்திற்கும் முதலாண்டில் தொடரும் செலவினம் ரூ. 7,000 தொடராச் செலவினம் ரூ 7,000 ஆக மொத்தம் ரூ. 14,000-ம் பின்வரும் ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ. 7,000 தொடரும் செல வினமாகவும் மைய அரசு வழங்குகிறது. 5,000–க்கும் மேல் மக்கட் தொகை கொண்ட 3—4 கிராம முதியோர் கல்வி நிலையங்களுக்கு, ஒரு தொடர் கல்வி நிலையம் அமையும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு தொடர்கல்வி நிலையத் திற்கும் மாதம் ரூ. 200 வீதம் மேற்பார்வையாளருக்கு மதிப் பூதியம் வழங்கப்படுகிறது. மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தின்கீழும் 1989–90–ல் 100, தொடர் கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டன. 1990–91–ல் மேலும் சில தொடர்கல்வி நிலையங்கள் தொடங்கப்படும். ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு வயது வந்தோர் கல்வி மையம் ஏற்படுத்தப்படவுள்ளது. இம் மையங்கள் மக்கள் நலப் பணியாளர்களால் நிருவகிக்கப்படும்.

தொழிலாளர் கல்வி நிலையங்கள்.

12. சென்னையில் தொழிலாளர் கல்வி நிலையம் ஒன்று 1982 ஜூலை மாதம் முதல் செயற்பட்டு வருகிறது. அது நகர்ப் புறங் களிலும், பிற தொழில் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்கிறது. இவற்றில் பயின்றவர்கள் வியாசர்பாடி, புஷ்பா நகர், நங்கநல்லூர், கபாலிவன போஜனத் தோட்டம் ஆகிய இடங்களில் கூட்டுறவு அமைப்புகளைத் தொடங்கியுள்ளனர்.

இத்தகைய நிலையங்கள் ஒன்று மதுரையில் செப்டம்பர் 1985-லும் திருச்சிராப்பள்ளியில் அக்டோபர் 1986-லும், தொடங்கப்பட்டுள்ளன. இவ்விரு நிலையங்களும் இதுவரை 4,038 பயிற்சிகளை (குறுகிய கால மற்றும் நீண்டகாலப் பயிற்சிகள்) நடத்தியுள்ளன. 1,23,648 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களில் 1,02,596 பேர் பெண்கள், 29,429 பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்கள்.

### பள்ளி சாராக்கல்வி.

13. பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்துவதற்கு தமிழ் நாட்டுக்கும் 1987–88 ஆம் ஆண்டிலிருந்து மைய அரசு நிதியுதவி அளித்து வருகிறது. நகரக் குடிசைப் பகுதிகள், மலைப்பகுதிகள், தொழிற்சாலைப் பகுதிகள் ஆகிய குறிப்பிட்ட பகுதிகளைச் சார்ந்த குழந்தைகளில், பள்ளிக்குச் சென்று, பின்னர் பாதியிலே படிப்பை விட்டு நின்று விட்டவர்கள், பள்ளிக்கே செல்லாதவர்கள் ஆகியோரின் நலனுக்காக மைய அரசு வழங்கும் 50 விழுக்காடு நிதி உதவியுடன் இம்மையங்கள் 1988–89-ல் தமிழகத்தில் தொடங்கப்பட்டன. சென்னையில் ஒன்றும், சிவகாசியில் ஒன்றும் ஆக இரண்டு பள்ளி சாராக் கல்வித் திட்டங்கள் (ஒவ்வொரு திட்டத்திற்கும் 100 மையங்கள்) தொடங்கப்பட்டன. ஒவ்வொரு மையத்திலும் 6—14 வயது குழந்தைகள் 25 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அம்மையங்களில் சேருபவர்கள், மூன்றாண்டுகள் தொடர்ந்து படித்து, ஐந்தாம் வகுப்பிற்குரிய படிப்பறிவினைப் பெறுவர். இந்த 200 மையங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 5,000 பேர்களில் 3,850 பேர் சிறுமியராவர்.

14. பழங்குடியினருக்கான "பள்ளி சாராக் கல்வி மற்றும் வயது வந்தோர் கல்வி" திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, ஏற்காடுமலை, தென்னார்க்காடு மாவட்டத்தில் கல்ராயன்மலை, வடார்க்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் சவ்வாதுமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பச்சைமலை ஆகிய பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் நலனுக்காக 1983 டிசம்பரில் 5 திட்டங்கள் தொடங்கப்பட்டன. அவ்வைந்தில், ஒவ்வொன்றிலும் பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி மையங்கள் 30 செயல்படுகின்றன. ஒவ்வொரு மையத்திலும், 6—14 வயதுக் குழந்தைகள் 20 பேரும், 15—35 வயதினர் 20 பேரும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.



## VI. கல்லூரிக் கல்வி.

1990–91 வரவு-செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கென ரூ. 87கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவகை உயர் கல்வி கற்பிக்கும் பல்கலைக் கழகங்களுக்கு வழங்கும் ஆண்டு நிதி, அரசுக் கல்லூரிகளுக்கான கட்டிடச் செலவு மற்றும் மாணவர்களுக்கான கடனுதவித் தொகை ஆகியவையும் இத்தொகையில் அடங்கும்.

2. தற்பொழுது பின்வரும் விவரப்படி கலை, அறிவியல், வணிகவியல் கல்லூரிகள் 212 செயற்பட்டு வருகின்றன:—

| கலை அறிவியல் வணிகவியல் கல்லூரிகள். (1) | கல்லூரிகளின் எண்ணிக்கை. (2) | மாணவர்களின் எண்ணிக்கை. (3) | |
|---|---|---|---|
| அரசினர் கல்லூரிகள் | 54 | முறையான வகுப்புகள்— பட்டப்படிப்பு | 1,83,526 |
| நிதியுதவிபெறும் தனியார் கல்லூரிகள் | 132 | | |
| | 212** | | |
| | | பட்டமேற்படிப்பு | 19,689 |
| நிதியுதவி பெறாத தனியார் கல்லூரிகள் | 26* | | |
| | | | 2,03,215 |
| *1989-90-ல் தொடங்க அனுமதிக்கப்பட்ட 3 கல்லூரிகள் உட்பட. | | மாலை நேர வகுப்புகள் | 16,000 |
| | | | 2,19,215 |
| பிற கல்லூரிகள். | | | |
| கல்வியியல் கல்லூரிகள் | 21 | | 3,129 |
| இதர கல்லூரிகள் | 20 | | 2,336 |
| | | | 5,465 |

** தன்னாட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் 38 இவற்றுள் அடங்கும்.

3. பல்கலைக் கழக வாரியாக மேற்கண்ட 253 கலை அறிவியல், வணிகவியல் கல்லூரிகள் விவரம் வருமாறு :—

| பல்கலைக் கழகம். | நிர்வாக வரம்பிற்குட்பட்ட மாவட்டங்கள். | கல்லூரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னை பல்கலைக் கழகம், சென்னை. | சென்னை, செங்கை-அண்ணா. வடஆற்காடு—அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர், தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி. | 90 |
| பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி. | 31 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர். புதுக்கோட்டை. | 40 |
| மதுரை—காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. | மதுரை, திண்டுக்கல்—காயிதேமில்லத், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகனார், காமராசர் திருநெல்வேலி—கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி. .. | 92 |
| | | 253 |

பல்கலைக் கழகங்கள்.

4. பொதுக் கல்விக்கான பல்கலைக் கழகங்களுக்கு, நிதி உதவி அளிக்க (தமிழ்ப் பல்கலைக் கழகம் உட்பட) 1990–91 நிதிநிலை அறிக்கையில் மொத்தம் ரூ. 9.14 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

5. தமிழ்நாட்டில் தற்போது 10 பல்கலைக் கழகங்கள் (தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அல்லாத ஆகிய இரண்டு வகையினவும்) உள்ளன. அவற்றில் 4 பல்கலைக்



கழகங்கள் கல்லூரிகளுக்கு இணைப்பு வழங்கும் வகையின; பிற ஆறும் தனித்தன்மை வாய்ந்தவை, கல்லூரிகளுக்கு இணைப்பு வழங்கும் பல்லைக் கழகங்கள் :

1. சென்னைப் பல்கலைக் கழகம்.
2. மதுரை-காமராசர் பல்கலைக் கழகம்.
3. பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்.
4. பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.

தனித்தன்மை வாய்ந்தவை—

1. அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி.
2. அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், கொடைக்கானல்.
3. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.
4. அண்ணா பல்கலைக் கழகம் (பொறியியல்):
5. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
6. அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர்கல்வி பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

மருத்துவப் பல்கலைக் கழகம், வேளாண்மைப் பல்கலைக் கழகம், கால்நடைப் பல்கலைக் கழகம் ஆகியவை அந்தந்தத் துறையின் திருவாகத்தில் இணைக்கப்பட்டுள்ளன. மற்றப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் கல்வித்துறை நிருவாகத்தின்கீழ் உள்ளன. மாநில அரசால் வழங்கப்பட்டுவரும் மொத்த உதவித்தொகை மற்றும் நிருவாகச் செலவு மானியம் ஆகியவை பல்கலைக் கழகங் களை நிருவகிக்கப் பயன்படுகின்றன. இதுதவிர, பல்கலைக் கழகங்களின் சிறப்புத் திட்டங்களுக்கு ஏற்படும் செலவுகளுக்கு அச்செலவுகளின் முழுவதுமோ அல்லது பகுதியையோ ஈடுகட்டும் வகையில் தனி மானியமாகவும், பல்கலைக் கழக நிதிக்குழு உதவி யுடன் செயல்படும் திட்டங்களுக்கான இணை மானியமாகவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மதுரைக்குத் தென் பகுதியில் உள்ள கல்லூரிகளை இணைத்து ஒரு பல்கலைக் கழகம், திருநெல்வேலி நகரில் அமைக்கப்படும். அப்பல்கலைக்கழகம், "நீரார்கும் கடலுடுத்த" எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தினை வழங்கிய மாமேதையின் நினைவாக "மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்" என்று பெயர் சூட்டப்படும்.

6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானல் மலைமேல் அமைந்து இருப்பதால் உள்ள இடர்பாடுகளைக் கருதி அப்பல்கலைக் கழக ஆசிரியைகளும், மாணவிகளும் அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென வற்புறுத்தி வருகின்றனர். வரும் ஆண்டில் இப்பல்கலைக் கழகத்தை சென்னைக்கு அருகே மாற்றிட கருதப்பட்டுள்ளது. இதற்கான நிலம் தெரிவு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் இப்பல்கலைக் கழகம் இடமாற்றம் செய்யப்படும்.

7. பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக நிதியுதவி குழுவின் ஊதிய விகிதத்தை ஏற்று மாநில அரசு ஆணையிட்டது. 1-1-1986-லிருந்து பெறவேண்டிய ஊதிய நிலுவைத் தொகையினை அவ்வாசிரியர்கள் பெற்றுள்ளனர். இதன் மூலம் அரசு மற்றும் தனியார் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சுமார் 16,000 பேர் பயன்பெறுகின்றனர். இது தொடர்பாக 1-1-1986 முதல் 31-3-1990 வரை ரூ. 57.38 கோடி கூடுதல் செலவு ஏற்படும். இச்செலவினத்தில் 80 விழுக்காடு பங்கினை மைய அரசு ஏற்கிறது. மீதி 20 விழுக்காட்டை மாநில அரசு ஏற்கிறது. 1-4-1990-லிருந்து மொத்தச் செலவினத்தையும் மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அஞ்சல் வகுப்புகளும் தொடர் கல்வியும் :

8. அஞ்சல் வழி வகுப்புகள் மற்றும் திறந்த பல்கலைக் கழகக் கல்வி வகுப்புகளில் பட்ட வகுப்புகளிலும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளிலும் பயின்று வருவோர் விவரம் வருமாறு :—

| அஞ்சல் வழி வகுப்புகள். (1) | மாணவர் எண்ணிக்கை. (2) |
|---|---|
| மதுரை காமராசர், அண்ணாமலை மற்றும் சென்னை பல்கலைக் கழகங்கள் .. | 1,48,000 |
| எவரும் பயிலலாகும் திறந்த பல்கலைக் கழகக் கல்வி முறை : (Open University) | .. |
| மதுரை காமராசர் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் .. | 47,000 |
| மொத்தம் .. | 1,95,100 |

கல்வித்தர மேம்பாடு.

9. சென்னை, சைதாப்பேட்டை அரசுக் கல்வியியல் கல்லூரியை கல்வியியலில் ஒரு உயர் படிப்பு நிறுவனமாக மேம்படுத்தவும் மேலும், வேலூர், ஒரத்தநாடு, குமாரபாளையம் ஆகிய இடங்களில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மூன்றையும்



மேம்படுத்தவும் மைய அரசு உதவியுடனான திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ. 107 லட்சம் மைய அரசு நிதி உதவி அளித்துள்ளது. அடுத்த கல்வியாண்டு இக்கல்லூரிகள் உயர்நிலையில் செயல்படும். ஆசிரியர் பயிற்சியை செம்மையாக நடத்துவதற்கும் நல்ல முறையில் கண்காணிக்கவும் ஒரு தனி இடக்ககம் ஏற்படுத்தப்படும்.

10. கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில், தனி துணை இயக்குநரின்கீழ் செயல்படும் ஆங்கில மொழி பயிற்றுவிப்பு மையம் 1987-88 முதல் ஆங்கிலம் பயிற்றுவது குறித்த சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

11. அரசுக் கல்லூரிகளில் புதிய வகுப்புகள் தொடங்குதல், பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் புள்ளி விவரங்கள் சேகரித்தல் போன்ற வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடுவதற்காக "கல்லூரி வளர்ச்சிப் பிரிவு" ஒன்று கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் செயற்பட்டு வருகின்றது. அரசுக் கல்லூரிகளில் உள்ள நூலகங்கள், ஆய்வுக் கூடங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான நூல்கள், கருவிகள், இயந்திரங்கள் ஆகியவை படிப்படியாக ஆண்டுதோறும் வாங்கப்படுகின்றன.

12. கல்லூரி ஆசிரியர்களின் பயிற்றுத்தரத்தை உயர்த்துவதற்காக அவர்கள் எம்.பில்., மற்றும் பி.எச்டி. ஆய்வுப் படிப்புக்குப் பல்கலைக் கழக நிதிக் குழு திட்டத்தின்கீழ் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

கல்லூரிகளில் பட்டப்படிப்புவரை மாணவர்களுக்கு இலவசக் கல்வி:

13. பெற்றோர் வருமானம் எவ்வளவு ஆக இருந்தாலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு, பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம் ஆகிய கல்லூரி இளங்கலை பட்டப்படிப்பு இலவசமாக்கப்பட்டுள்ளது.

14. ஏழை மற்றும் நடுத்தர வகுப்பினைச் சார்ந்த மாணவிகள் கல்லூரிகளில் சேர்ந்து பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் 1989-90 ஆம் ஆண்டு முதல் "ஈ.வே.ரா. பெரியார் நாகம்மையார் பெண்களுக்கான இலவசக் கல்வித் திட்டம்" என்ற புதிய நலத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மேல் இல்லாத பெற்றோரின் பெண் குழந்தைகளுக்கு இளங்கலை பட்டப்படிப்பு முடிய இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 5,000 மாணவிகள் பயன் பெற்றுள்ளனர்.

**படிப்புதவித்தொகையும் பயிற்சி உதவித்தொகையும்:**

15. கல்லூரிக் கல்வித்துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டங்களுள் முக்கியமான சிலவற்றின் கீழ் பயன்பெறுவோர் விவரம் வருமாறு:

| திட்டம். | 1989–90-ல் புதிதாக வழங்கிய படிப்புதவித் தொகைகளின் எண்ணிக்கை (மேல் நிலைப் பள்ளிகளில் தரப்பட்டவை உட்பட). | 1989–90-ல் புதியவை மற்றும் புதுப்பிக்கப்பட்டவை மொத்தம் எண்ணிக்கை. | 1990–91-ல் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| தேசிய படிப்புதவித்தொகைத் திட்டம் .. .. (ஓரளவு மைய அரசு நிதியுதவி பெறுவது). | 2,108 | 4,049 | 55.00 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம். (முழுவதும் மைய அரசு நிதியுதவி பெறுவது). | 1,381 | 6,704 | 30.00 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய மாநில அரசு படிப்புதவித் தொகை .. .. | 70 | 100 | 2.00 |

மேலும் எஸ்.எஸ்.எல்.சி., மெட்ரிக்குலேசன் தேர்வுகளில் முதன்மையாக வரும் மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ. 25,000 மேல் இருப்பினும் அவர்களுக்கும் உதவிப் பணம் வழங்கப்படுகிறது.



16. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுள் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர் களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவிடுவதற்கு ஒவ்வொரு வருக்கும் ரூ. 300 உதவித் தொகை (ஒரு தடவை மட்டும்) வழங் கப்படுகிறது. 1988–89-ல் 2,260 மாணவர்கள் பயனடைந் துள்ளனர்.

17. தமிழைப் பயிற்றுமொழியாக ஏற்பதை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொரு வருக்கும் ஊக்க உதவித் தொகையாக ஆண்டுக்கு ரூ. 180 தரப் பட்டு வருகிறது. இவ்வுதவித் தொகை பெற்ற மாணவர் எண்ணிக்கை 1989–90-ல் 22,394 ஆகும்.

**அரசு உதவிபெறும் தனியார் கல்லூரி ஆசிரியர் மற்றும் பணியாளர் களின் நலன்.**

18. அரசிடம் மானிய உதவி பெறும் தனியார் கல்லூரி ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கான வைப்புநிதி இந்நாள் வரை அஞ்சல் நிலைய கணக்குகள் வழி செயற்படுத்தப்பட்டு வந்தது. அந்த வைப்பு நிதியை 1-4-1989 முதல் கல்லூரி கல்வித்துறை மூலமாக நிர்வகிக்க ஆணையிடப்பட்டு, அவ்வாறே செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**சட்டக் கல்வி.**

19. சட்டக் கல்லூரிகளில் 1989–90 ஆம் ஆண்டில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| சட்டக்கல்லூரி. | முழுநேரப்பட்டப் படிப்பு. மூன்றாண்டு சட்டப் படிப்பு. | ஐந்தாண்டு சட்டப் படிப்பு. | மாலை நேர வகுப்புகள் பி. எல். | எம்.எல். | மொத்த ஆசிரியர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| சென்னை .. | 810 | 990×20 | 720 | 120 | 61 |
| மதுரை .. | 570 | 750×30 | 390 | 30 | 32 |
| திருச்சிராப்பள்ளி | 240 | 400×27 | 180 | .. | 17 |
| கோயம்புத்தூர் | 150 | 250 | 180 | .. | 17 |
| மொத்தம் .. | 1,770 | 2,390+77* | 1,440 | 150 | 127 |

*முன்னாள் இராயபுரம் முருகமலை அனந்தர் சட்டக் கல்லூரியில் பயின்ற மாணவர்களாவர்.

தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு சட்டம் பயிலுகின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 180 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

20. ஐந்தாண்டு சட்டக் கல்வி 1983-84-ல் 420 மாணவர்களுடன் துவக்கப்பட்டது. முதல் தொகுதி மாணவர்கள் 1987-88-ல் தேர்வு எழுதினர்.

21. கோவை சட்டக்கல்லூரிக்கு ரூ. 95 இலட்சம் செலவில் கட்டடம் கட்டும் பணி நடந்து வருகிறது. திருச்சி சட்டக் கல்லூரிக்கு கட்டடப் பணி 1990-91-ல் எடுத்துக் கொள்ளப்படும்.



## VII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

### I. விளையாட்டுக்களும், உடற்பயிற்சியும்:

1. இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தின் செயற்பாட்டுக்காக 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 3 கோடி அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் திரு. பா. சிவந்தி ஆதித்தன் அவர்களைத் தலைவராகக் கொண்டு ரூ. 1.00 கோடி மூலப் பங்குடன் தொடங்கப்பட்டது. இக்கழகம் கம்பெனிகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இக் கழகத்திற்கு உதவி நிதி தர 1990-91-ல் ரூ. 1.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விளையாட்டுத் திறன் வளர்ச்சித் திட்டங்கள்:**

3. இளம் வயதிலேயே விளையாட்டுத் திறன்களைக் கண்டறிய இளஞ்சிறார்களைக் கண்டு பயிற்சியளித்தல் (5 வயதுக்குட்பட்டோர்), விளையாட்டுத்திறன் போட்டிகள் (12 வயதுக்குட்பட்டோர்), ஊரக விளையாட்டுப் போட்டிகள் (16 வயதுக்குட்பட்டோர்), இளமையில் திறன் கண்டு தேர்ந்தெடுத்தல் (16 வயதுக்குட்பட்டோர்), பொங்கல் விளையாட்டுக்கள் (16 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள்) மகளிர் விளையாட்டு வகைப் போட்டிகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

**விளையாட்டுப் பள்ளிகளும் விடுதிகளும்:**

4. கீழ்க்கண்ட நான்கு விளையாட்டுப் பள்ளிகளும் மூன்று விளையாட்டு விடுதிகளும் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் இலவசமாக தங்குமிடத்துடன் உணவும், பயிற்றுநர்களால் சிறப்பு வாய்ந்த பயிற்சி முறைகளும் அளிக்கப்படுகின்றன.

| விளையாட்டுப் பள்ளிகள். (1) | மாணவர் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை .. .. .. | 115 |
| 2. மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, கோவை | 90 |
| 3. நெய்வேலி நிலக்கரி விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி .. .. .. | 50 |
| 4. ஓ.சி.பி.எம். மகளிர் மேல்நிலைப் பள்ளி, மதுரை .. .. .. | 50 |
| | 305 |

விளையாட்டு விடுதிகள்.

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மதுரை | 30 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 30 |
| 3. | திருநெல்வேலி | 30 |
| | மொத்தம் .. | 90 |

ஆண்டுதோறும் மொத்தம் 600 மாணவர்கள் இந்த விளையாட்டுப் பள்ளிகளிலும், விளையாட்டு விடுதிகளிலும் பயிற்சி பெறுகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் அளிக்கப்படும் உதவித்தொகை மாதந்தோறும் ரூ. 300-லிருந்து ரூ. 350 ஆக 1990-91 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்படவிருக்கிறது.

ஊக்கத் திட்டங்கள் :

5. குடியரசு நாள் விளையாட்டுப் போட்டி (உயர்நிலைப் பள்ளி), பாரதியார் நாள் விளையாட்டுப் போட்டி (மேல்நிலைப் பள்ளி), பொங்கல் விளையாட்டுப் போட்டி (ஆண்கள் மற்றும் மகளிர்), ஆகியவற்றில் முதன்மையாக வருபவருக்கு ரூ. 600-ம் மற்றும் இரண்டாவதாக வருபவருக்கு ரூ. 400-ம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. அனைத்து உலக நாடுகள் விளையாட்டு தேசிய போட்டிகளில் வெற்றிபெறும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும், அனைத்து உலக நாடுகள் போட்டிகளில் நம் நாட்டிற்காக விளையாடுவோருக்கும் பண விருது வழங்கப்படுகிறது. விளையாட்டு/உடற்பயிற்சிக் கல்வியியல் ஆராய்ச்சி செய்வோருக்கு மாதந்தோறும் ரூ. 450 ஊக்கத் தொகையாக அளிக்கப்படுகிறது.

அடிப்படை கள வசதிகள் :

6. பின்வரும் இடங்களில் திறந்த வெளி விளையாட்டரங்கங்கள் உள்ளன :—

(1) வேலூர்
(2) காஞ்சிபுரம்
(3) தருமபுரி
(4) சேலம்
(5) கோயம்புத்தூர்
(6) திருச்சிராப்பள்ளி
(7) தஞ்சாவூர்
(8) திருநெல்வேலி
(9) மதுரை
(10) நாகர்கோயில்
(11) கடலூர்



ஈரோடு, ஆத்தூர்குடி ஆகிய இடங்களில் விளையாட்டரங்கங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இவைகள் வெகு சீக்கிரத்தில் கட்டி முடிக்கப்படும்.

7. இம்மாநிலத்தில் நான்கு நீச்சல் குளங்கள் இத்துறையின் கீழ் உள்ளன. அதில் சென்னையில் அண்ணா நீச்சல் குளம்; ஷெனாய் நகர் நீச்சல் குளம் என இரண்டும், தருமபுரியில் ஒன்றும் தஞ்சாவூரில் ஒன்றும் உள்ளன. சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்திலுள்ள விளையாட்டு மைதானம் முதன்மை விளையாட்டுப் பிரிவுகள் அனைத்துக்கும் இடம் தரும் வகையில் உருவாக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது.

பயிற்சித் திட்டங்கள் :

8. பாட்டியாலாவில் உள்ள தேசிய விளையாட்டு நிறுவனத்தில் பயிற்சி பெற்ற 215 பயிற்றுநர்கள் இம்மாநிலத்தில் மாணவர்கள்/மாணவரல்லாதார்/பொதுமக்கள் ஆகியோருக்கு நாள்தோறும் காலை மற்றும் மாலை நேரங்களில் பயிற்சியளிக்க நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அத்துடன் பயிற்சி முகாம்கள் ஆண்டு தோறும் நடத்தப்படுகின்றன. ஆயிரம் விளையாட்டு வீரர்கள் இந்த முகாமில் பயனடைகிறார்கள். உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள 630 உடற்பயிற்சி ஆசிரியர்கள்/ உடற்கல்வி இயக்குநர்களுக்கு இரண்டு, மூன்று வகையான விளையாட்டுகளில் ஆண்டுதோறும் மறு பயிற்சி அளிக்கப்படுகிறது.

நலத் திட்டங்கள் :

9. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும்போது ஏற்படும் விபத்துக்களால் காயமுற்ற/ஊனமுற்ற சிறந்த விளையாட்டு வீரர்களது நலனுக்காக ''இராஜசேகரன் நினைவு நிதித் திட்டம்'' தொடங்கப்பட்டுள்ளது. விளையாட்டு ஓய்வூதியம் எனும் திட்டத்தின்படி வறுமையில் வாடும் சிறப்பு வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு மாதந்தோறும் ரூ. 75 வழங்கப்படுகிறது. 50 விளையாட்டு வீரர்கள் ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர்.

மாணவர் அல்லாத இளைஞர்கள் :

10. ஊரகப் பகுதிகளிலுள்ள மாணவரல்லாத இளைஞர்களிடத்து விளையாட்டு ஆர்வத்தை வளர்க்க 349 ஊரக விளையாட்டு மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இளைஞரிடையே விளையாட்டு மேம்பாட்டிற்கென 124 இளைஞர் மன்றங்கள் இம்மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் 200 தனியார் விளையாட்டுக் குழுக்கள் விளையாட்டுச் சாதனங்கள் வாங்க மானியம் ரூ. 500 வீதம் பெறுகின்றன. கரகம், கோலாட்டம், தெம்மாங்கு, வில்லுப்பாட்டு, முதலிய கிராமியக் கலைகளை வளர்க்க ஆண்டுதோறும் இளைஞர் விழாக்கள் நடத்தப்

படுகின்றன. ஊரகப் பகுதி மக்களிடையே விளையாட்டு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அகில இந்திய ஊரக பகுதி I விளையாட்டுப் போட்டி 1990 சனவரித் திங்களில் தஞ்சாவூரில் நடத்தப்பட்டது. தமிழக மாணவ/மாணவியர் அணியே விர முதன்மையைப் பெற்றது. ஒட்டுமொத்தமான முதன்மையையும் தமிழ்நாடே பெற்றது.

II. தேசிய மாணவர் படை :

11. தமிழ்நாட்டு தேசிய மாணவர் படை இயக்ககத்தின் தலை மையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப் பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமை யிடங்கள் ஐந்து அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் சேர அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கையும் பிரிவு களும் வருமாறு :—

| (1) | பிரிவுகள்/ படைகள். (2) | அலுவ லர்கள். (3) | மாண வர்கள். (4) |
|---|---|---|---|
| முதுநிலைப் பிரிவு (மாணவர்) | 45 | 225 | 17,370 |
| முதுநிலைப் பிரிவு (மாணவியர்) | 5 | 47 | 3,200 |
| இளநிலைப் பிரிவு (மாணவர்) | 619 | 624 | 61,350 |
| இளநிலைப் பிரிவு (மாணவியர்) | 52 | 53 | 5,200 |
| மொத்தம் .. | 721 | 949 | 87,120 |

12. 1990–91-ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 3.84 கோடி செலவிடப்படும்.

13. தேசிய மாணவர் படைக்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. அப்படை மாணவ மாணவி யருக்கான பலவகை பயிற்சி முகாம்களுக்கான செலவில் பாதியை மைய அரசும் பாதியை மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன.

14. இராணுவத்தில் அதிகாரிகளாகச் சேர்பவர்களைத் தெரிந் தெடுப்பதற்காக மைய அரசுத் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வில் கலந்து கொள்ளும் தமிழக தேசிய மாணவர் படை யினருக்குச் சிறந்த பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சி அதிகாரி ஒருவர் தலைமையில் "இராணுவ அதிகாரி தேர்வுக்கான முன்



பயிற்சிப் பிரிவு" ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டைச் சார்ந்த முதுநிலை, இளநிலை மற்றும் மகளிர் பிரிவுகளின் 109 மாணவர்கள் சனவரி 1990-ல் புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவிலும், பிரதமர் அணிவகுப்பு வரிசையிலும் பங்கு பெற்றனர்.

III. சாரண சாரணியர் (Scouts and Guides)

15. தொண்டுள்ளம் கொண்ட பாரத சாரண சாரணியர் இயக்கம் தமிழ்நாட்டில் எல்லாவகைப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டில் தற்போது சாரணர் 0.74 இலட்சமும் சாரணியர் 0.43 இலட்சமும் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலுமுள்ள சாரண சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். இந்த இயக்கம் 4,303 சாரண ஆசிரி யர்கள் மற்றும் 1,311 சாரண ஆசிரியைகள் ஆகியோரைக் கொண்டு 3,768 பள்ளிகளில் திறம்பட செயல்பட்டு வருகிறது. இந்நாட்டின் வருங்காலக் குடிமக்களாகிய மாணவர்களிடத்தில் நன்னடத்தையை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

IV. நாட்டு நலப்பணித் திட்டம்

16. நாட்டு நலப்பணித் திட்டம் மைய அரசு மற்றும் மாநில அரசு உதவியினை 7.5 என்ற விகிதத்தில் பெற்று செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தின்படி தற்போது அன்றாட நடவடிக்கை களுக்காக மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு பொது திட்டத்தில் ரூ. 80-ம், சிறப்பு பயிற்சித் திட்டத்தில் ரூ. 150 ஆக கணக்கிட்டு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 1989–90 இல் நாட்டு நலப் பணித் திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 1,40,000 (கல்லூரிகளில் 90,000 மேல்நிலைப் பள்ளி களில் 50,000) இவர்களில் 70,000 மாணவர்கள் சிறப்புப் பயிற்சி திட்டத்தில் பங்கு பெறுகின்றனர்.

[1990 ஏப்ரல் 2

VIII. நூலகங்களும் ஆவணக் காப்பகங்களும்.

(i) பொது நூலகங்கள்.

1. பொது நூலகத் துறை, கிராமப் பகுதிகள் உள்ளிட்டு மாநிலம் முழுவதும் நூலகப் பணியினைச் சிறிய முறையில் செய்து வருகிறது. 1990-91 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கென ரூ. 7.90 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. பொது நூலகத் துறையின் கீழுள்ள நூலகங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:—

| | நூலகங்களின் எண்ணிக்கை. | இருப்பிலுள்ள நூல்களின் எண்ணிக்கை. | உறுப்பினர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2[ | (3) | (4) |
| | | (இலட்சத்தில்.) | |
| மாநில மைய நூலகம் கன்னிமாரா (பொது) நூலகம், சென்னை. | 1 | 4.35 | 0.39 |
| மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கீழ் உள்ள நூலகங்கள்:— | | | |
| மாவட்ட மைய நூலகங்கள். | 18 | 137,46 | 15.64 |
| கிளை நூலகங்கள் மற்றும் நடமாடும் நூலகங்கள். | 1,524 | | |

நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிக்காகவும், பொது மக்க ளின் ஈடுபாட்டைப் பெருக்கவும், நூலகத் துறையின் சார்பில் 1989-90 ஆம் ஆண்டில் ஏழு மாவட்டங்களில் நூலக வளர்ச்சி மாநாடுகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் பொது மக்களிட மிருந்து பொருள் மற்றும் ரொக்கமாக ரூ. 2.41 கோடி பெறப் பட்டுள்ளது.

கன்னிமாரா நூலகம்:

2. சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத் தின் மைய (தலைமை) நூலகமாகும். இந்தியாவில் வெளி யிடப்படும் அனைத்து வகை நூல்களிலும் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியை இந்நூலகம் இலவசமாகப் பெறுகிறது.



1990 ஏப்ரல் 2]

வருடத்தில் மூன்று தேசிய விடுமுறை நாட்களைத் தவிர, ஏனைய நாட்கள் அனைத்திலும் (காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை) இந்நூலகம் செயல்படுகிறது. பொது மக்களின் வசதிக்காக நூலகத்தைப் பயன்படுத்துவோர் தேவைக்குப் பயன்பட இந்நூலகத்திற்கெனப் புகைப்படப் பிரதி எடுக்கும் கருவி ஒன்று வாங்கப்பட்டுள்ளது.

மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்:

3. தற்பொழுது மொத்தம் 18 மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கீழ் மொத்தம் 18 மாவட்ட மைய நூலகங்களும் 1,524 கிளை நூலகங்களும் (நடமாடும் நூலகங்கள் உட்பட) செயல்படுகின்றன. மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் கீழ் 3,398 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் 1-4-1982 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டனர். 1988-89 ஆம் ஆண்டில் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் செஸ் மூலம் நூலக வரியாக ரூ. 2.02 கோடி அளவு வசூல் பெற்றுள்ளது. இதில் சென்னை மாவட்டக் குழுவின் பங்கு மட்டும் ரூ. 62 இலட்சம் ஆகும். உள்ளாட்சி நிறுவனங்களால் வசூலிக்கப் படும் நூலக வரி இதுவரை உள்ளாட்சி நிறுவனங்களின் பொது நிதியில் முதற்கண் சேர்க்கப்பட்டு பின்னர் நூலக ஆணைக்குழுக் களின் நிதிக் கணக்கில் செலுத்தப்பட்டு வந்தது. இதனை மாற்றி, உள்ளாட்சி நிறுவனங்கள் வசூல் செய்யும் நூலக வரியை நேரடியாக அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் நிதிக் கணக்கில் சேர்க்கப்படுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. சென்னையைத் தவிர்த்த மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் நூலக வரி வருமானப் புத்தகங்கள் வாங்கும் செலவினங் களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, நிதி நிலைமை சரியில்லாத நூலக ஆணைக் குழுக்களுக்குப் புத்தகங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு, 1984-85-லிருந்து ஆண்டுதோறும் ரூ. 11 இலட்சம் சிறப்பு நிதியாக அரசு வழங்கி வருகிறது. சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், வட ஆற்காடு—அம்பேத்கார், சேலம், செங்கை—அண்ணா ஆகிய மாவட்ட மைய நூலகங்களில் படிப்போரின் தேவைக்காக புகைப்படப் பிரதி எடுக்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. 1989-90-ல் சென்னை, பசும்பொன் தேவர் திருமகனார் மாவட் டத்தில், சிவகங்கை, திருநெல்வேலி, கட்டபொம்மன் மாவட்டத் தில் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட மைய நூலகங்களில் தொலைக் காட்சிப் பெட்டியுடன் இணைந்த படப்பதிவு நாடாக் கருவிகள் வாங்கி அமைக்கப் பட்டுள்ளன.

4. 1948 ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின்படி 5,000-மும், அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள நகரம் அல்லது கிராமம் ஒவ்வொன்றிலும் ஒரு கிளை நூலகம் இருக்க வேண்டும். 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்

[1990 ஏப்ரல் 2

கெடுப்பின்படி இன்னும் கிளை நூலகங்கள் அமைக்கப்படாத
5,000-க்கும் மேல் மக்கட் தொகை கொண்ட கிராமங்கள்
500 உள்ளன. அவற்றில் 20-ல் புதிய கிளை நூலகங்கள்
திறப்பதற்காக மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு மானி
யம் அளிக்க 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கப்
பட்டுள்ளது.

வழங்கு முனைகள் ஆரம்பித்தல்:

5,000 மக்கள் தொகைக்கும் குறைவாக உள்ள கிராமப்
பகுதிகளில் 1989-90 ஆம் ஆண்டில் வழங்கு முனைகள் 101
ஆரம்பிக்கப்பட்டு, செயலாற்றி வருகின்றன. பொது மக்களிட
மிருந்து (1) வாடகையில்லா இலவசக் கட்டடம், (2) பத்து
சென்ட் இலவச நிலம், (3) நூலகப் பொருட்கள் வடிவில் அல்லது
ரொக்கமாக ரூ. 10,000 ஆகிய வசதிகள் தரப்பட்ட ஊர்களி
லேயே இவ்வழங்கு முனைகள் தொடங்கப்பட்டன.

சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்காக
வட்டார நூலகங்கள் 6-க்கும், கிளை நூலகங்கள் 39-க்கும் புதிய
கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 28 கிளை
நூலகங்களுக்கான கட்டடங்கள் கட்டும் பணி நடந்து வருகிறது.
மாநில அளவில் மொத்தம் 163 நூலக கட்டிடங்கள் கட்டி
முடிக்கப்பட்டுள்ளன. 54 நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்டப்
பட்டு வருகின்றன.

## (ii) ஆவணக் காப்பகங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (முன்னர் 'சென்னை ஆவண
அலுவலகம்' என வழங்கப்பட்டது) 1909-ல் நிறுவப்பட்டதாகும்
1670 ஆம் ஆண்டிலிருந்து தலைமைச் செயலக ஆவணங்கள்,
வருவாய் வாரியம், வனத்துறை, உயர்நீதி மன்றங்கள் மாவட்ட
நீதிமன்றங்கள் ஆகியவற்றின் ஆவணங்கள், பல்வேறு குழுக்கள்,
ஆணையங்களின் அறிக்கை ஆவணங்கள், டச்சு மற்றும் டேனிஷ்
கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆவணங்கள், பெர்சியன், மோடி
மற்றும் மராத்திய மொழி ஆவணங்கள், வாக்காளர் பட்டியல்கள்
ஆகியவை தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு
வருகின்றன. தென் ஆசியாவில் உள்ள மிகப் பெரிய ஆவணக்
காப்பகங்களில் இது ஒன்றாகும். இந்த ஆவணங்களைப்
பற்றிய வழிகாட்டி நூல் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.
இந்நூலிற்காகும் செலவில் 72 விழுக்காடு அளவு மைய அரசு
ஏற்றுள்ளது. 1989-90-ல் 16 துறைகளைச் சார்ந்த ஆவண
விவரங்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டன. ஏனைய துறை
ஆவண விவரங்களையும் சேர்க்கும் பணி முடிவடையும் வரை
நிதியுதவியை நீட்டிப்பதற்கு மைய அரசு கேட்டுக் கொள்ளப்
பட்டுள்ளது.



1990 ஏப்ரல் 2]

2. காற்று நீக்கிய அறையில் ஆவணங்களை சில காலம்
வைப்பதன் மூலம் தாள்களைத் துளைத்துச் சிதிலமாக்கும்
பூச்சிகளை ஒழிப்பதற்கான கருவியும், மக்கிப் போனதால்
கிழியும் நிலையில் உள்ள பழைய தாள்களின் மீது பிளாஸ்டிக்
பூச்சு தந்து உறுதிப் படுத்துவதற்கான கருவியும் அமெரிக்காவி
லிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, அவற்றைப் பயன்படுத்தி
நவீன முறையில் ஆவணங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு
வருகின்றன. பழைய மூல ஆவணங்களை ஆராய்ச்சியாளர்கள்
மீண்டும் மீண்டும் கையாளுவதைத் தவிர்க்கும் வகையில்
நுண் நிழற்படக் கருவியைக் கொண்டு அப்பழைய ஆவணங்களின்
நுண் நிழற் படங்கள் எடுக்கப்பட்டு ஆய்வுக்குத் தரப்படுகின்றன.
இக் கருவி பிரிவின் செயல் திறனை மேம்படுத்தவும், முழுமைப்
பயன்பெறும் வகையிலும் நுண் நிழற் பட படிப்பெருக்கி
ஒன்றும், நுண் நிழற்படச் சுருள்களைப் படிக்கத்தக்கதாக பெரி
தாக்கிக் காட்டுவதோடு, படிக்கதக்க காகிதப் பிரதியும் தரும்
கருவி ஒன்றும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக
1990-91 ஆம் ஆண்டில் ரூ. 9 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. சென்னையில் ஆவணக் காப்பக ''ஆய்வாளர் அறையில்''
ஆய்வறிஞர்களுக்கு வசதிகள் செய்து தரப்படுகின்றன. பழைய
அரசிதழ் களிலிருந்து சான்றிடப்பட்ட நகல் பகுதிகள் அவை
தேவை எனக் கேட்பவருக்கு கட்டணம் பெற்று வழங்கப்படு
கின்றன.

மாவட்ட ஆவண மையங்கள்.

4. முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட மாவட்ட ஆவணங்கள்
யாவற்றையும் சேகரித்து நவீன அறிவியல் முறையில் பாதுகாத்து
வரும் நோக்குடன், மதுரை, கோயம்புத்தூர், கடலூர், திருச்சி
ராப்பள்ளி, சேலம் ஆகிய இடங்களில் மாவட்ட ஆவண மையங்
கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் ஒவ்வொன்றிலும்
இதுவரை பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் 24,000-ல்
இருந்து 1,40,000 அளவினதாகும்.

தமிழ்நாடு வரலாற்றுச் சான்றேடுகள் ஆய்வுக்குழு.

5. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு
வரலாற்று மற்றும் சமுதாய வாழ்க்கைத் துறைகள் பற்றி ஆராய்ச்
சியினை மேற்கொள்ளும் ஆர்வமும், திறமையும் மிகுந்தவர்களை
ஊக்குவிப்பதற்காக, 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரலாற்று
ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஆண்டு தோறும்
ஆராய்ச்சி மாணவப் பணியிடங்கள் இரண்டு வழங்கி வருகிறது.
திருவாக அல்லது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பொருள்கள்
பற்றி ''ஆய்வுச் சிற்றுரைகள்'' எழுதுவதற்காக ஆண்டுதோறும
ஆய்வறிஞர் பதின்மருக்கு மதிப்பூதியம் வழங்க வகை செய்யப்

பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஆராய்ச்சி மாணவர்கள் 17 பேர் இக்குழுவில் சேர்ந்து ஆராய்ச்சி செய்து, அவர்களில் 15 பேர் ஆய்வு அறிக்கைகளை ஒப்படைத்துள்ளனர். அவற்றில் ''1919-45 ஆண்டுகளில் சமுதாய அரசியல் துறைகளில் தமிழ்த் திரைப்படம் மற்றும் நாடகம் முதலிய கலைகளின் பங்கு'' என்னும் ஆய்வு நூலையும் ''சர் அலெக்சாண்டர் டாட்டன்ஹாம்'' பற்றிய நூலையும் அந்தந்த ஆய்வாளர் தம் செலவில் அச்சிட்டு வெளியிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1988-90 இரண்டாண்டு காலத்திற்காக ஆய்வு மாணவர்களாக இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு 1988 செப்டம்பர்—அக்டோபர் திங்கள் முதல் ஆய்வு செய்கின்றனர். ஆய்வுச் சிற்றுரை எழுத மதிப்பூதியம் வேண்டிய வர்களில் மூவர் ஏற்கத்தக்கவரென ஆராய்ச்சிக் குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட விவரச் சுவடிகள்.

6. இதுவரை தஞ்சாவூர், தென்னார்க்காடு, மதுரை, சேலம் கோயம்புத்தூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய ஏழு மாவட்டங்களின் மாவட்ட விவரச் சுவடிகள் புதிதாகத் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்ட விவரச் சுவடி அச்சில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்ட விவரச் சுவடி தயாரிக்கும் பணி முடிந்து விட்டது. இஃது விரைவில் வெளியிடப்படும். நீலகிரி மாவட்ட விவரச் சுவடியின் வரைவு தயாரிக்கப்பட்டு வருகிறது. செங்கை—அண்ணா மாவட்ட விவரச் சுவடி தயாரிக்கும் பணி தொடக்க நிலையில் உள்ளது. புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான விவரச் சுவடிகளின் தமிழ் வடிவங்கள் விரைவில் வெளியிடப்படும்.

பயிற்சி

7. அரசு அலுவலகங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவணப் பராமரிப்பு குறித்த பயிற்சி ஒன்றினைத் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 1981 ஆம் ஆண்டு முதல் அளித்து வருகிறது. இதுவரை இத்தகைய பயிற்சிகள் 77 நடத்தப்பட்டு 1,434 பேர் தகுதி பெற்றுள்ளனர். பிற மாநில ஆவணக் காப்பகங்களில் இருந்து அனுப்பப்பட்டவர்களுக்கும் இங்கு பயிற்சியளிக்கப் பட்டுள்ளது.

வெளியீட்டுப் பிரிவு.

8. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அல்லது அரசு நிருவாகம் சார்ந்த பொருள்கள் பற்றியவற்றைத் தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளையும் இத்துறை வெளியிட்டு வருகிறது. ''நகராட்சி கள்'' ''கூட்டுறவு'' ஆகியவை குறித்த ஆவணங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. ''குடிநீர் வழங்குதலும் வடிகால் அமைப்பும்''



''சென்னை மாகாணத்தில் வேளாண்மை குறித்த சட்டங்களின் வரலாறு'' ஆகியவை குறித்த ஆவணங்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் உள்ள பழைய ஆவணங்களைப் பட்டியலிட்டு விளக்கும் வழிகாட்டி நூல்களை மீண்டும் அச்சிட்டு வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு இதுவரை கோயம்புத்தூர் நீலகிரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், தென்னார்க்காடு மாவட்ட ஆவணங்களை குறித்து அத்தகைய வழிகாட்டி நூல்கள் மறு பதிப்பு செய்யப்பட்டுள்ளன. 1987-லிருந்து இத்துறை ''ஆவண அமுதம்'' என்னும் காலாண்டு இதழையும் வெளியிட்டு வருகிறது.

ஆவணக் காப்பக நூலகம்.

9. மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் 2.5 இலட்சம் புத்தகங்கள் உள்ளன. பெரும் பாலானவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. பிற மொழிகளிலும் புத்தகங்கள் உள்ளன. இந் நூலகத்தில் பொதுவான புத்தகங்களைத் தவிர தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளினால் அச்சிடப்பட்ட வெளியீடுகளும் உள்ளன. பழைய அரசிதழ்கள், மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கைகள், நாடாளு மன்றம் சட்டமன்ற விவாதப் பதிவுகள், ஆவணப் பட்டியல்கள், பஞ்சாங்கங்கள் தகவல் தொகுதிகள், நீதிமன்றத் தீர்ப்பு அறிக்கைகள், விவரச் சுவடிகள், பழைய தாளிகைகள் முதலிய விலை மதிப்பற்ற நூல் தொகுப்புகள் இந் நூலகத்தில் உள்ளன. 1867 ஆம் ஆண்டு அச்சகங்கள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டம் இயற்றப்பட்ட காலத்திலிருந்து இம்மாநிலத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட அனைத்து மொழி நூல்களின் படிகளும் இந் நூலகத்தில் உள்ளன.

10. தமிழ்நாடு ஆவண காப்பகம் செயல்படும் விதத்தை கண்டறிய டாக்டர் எஸ். கோபால் அவர்கள் தலைமையில் ஒரு குழு அரசால் அமைக்கப்பட்டது. அக் குழுவினால் அளிக்கப் பட்ட பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

## IX, தொழில் நுட்பகல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1990-91- (கட்டிடங்கள், கடன்கள், அண்ணா பூலகலைக் கழகத்திற்கு மானியம் ஆகிய ற்றுக்காக நிதி ஒதுக்கங்கள் உள்பட (ரூபாய் 32 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்படும் தொழிற் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை, அவற்றில் ஆண்டுதோறும் புதிதாக சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை ஆகியவை (1989-90-ல் இருந்தவா..) வருமாறு :—

| கல்வி நிறுவனங்கள். | எண்ணிக்கை. | ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பொறியியல் கல்லூரிகள் | 35<br>திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டார பொறியியல் கல்லூரி (தமிழ் நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு) உட்பட | பட்ட வகுப்புகள் :<br>1. முழு நேரம் 6,827<br>2. பகுதி நேரம் 1,160<br><br>பட்ட மேற்படிப்பு ;<br>1. முழு நேரம் 276<br>2. பகுதி நேரம் 56<br><br>பட்ட மேற்படிப்புப் பட்டயம் ;<br>1. முழு நேரம் 21<br>2. பகுதி நேரம் 5 |
| பல்தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) மற்றும் சிறப்புப் பட்டயப் படிப்பு நிறுவனங்கள், (கலை கைத் தொழில் மற்றும் சிறப்புக் கலைக் கல்லூரிகள் 3 உட்பட) | 131 | பட்டய வகுப்புகள் ;<br>1. முழு நேரம் 22,332<br>2. பகுதி நேரம் 1,675<br><br>பட்டய மேற்படிப்பு ;<br>1. முழு நேரம் 263<br>2. பகுதி நேரம் 90<br><br>சான்றிதழ் வகுப்பு:<br>1. முழு நேரம் 70<br>2. பகுதி நேரம் 210 |
| தொழில் நுட்ப மேல் நிலைப் பள்ளிகள். | | 3 முழு நேரம் 740 |



2. சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளின் செயல்பாட்டினை தொழில் நுட்ப கல்வி இயக்குநரால் ஒவ்வொரு சுயநிதிக் கல்லூரிக்கும் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழு அவ்வப் பொழுது ஆய்வு செய்வதுடன் அரசு அமைத்த உயர்மட்டக் குழுவும் அந்நிறுவனங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்து தனது பரிந்துரை அறிக்கையை அரசுக்கு வழங்கியுள்ளது. பயிற்றுவிப்பதற்குப் போதுமான அடிப்படை வசதிகளைச் செய்து தராதனவும் கல்லூரி தொடங்கும் பொழுது அரசு விதித்த நிபந்தனைகளை கடைப்பிடிக்காதனவும் ஆன பன்னிரெண்டு சுயநிதி பொறியியல் கல்லூரிகளின்மீது உயர்மட்டக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

3. சுயநிதிப் பல்தொழில் பயிலகங்களில் தொழில் கல்வியின் தரத்தினைக் காக்கும் நோக்குடன் அரசு நியமித்த கண்காணிப்பு குழு ஆண்டுக்கொருமுறை அப்பயிலகங்களை பார்வையிட்டு அரசு நிபந்தனைகளின்படி அனைத்து அடிப்படை வசதிகளையும் நிர்வாகம் எந்த அளவுக்கு ஏற்படுத்தி வருகிறது என்பதைக் கண்காணிக்கிறது. அக்குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் சுயநிதி பல்தொழில் பயிலகங்கள் 19-ன் மீது அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

4. காரைக்குடி அழகப்ப செட்டியார் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் கணிப்பொறி அறிவியல் மற்றும் பொறியியலில் பட்டப் படிப்பு 1990-91-ல் புதிதாக அறிமுகப் படுத்தப்படும் இதற்காக 1990-91-ல் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சேலம் அரசினர் பொறியியல் கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்பியல் பொறியியல் ஆய்வுக்கூடம் ஒன்று 1990-91-ல் ஏற்படுத்த ரூபாய் 1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கோவை அரசினர் மகளிர் பாலிடெக்னிக்கில் தற்போதுள்ள பாடப் பிரிவுகளில் துறைத் தலைவர்கள் பதவி புதிதாக ஏற்படுத்தவும். உதகமண்டலத்திலும், நாகர்கோவிலிலும் உள்ள அரசினர் பாலி டெக்னிக்குகள், சேலம் தியாகராசர் பாலிடெக்னிக், தஞ்சாவூர் பி எம். மகளிர் பாலிடெக்னிக் மற்றும் தாழையூத்து சங்கர் பாலிடெக்னிக் ஆகியவற்றில் கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது; இவற்றிற்காக 1990-91-ல் ரூபாய் 6.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. பாடத் திட்டத்தில் "மின்கணிப்புப் பொறித் தொழில் நுட்பவியல்" ஒரு கட்டாயப் பாடமாக சேர்க்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் உதவி பெறும்கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் மின்கணிப் பொறிகள் உள்ளன. பணியாளர்களின் தகுதி, பணி முதலிய விவரங்கள் மற்றும் துறை சம்பந்தப்பட்ட பல்வேறு புள்ளி விவரங்கள் யாவும் மின்னணுப் பொறியில் பதிவு செய்து தொகுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

தேர்வுப் பணிக்கு மின்னணுப் பொறியைப் பயன்படுத்துதல் ;

6. பல்வேறு பட்டயத் தேர்வுகள் குறித்த தேர்வாளர் பட்டியல், தேர்வு அனுமதிச் சீட்டு, மதிப்பெண் அட்டை, பட்டயச் சான்றிதழ் முதலியவற்றைத் தயாரித்தல் தேர்வு முடிவினை வெளியிடுதல் போன்ற அனைத்துப் பணிகளுக்கும் மின்கணிப்பான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பட்டயத் தேர்வுக்கான விடைத் தாள்களை மதிப்பீடு செய்ய மைய மதிப்பீட்டு முறை தொடங்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு தேர்வுகளில் பாடவாரியாகவும் கல்வி நிலையங்கள் வாரியாகவும், மாணவ, மாணவியர் மதிப்பெண் விவரங்களை பட்டியல் செய்து, மாநில சராசரி மதிப்பெண்களுடன் ஒப்பிட்டு மாணவர்களின் தேர்ச்சி மதிப்பீட்டு அட்டவணைகள் தயாரிக்கப்படுகின்றன. இதன்மூலம் கல்வி நிலையங்களின் செயல்பாட்டில் குறைகள் ஏதுமிருப்பின் அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவைகளைக் களைய வழி காண ஏதுவாகிறது.

வணிகவியல் பாடங்களில் தேர்வுகள் :

7. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு சுருக்கெழுத்து வணிகக் கணக்கு, வணிகவியல் வங்கியியல் முதலிய பயிற்சி வகுப்புகளின் தேர்வுகளையும நடத்தி வருகிறார்: ஆண்டுதோறும் இரு தடவை அதாவது மே நவம்பர் மாதங்களில் இத்தேர்வு நடக்கின்றன.

அண்ணா பல்கலைக் கழகம் :

8. நமது நாட்டிலேயே மிகப் பெரிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகமாக அண்ணா பல்கலைக் கழகம் விளங்குகிறது. இப்பல்கலை கழகத்தில் 654 பெண்கள் உட்பட 4,898 மாணவர்கள் பயிலுகின்றனர். நம் நாட்டிலேயே பொறியியல் தொழில் நுட்பவியல் பயிலும் மாணவியர் எண்ணிக்கை அதிகமாக உள்ள வளாகம் இப்பல்கலைக் கழக வளாகமேயாகும். இப்பல்கலைக் கழகம் இதுவரை அறிமுகப்படுத்தியுள்ள இளநிலை பட்டப் படிப்புத் திட்டங்கள் 20; முதுகலை பட்டப் படிப்புத் திட்டங்கள் 345; முதுநிலை பட்டயப் படிப்புத் திட்டங்கள்—4; ஆகியவற்றில் பெரும்பாலானவை தமிழ்நாடு மற்றும் இந்திய வளர்ச்சித் திட்டங்களோடு பிணைந்தவையாக உள்ளன. இப்பல்கலைக் கழகம் கீழ்க்காணும் துறைகளில் போற்றத்தக்க முன்னோடி பணிகளை ஆற்றி வருகிறது.

1. நீர்ப்பாசனம், நீர் மேலாண்மை (Irrigation Water management)
2. சுற்றுப்புறசூழல் பொறியியல் (Environmental Engineering)
3. தொலை உணர்வு (Romote Sensing)
4. மக்கள் குடியிருப்பு (Human Settlement)
5. படிம வளர்ச்சி (Crystal Growth)
6. உயிரியல் தொழில் நுட்பம் (Bio Technology)



இப்பல்கலைக்கழகம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்திய மற்றும் வெளிநாட்டு ஆதாரங்களிடமிருந்து பல்கலைக் கழக அடிப்படை வசதி- மேம்பாடு புலமேம்பாடு மற்றும் புதிய படிப்புகள்— வகுப்புகள் தொடங்குதல் ஆகிய பணிகளுக்காக ஏறத்தாழ ரூபாய் 7.5 கோடி நிதியுதவி பெற்றுள்ளது.

9. அச்சுத் தொழில் நுட்பவியல் இளங்கலை பட்ட படிப்பை இந்தியாவிலேயே முதன்முறையாக இப்பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது. மேலும் சுரங்கப் பொறியியலிலும் மற்றும் ரப்பர் தொழில் நுட்பத்திலும் பட்டப் படிப்புகள் காலணி, தயாரிப்பு தொழில் நுட்பவியலில் எம். டெக்; மற்றும் பட்ட மேற் படிப்புப் பட்டய வகுப்புகள் ஆகியவையும் தொடங்கப் பட்டுள்ளன. பல்கலைக் கழகத் துறைகளின் ஆய்வகங்களிலுள்ள பழையத் தளவாடங்களுக்குப் பதிலாகப் புதியவற்றை அமைத்து நவீனப்படுத்துவதற்கான பெருந்திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதற்கு மைய அரசிடமிருந்து 5.20 கோடியளவு நிதியுதவி பெறப்படும்.

10. அண்ணா பல்கலைக் கழக நிறுவனங்களில் 1989-90 ஆம் ஆண்டில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| நிறுவனம் / கல்லூரி | இளநிலைப்பட்ட படிப்பு | |
|---|---|---|
| | முழு நேரம். | பகுதி நேரம். |
| (1) | (2) | (3) |
| பொறியியல் கல்லூரி .. .. | 1,516 | 804 |
| சென்னை தொழில் நுட்பக் கல்லூரி | 559 | .. |
| சென்னை அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி. | 480 | .. |
| கட்டடக் கலை மற்றும் திட்டப் பள்ளி | 142 | .. |
| மொத்தம் .. | 2,697 | 804 |

| நிறுவனம்/கல்லூரி. | மேல்நிலை பட்டப்படிப்பு. | | |
|---|---|---|---|
| | முழு நேரம். | பகுதி நேரம். | மொத்தம். |
| (1) | (4) | (5) | (6) |
| பொறியியல் கல்லூரி .. | 893 | 122 | 3,335 |
| சென்னை தொழில் நுட்பக் கல்லூரி | 146 | 12 | 717 |
| சென்னை அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி | 134 | 22 | 636 |
| கட்டடக் கலை மற்றும் திட்டப் பள்ளி | 59 | 9 | 210 |
| மொத்தம் .. | 1,232 | 165 | 4,898 |

எம்.பில்.. மற்றும் பி.எச்.டி. படிப்புப் பிரிவுகள் பல சிறப்புத் துறைகளில் தொடர்ந்து நடைபெறுகின்றன. இப் பல்கலைக் கழகத்தில் இதுவரையில் எம்.பில்., மற்றும் பி.எச்.டி., பட்டப் படிப்புகளில் பட்டமளிக்கப்பட்டவர் விவரம் :

| | எம்.பில். | பி.எச்.டி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1988 வரை .. .. | 100 | 46 |
| 1989-ல் .. .. | 16 | 25 |

11. அண்ணா பல்கலைக் கழகத்தில் உயர் ஆய்வு மையங்களும், நிறுவனங்களும், ஆராய்ச்சி முடிவுகளை சமுதாயத்தின் தேவைக்குப் பயன்படுத்துவதையே முழு நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. அவற்றின் பணிகளில் குறிப்பிடத் தக்கவை கீழே தரப்பட்டுள்ளன :

நீர்வள மையம்.

12. பல்துறை அறிஞர்கள் பங்குபெறும் நிறுவனமாக நீர்வள மையம் செயல்படுகிறது. கடந்த பத்தாண்டு காலமாக நீர்வளத் திட்டம், முன்னேற்றம் மற்றும் மேற்பார்வை ஆகிய துறைகளில் பொருளுதவி செய்யும் நிறுவனங்களுடனும், ஆராய்ச்சியால் பயன்பெறும் நிறுவனங்களுடனும், இணைந்து பணியாற்றி வருகிறது. இதுநாள் வரை பல இந்திய மற்றும் அயல்நாட்டுப் பொருளுதவி நிறுவனங்களிடமிருந்து மானியமாக சுமார் 5 கோடி ரூபாய் ஆராய்ச்சிக்கும், பயிற்சிக்கும் பெறப்பட்டுள்ளது. போர்டு பவுண்டேஷன் என்ற நிறுவனத்தின் 31,000 டாலர் பொருளுதவியுடன், சிறிய ஏரிப் பாசனத் திட்டங்களை நவீனப் படுத்தும் முறைகளை இம்மையம் செயல்படுத்தி வ கிறது. இந்த ஆய்வும், செயல் திட்டமும் பல்வேறு தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிடையே ஆர்வத்தை உருவாக்கியுள்ளது.

தொலை உணர்வு மையம்.

13. தொலை உணர்வு மையம் 1982 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நிறுவப்பட்டது. தொலை உணர்வு மையப் பணிகளுக்காக இம் மையம் தேசியத் துணை மையமாக இந்திய அரசாங்கத்தினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இம்மையம் மொத்தம் ஏழரை கோடி ரூபாய் செலவில் அமைந்துள்ளது. இதில் 2.73 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசும், 3.5 கோடி ரூபாய் மேற்கு ஜெர்மனி அரசும் எஞ்சிய தொகையை மத்திய அரசும் அளித்துள்ளன. இயற்கை வளம், சுற்றுப்புறச் சூழல் மாற்றம் ஆகியவற்றை அறிவதற்கும், படம் பிடிப்பதற்கும் தொழில் நுணுக்கங்களை அறிவதற்கும் தேவையான பயனுள்ள பல நுண்பொறிகளைப் பெற்றுள்ளது. இம்மையத்திலுள்ள வாக்ஸ்-11/780 எனும் நுண்ணிய கணிப்பொறிக் கருவி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இக் கருவி முக்கியமாக செயற்கைக் கோள்கள் தரும் விவரங்களை ஆய்வதற்குப் பயன்படுகிறது.



முதுநிலை பொறியியல் பட்டப் படிப்புடன் பல பயிற்சித் திட்டங்களையும் இம்மையம் நிகழ்த்தி வருகிறது. இத்துறையுடன் பல அரசு நிறுவனங்கள் அவ்வவற்றின் தேவைக்கேற்ப இம்மையத்துடன் தொடர்பு கொண்டு இம்மையத்தின் ஆய்வுகளைப் பயன்படுத்தி வருகின்றன.

உயிரியல் தொழில் நுட்ப மையம் (அழகப்பா தொழில் நுட்ப கல்லூரி வளாகம்)

14. இம்மையத்தில் மேல்நிலைப் பட்டப்படிப்புக்கும் (எம்.டெக்) முனைவர் பட்டப்படிப்புக்குமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. பிரான்சு, இங்கிலாந்து சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளின் பல்கலைக் கழகங்களுடன் பன்னாட்டுப் பரிமாற்றத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் துறையில் பல்கலைக் கழகத்தின் பணி சிறக்கும் வகையில் சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (SPIC) நிறுவனத்துடன் ஒரு உடன்பாடு செய்து, அதன்படி இரண்டரை கோடி ரூபாய் செலவில் ஒரு உயிரியல் செயல்முறை ஆய்வுக்கூடம் (SPIC Bio Process Laboratory) நிறுவி, அதன் மூலம் அடிப்படை ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களைத் தொழில் துறைக்கு பயன்படுத்த வகை செய்து வருகிறது. மொத்தம் 1.3 கோடி ரூபாய் அளவிற்கு இம்மையம் பல ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. "உயர்தர உயிரியல் தொழில் நுட்ப செயல்முறைகளுக்கான அடிப்படை வசதிகளுக்காக" ரூபாய் அறுபது இலட்சம் செலவில், இந்தோ-ஸ்விஸ் நிறுவனத்திற்காகச் செய்த ஆராய்ச்சித் திட்டம் குறிப்பிடத்தக்கது.

## X அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்

தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள்.

அறிவியல் தெளிவும் நோக்கும் மக்களிடம் பரவிட "தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள்" என அழைக்கப்படும் தன்னாட்சி உரிமை பெற்ற ஒரு நிறுவனத்தை தமிழக அரசு அமைத்துள்ளது. கல்வி அமைச்சர் இந்த அமைப்பின் தலைவராவார். இளம் தலைமுறையினரிடையே அறிவியல் எண்ணப்போக்கையும் சிந்தனை மேம்பாட்டையும் வளர்ப்பதுடன் அறிவியல் தொழில்—நுட்பவியல் பயன்பாடுகள் பற்றிய தகவல்களை மக்களிடம் பரவச் செய்வதுமே இம்மையங்களின் நோக்கமாகும். சென்னையில் உள்ள கோட்டூர்புரத்தில் பெரியார் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையத்தை நிறுவுவதற்காக, அதன் முதல் கட்டப்பணிக்காக அரசு ரூபாய் 4 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் அதே வளாகத்தில் ரூபாய் 2 கோடி செலவில் ஒரு வான்கோள் காட்சி அரங்கும் நிறுவப்பட்டுள்ளன.

2. பெரியார் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையத்தின் கட்டிடப்பணி பெரும்பாலும் முடிந்து விட்டது. இக் கட்டிடம் மொத்தம் 6,448 சதுர மீட்டர் அளவில் 8 அரங்கு

களைக் கொண்டுள்ளது. மூன்று அரங்குகளுக்கான காட்சிப் பொருள்கள் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்து அவைகள் திறந்து வைக்கப்படுவதற்குத் தயாராயுள்ளன. காட்சிப்பொருள்களாக உள்ள பொறிகள் பல, அவற்றைக் காண்போர் இயக்கி அறிவை வளர்த்துக் கொள்ளத்தக்கவை. பலவற்றை முன்னணி நிலையிலுள்ள தொழிற்சாலைகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளன. உயிரியியல் கூடம், சிறுவர் பகுதி, இயக்கத்திறன் முதலான காட்சி அரங்குகளுக்கான பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் அறிவியல் தொழில் நுட்பவியல் தகவல்களை பரவிடச் செய்யும் பொருட்டு 24 காட்சி பொருள்களோடு, 16 எம். எம். திரைப்படக் கருவியும் கூடிய ஒரு அறிவியல் ஊர்தி ஒன்று விளக்குநர் ஒருவருடன் கிராமங்களைச் சுற்றி வருவதற்கான திட்டம் சனவரி, 1990 முதல் செயற்படத் தொடங்கியுள்ளது.

பிர்லா கோளரங்கம்.

3. 236 இருக்கைகள் கொண்ட ''பிர்லா கோளரங்கம்'' 1988-ஆம் ஆண்டு மே மாதம் திறந்து வைக்கப்பட்டது. இதை நிறுவுவதற்கான 2 கோடி ரூபாயை திரு. சி. கே. பிர்லா தன் கொடையாக வழங்கியுள்ளார். வானவியல், வான் பௌதிகவியல் போன்ற துறைகளில் அறிவியல் ஆராய்ச்சியினை வளர்ப்பதற்கும் அறிவியல் உணர்வைப் பொதுமக்கள் மற்றும் மாணவர்க்கிடையே பரவிடச் செய்வதற்கும் கோளரங்கம் காண்பதற்கரிய ஓர் அமைப்பாக உள்ளது. வானவியலில் பல்வேறு வகுப்புகளையும், கருத்தரங்குகள் பயிற்சிகள், இரவுக் காட்சி முகாம்கள் போன்றவற்றையும் இக்கோளரங்கம் நடத்திக் கொண்டிருக்கிறது. ''ஞாயிற்றுக் குடும்பத்தைப் பற்றிய ஓர் ஆய்வு'', ''கட்டுமீறிய பேரண்டம்'', ''இப்பேரண்டத்தில் நாம் மட்டுமே உள்ளோமா? மற்றும் ''விண்ணும்—பருவநிலைகளும்'' என்ற நான்கு காட்சி நிகழ்ச்சிகள் இதுவரை தயாரிக்கப்பட்டு பொது மக்களும், மாணவர்களும் காணுமாறு வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 5 இலட்சம் பேர் இக்காட்சிகளைக் கண்டு பயன் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மன்றம்.

4. அறிவியல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கை
களைக் கவனிப்பதற்காக ''தமிழ்நாடு மாநில அறிவியல் மற்று
தொழில் நுட்பவியல் மன்றம்'' அமைக்கப்பட்டுள்ளது. இ
நிறுவனம் தன்னாட்சி அமைப்பாக இயங்கி வருகின்றது. சமு
தாயத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை உயர்த்து
நோக்குடன் கல்வி, உடல்நலம், வேளாண்மை போன்ற துறை
களில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பயன்பாடுடை
திட்டங்களில் நடைமுறைப்படுத்தத் தக்கவற்றைத் தெரி
தெடுத்துச் செயல்படுத்தும் பொறுப்பினை இம்மன்றம் ஏற்று
கொண்டுள்ளது. மாநில அரசு மற்றும் மைய அரசுகள் ஒருபுறம்
பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் மறுபுற
ஆகிய இருசாரார் இடையேயும் இணைப்புப் பாலமாகச் செய
படும் உயர்மட்ட அமைப்பாக இம்மன்றம் உள்ளது. அறிவியல்





தொழில் நுட்பவியல் வளர்ச்சிக்காகத் திட்டமிடுவதில் அரசுக்கு ஆலோசனைகள் வழங்கும் நிறுவனமாகவும் இம்மன்றம் செயல்படுகிறது. தன்னாட்சி அமைப்பாக இயங்கும் இம்மன்றத்தின் தலைவராக கல்வி அமைச்சர் அவர்களும், செயற்குழுவில் தலைவராக புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்களும் உள்ளனர்.

5. கடந்த நான்காண்டுகளில் தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் நிறுவனத்திற்கு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்காக அரசு ரூபாய் 44 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. அரசு வழங்கிய மானியங்களைக் கொண்டு ஏறக்குறைய பன்னிரண்டு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அவைகள் வெவ்வேறு நிலையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமப்புற மகளிருக்கு திரை அச்சுத் தொழில் நுட்பம், (Screen Printing) முதியோர் கல்விக்குத் தொடக்க நிலைப் பாடங்களைத் தயாரித்தல், ஆகிய இரு திட்டங்களும் முடிக்கப்பட்டுள்ளன.

6. இவையன்றி, ஆராய்ச்சிப் பணியாளர்களுக்கும் களநிலை நிருவாகிகளுக்குமிடையே கூட்டங்கள், விவாதங்கள் ஆகிய வற்றையும் இம்மன்றம் நடத்தி, ஆராய்ச்சியின் விளைவுகளைக் களத்தில் பயன்படுத்த உதவுகிறது. களத்தில் ஏற்படும் பிரச்சினைகள் ஆராய்சி அறிவியல் வல்லுநர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு தக்க தீர்வுகள் காணப்படுகின்றன. இம் மன்றம், இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை அளிக்கிறது. மேலும், 1987-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28-ஆம் நாளை தேசிய அறிவியல் தினமாக இந்நிறுவனம் கொண்டாடி வருகின்றது. 1990-ஆம் ஆண்டில் இந்நாள் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் பெருமளவில் கொண்டாடப்பட்டது. அறிவியல் பொருட்காட்சிகள், பல் தொழில்பயிலகங்கள் 20-லும் ஆசிரியர் பணியிருப்புப் பயிற்சிகள் கலைக் கல்லூரிகள் 21-லும் நடத்தப்பட்டன. தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்ட பல்வேறு செயற்பாடுகளுக்கு இம் மன்றம் ஆதரவளித்துள்ளது.

மைய அரசின் ''அறிவியல் தொழில் நுட்பத் தொடர்பியல் தேசிய மன்றத்'' திடமிருந்து 1990—ஆம் ஆண்டில்' தேசிய அறிவியல் நாள் கொண்டாட்டத்திற்காக மாநில அரசு வழங்கிய ரூபாய் 6 இலட்சத்திற்கு இணை மானியத் தொகை பெற்ற மாநிலம் தமிழகம் மட்டுமேயாகும்.

7. தொழில் நுட்ப நிறுவனங்களின் உட்செயற்பாட்டின் திறத்தினை மேம்படுத்துவதற்காக ஒரு தொழில் நுட்பத் தகவல் மையத்தையும் இம்மன்றம் நிறுவியுள்ளது.

அறிவியல் மற்றும் தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டம்.

8. இந்திய அரசின் அறிவியல்—தொழில் நுட்பவியல் துறை அமைச்சகம், அறிவியல்—தொழில் நுட்பவியல் துறையைச்

சேர்ந்த, தேசிய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர் மேம்பாட்டு வாரியத்தின் (National Science and Technology Entrepreneurship Development Board) கூட்டு முயற்சியுடன் தருமபுரி மாவட்டத்திற்குத் தொழில் வாய்ப்புப் பற்றிய தகவல் குறிப்புத் தயாரிப்புத் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்திற்குத் தற்போது அறிவியல்—தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர் திட்டம் Science and Technology Entrepreneurship Development Scheme எனப் பெயரிடப்பட்டு 1985-86 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் இந்த திட்டத்தின் மொத்த செயலாட்சி முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது. இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனங்களிலும். பல்கலைக் கழகங்களிலும், பொறியியல் கல்லூரிகளிலும் பட்டம் பெற்றவர்களிலிருந்து, பல் தொழிற் பயிற்சிப் பள்ளிகளிலும், தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பட்டயம் பெற்றவர்கள் வரையில் எல்லா நிலைகளிலுமுள்ள அறிவியல் தொழில் – நுட்பவியல் பணியாளர்களுக்குச் சுயவேலை வாய்ப்பை உருவாக்குவதற்காகவே இத்திட்டம் முக்கியமாக வகுக்கப்பட்டுள்ளது.

9. இத்திட்டத்தின் (STEDS) கீழ் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் உள்ள விவரங்களைக் கொண்டும் மற்றும் பல நிறுவனங்களிலிருந்து கிடைக்கக் கூடிய விவரங்களை வைத்தும் தருமபுரி மாவட்டத்திற்கு என்று ஒரு தொழில் வள வாய்ப்பு விவர நூல் தயாரிக்கப்பட்டது. தொழில் தொடங்கும் வாய்ப்புக்கள் பற்றிய ஒரு மூன்றாண்டு முன்னோடிக்குத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. சில நிறுவனங்களால், இன்னின்ன தொழில துறைகள், தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்றவை எனத் தெரிந்தெடுக்கப்பட்டு, இவ்விவரங்கள் அடங்கிய அட்டவணைப் புத்தகம் வெளியிடப்பட்டு மாவட்டத்தின் வெவ்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பி விரிவாக விளம்பரப்படுத்தப்பட்டது. வேலை வாய்ப்பு அலுவலகத்திள்ள நடைமுறைப் பதிவேட்டின்படி பட்டம் பெற்றவர்கள், பட்ட மேற்படிப்பு பெற்றவர்கள், பட்டயப்படிப்பு பெற்றவர்கள் மற்றும் தொழில் துறை பயிற்சி நிலையச் சான்றிதழ் பெற்றவர்கள் ஆகியோர் பட்டியல்களை வட்டாரம் வாரியாகத் தயாரித்து எல்லா முகமையாளர்களுக்கும் அனுப்பி அப்பட்டியல்களிலிருந்து தொழில் முனைவர்களாக உருவாகும் திறன் கொண்டவர்களை அம்முகமையாளர்கள் தெரிந்தெடுக்க உதவப்படுகிறது.

10. அறிவியல்—தொழில் நுட்பவியல் நபர்களிடம் தொழில முனைப்பு எண்ணத்தை ஊக்குவிக்க அறிவியல்—தொழில் நுட்பவியல் முனைவர் மேம்பாட்டுத் திட்ட அதிகாரிகள் கருத்தரங்குகளையும் மற்றும் பயிற்சிகளையும் நடத்தி இருக்கிறார்கள். இதைத் தவிர, தொழில் முனைவர் மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி பெற்ற நபர்கள் எழுவர் மற்றும் அறிவியல் தொழில் நுட்பவியல் நபர்கள் 70 பேர் ஆகியோருக்கு குறிப்பிட்ட தொழில்களுக்கான செயல் திட்ட அறிக்கைகளைத் தயாரிக்க இத்திட்டம் உதவி செய்துள்ளது. தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தில்



பயிற்சி பெற்ற 4 நபர்களுக்கும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையைச் சார்ந்த 40 பேருக்கும் நிதி நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்து உதவி பெற வகை செய்துள்ளது. புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கு தொழில் முனைவர் திட்டம் பயிற்சி பெற்ற 3 நபர்களுக்கும் அறிவியல் தொழில் நுட்பவியல் துறையினர் 30 பேருக்கும உதவி அளிக்கப்பட்டது. மொத்தம் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் 33 ஆகும் மொத்தம் வேலை வாய்ப்பு தரப்பட்டவர்கள் 395 பேர் ஆகும்.

11. இத்திட்டத்தினை தருமபுரி மாவட்டத்தில் செயற்படுத்துவதற்காக 1989-90-ல் ரூபாய் 3.50 இலட்சம் மைய அரசு மானியமாக வழங்கியுள்ளது.

12. மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்சிக் கழகத்தின் ஆய்வகமாகிய மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்புடன் பசும் பொன் தேவர் திருமகனார் மாவட்டத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை

நாட்டு மக்களின் வாழ்வும் வளர்ச்சியும் மொழி வளர்ச்சியோடும், கருத்துக்களோடும் இணைந்தனவாகும். ஆட்சிமொழியாகத் தமிழை அனைத்து நிலைகளிலும் நடைமுறையாக்க வேண்டுமெனும் சீரிய நோக்கத்தோடு, மொழிப்பயன்பாட்டில் நிறைவு எய்த, தமிழியப் பண்பாடு தொடர்பான செயற்பாடுகளையும், முறைகளையும், படைத்தல், காத்தல், கற்பித்தல், பரப்புதல் ஆகிய பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குவது அரசின் கொள்கையாகும். தமிழ்த் தொடர்பான துறைகளும் பண்பாட்டுப் பிரிவுகளும் ஒருங்கிணைந்து இத்துறை உருவாயிற்று. வேளாண்மைத் துறை, நல்வாழ்வுத் துறை முதலிய வாழ்வியல் துறைகளைப் போலவே தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையும் தனித்தகவு பெற்ற துறையாகத் திகழ்கிறது. தமிழ் நலம் பேணுதல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குதல் என்னும் மூவகையாக இத்துறைகள் அமைந்துள்ளன.

தமிழ் நலம் பேணுவன :

1. தமிழ் வளர்ச்சி இயக்ககம்
2. மொழி பெயர்ப்புத் துறை
3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
4. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்அகரமுதலித்திட்ட இயக்ககம்

தொன்மரபு காப்பன :

5. தொல் பொருள் ஆய்வு இயக்ககம்
6. அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்
7. அரசு அருங்காட்சியகம்

வளர்கலை ஊக்குவன :

8. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு
9. சவகர் சிறுவர் இல்லம்
10. பண்பாட்டுக் கலையுறவுப் பிரிவு

(i) தமிழ் வளர்ச்சி இயக்ககம்.

அரசு நிருவாகத்திலும், கல்வி, அறிவியல் போன்ற பிற துறை களிலும், தன்னாட்சி நிறுவனங்களிலும் ஆட்சித் தமிழின் பயன் பாட்டினை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கோடல் இத்துறையின் தலையாய பணியாகும். தமிழ் வளர்ச்சி தொடர்பான பிற பணிகளையும் இத்துறை தோற்று விக்கப்பட்ட 1966 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டுள்ளது.

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் :

2. தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க நடை முறை முன்னேற்றம் குறித்து, அரைத் தலைமையலு வலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும் மாவட்டங் களில் அமைந்துள்ள சார்நிலை அலுவலகங்களை மாவட்ட உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்கின்றனர். அரசுச் செயலகத்தில் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்திலை நடைமுறையில் செம்மையாக நிறைவேற்ற அரசு ஆணையிட்டுள்ளது. தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்களுக்கும் இத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

3. தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை விரைவுபடுத்தும் நடவடிக் கைகளுள் ஒன்றாகத் தமிழ்த் தட்டச்சுகள் வழங்கு திட்டம் அமைந்துள்ளது. ஆங்கிலத் தட்டச்சுகளுக்கு மாற்றாக தமிழ்ச் தட்டச்சுகளை அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்கத் தேவை யான செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மொழியாக்கத் திட்டம் :

4. தமிழ்மொழி இலக்கியங்களைப்பிற மொழிகளிலும் பிற மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழியாக்கம் செய்து வெளியிடும் திட்டத்தினை ஏற்று அரசு ஆணையிட்டுள்ளது. சங்கவிலக்கியம் கம்பராமாயணம் சித்தர் பாடல்கள், சரசுவதி மகால் ஓலைச்சுவடிகள் ஆகியவற்றை ஆங்கிலத்திலும், பிற இந்திய மொழிகளிலும் மொழியாக்கம் செய்யும் திட்டத்தினை அரசு முன்னர் அறிவித்தது. இத்திட் டத்தின்படி கம்பராமாயணம்:பாலகண்டம், சங்கவிலக்கியத்தில் நற்றிணை ஆகியவை கவிதை நடையில் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பெற்று வெளியிடப்பட்டன. கம்ப ராமாயணத் தொடர் மொழியாக்கத்தில் ஆங்கிலத்தில் மூன்று காண்டங்கள் முடிந்துள்ளன.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கு திட்டம் :

5. இத்திட்டம் 3-1-1978 ஆம் நாளிட்ட கல்வித்துறை அரசாணை வாயிலாகத் தோற்றுவிக்கப்பட்டது.



6. ஆண்டுதோறும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் முப்பதின் மர் இத்திட்டத்தின் வழி நிதியுதவி பெறுகின்றனர். நிதியுத விக்குத் தேர்ந்தெடுக்கப்பெறும் ஒவ்வொருவரும் திங்கள் தோறும் ரூ. 250 நிதியுதவிப் பெற்று வருகின்றனர். இதுவரை 322 தமிழறிஞர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு, நிதியுதவி வேண்டிய தமிழறிஞர்கள் அனைவருக்கும் வழங்கப்பெற்றது.

சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கு திட்டம் :

7. நிலையான மதிப்பும் தகுதியும் வாய்ந்த சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் நூலாசிரியர் களுக்கு 3-8-1966 முதல் அரசு நிதியுதவி வழங்கி வருகிறது.

8. இத்திட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளுக் கிணங்க, நூல் வெளியிட நிதியுதவி வேண்டி, நூலாசிரியர் களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் இத்திட்டத்தில் ஏற் கக்பெறுகின்றன, இதற்கென வல்லுநர் குழுவை அரசு அமைத் துள்ளது. வல்லுநர் குழு உறுப்பினர்கள் ஆய்ந்து தெரிவுசெய்து பரிந்துரை செய்யும் நூல் நிதியுதவிக்கு ஏற்கப் பெறுகிறது. இத் திட்டத்தின்படி நூலாசிரியருக்கு மேல் அளவாக ரூபாய் 8,000 அல்லது நூல் வெளியீட்டிற்காக ஆகும் செலவில் 50 விழுக்காடு என்னும் தொகையில் எது குறைவோ, அத்தொகை மொத்த நிதியுதவியாக வழங்கப் பெறுகின்றது. நிதியுதவிக்குரிய தொகை யில் பாதித் தொகை முன்பணமாகவும் நூலை அச்சிட்டு வெளி யிட்ட பின்னர் எஞ்சிய தொகையும் வழங்கப்பெறுகிறது.

9. ''அறிவியல்–நுண்கலை–நாகரிக வரலாற்றுச் செய்திகள்'' தாங்கிவரும் கூரியர் தமிழ் வெளியீட்டுக்காக ரூ. 80,000 இந் நிதியாண்டில் வழங்கப்பட்டது.

தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கு திட்டம் :

10. இத்திட்டம் முதன் முதலில் 1947இல் தொடங்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டுவரை இப்பரிசுகளைத் தமிழ் வளர்ச்சிக்கழகம் வழங்கி வந்தது. பின்னர் இத்திட்டத்தைத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஏற்றது. இப்போது இப்பரிசுகள் தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப் பெறுகின்றன. இத்திட்டத்தின் படி 21 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தலைப்பிலும் முதற் பரிசாக ரூ. 2,000–மும், இரண்டாம் பரி சாக ரூ. 1,000மும் வழங்கப் பெறுகின்றன. பரிசுக்குரிய நூல் களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பெறுகிறது. எதிர்வரும் ஆண்டிலிருந்து முதற்பரிசு ரூ. 5,000 ஆகவும் இரண்டாம் பரிசு ரூ.3,000 ஆகவும் உயர்த்தப் பெறும் எனவும், மூன்றாம் பரிசாக ரூ. 1,000 வழங்கப்பெறும் என்வும் முதலமைச்சர் அவர்கள் திருவள்ளுவர் திருநாளில் அறி வித்துள்ளார்.

தமிழாராய்ச்சிப் பணிகளுக்காகவும் தமிழ் இருக்கை நிறுவவும், பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் தமிழில் பட்டய வகுப்புகள் நடத்தவும் நிதியுதவி வழங்கு திட்டம் :

11. அயல் மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் நிறுவவும், தமிழில் பட்டய வகுப்பு நடத்தவும் நிதியுதவி வழங்கப்படுகிறது. தமிழாய்வுப் பணியாற்றும் நிறுவனங்களுக்கும் அரசால் நிதியுதவி வழங்கப் பெறுகின்றது. திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி சென்னை ஆசியவியல் ஆய்வு நிறுவனம், திருவேங்கடவன் பல்கலைக் கழகம் முதலியன நிதியுதவி பெறுகின்றன.

தமிழ் நூல் விவர அட்டவணை தயாரிக்கும் திட்டம் :

12. தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் ஒரு பிரிவாகத் தமிழ்நூல் விவர அட்டவணை தயாரிக்கும் பணி 1960 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்படி இதுவரையில் 24 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போது 1936 முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்ட நூல்களைக் குறித்து விளக்கக் குறிப்பு வரையப்பட்டுள்ளது.

விழாக்களும் விருதுகளும் :

திருவள்ளுவர் விருது :

13. திருவள்ளுவர் திருநாள் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் அரசு விழாவாக நடத்தப்பட்டுவருகிறது திருக்குறள் பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதும் அறிஞர்களைப் பாராட்டி விருது வழங்குவது அரசின் முடிவு. 1989 ஆம் ஆண்டுக்குரிய திருவள்ளுவர் விருது காலஞ்சென்ற டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களுக்கும், 1990 ஆம் ஆண்டுக்குரிய விருது திரு. கு. ச. ஆனந்தன் அவர்களுக்கும் இந்த ஆண்டு நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் வழங்கப்பெற்றது.

திரு. வி. க. விருது :

14. திரு.வி.க. பெயரில் விருது நிறுவி, ஆண்டுதோறும் சிறந்த தமிழ் அறிஞருக்கு வழங்கப்படுகிறது. 1986, 1987, 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளுக்குரிய திரு.வி.க. விருது முறையே கவிஞர் கா. மு. ஷெரீப், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், திரு. மணவை முஸ்தபா, டாக்டர் தமிழண்ணல் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

பாவேந்தர் பாரதிதாசன் விருது :

15. ஆண்டுதோறும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளில் புகழ் வாய்ந்த கவிஞருக்குப் பாவேந்தர் பாரதிதாசன் விருது தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெற்று வருகிறது. 1987, 1988, 1989 ஆம் ஆண்டுகளுக்கு முறையே கவிஞர் முடியரசன், கவிஞர் பொன்னிவளவன், கவிஞர் அப்துல் ரகுமான் ஆகியோருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.



கம்பர் விழா:

16. கம்பர் விழா, தஞ்சாவூர் மாவட்டம் திருவழுந்தூரில் அரசு விழாவாக ஆண்டுதோறும் நடத்துவது அரசின் நோக்கம் கம்பர் விழாவை இந்த ஆண்டு சிறப்புடன் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1989-90 ஆம் ஆண்டில் திருவழுந்தூர் கம்பர் கோட்டத்தைச் சீர்காப்பு செய்யவும், விழா நடத்தவும் ரூ. 70,000 வழங்கப்பட்டுள்ளது.

சங்ககாலப் புலவர்களுக்கு நினைவுத்தூண் நிறுவுதல்:

17. சங்ககாலப் புலவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நினைவுத் தூண் நிறுவும் திட்டம் கருதப்பட்டுள்ளது. சங்ககாலப் புலவர்களுள் ஏறக்குறைய 200 பேர் பிறந்த இடங்கள் தெரிய வந்துள்ளன. இவர்களுள் புகழ்பூத்த புலவர்களின் பிறந்த ஊர்களில் நினைவுச் சின்னம் நிறுவப்பெறும். அந்த நல்லிசைப் புலவர்களின் சிறந்த பாடலும் கல்வெட்டாகச் செதுக்கி வைக்கப் பெறும். இத் திட்டம் படிப்படியாகச் சில ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். முதனிலையாக நான்கு மாவட்டங்களில் அமையும் சங்கச் சான்றோர் நால்வர் பிறந்த ஊர்களில் கற்றூண்கள் நிறுவி, அவர்தம் பாடற் பகுதிகளைப் பொறிக்கும் முயற்சி தொடங்கப் பட்டுள்ளது.

18. செங்கை-அண்ணா மாவட்டத்து இடைகழிநாட்டு நல்லூரில் நத்தத்தனாருக்கும், தஞ்சாவூர் மாவட்டத்து மாங்குடியில் மாங்குடி மருதனாருக்கும், திருச்சி மாவட்டத்துக் கரூரில் கருவூர்ப் புலவர்க்கும், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்து ஒக்கூரில் மாசாத்தனார்-மாசாத்தியாருக்கும் நினைவுத் தூண்கள் நிறுவப்பெறும்.

ஊர் பெயர் செம்மை:

19. ஊர்ப் பெயர்களுக்குரிய தமிழ் எழுத்துக் கூட்டலில் காணும் பிழை களைந்திட தமிழ் வளர்ச்சித் துறையால் எழுத்துக் கூட்டல் செப்பமாக்கப்படுகிறது. மைய நிலவியல் துறை, இருப்பூர்தித்துறை, அஞ்சல்துறை முதலியன அவ்வப்போது விரும்பி, வேண்டும் ஊர்ப் பெயர்களுக்கு எழுத்துக்கூட்டல் இதுவென வரையறுக்கப்படுகிறது. அண்மையில் மாநிலப் பெயர் ஆணைக் குழுவை அரசு அமைத்துள்ளது. இலக்கணப்பிழை, பொருட்பிழையோடுள்ள ஊர்ப் பெயர்களை, உரியவாறு திருத்திப் பிழை நீக்கிய பெயர்கள் வழங்கப்பட வழிகாணும் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

தெருப் பெயர்களைத் திருத்தியமைத்தல்:

20. தெருப் பெயர்கள் சிதைவுற்ற தன்மையில், பொருளற்ற முறையில் பிழைபாடுகளுடன் எழுதப்பட்டு வருகின்றன. குறைபாடுகளை நீக்கித் தெருப் பெயர்களை உரியவாறு திருத்தி யமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மொழி எல்லைக் காவலர்களுக்கு நிதியுதவி வழங்குதல்:

21. தமிழ் மொழியைப் பேணிக் காப்பதிலும், தமிழகத்தின் எல்லையைக் காப்பதிலும் ஈடுபட்டுத் தொண்டாற்றியவர்களைச் சிறப்பிக்கும் வகையில் மொழிக் காவலர்களுக்கு உதவித்தொகை அளித்திடும் திட்டத்தை அரசு செயற்படுத்துகிறது.

22. இந்த ஆண்டில் 952 பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்டி ருப்பதோடு அனைவருக்கும் திங்கள் ஓய்வூதியம் ரூ. 350 ஆக உயர்த்தப்பெற்றுள்ளது. மேலும், அப் பெருமக்களுக்குப் பேருந்து களில் இலவசப் பயணச் சலுகை அளிக்கவும் அரசு முன் வந்துள்ளது.

தமிழ்நாட்டு வரலாற்று வரைவுத் திட்டம்:

23. தொல்பழங்காலம் முதல் தொடங்கும் தமிழ்நாட்டு வரலாற்றினை ஆறு தொகுதிகளாக வெளியிட முடிவு செய்யப் பட்டுள்ளது. இதுவரை இரு தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன மூன்றாம் தொகுதியான பல்லவர்-பாண்டியர் காலம் என்னும் தொகுதி அச்சேறும் நிலையில் உள்ளது. 16-8-1989 அன்று சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறைத் தலைவர் டாக்டர் சி.இ. இராமச்சந்திரன் தலைமையில் வரலாற்று வடிவாக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் வெளியீடு:

24. தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் முதற்பதிப்பு 1964 ஆம் ஆண்டிலும், இரண்டாம் பதிப்பு 1974 ஆம் ஆண்டிலும் அச்சிடப் பட்டு வெளியிடப்பட்டன. மூன்றாம் பதிப்பு அச்சிடப்பெற்று விற்பனைக்கு வந்துள்ளது.

திருக்குறள் வகுப்பும் இசைப் பொழிவும்:

25. தமிழ் மக்களின் மாமறையாகத் திகழும் திருக்குறளின் அருமை பெருமைகளை மக்கள் அனைவரும் அறிந்துணர்ந்து ஒழுக வழிவகை செய்ய வேண்டுமென்பது அரசின் நோக்கமாகும் வள்ளுவர் கோட்டத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலையில் திருக்குறள் வகுப்பு நடைபெறுகிறது. நாடோறும் காலை மாலை இரு வேளைகளிலும் வள்ளுவர்கோட்டத்தில் திருக்குறள் இசைப்பொழிவு நிகழ்கிறது. மாவட்டங்களில் ஆண்டு தோறும் திருக்குறள் நெறிபரப்பு மாநாடு நடத்தவும் தமிழ் வளர்ச்சித் துறை திட்டமிட்டுள்ளது.



உலகத் தமிழாராய்ச்சி மாநாடு:

26. மோரீசுத் தீவில் 1989 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 4ஆம் நாள் முதல் 8ஆம் நாள் வரை நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்குகொள்ள தமிழக அரசின் சார்பில் தமிழறிஞர்களும், கலைக்குழுவினரும் சென்று வந்தனர். மாநாட்டு அழைப்பாளர்களின் வேண்டுகோளையேற்றுத் தமிழகத்தின் கலைச் சிறப்பினைப் புலப்படுத்தும் விளக்குகள், ஆடையணிகலன்கள், பரிசுப் பொருள்களாக வழங்கப்பட்டன. பரிசுப் பொருள்களைப் பெற்ற மாநாட்டினர் தமிழக அரசின் நல்கையைப் பெரிதும் பாராட்டினர்.

ஆட்சிச் சொல்லகராதி:

27. ஆட்சிச் சொல்லகராதிக்கு இதுவரை நான்கு பதிப்புகள் வந்தன. அரசுத் துறைகளில் பயன்படுத்தப்படும் பொதுவான சொற்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன. ஐந்தாம் பதிப் பிற்காகத் தொகுக்கும் பணி நடந்து வருகிறது. ஒவ்வொரு துறைக்கும் உரிய கலைச் சொற்களைத் தனித்தனியே தொகுத்து இதுகாறும் எழுபது துறைகளுக்குச் சிறப்புச் சொல்லகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆட்சிச் சொல்லகராதி கையளவுப் பதிப்பு ஒன்று வெளியிட முடிவு செய்து, அத்திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.4 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (ii) மொழி பெயர்ப்புத்துறை.

28. தலைமைச் செயலகத்தில் அனைத்துத் துறைகளிலும் அலுவல்கள் முழுவதும் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்பது அரசின் முடிவாகும். இதற்கு உறுதுணையாக மொழிபெயர்ப்புத் துறை பணியாற்றி வருகிறது. ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாத கோப்புகளை இத்துறை தமிழில் மொழி பெயர்த்துத் தருகின்றது. ''தமிழாக்கம் தமிழுக்கு ஆக்கம்'' என்ற வகையில் திறமையாகத் தம் பணியை இத்துறை ஆற்று கிறது.

29. அறிவிக்கைகள், அறிக்கைகள், பொதுக்கணக்கு, பொது நிறுவனக்குழு அறிக்கைகள், சுற்றோட்டக் குறிப்பு, மாநில ஆட்சி அறிக்கை, காவலர் பதக்க மதிப்புரைகள், துறைக் குறிப்புகள், ஆணைய அறிக்கைகள், கொள்கை விளக்கங்கள், விதிகள், துணை விதிகள், விதிமுறைகள், பொதுத்துறையின் கடுமந்தணக் காப்புகள் முதலியனவும் மொழியாக்கம் பெறு கின்றன.

30. மாலத்தீவு குடியரசின் அரசு மந்தணப் பணிக்காக, மொழிபெயர்ப்புத் துறையின் இயக்குநரும், மூன்று அலுவலர்களும் சென்று திரும்பியது குறிக்கத்தக்கதாகும்.

31. வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், துணை மதிப்பீடுகள் ஆகியவற்றை மொழிபெயர்ப்பதற்காக இத்துறைப் பணியாளர்களின் ஒரு தொகுதியினர் ஒவ்வோராண்டும் நிதித்துறைக்கு அனுப்பப்படுகின்றனர். அதுபோன்றே சட்டப்பேரவைக் கூட்டங்கள் நடைபெறும்போதெல்லாம் மொழி பெயர்ப்புக்காக அனுப்பப்படுகின்றனர்.

32. இத்துறையின் துணை இயக்குநர், மொழிபெயர்ப்பு அலுவலர்கள், கோளரங்கம் சென்று, அறிவியல் தொழில் நுட்பம் தொடர்பான மொழிபெயர்ப்புப் பணிகளையும் மேற்கொண்டனர். மின்னணுப் பதிவுப்பெட்டி தொடர்பான செயல் நுணுக்கங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன.

(iii) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

33. வளர் தமிழ்ப் பணியை உலகளாவிய நிலையில் வளப்படுத்துவதற்காகப் பிரஞ்சு அகாதமி போன்ற தனி நிறுவனம் தேவை என்னும் நோக்கில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை 1970ஆம் ஆண்டில் அரசு நிறுவியது.

34. இந்நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் அரசுநிதியுதவி வழங்கி வருகிறது. தமிழ் பயில விரும்புவோர்க்கு, ஒலியிழை வாயிலாக மொழி கற்பிக்கும் ஏந்துகள் இந்நிறுவனத்தில் உள்ளன. மொழிப் பயிற்சிக் கூடத்தின் தமிழ் துடுப்புகளில் அயல் நாட்டு மாணவர்கள் பலர் தமிழ் கற்று வருகின்றனர். புதிதாகத் தமிழ் பயிலும் பிற மொழியினர்க்கேற்ற பாடநூலுடன் ஒலியிழையில் 'தானே தமிழ் கற்கும் முறை' உருவாக்கப் பட்டுள்ளது.

35. மொழி பெயர்ப்பியலிலும், சுவடிப் படிப்பியலிலும் பட்டமேற்படிப்புப் பட்டயப் படிப்புகள் இந்நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.

36 இந்நிறுவனத்தில் திங்கள், வாரக் கருத்தரங்குகள் நடத்தப்பெறுகின்றன. ''இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழர் கொடை'' என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது.

37. ஆண்டுதோறும் அறக்கட்டளைப்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்று, நூல்களாக வெளியிடப்பெறுகின்றன. ''பண்பாட்டு நோக்கில் பாவேந்தர் பாரதிதாசன்'' தமிழ் பண்பாட்டில் சிற்பக்கலை'' என்னும் தலைப்புகளில் ஆய்வரங்கங்கள் நிகழ்ந்தன.

38. உயராய்வு நிலையில் மதிக்கப்பெறும் பதிப்பு நூல்கள், ஆய்வு நூல்கள், உரை நூல்கள் என்ற வகையில் 150 நூல்கள் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

(iv) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்.

39. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் 19-6-1989 இல் தனி இயக்ககமாக மீளவும் தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகிறது.



40. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியைப் பன் மடலங்களில் வெளியிடுவதே அகரமுதலித் திட்டத்தின் நோக்கமாகும். சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியிடுவதால் மரபார்ந்த சொற்களுக்கு உரிய விளக்கங்களும், செந்தமிழ்ச் சொல்லாட்சிகளும், சொற்கள் தமிழில் தோன்றிப் பிறந்த வரலாறும், தமிழாய்வுக்கும், திராவிடவியலுக்கும் துணையாகும் கருத்துகளும் விளக்கம் பெறும்.

41. இதுவரை வெளிவந்த முதன் மடல முதற்பகுதியை அடுத்து, அதன் தொடர்ச்சியாக அடுத்த ('ஆ' காரம் முதல் 'ஔ' கார முடியவுள்ள) இரு பகுதிகள் வெளியிடுவதற்கான பணிகள் நடைபெறுகின்றன.

(v) தொல்பொருள் ஆய்வு இயக்ககம்.

தொல்பொருள் ஆய்வுத் துறை தமிழகத்தின் பண்டைய வரலாற்றுச் சின்னங்களைக் காத்தோம்பும் நோக்கத்தில் 1961 இல் உருவாயிற்று. அந்த வகையில் 58 வரலாற்றிடங்கள் தமிழ்நாடு அரசால் காக்கப்படுகின்றன. மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை, தரங்கம்பாடிக் கோட்டை, இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம் முதலியன முதன்மையானவை. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தரங்கம்பாடிக் கோட்டை, இராமலிங்க விலாசம் ஆகிய இடங்களில் உள்ள வரலாற்றுச் சின்னங்களையும் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள அகழ்வைப்பகங்களையும் மக்கள் கண்டுகளிக்கின்றனர்.

அகழாய்வு:

2. தமிழகத்தின் பண்டைய பெருமையையும், வரலாற்றுச் சிறப்பையும், நாகரிக மேம்பாட்டையும் அறிந்து கொள்ளும் முகத்தான் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் இத்துறையால் அகழாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அகழாய்வு நிகழ்ந்த இடங்களில் சேரர் தலைநகரம் என்று கருதப்படும் கரூர், பாண்டியர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த கொற்கை, பிற்காலச் சோழர்களின் தலைநகரமான கங்கைகொண்ட சோழபுரம், மதுரையில் ஒரு பகுதியாக விளங்கக்கூடியதும், சிலப்பதிகாரக் காவியத் தலைவனான கோவலன் கொலையுண்ட இடம் எனக் கருதப்படுவதுமான கோவலன் பொட்டல் ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும்.

அகழ்வைப்பகம்:

3. அகழாய்வு நடத்தப்பட்ட இடங்களிலும், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களிலும் இத்துறையால் அகழ்வைப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை அகழ்வைப்பகங்கள் இத்துறையால் வரலாற்றுக்கு முந்தைய காலத்து அமைக்கப்பட்டுள்ளன. மனிதனின் வாழ்க்கையைச் சுட்டிக் காட்டும் தடயப் பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் அகழ்வைப்பகம்

செங்கை — அண்ணா மாவட்டத்தில் உள்ள பூண்டியிலும், இசுலாமிய அரசர்களின் கலையார்வத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட அகழ்வைப்பகம் ஆர்க்காட்டிலும் அமைந்துள்ளன. சோழப் பெருவேந்தன் இராசராசன் காலத்தில் தமிழகத்தில் நிலவிய பண்பாட்டுச் சிறப்பைக் காட்டும் வகையில் இராசராசன் அகழ்வைப்பகம் தஞ்சை அரண்மனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மதுரை நாயக்கர் கால வரலாற்றையும் கலைச் சிறப்பையும் வெளிப்படுத்தும் வகையில் திருமலை நாயக்கர் அரண்மனையில் ஒரு பகுதியில் அகழ் வைப்பகம் அமைக்கப்பட்டுள்ளது.

4. தமிழக வரலாற்று வரைவுக்குச் சிறந்த ஆதாரமாக விளங்கும் கல்வெட்டுகளைப் படி எடுத்து நூலாக வெளியிடுவது இத்துறையின் தலையாய பணியாகும். இதுவரை இத்துறையால் சற்றேறக்குறைய 2000 கல்வெட்டுகள் நூல் வடிவில் அச்சிடப் பட்டுள்ளன. மாவட்டந்தோறும் இத்துறையால் கல்வெட்டாய்வு பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

5. அரிய ஓலைச் சுவடிகளை ஆங்காங்கே கண்டறிந்து ஓலைச் சுவடி நூலகத்தில் சேர்ப்பிக்கும் பணியைத் தொல் பொருள் அலுவலர்கள் செய்து வருகின்றனர். சாலையோரங்களிலும், ஆற்றங்கரைகளிலும், பேணுவாரின்மையின் வழிபாட்டில் இல்லாத பண்டைச் சிற்பங்கள், நாணயங்கள், சுடுமண் பொம்மைகள் ஆகிய பழம் பொருள்களை இத்துறையால் அமைக்கப்பட்டுள்ள அகழ்வைப்பகங்களில் கொண்டு சேர்ப்பதும் அலுவலர்களின் பணியாகும்.

படிமங்கள் பதிவு :

6. தமிழர் தம் கலையார்வத்தையும், தொழில் நுணுக்கத்தையும் பறைசாற்றிக் கொண்டுள்ள அரிய செப்புத் திருமேனிகள், தமிழகத்தின் கோயில்கள்தோறும் காணப்படுகின்றன. உரிய வகையில் அப்படிமங்களைப் பதிவு செய்து பட்டியலிடும் பணியை இத்துறையின் பதிவு அலுவலர்கள் செய்து வருகின்றனர். 100 ஆண்டுக்கும் முற்பட்ட செப்புத் திருமேனிகள், செப்புப் பட்டயங்கள், ஓவியங்கள், தேர்ச் சிற்பங்கள், கைவினைப் பொருள்கள் ஆகிய அனைத்தும் பதிவு செய்யப்பட்டுப் பொருளின் உரிமையாளர்களுக்குச் சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன.

இதழ்கள் :

7. இத்துறையால் கண்டெடுக்கப் பெறும் கல்வெட்டுகள், கலைப் பொருள்கள் ஆகியவற்றைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் அவ்வப்போது எழுதப்பெற்று 'கல்வெட்டு' என்னும் காலாண்டு இதழில் வெளியிடப்படுகின்றன. ஆண்டுப் பணிகளைத் தொகுத்தும், ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டும் ஆண்டிதழாகத் 'தமிழகம்' என்னும் ஆய்வு இதழை இத்துறை இவ்வாண்டு வெளியிட்டுள்ளது. மாமன்னன் இராசராசனின் ஆயிரத்தாண்டு முடிசூட்டு விழாவின் போது, பெற்ற ஆய்வுக் கட்டுரைகள் 'அருண்மொழி' என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிடப்பட்டது.



திங்கள் பொழிவு :

8. தொல்பொருள் ஆய்வுக் துறைக்குத் தொடர்புடைய பகுதிகளில் ஆய்வு செய்துவரும் பல்துறை வல்லுநர்களை அமைத்து திங்கள்தோறும் 'திங்கள் பொழிவு' இத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது.

ஒளிப்படத் தொகுப்பு :

9. உலக அளவில் உயர்ந்தோங்கி விளங்கும் தமிழகக் கலைச் சிறப்பை வெளி நாட்டினரும், உள்நாட்டினரும் கண்டு களித்திட வேண்டும் என்ற நோக்கில் கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள், செப்புத் திருமேனிகள் ஆகியவற்றை ஒளிப்படம் எடுத்து, ஒளிப் படத் தொகுப்பு இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது.

10. இன்றைக்குச் சுமார் 1,800 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பட்ட பண்டைத் தமிழகக் கல்வெட்டையும், பல்லவர் காலச் சிற்பங்கள், பல்லவர் கால நாணயம், கங்கர் நாணயம், கண்ட கோபாலன் நாணயம், பாண்டியர் கால ஓவியம், மராட்டியர் காலத்திய சுடுமண் பானைகள் ஆகியவற்றையும் இந்த ஆண்டில் (1989–90) துறை கண்டெடுத்துள்ளது.

11. மாவட்டந்தோறும் கல்வெட்டாய்வு, ஓலைச்சுவடி ஆய்வு, சிற்ப ஆய்வு ஆகியவை மேற்கொண்டு 267 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டுள்ளன. 150 ஓலைச் சுவடிகள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டு, இத்துறைக்குக் கொண்டுவரப் பெற்றன. பாதுகாப்பின்றிக் கிடக்கும் கற் சிற்பங்களைக் கண்டுபிடித்து அவற்றைக் கொணர்ந்து இத்துறை அகழ்வைப்பகங்களில் வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

கோடைக்கால கல்வெட்டுப் பயிற்சி :

12. சென்ற சில ஆண்டுகளாக நடத்தப் பெறாதிருந்த கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சி திரும்பத் தொடங்கப் பெற்று, பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் சிலருக்குக் கல்வெட்டுப் பயிற்சி அளிக்கப் பெற்றது. முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் ஐவருக்கு ஓராண்டுக் கல்வெட்டுப் பயிற்சி சென்னையில் தொடங்கப்பெற்று நடைபெற்று வருகிறது.

13. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆறு அகழ் வைப்பகங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன.

14. 1990–91 ஆம் ஆண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கங்கை கொண்ட சோழபுரம், அழகன்குளம் ஆகிய இடங்களில் பரந்த அளவில் அகழாய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு அகராதி :

15. தமிழ்நாட்டில் இதுவரை படி எடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளிலிருந்து நீதி, நிருவாகம், சமயம், கல்வி, வேளாண்மை, வரி வகை ஆகியவை பற்றிய பல புதிய சொற்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகளில் கிடைக்கப் பெறும் சொற்கள் அனைத்தையும் திரட்டி, 'கல்வெட்டு அகராதி' தயாரிப்பதற்காகத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தவிர, வரலாற்றிடங்களில் அகழாய்வுப் பணி செய்யும் திட்டத்துக்கு ரூ. 2.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பூம்புகார் அகழாய்வு :

16. தமிழர் பண்பாடு, வரலாறு, இவற்றினை மேலும் அறிவதற்கு ஏற்றவகையில் பூம்புகார்க் கடல் அகழாய்வு, கோவாவில் உள்ள தேசிய ஆழ்கடல் ஆய்வு நிறுவனத்தின் ஒத்துழைப்போடு மூன்றாண்டுத் திட்டமாகச் செயற்படுத்த வரும் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(vi) அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்.

சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் இயங்கிவரும் அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம், கர்னல் மெக்கன்சி, லாங்டன், பிரவுன் ஆகிய வெளி நாட்டாரின் தொகுப்புகள் கொண்ட நூலகமாகத் தொடங்கப் பெற்றது. இந்நூலகம், இன்றைக்குப் படிப்படியாகப் பெருகித் தமிழ், வடமொழி தெலுங்கு, மராத்தியம், உருது, அரபு, பாரசீகம் ஆகிய மொழிகளில் இலக்கியம், வரலாறு, மருத்துவம், கணிதம், சோதிடவியல், வானவியல், மெய்யியல், இசையியல் முதலிய துறைகளில் 68,748 சுவடிகள் கொண்டுள்ளன. மேலும், 22,000 நூல்களும் இங்கே காக்கப்படுகின்றன. களில் அச்சில் வராத ஓலைச் சுவடிகளை அச்சிடுதலும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுககுப் பயன்பட உதவுவதும் இந்நூலகத்தில் பணியாகும். பல்வேறு மொழிகளில் 138 நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. 131 பெயர் அட்டவணைகள் தொகுக்கப் பட்டுள்ளன.

2. தமிழக ஊர் வரலாறுகள், இடங்கை வலங்கை சாதி வரலாறு, யயாதி விலாசம் என்னும் ஓலைச்சுவடி நூல்கள் படியெடுக்கப்பட்டு அச்சிட்டு வெளியிடத் தயாராக உள்ளன.

3. மேலும் இந்திய அளவில் பழமையான நூலகங்களில் ஒன்றாக விளங்கும் அரிய ஓலைச் சுவடிகளைக் கொண்டுள்ள கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகத்திற்கென நகலியப் பொறி (ஜெராக்ஸ்) வாங்குவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.



(vii) அரசு அருங்காட்சியகத்துறை.

சென்னை அரசு அருங்காட்சியகம், நம் நாட்டிலுள்ள மாநில அருங்காட்சியகங்களுள் மிகப் பழமையானதும், மிகப் பெரியது மாகும். கலை, தொல்பொருளியல், மானிடவியல், இயற்கையியல் தொடர்பான பொருள்கள் சேகரிப்பில் இவ்வருங்காட்சியகம் புகழ் பெற்று விளங்குகிறது. நமது தேசியப்பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் கலைக் களஞ்சியமாக அருங்காட்சியகம் திகழ்வதுடன், வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய காலப் பொருள்கள், சிலைகள், கலைநயம் மிகுந்த கவின் பொருள்கள் இயற்கையியல் பொருள்கள் ஆகியவற்றையும் பேணி காக்கின்றது. இந்தியாவிலேயே பல மாநிலத்து மக்கள் வந்து கண்டு களிக்கும் காட்சிக் கருவூலமாக இவ்வருங்காட்சியகம் திகழ்கிறது. ஒவ்வொரு ஆண்டும் கிட்டத் தட்ட ஆறு இலட்சம் மக்கள் இவ்வருங்காட்சியகத்தைக் கண்டு களித்து வருகின்றனர். சென்னைக்கு வரும் அனைத்து முதன்மைப் பெருமக்களும், அருங்காட்சியகத்திற்கு வருகை தந்து கலை மற்றும் தேசிய தொன்மரபார்ந்த கவின் பொருள்களைக் கண்டு களிக்கின்றனர்.

2. நம் நாட்டின் பண்பாடு மற்றும் தேசிய மரபினை உணர வைக்கும் வகையில் இவ்வருங்காட்சியகம், தம் சேகரிப்புகளையும், இதர செயல்முறைகளையும் விரிவுபடுத்தி வருகின்றது.

மாவட்ட அருங்காட்சியகங்கள் :

3. ஒவ்வொரு மாவட்டத் தலைமையகத்திலும், மாவட்ட அருங்காட்சியகம் துவக்கப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கையின்படி 1979 ஆம் ஆண்டிலிருந்து சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்கள் நிறுவப் பட்டுள்ளன. மேலும் திருநெல்வேலி, கட்டபொம்மன், கன்னியாகுமரி, தருமபுரி மாவட்டங்களில் அருங்காட்சியகங்கள் துவக்க அரசு அனுமதி பெறப்பட்டுள்ளது.

சிறுவர் அருங்காட்சியகம் :

4. 1988 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் சிறுவர் அருங்காட்சியகம் திறக்கப்பட்டது, வரலாற்று மாட்சிகள், வனப்புமிகு பொம்மைக் காட்சிகள், இயற்கை எழில்கள் இயற்பியல், அறிவியல் புதுமைகள் பற்றிய கூடங்கள் இங்குள்ளன. கலை இயற்கையியல் தொடர்புடைய பொருள்களைப் பற்றிச் சிறுவர்கள் அறிந்துகொள்ள ஏதுவாக செயல்முறை அறைகளும் (Activity centre) இவ்வாண்டு அமைக்கப்படவுள்ளன. சிறுவர் அருங்காட்சியகத்துடன் சிறுவர்கள் நெருங்கிய தொடர்பு கொள்ள ஏதுவாக "சிறுவர் குழு" ஒன்று நிறுவ இட்டமிடப்பட்டுள்ளது. சிறுவர் அருங்காட்சியகத்திற்கு இயங்கு மாதிரிகள், எலக்ட்ரானிய விளையாட்டுப் பொருள்கள் வாங்குவதற்கு ரூ. 1 லட்சம் நிதி யொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூடங்களைத் திருத்தியமைக்கும் பணி :

5. சென்னை, புதுக்கோட்டை அருங்காட்சியகங்களின் கூடங்களைப் புதுப்பிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சென்னை அரசு அருங்காட்சியகத்திலுள்ள வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய காலக் காட்சிக் கூடம், உயற்பியல், மானிடவியல் கூடம், வகைப்பாட்டுத் தாவரவியல் கூடம், மரச் சிற்பக் கூடங்கள் இவ்வாண்டு மாற்றியமைக்கப்படவுள்ளன. புதுக்கோட்டை அருங்காட்சியகத்திலுள்ள பாலூட்டிகள் கூடம், மீன் கூடம், படிமக் கூடங்கள் தற்போது மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. படிமக் கூடத்தில் களவறிவிப்புக் கருவி பொருத்துவதற்காக ரூ. 65,000 நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சி :

6. கடந்த நான்காண்டுகளாக ஒவ்வொரு திங்களும் தமிழ்ப் பண்பாட்டுப் பலகணி நடைபெற்று வருகிறது. இசை, நாட்டியம், இலக்கியம் கலைத் துறைகளில் புகழ்பெற்ற அறிஞர்கள் தங்கள் அனுபவங்களை காட்சியுரை வாயிலாக விவரிக்கின்றனர். இது வரை ஐம்பத்தெட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. அருங் காட்சியகத் துறையின் மாவட்ட அருங்காட்சியகங்களிலும் இந்நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இப்பணி மேலும் விரிவாக்கப் படவுள்ளது. பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சி அமைப்புக்கு ஒலி பெருக்கிச் சாதனம் வாங்குவதற்கு ரூ. 10,000 (பத்தாயிரம் மட்டும்) நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்விப் பணிகள் :

7. நம் மாநிலத்தின், கலை இயற்கை வழி மரபினைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அருங்காட்சியகத் துறையில் சிறப்புக் கண்காட்சிகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நூல்களின் மறுபதிப்பு :

8. கலை, தொல்பொருள், இயற்கை தொடர்பான சிறந்த நூல்களை மீண்டும் அச்சிடுதல் இவ்வருங்காட்சியகத்தின் தலையாய பணிகளில் ஒன்றாகும். இத்துறையின் பதிப்புகள், விலை மதிப்பு மிக்க குறிப்பு நூல்களாகத் திகழ்கின்றன. இருப்பினும் அவற்றுள் ஒரு சில நூல்கள் இருப்பில் இல்லை. ஆகையால், பார்வையாளர் ஆய்வாளர்களின் தேவைக்கேற்ட அந்நூல்களை மீண்டும் அச்சடித்து வெளியிடத் திட்டமிட பட்டுள்ளது.

தனியார் அருங்காட்சியகத்திற்கு நிதியுதவி :

9. அரசு மாவட்டங்களில் அமைத்து வரும் அருங்காட்சி யகங்கள் தவிர, தனிப்பட்ட அமைப்புகள் நிறுவிப் பேணிவரு அருங்காட்சியகங்களுக்கும் மானியம் அளித்து வருகிறது. வகையில் மதுரை காந்தி அருங்காட்சியகத்திற்கு 1985–86 முதல் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்க பெறுகிறது.